# இந்திய சரித்திரம்

(முதற் பாகம்)

இது

பிரம்பூர் ராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டியார்
உயர்தரப் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர்
எம். கே. சுந்தர வரதாசாரியர் பி.ஏ., எல்.டி.,

எழுதியது.

(படங்களோடு கூடியது)

சென்னை

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்

விலை ரூபா 1.] 1926 [காபிரைட்

# அட்டவணை

| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| | பீடிகை ... ... ... | 1 |
| | பூர்வகால இந்தியா :— | |
| 1 | இந்தியாவின் இயற்கை யமைப்பு ... | 5 |
| | (i) ஹிந்துஸ்தான சமவெளி ... | |
| | (ii) தக்ஷிண பீடபூமி ... ... | |
| | (iii) தமிழகம் ... ... | |
| 2 | இந்தியாவின் பழங் குடிகள் ... ... | 9 |
| 3 | ஆரியர்கள் ... ... ... | 13 |
| 4 | வட இந்திய ராஜ்யங்கள் ... ... | 17 |
| 5 | இதிகாசங்கள் ... ... ... | 24 |
| 6 | சமண, பௌத்த மதங்கள் ... ... | 26 |
| 7 | பாரஸிக், கிரேக்கப் படையெழுச்சிகள் ... | 33 |
| 8 | அலெக்ஸான்டர் காலத்தில் வட இந்தியாவின் நிலைமை ... ... ... | 41 |
| 9 | சந்திரகுப்த மௌரியர் ... ... | 44 |
| 10 | அசோகர் ... ... ... | 50 |
| 11 | அசோகருக்குப் பின் இந்தியாவின் நிலைமை ... | 58 |
| 12 | குஷான் ராஜ்யம் ... ... ... | 63 |
| 13 | குப்த ராஜ்யம் ... ... ... | 68 |
| | மத்தியகால இந்தியா :— | |
| 14 | ஹர்ஷ வர்த்தனர் ... ... | 76 |
| 15 | ராஜபுத்திரர்களும், அவர்களுடைய ராஜ்யங்களும் ... ... ... | 80 |
| 16 | ஹர்ஷருக்குப் பின் வட இந்தியாவின் நிலைமை | 85 |
| 17 | தக்ஷிணத்தின் சரித்திரம் ... ... | 86 |

| | | |
|---|---|---|
| | (i) சாளுக்கியர்கள் ... ... | |
| | (ii) பல்லவர்கள் ... ... | |
| 18 | தென்னிந்தியாவின் சரித்திரம் ... | 90 |

ஆப்கானியர் ராஜ்யம் :—

| | | |
|---|---|---|
| 19 | மகம்மது நபி (ஆதி மகம்மது) ... ... | 97 |
| 20 | கஜினி மஹ்மூது ... ... ... | 101 |
| 21 | மகம்மது கோரி ... ... ... | 106 |
| 22 | மாமலூக் ஸுல்தான்கள் ... ... | 108 |
| 23 | கல்ஜி வம்சத்தரசர்கள் ... ... | 112 |
| 24 | துக்ளக் வம்சம் ... ... ... | 118 |
| 25 | ஆப்கானிய ஆட்சியின் அழிவு ... ... | 124 |
| 26 | பஹ்மினி விஜயநகர ராஜ்யங்கள் ... | 128 |

முகலாய ராஜ்யம் :—

| | | |
|---|---|---|
| 27 | பாபர் ... ... ... | 139 |
| 28 | ஹுமாயூன் ... ... ... | 144 |
| 29 | அக்பர் மஹா சக்ரவர்த்தி ... ... | 150 |
| 30 | அக்பருடைய ராஜ்ய பரிபாலனம் ... | 156 |
| 31 | ஜிஹாங்கீர் ... ... ... | 162 |
| 32 | ஷாஜஹான் ... ... ... | 166 |
| 33 | ஔரங்கஜீப் ... ... ... | 170 |
| 34 | முகலாய ராஜ்யத்தின் அழிவு ... ... | 177 |
| 35 | முகலாயர் காலத்தில் இந்தியாவின் நிலைமை ... | 183 |

மஹாராஷ்டிர ராஜ்யம் :—

| | | |
|---|---|---|
| 36 | சிவாஜி ... ... ... | 186 |
| 37 | சிவாஜியின் ராஜ்ய ஸ்தாபனம் ... ... | 193 |
| 38 | சிவாஜிக்குப் பின் மஹாராஷ்டிர அதிகாரம் ... | 202 |
| 39 | மஹாராஷ்டிர யுத்தங்கள் ... ... | 207 |
| 40 | ஸீக்கர்கள் ... ... ... | 217 |
| | பெயரகராதி ... ... ... | 227 |



1. ஆந்திர நாணயம்
2. மீனண்டர் நாணயம்
3. கனிஷ்கர் நாணயம்
4. விக்ரமாதித்யர் நாணயம்
5. ராஜராஜசோழர் நாணயம்
6. பாண்டிய நாணயம்
7. ஷர்ஷா நாணயம்
8. ஸமுத்ர-குப்தர் நாணயம்
9. சேர நாணயம்
10. கிருஷ்ணதேவராயர் நாணயம்
11. டாங்கா நாணயம்
12. அக்பர் நாணயம்




நூர்ஜஹானின் நாணயங்கள்

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்

# இந்திய சரித்திரம்

## பீடிகை

இந்தியா நமது தாய் நாடு. உலகின் கண்ணுள்ள மற்றைய நாடுகள் பலவற்றிலும் அது மிகச் சிறந்தது. அங்ஙனம் கருதுவது அது நமது நாடு என்னும் அபிமானத்தினாலல்ல. அதன் பெருமை,

"மன்னுமி மயமலை யெங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பினுக் கெதிரெது வேறே?
பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே?
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவ மிதனையெ மக்கிலை யீடே.

மாரத வீரர்கள் மலிந்தநன் னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன் னாடு
நாரத கானந லந்திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்தநன் னாடு
புத்தர்பி ரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மிதனையெ மக்கிலை யீடே"

என்பதனால் ஒருவாறு விளங்கும்.

இத்தகைய பெருமை வாய்ந்ததும், நம்மைப் பெற்று வளர்த்து வருவதுமான இந்திய நாட்டின் ஒப்பற்ற சரித்திரத்தை நாம் கற்றுணர்வது இன்றியமையாதது. நமது முன்னோர்களின் நடை உடை பாவனைகளும், ஆசார அநுஷ்டானங்களும், கொள்கைகளும், வழிபாடு வந்தனங்களும் நமக்கு மிகச் சிறந்த பேறும். அவற்றை நாம் நன்றாக வறிந்தாற்றான் நமது பிறப்பின் பெருமையும், அப்பெருமையை நாம் இழந்துவிடாமல் நடந்தொழுகும் வழிகளும் நமக்கு நன்றாய்ப் புலப்படும். அவற்றை நாம் இப்பொழுது செவ்வனே யறியாததும், அவ்வறியாமை காரணமாக நம் முன்னோர்களை வழிபட்டு நடவாததும்தான் நமது நாட்டின் தாழ்வுக்குக் காரணங்களாம். ஆதலால், நாமும் நமது நாடும் முன்னேற்றத்தை யடைய வேண்டுமானல், நாம் நமது நாட்டின் முற்காலத்திய சரித்திரத்தை நன்றாகக் கற்க வேண்டும்.

அதற்குப் பல இடையூறுகள் இருக்கின்றன. எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்திற்கு முந்திய சரித்திர விவரங்கள் பல நூற்றாண்டுகள் வரையில் கர்ண பரம்பரையாக வந்துள்ளன. அவற்றை நாம் முழுவதும் உண்மையெனக் கொள்வதற் கிடமில்லை. எழுத்துக்கள் ஏற்பட்ட பிறகும் சரித்திரங்கள் செம்மையாக எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. அல்லாமலும், பற்பல விடங்களிலும் ஒரே காலத்தில் பல சகாப்தங்கள் வழங்கிவந்த காரணத்தினல் சரித்திர வாராய்ச்சிக்கு இன்றியமையாததான காலபாகுபாட்டை வரையறுக்க முடியவில்லை. அஃதன்றியும், நமக்குக் கிடைத்துள்ள பற்பல நூல்களில் உண்மையைக் கற்பனைகளினின்றும் பிரித்துத் தெளிவது எளிதன்று. இத்தகைய இடையூறுகள் பல உள்ளனவேனும் மிகப் பழமையான சரித்திர உணர்ச்சிக்கு வேண்டிய பல சாதனங்கள் இருந்து வருவதோடு அவை மேன்மேலும் நமக்குக் கிடைத்து வருவதனல், நாம் முற்காலத்திய சரித்திரத்தையும் ஒருவாறு ஐயமறக் கற்றறியலாம்.

கற்பாறைகளிலும், தூண்களிலும் செதுக்கப்பட்டுள்ள

விவரங்களைக் கொண்டும், கட்டடங்களைக் கொண்டும், நாணயங்களிலிருந்தும், தாமர சாஸனங்களினுலும், பற்பல நூல்களினுலும் நமக்கு வேண்டிய பல சிறந்த உண்மைகள் கிடைக்கின்றன. அவற்றைப் பரிசோதித்துவரும் சாஸ்திர மேதாவிகள் நாளும் புதிது புதிதான பல சிறந்த உண்மைகளைக் கண்டறிந்து வருகிருர்கள். இவற்றை யன்றி வெளிநாடுகளிலிருந்து நமது நாட்டிற்கு வந்திருந்த அந்நியர்கள் தாம் கண்டனவும் கேட்டனவுமான பல விஷயங்களை எழுதியுள்ளார்கள். அவைகளிலிருந்தும் நமது நாட்டின் பூர்வ சரித்திர சம்பந்தமான பல விவரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இவை யனைத்தையுங்கொண்டு ஒத்திட்டுப் பார்த்துச் சரித்திர நிபுணர்கள் முற்காலத்திய இந்திய சரித்திரத்தை ஒருவாறு எழுதியிருக்கிருர்கள்.

இத்தன்மையனவான ஆதாரங்களைத் தழுவியே நமது பூர்வீகர்களுடைய சரித்திரம் எழுதப்பட்டிருப்பதனுல், ஆங்காங்குப் பல அபிப்பிராய பேதங்கள் இருக்கவுமிடமுண்டு. அன்றியும், இனிப் புதிதாகக் கிடைக்கும் யாதானுமொரு ஆதாரத்தைக் கொண்டு இதுகாறும் யாம் உண்மையெனக் கொண்டாடி வந்த ஒரு அபிப்பிராயத்தை மாற்றவும் நேரிடும். சரித்திர வாராய்ச்சியில் ஊக்கமுடைய நிபுணர்கள் பலர் முயன்று வருவதினின்றும் நமக்கு ஏற்கெனவே பல உண்மைகள் வெளியாயிருக்கின்றன.


The Eastern

# பூர்வகால இந்தியா

## 1. இந்தியாவின் இயற்கை யமைப்பு

ஒரு தேசத்தின் சரித்திரத்திற்கும், பூகோள சாஸ்திரத்தில் கண்டுள்ள அதன் அமைப்பு, சீதோஷ்ணம், விளை பொருள்கள் முதலான இயற்கைக் குணங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்பது யாவருக்கும் ஒப்ப முடிந்த விஷயமாகும். அதனால் நாம் இந்திய சரித்திரத்தைப் படிப்பதற்கு முன்னமே அதன் அமைப்பு முதலிய இயற்கைக் குணங்களைக் கண்டறிய வேண்டும்.

இந்திய நாட்டை அதன் இயற்கை யமைப்பின் வேறுபாட்டிற்கும், அவ்வேறுபாடு காரணமாக ஏற்பட்டுள்ள சரித்திர வித்தியாசத்திற்கு மிணங்க மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன :—

i. ஹிந்துஸ்தான சமவெளி.
ii. தக்ஷிண பீட பூமி.
iii. தமிழகம்.

இவற்றை யன்றி இயற்கை யமைப்பினாலல்லாமற் சரித்திரத்தினால் வேறு பாட்டை யடையப் பெறாத இமயமலைப் பிரதேசம் முதலான பிரிவுகளைப்பற்றி நாம் இங்குக் கவனிப்பது அவசியமல்ல. என்றாலும், வடக்கில் உயர்ந்தும், அகன்றும், வெகுதூரம் வியாபித்தும், குளிர் பனியினால் எக்காலத்திலும் மூடப்பட்டும் விளங்கிவரும் அப்பெரியமலைத் தொடரானது அந்நியர்கள் நமது நாட்டின்மீது எளிதிற் படையெடுத்து வரவொட்டாமற் றடுத்து வந்ததல்லாமல், அம்மலைச்சாரல்களில் வசித்து வந்த குடிகளைப் பலாட்டியர்களாகவும், முரடர்களாகவும் பெரிய போர் வீரர்களாகவுஞ் செய்து வந்தது என்பதை நாம் உணர வேண்டும்.

### i. ஹிந்துஸ்தான சமவெளி

இது மேற்கேயுள்ள சூலைமான், ஹாலா என்னும் மலைத் தொடர்களிலிருந்து கிழக்கேயுள்ள நாகா, பாட்காய் மலை

கள் வரையில் சுமார் இரண்டாயிரம் மைல் தூரமும், வடக்கேயுள்ள இமயமலை முதல் தெற்கேயுள்ள விந்தியமலை வரையில் சுமார் அறுநூறுமைல் தூரமும் பரவி இருக்கிறது. ஸிந்து, கங்கை, பிரமபுத்திரா முதலிய ஜீவ நதிகள் பெருகிப் பாயப்பெற்ற இந்தப் பிரதேசம் மிகச் செழிப்புள்ளது. இங்கே பயிர்த்தொழில் மிகவும் ஏராளமாக நடந்து வருகிறது. இந்த உயர்ந்த நதிகளையன்றித் தண்ணீர் வற்றுதலில்லாத பல வாய்க்கால்களும் போக்கு வரவுக்குச் சாதகமாக இருந்துவருவதனால் இந்தப் பிரதேசத்தில் வியாபாரமும் விசேஷமாக நடக்கின்றது.

மிகப் பழமையான நீண்டகாலந் தொடங்கிச் செழிப்புக்கும், வனப்புக்கும், போக்கு வரவுக்கும் மேம்பாடடைந்திருந்த இந்தச் சம வெளிகளில் வசித்துவரும் ஜனங்கள் கல்வி கேள்விகளிலும், நாகரிகத்திலும் சிறந்து விளங்கி வந்திருக்கிறார்கள். இவ்விடத்திற்றான் பிரக்யாதிபெற்ற பல இந்திய சக்ரவர்த்திகள் தோன்றிப் பல பெரிய ராஜ்யங்களை ஸ்தாபித்து மிக்க மேம்பாட்டுடன் பிரபலமாக அரசாட்சி செய்து வந்தார்கள். பேராசைக்கும் பொறாமைக்கும் அடிமையான பல வரசர்கள் ஒருவரை யொருவர் எதிர்த்து நின்று அகோரமாகச் சண்டை செய்த விடமும் இதுதான். இந்தப் பிரதேசத்தை ஜனங்கள் இன்னமும் சிறந்ததெனக் கொண்டாடி வருகிறார்கள். இவ்விடத்தில் பல புண்ணிய ஸ்தலங்களும், தீர்த்த விசேஷங்களும் இன்னமும் இருந்து வருகின்றன. இவற்றை நாடி நமது தேசத்தின் நான்கு பக்கங்களிலிருந்தும் எண்ணிறந்த ஜனங்கள் திரள் திரளாக யாத்திரை செய்து வந்துகொண்டிருக்கிறார்கள்.

## ii. தக்ஷிண பீட பூமி

இது விந்திய, சாத்புராமலைகளுக்குத் தெற்கேயுள்ளது. இந்த இரண்டு மலைகளும், நருமதை நதியும் இந்தப் பிரதேசத்தை ஹிந்துஸ்தானத்திலிருந்து வேறு பிரிக்கின்றன. கிருஷ்ணை, துங்கபத்திரா நதிகள் இந்தப் பிரதேசத்தின் தென்னெல்லைகளாம். வட இந்தியாவிற்கு இமயமலை பெரிய

எல்லைச் சுவராக இருந்து வருவதுபோலத் தென்னிந்தியா விற்கு விந்தியமலை சிறந்த வட எல்லையாக இருந்து வருகின்றது. வெளித் தேசங்களிலிருந்து இந்தியாவுக்கு வருவதற்கு வட மேற்குக் கணவாய்களையன்றி வேறு வழியில்லாததுபோல வட இந்தியாவினின்றுந் தென்னிந்தியாவுக்கு வருவதற்கு விந்தியமலையின் கீழ்க்கோடியிலுள்ள சூடிய நாகபுரி என்னும் நாட்டின் வழியாகவன்றி வேறு வழி கிடையாது.

மேற்குறித்த மலைகளினாலும், நருமதை யாற்றினாலும், அவற்றைச் சார்ந்துள்ள பெருங்காடுகளினாலும் தக்ஷிணம் ஹிந்துஸ்தானத்தினின்றும் இயற்கையிலேயே வேறாகப் பிரிந்துள்ளதனால், இவ்விரண்டிடங்களிலு முள்ள ஜனங்கள் நடை, உடை, பாஷை, தொழில், உணவு முதலிய பலவற்றிலும் முற்றிலும் வேறுபாடு அடைந்திருக்கிறார்கள். அன்றியும் இந்த இரண்டு பிரதேசங்களின் சரித்திரங்களும் வேறு வேறாக இருந்து வருகின்றன. சிற்சில காலங்களொழிந்த மற்ற சமயங்களில் இவ்விரண்டிடங்களிலும் தனித் தனி ராஜ்யங்கள் ஏற்பட்டு, வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த அரசர்களால் ஆட்சிபுரியப் பெற்றிருக்கின்றன.

---

## iii. தமிழகம்

இது வடக்கே கிருஷ்ணாநதி முதல் தெற்கே கன்னியா குமரி வரையிலும், கிழக்கே வங்காள விரிகுடா முதல் மேற்கே அரபிக்கடல் வரையிலும் பரவியுள்ள பிரதேசம். இதன் மேற் பக்கத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைகளும், கீழ்ப் பக்கத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் தெற்கில் நீலகிரி மலையும் இருக்கின்றன. நாட்டைச் செழிப்பிக்கும் நதிகள் ஓடிப் பாய்வதனால் இந்தப் பிரதேசம் வியவசாயத்திற் சிறந்து விளங்கி யிருந்த தல்லாமல், சமுத்திரத்தைச் சார்ந்துள்ளதனால் வியாபாரத்திலும் மேம்பாட்டை யடைந்திருந்தது. இவை காரணமாக இங்கு வசித்து வந்த குடிகளும் வெகு நீண்டகாலந் தொடங்கியே அறிவிலும், நாகரிகத்திலும் உயர்ந்திருந்தார்கள். சில சரித்திர மேதாவி

கள் தென்னிந்தியா தான் உலகத்தில் முதன் முதல் மக்கள் தோன்றியவிடமாக இருக்கவேண்டுமென்றும், அங்கிருந்தே அயல் நாடுகளுக்கு நாகரிகம் பெருகி வளர்ந்ததென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். அதற்குக் காரணம் 'ஆதிகாலந் தொடங்கிப் பரதகண்டம் என்று வழங்கப்படுகின்ற நமது இந்திய நாடு நீர்வள, நிலவளங்கள் நன்றாக வமையப் பெற்றுள்ளதை யன்றித் தேசத்தின் இயற்கை யமைப்பும், சீதோஷ்ண நிலைமையும் மானிட வாழ்க்கைக் கேற்றனவாகப் பொருந்தி யிருந்தபடியால், இவ்விடத்தில் அநாதியாக மனிதர்கள் இடைவிடா திருந்திருக்க வேண்டும்' என்பது தான். இந்த அபிப்பிராயத்திற் கிணங்கினால், இந்நாட்டுக் குடிகள் அந்நிய தேசங்களிலிருந்து இந்தியாவிற்கு வந்தார்க ளென்பதை ஒத்துக் கொள்வதற் கிடமில்லை.

சுருங்கச் சொல்லுவோமானால், நாட்டின் இயற்கை யமைப்பினா லுண்டாகும் பேதங்கள் காரணமாக, ஆங்காங்கு வசிக்கும் ஜனங்களும், அவர்களின் சரித்திரங்களும், வேறுபா டடைகின்றன. இவ் வுண்மையை நாம் இன்னமு மதிகமாகவும், செம்மையாகவும் பின்வரும் வரலாற்றிலிருந்தும் அறிந்துகொள்ளலாம். அல்லாமலும் நாட்டின் இயற்கை யமைப்பு மாறுபட, அந்நாட்டுக் குடிகளின் சரித்திரமும் மாறுபட்டு வருவதையும் நாம் பரக்கக் காணலாம். முக்கியமாக நமது நாட்டின் இயற்கை யமைப்பு இப்பொழுதிருப்பது போலவே எக்காலத்திலு மிருந்ததெனக் கொள்ளாமல், மாறுபட்டு வந்துள்ள தென்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். இல்லையேல், நமக்குச் சரித்திரத்தில் ஏற்படும் வேறுபாடுகள் நன்றாகப் புலப்படா. இப்பொழுதைய இந்தியாவின் படத்தைக்கொண்டு முற்காலத்துச் சரித்திரத்தைப் படிப்பதினும் பேதைமை வேறு கிடையாது.

## 2. இந்தியாவின் பழங் குடிகள்

பூமியின் அமைப்பைப் பரிசோதித்து அதனின்றும் காலத்தை நிர்ணயித்து நாடுகளின் ஆயுளைக் கண்டறியவல்ல 'ஜியாலஜிஸ்ட்ஸ்' என்னும் பூகற்ப சாஸ்திர நிபுணர்கள் தென்னிந்தியா மிகப் பழமையான நாடென்றும் அது ஏற்பட்ட பல்லாயிர மாண்டுகளான பின்புதான் வடஇந்தியா ஏற்பட்டதென்றும் சொல்லுவதற் கிணங்க, மக்கள் வரலாற்றில் வல்லவர்களென்று மதிக்கப்பட்டு வரும் 'ஆன்த்ரோபாலஜிஸ்ட்ஸ்' என்னும் சாஸ்திரிகள் உலகத்தில் முதன் முதல் மக்கள் தோன்றியவிடம் தமிழ் நாடாக இருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். அதனால் திராவிடர்கள் என்ற ஒரு ஜாதியாரும், அவர்களுக்குப் பின்பு ஆரியர் என்ற மற்றொரு ஜாதியாரும் வெளி நாடுகளிலிருந்து இந்நாட்டிற்கு வந்து குடியேறினார்கள் என்பதை அவர்கள் கொஞ்சமும் ஒத்துக்கொள்ளவில்லை.

சரித்திர நிபுணர்கள் மனிதர்களுடைய நாகரிகத்தையொட்டி அவர்கள் காலங்களைக் கற் கருவிக்காலம், செம்புக் கருவிக்காலம், இரும்புக் கருவிக்காலம் என்று வகைப்படுத்தியிருக்கிறார்கள். ஐரோப்பாவில் இரும்புக் கருவிக்காலம் ஆரம்பமாவதற்குச் சுமார் 2,000 வருஷங்களுக்கு முன்னேயே இந்தியாவில் அந்தக் காலம் தொடங்கி யிருந்ததென்கிற காரணத்தினால், மிகவும் பழமையான புராதன காலந் தொடங்கியே இந் நாட்டினருடைய நாகரிகம் மேம்பா டடைந்திருந்ததென்று கருதவேண்டும். அந்தக் காலத்திலேயே நமது நாட்டில் பருத்தி நெசவு, பயிர்த் தொழில், வாணிபம் முதலிய தொழில்கள் தழைத்திருந்தன வென்றும், பருத்தி யுடைகளும், மரங்களும் பிற நாடுகளுக்கு இங்கிருந்து அனுப்பப்பட்டன வென்றும் சொல்லப்பட் டிருக்கின்றன.

மேனாட்டுச் சரித்திராசிரியர்களிற் பலர் நமது நாட்டில் இப்பொழுது வசித்துவரும் ஜனங்களை உற்றுநோக்குங்கால், அவர்க ளனைவரையும் இரண்டு பெரும் பிரிவுகளாகப்

பிரிக்கலாம் என்றும், ஒரு வகுப்பினர் வெண்ணிறமாகவும் உயரமாகவும் அழகாகவும் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் அகன்ற நெற்றியும் உயர்ந்த மூக்கும் பரந்த கண்களும் கம்பீரமான தோற்றமும் உடையவர்கள் என்றும், மற்றொரு வகுப்பினர் கறுப்பாகவும் குட்டையாகவும் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் சிறுத்த கண்களும் சப்பை மூக்கும் உடம்பில் அடர்ந்த உரோமமும் உடையவர்கள் என்றும், அவர்களில் முன்னே சொல்லப்பட்டவர்கள் ஆரியர்களென்றும் பின்னே சொல்லப்பட்டவர்கள் திராவிடர்களென்றும் கூறி வந்தார்கள். பற்பல காரணங்களினால் தோற்றத்தில் மாறுபாட்டை யடைந்த ஒரே வகுப்பிற் சேர்ந்த ஜனங்களை இரண்டு தனி ஜாதியார்களாக மதிப்பது பேதைமையே யன்றி வேறல்ல.

பாரஸிகர், கிரேக்கர், சாகர், யூசி, ஹூணர் முதலான பல அந்நியர்கள் நமது நாட்டிற் குடியேறி, ஏற்கெனவே இருந்த குடிகளோடு உறவாடிக் கலந்துவிட்டது போன்று ஆரியர்கள் என்று ஒரு ஜாதியாரும், அவர்களுக்கு முன்புத் திராவிடர்கள் என்று மற்றொரு ஜாதியாரும் இந் நாட்டில் வந்து குடியேறினார்கள் என்பதற்கு ஒருவிதமான ஆதாரமும் இல்லையென்பது தான் பல மேதாவிகளின் நிச்சயமான கொள்கை.

கற்கருவி, இரும்புக் கருவிக் காலங்களுக்குப் பின்பு தென்னிந்தியாவி லிருந்த ஆதிக் குடிகள் திராவிடர்கள் தான் என்று சரித்திர நிபுணர்கள் தீர்மானித் துள்ளார்கள். செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள பெரும்பெயர் என்னுங் கிராமத்திலும், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அதிச்சநெல்லூர் கிராமத்திலும், கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள சிறுமுகை என்னுங் கிராமத்திலும், இன்னும் பற்பல விடங்களிலும் மிகப் பழமையான கல்லறைகளைத் தோண்டிப் பார்த்ததினின்றும் சரித்திர மேதாவிகள் தென்னிந்தியாவில் கற்கருவிக் காலத்திற்கும் இரும்புக் கருவிக் காலத்திற்கு மிடையில் செம்புக் கருவிக்காலம் இருந்திருக்கவில்லை யெனவும் தீர்மானித்திருக்கிறார்கள். இரும்புக் கருவிக் காலத்துக்குப் பிந்

தியவர்கள் தான் திராவிடர்கள் என்று கொள்ளப்பட்டிருக்கின்றனர். இவர்கள் இப்போதைக்குச் சுமார் 5,000 வருஷங்களுக்கு முன் தென்னிந்தியாவி லிருந்தவர்களெனத் தெரிய வருகிறது.

மத்தியதரைக் கடலைச் சார்ந்துள்ள சில விடங்களில் அதாவது க்ரீட், ஸைப்ரஸ், பாபிலன் முதலிய நாடுகளில் பெரும்பெயர், அநிச்ச நெல்லூர், சிறுமுகைகளின் புராதனக் கல்லறைகளிற் கிடைத்தன போன்ற ஆயுதங்கள், ஆபரணங்கள், பாத்திரங்கள், மிகப் பெரிய மண் ஜாடிகள் இருந்தன வென்னும் காரணத்தைக் கொண்டும், தென் ஆப்ரிக்கா, ஆஸ்த்ரேலியா கண்டங்களிலிருந்த அக்காலத்திய ஜனங்களுக்கும் தென்னிந்தியக் குடிகளுக்கும் வேறு விதங்களில் சில ஒற்றுமைக ளிருந்ததைக் கொண்டும், மேனாட்டுச் சரித்திராசிரியர்கள் திராவிடர்கள் அயல் நாடுகளிலிருந்து இந்தியாவில் வந்து குடியேறினார்களெனத் தீர்மானித்து விட்டார்கள். அந்த ஒற்றுமைகள் காரணமாகவே உலகத்தில் மக்கள் தோன்றிய காலம் முதற்கொண்டு இடைவிடாமற் றென்னிந்தியாவில் வசித்து வந்து காலக்கிரமத்தில் அறிவிலும், நாகரிகத்திலும் தேர்ச்சி யடைந்த திராவிடர்கள் இந் நாட்டினின்று பிற நாடுகளுக்குச் சென்றிருக்கவேண்டுமென்னும் அபிப்பிராயம் இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாக ஒப்புக்கொள்ளப்பட்டு வருகின்றது. இதை அபிப்பிராய பேதமின்றி யாவரும் ஒத்துக் கொள்ளக்கூடிய சான்றுகள் போதுமான வளவு இன்னும் கிடைத்தில. சீக்கிரத்தில் யாவரும் இதுவே உண்மையென அங்கீகரிக்க நேரிடுமென் றெண்ணுவதற்கு இடமுண்டு.

திராவிடர்கள் தென்னிந்தியாவில் மட்டிலன்றி வட இந்தியாவிலும் வெகு நீண்ட காலமாக இருந்திருக்கிறார்கள். ஒரு ஜாதியார்களே வட இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் இருந்து வந்தார்களேனும், நாளடைவில் அவர்களுக்குள் வித்தியாசங்கள் ஏற்பட்டு விட்டன. தென்னிந்தியாவில் கற்கருவி, இரும்புக் கருவிக் காலங்களுக்கு நடுவில் செம்புக் கருவிக் காலம் இருந்திலதென்று மேலே சொல்லப்பட்ட

தல்லவா? வட இந்தியாவில் அவ்வாறின்றிச் செம்புக் கருவிக் காலம் இருந்ததாகத் தெரிய வருகின்றது. நடை, உடை, பாஷை, ஆசாரம், அநுஷ்டானம் முதலியவற்றுள்ளும் நாளடைவில் வேறுபாடுகள் ஏற்பட்டதன் காரணம், முற்காலத்தில் வட நாட்டிற்கும் தென்னாட்டிற்கும் போக்குவரவுக்கான சாதனங்கள் இல்லாமையினால், ஆங்காங் கிருந்த ஜனங்கள் ஒருவரோடொருவர் கலந்து உறவாடி ஒத்திருக்க இயலாமற் போனதாகும். அன்றியும், வட நாட்டின் மீது படை யெடுத்தும், சௌகரியத்தை நாடியும் வந்த பல அந்நியர்கள் உத்தரத் திராவிடர்களோடு கலந்து கொஞ்சங் கொஞ்சமாகத் தாங்களும் மாறி, யவர்களையு மாற்றி விட்டாற் போல் தென்னிந்தியாவில் யாதொன்றும் நடைபெறவில்லை. அந்த அந்நியர்களின் பெருங் கூட்டங்கள் தென் தேசத்துக்கு வாராதிருந்ததற்கு நாட்டின் இயற்கை யமைப்பே சிறந்த காரணமாகும். விந்திய, சாத்புரா மலைகளையும், நருமதை யாற்றையும் கடந்து தென்னிந்தியாவுக்கு வருவது மிகக் கஷ்டமாக விருந்ததை யன்றித் தென்னிந்தியத் திராவிடர்கள் அவர்களை வரவொட்டாமற் றடுத்தும் வந்திருக்கிறார்கள். ஆகையினாற்றான் உத்தரத் திராவிடர்களுக்குந் தக்ஷிணத் திராவிடர்களுக்கும் வித்தியாசங்கள் பெருகி விட்டன. தெற்கி லிருந்தவர்கள் நாகரிகத்திற் சிறந்திருந்ததோடு, ஆடு, மாடுகளை வைத்துக்கொண்டும் வியவசாயத்திற்கு வேண்டிய கருவிகளைச் செய்து கொண்டும், பயிர் செய்து வந்தார்கள். வடதேசத்தி லிருந்தவர்களோ வேட்டையாடியும், காய் கனிகளைத் தின்றும் ஜீவித்து வந்தார்கள். ஆனால், மொத்தத்தில் எல்லோரும் கூட்டங் கூட்டமாகக் கிராமங்களில் ஒரு தலைவ னதிகாரத்திற்குட் பட்டு இருந்து வந்திருக்கிறார்கள்.

திராவிடர்கள் மரங்களையும் ஆறுகளையும், மின்னல், மழை, காற்று முதலியவற்றையும், பாம்பு, புலி முதலியவற்றையும் தெய்வங்களாகக் கருதி, வணங்கி வந்தார்கள் என்று தெரிய வருகிறது.

# 3. ஆரியர்கள்

இவர்கள் யார்? இந்நாட்டினரா அல்லது வெளி நாடுகளிலிருந்து வந்தவர்களா? இந்நாட்டினராயின் எக்காலந் தொடங்கி இவர்கள் இங்கே இருந்திருக்கிறார்கள்? பிறநாட்டினராயின் எப்பொழுது, ஏன், இங்கு வந்தார்கள்? இவர்களுடைய நடை, உடை, பாஷை, கொள்கைகள் என்ன?—என்பனவற்றைச் சற்று விசாரிப்போம்.

சிலர் இவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்தார்களென்றும், வேறு சிலர் ஆர்டிக் மகா சமுத்திரத்திலிருந்து வந்தார்களென்றும் சொல்லுகிறார்கள். 'இவர்கள் வசித்து வந்த நாடு மிகவும் அசௌகரியமானது. அங்கே குளிரதிகம். ஆடு மாடுகளுக்குப் போதுமான மேய்ச்சல் கிடைப்பதில்லை. பயிர் செய்வதற்கும் அது தக்க இடம் அன்று. நாளடைவில் இவர்கள் குடும்பங்கள் பெருகத் தொடங்கினபொழுது இவர்கள் தாங்களும், தங்கள் ஆடு, மாடுகளும் சௌக்கியமாக இருக்கத் தகுந்த வேறு நாடுகளைத் தேடிச் செல்வது மிகவும் அவசியமாயிற்று. இதுதான் இவர்கள் தங்கள் நாட்டைவிட்டு, அயல் நாடுகளுக்கு வந்து சேர்ந்ததற்கு முக்கிய காரணமாகும்: அல்லாமலும் இவர்கள் ஆடு மாடுகளை மேய்த்து வளர்ப்பதையே பெருந் தொழிலாகப் பூண்டிருந்ததனால் இவர்களுக்கு ஊர் ஊராகச் செல்வதும், சென்ற சென்ற விடங்களில் தங்குவதும் இயல்பாயிற்று'—என்பது சிலருடைய அபிப்பிராயம். மற்றுஞ் சிலர் வட இந்தியாவிலிருந்த நமது பரத நாட்டினரைத் தான் மேனாட்டார் ஆரியர்களென்று வழங்கினார்கள் என்றும், திராவிடர் என்கிற ஒரு ஜாதியாரும், பிறகு ஆரியர் என்கிற மற்றொரு ஜாதியாரும் அந்நிய தேசங்களிலிருந்து இந்தியாவிற்கு வந்தார்கள் என்பது பிசகு என்றும் சொல்லுகிறார்கள். மேலும் இவர்கள் கடவுளர்க்கு அளிக்கும் உணவைத் தீவாயிலாகத் தரும் முறைக்கு ஆரியம் என்று பெயர் என்றும், அம்முறையைக் கைக்கொண்டு நடக்கும் வகுப்பினருக்கு ஆரியர் என்னும் பெயர் உண்டாகியது என்றும் சொல்லுகிறார்கள்.

அல்லாமலும் இந்தச் சரித்திர நிபுணர்கள் அவர்களுடைய மதந்தான் ஆரியமதம் என்று வழங்கப்பட்டிருக்கவேண்டுமென்றும், அந்த ஆரிய மதத்தை யல்லாமல் இந்தியாவில் ஹிந்துமதம் என்று வேறொருமதம் உண்டென்றும், பௌத்தமும், சமணமும் தனித்தனி மதங்களென்றும் ஒப்புக்கொள்ளவில்லை. இவர்கள் இங்ஙனம் கருதுவதற்குச் சில காரணங்கள் உள்ளன வென்றாலும், அவற்றிற்குத் தக்க சான்றுகள் போதுமானவளவு கிடைத்தில வாதலின் இவர்களுடைய அபிப்பிராயங்களை யாவரும் ஒத்துக்கொள்ளவில்லை. இவர்கள் ஆரிய, திராவிடர்களுடைய வெவ்வேறான தோற்றத்திற்கும், நடை, உடை, பாஷை முதலானவற்றின் வித்தியாசங்களுக்கும் நாட்டின் இயற்கை யமைப்பும், வட இந்தியாவி லிருந்தவர்களுக் கேற்பட்ட கலப்பும், தென்னிந்தியாவிலிருந்தவர்களுக்கு அவ்விதமான கலப்பின்மையும், இவ்விருவரும் ஒருவரோடொருவர் கலந்துறவாடக் கூடாமையுமே முக்கிய காரணங்களாம் என்று கருதுகிறார்கள்.

ஆரியர்கள் என்று சரித்திரங்களிற் சொல்லப்பட்டுள்ள ஆரிய ஒழுக்கத்தைக்கொண் டொழுகின நமது வட நாட்டுக் குடிகள் அயல்நாடுகளி லிருந்து வந்தவர்களோ அல்லது நமது நாட்டிலேயே இருந்தவர்களோ, அது எவ்வாறாயினு மாகுக. முதன் முதல் அவர்கள் பஞ்சாபில் ஸிந்து நதி தீரத்தில் உண்டு உடுத்து, தேவர்களைப் பாடிக் களித்து, நாகரிக வளர்ச்சியில் இருந்ததன் விவரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அப்பொழுது அவர்கள் ஆடுமாடுகளை மேய்த்து வந்ததல்லாமல், பயிர்த்தொழிலும் செய்து வந்தார்கள். அவர்கள் தங்களுக்கு உபயோகமான பயிர்த்தொழிற் கருவிகளையும், யுத்தத்திற்கு வேண்டிய அம்பு, வில், ஈட்டி, கத்தி, கோடரி முதலிய ஆயுதங்களையும், வண்டி, படகு முதலிய போக்கு வரவுக்கான சாதனங்களையுஞ் செய்துகொள்வதற்கு ஒருவாறு கற்றிருந்தார்கள். அவர்களுக்கு வஸ்திரம் நெய்யவுந் தெரியும். இந்தக் காரணங்களினால் அவர்கள் அறிவிலும், நாகரிகத்திலும் தேர்ச்சியடைந்தவர்களென்று தெரிய வருகிறது.

அந்தக் காலத்தில் ஆரியர்கள் தாங்கள் பயிரிட்ட கோதுமை, நெல் முதலிய தானியங்களையும், தாங்கள் மேய்த்து வந்த ஆடுமாடுகளின் தயிர், பால், வெண்ணெய் முதலிய வற்றையும், கீரை, காய், கனி, கிழங்கு முதலிய சாகவர்க்கங்களையும் உண்டு களித்திருந்தார்கள். சில விசேஷ காலங்களில் மாத்திரம் மாமிசம் புசிப்பதுண்டு. அவர்களில் இடையர்களும், வியவசாயிகளுமன்றிச் சித்திர வேலைக்காரரும், மண் வேலை, மர வேலை, இரும்பு முதலிய உலோக வேலை செய்கின்றவர்களும் இருந்து வந்தார்கள்.

ஆரியர்களிற் பல குடும்பத்தினர்கள் ஒரே யிடத்தில் தங்கி ஒரு தலைவனது அதிகாரத்திற்குட்பட் டிருந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள மற்றவர்கள் அவனுக்குக் கீழ்ப் படிந்து நடந்து வருவார்கள். அவனே குடும்பத்துக்கு இறைவன் போன்றவன். தகப்பனுக்குப் பின்னர் அவனுடைய மூத்தமகன் குடும்பத் தலைமையை வகித்து நடத்துவான். ஆரியர்கள் ஸ்திரீகளை மிகவும் கௌரவமாக நடத்தி வந்தார்கள்.

பல குடும்பங்களுக்கும் தலைவனைத் தெரிந் தெடுக்கப் பட்டவனே அவர்களுக்கு அரசனாயிருந்தான். அவர்களுடைய வழக்குக்களைத் தீர்ப்பதும், யுத்தத்தில் அவர்களை முன்னின்று நடத்துவதும், தெய்வங்களுக்குக் கொடுக்க வேண்டிய பலிகளைக் கொடுத்துத் திருப்தி செய்விப்பதும் அவனது தொழில். குடும்பத்தைப் போலவே, அரசாட்சியிலும் ஒரு தலைவனுக்குப் பின் அவன் மூத்த மகன் தலைவனாக இருந்து வருவது வழக்கம். சில சமயங்களில் அனைவரும் ஒன்று சேர்ந்து வேறொருவனைப் புதியவனாகத் தெரிந்தெடுத்துக் கொள்வது முண்டு.

ஆரியர்கள் அக்காலத்தில் அக்கினி, இந்திரன், வருணன், யமன் முதலிய தெய்வங்களை வணங்கி வந்தார்கள். குளிர் தேசத்திலிருந்ததினாலும், உணவைச் சமைக்க இன்றியமையாததினாலும், வஸ்துக்களின் அசுத்தங்களைப் போக்கிச் சுத்தப் படுத்துவதனாலும், அவர்கள் அக்கினியை முதல் தெய்வ

மாகக் கொண்டாடி வந்தார்கள் போலும். அன்றியும் அவர்கள் மற்ற தேவதைகளுக்குச் செலுத்தவேண்டிய காணிக்கைகளை அக்கினியில் இட்டுவிட்டால் அக்னிதேவன் அவற்றைக் கொண்டுபோய் அவரவர்களுக்குச் செலுத்தி விடுவான் என்பது அவர்கள் நம்பிக்கை. இப்பொழுதுங்கூட ஹிந்துக்களின் வீடுகளில் நடக்கும் சுபாசுப கருமங்கள் பலவும் அக்கினியின் முன்னிலையிற்றான் நடந்து வருகின்றன.

ஸிந்து நதிக்கரையில் வசித்து வந்த ஆரியர்கள் தாங்கள் செய்த சண்டைகளைப் பற்றியும், தாம் வணங்கி வந்த தெய்வங்களைப்பற்றியும் புகழ்ந்துபாடி யிருக்கிறார்கள். அந்தப் பாடல்கள் தாம் 'ருக்வேதம்' என்று வழங்கும் முதல் வேதமாகும். எழுதத் தெரியாததனால் அப்பாடல்கள் கர்ண பரம்பரையாக வந்து, பிற்காலத்தில் எழுதி வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கு முந்திய நூல் உலகத்திலில்லை யென்பது பல மேதாவிகளின் தீர்மானமான கொள்கை. இந்த ருக்வேதத்திலிருந்து அக்காலத்திய ஆரியர்களின் நடை, பாஷை, கொள்கை முதலியனவும், அவர்களுடைய அரச வம்சங்கள், சண்டைகள் முதலியனவும் விளங்குகின்றன. விசுவாமித்தாருடைய சகாயத்தைக் கொண்டு சண்டைக்கு வந்த பத்துக் கூட்டத் தலைவர்களை ஸுதாஸ் என்னும் ஒரு அரசன் வசிஷ்டருடைய உதவியைப் பெற்று ஜயித்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ருக்வேதத்திற் சொல்லப்பட்ட யாவும் கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 2,000 வருஷங்களுக்குமுன் முதல் கி. மு 1,400 வரையில் நடைபெற்றனவென்பது பல சரித்திராதிபர்களுடைய அபிப்பிராயம். 'பால கங்காதர திலகர்' என்னும் வேதியர் ருக்வேத ஆரியர் காலத்தைக் கி. மு 6,000 முதல் கி. மு 4,000 வரையில் என வரையறுத்திருக்கிறார்.

# 4. வட இந்திய ராஜ்யங்கள்

திராவிடர்கள் தென்னிந்தியாவிலன்றி வட இந்தியா விலும் பரவி யிருந்தார்களென்று முன்னமே சொல்லப் பட்டிருக்கின்றதல்லவா? வட இந்தியத் திராவிடர்களுக்கும் அவர்களுக்குப் பிந்தி அவர்களினின்றுமே ஏற்பட்ட ஆரியர் களுக்கும் ஒழுக்க வேறுபாடு முதற் காரணமாக நாளடை வில் வித்தியாசங்கள் பெருகிப் பல சண்டைகள் நடந்து வந்தன. அந்தச் சண்டைகளில் ஆரியர்களே பெரும்பாலும் ஜயமடைந்து வட இந்தியா முழுவதும் பரவிப் பிரபல மடைந்துவிட்டார்கள். ஹிந்துஸ்தானத்தில் கங்காநதி தீரத்தில் ஆரியர்கள் சண்டையினாலும், சமாதானத்தினாலும் தங்களுடைய அதிகாரத்தை நிறுத்தித் திராவிடர்களைத் தம்முளடக்கிக் கொண்டு நாளடைவில் முன்னேற்றத்தை யடையலானார்கள். என்றால், அக்நியை முதற் றெய்வமாகக் கொண் டொழுகினவர்கள் நாளாவட்டத்தில் அநக்நிகளை வென்று விட்டார்கள் என்பதுதான் தாத்பரியம்.

நீர் வளம் நிலவளங்களை யுடையதும் தேகாரோக்கியம் பொருந்தியதுமான கங்காநதி தீரத்தில் ஆரியர்கள் பல ராஜ் யங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். குடும்பங்கள் பெரு கப் பெருக அவற்றின் பாதுகாப்பின் சம்பந்தமான வேலை களும் அப்பொழுதைக் கப்பொழுது பெருகி வளருமென் பதில் ஆச்சரிய மில்லை யல்லவா? அதனால் அவர்கள் அப் பொழுது தங்களுக்குள் இரண்டு தொழிற் பிரிவினைகளை நிய மித்துக் கொண்டார்கள். அதற்கிணங்க, அவர்களி லொரு வகுப்பினர் தாங்கள் விருத்திக்குக் கொண்டு வந்த ராஜ்யங் களைப் பிறர் அபகரித்துக் கொள்ளாதபடி பாதுகாத்து வந்தார்கள். அல்லாமலும் தங்கள் ஜனங்கள் பேராசையினா லும், பொறாமையினாலும் பிறர் பொருள், உரிமை முதலிய வற்றை அநியாயமாகக் கைப்பற்றிக் கொள்ளாதபடி அவர் களுக்குள் அமைதியை யுண்டுபண்ணச் சில நிபந்தனைகளை ஏற்படுத்தினார்கள். அதன்றியும், சிற்சில சமயங்களில் அவ் வமைதி முதலியவற்றை முற்றிலுஞ் சிதறுண்டு போகும்

படித் திடீரென்று மேல்விழுந்து தாக்கி உபத்திரவங்களை உண்டுபண்ணி வந்த ஆதி குடிகளுடன் சண்டையிட்டு அவர்களை ஜயித்துத் தங்களையும் தங்களுடைய ராஜ்யங்களையும் பாதுகாத்துவந்தார்கள்.

மற்றொரு வகுப்பினரோ அவர்கள் பாரம்பரியமாக நடத்தி வந்த தெய்வ வணக்கம், பலி, பிரார்த்தனை முதலான பூஜைகளைச் சரியான காலங்களில் நிறைவேற்றி, ஜனங்களின் பொது நன்மையின் பொருட்டுக் கடவுளாதருளைச் சம்பாதித்து வந்தார்கள். என்றால், எதிர்த்து வந்த பகைவர்களைக் கொன்றும், அவர்களை அபஜயப் படுத்தி யோட்டியும், ஜனங்களுக்குள் அமைதியை உண்டுபண்ணி அவர்கள் வாழ்க்கை சந்தோஷமும் தெளிவும் பொருந்தி விளங்குவதற்காக ஜனசமூகத்தை யடக்கியாளுந் தொழிலின் பொருட்டுச் சிலர் நியமிக்கப்பட்டார்கள். தங்கள் நாடுகளுக்கும், குடும்பங்களுக்கும் இடி, மின்னல், மழை, காற்று, நெருப்பு, நோய் முதலியவற்றினால் துன்பம் நேரிடாம லிருக்கும் பொருட்டும், அவை யாவும் வளர் பிறையைப் போலத் தினமும் விருத்தியாவதன் பொருட்டும், தினந்தோறும், காலை, நண்பகல், மாலை என்ற மூன்று வேளைகளிலும் தெய்வ வணக்கஞ் செய்யவும், விசேஷ காலங்களில் விரதமிருந்து பிரார்த்தனை நடத்தவும், நெருப்பின் முன்னிலையில் பலிகள் கொடுத்துப் பூஜைகள் பண்ணவும் சிலர் நியமிக்கப்பட்டார்கள். மற்றவர்கள் அந்த இரண்டு தொழிலினர்களுக்கும் அடங்கி, அவர்கள் கட்டளையை மேற்கொண்டு, அவர்களுக்கு உதவியாக இருந்து வரத் தொடங்கினார்கள்.

இந்தத் தொழிற் பிரிவினைகள் முதலில் சௌகரியத்தின் பொருட்டே ஏற்பட்டனவாயினும், அவைகள் நாளடைவில் அவர்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசம் பாராட்டிக் கொள்வதற்கும் அடிப்படையாயின. தொழிற் பிரிவினை ஏற்பட்ட முதற் காலத்தில் அவர்களுக்குள் எவ்விதமான பேதமும் இருந்ததில்லை. கொஞ்சங் கொஞ்சமாக வித்தியாசங்கள் தோன்றி வளர்ந்து பெருகிப் போனபடியினால் அவ்விரண்டு தொழிலாளர்களும் அப்படியே இரண்டு தனி

ஜாதிகளாக நின்று விட்டார்கள். அவர்கள்தான் பிற் காலத்தில் க்ஷத்திரியர் என்றும், பிராமணர் என்றும் சொல் லப்பட்டுவருகிறார்கள்.

ருக்வேத காலத்தில் சிறிதும் ஜாதி வித்தியாசம் கொண் டிராத ஆரியர்களுக்குள் அதற்குப் பிந்திய காலத்தில் அதா வது சுமார் கி. மு. 1400 முதல் கி. மு. 600-க்குள் ஜாதி பேதம் என்பது மிகவும் உறுதியாக ஏற்பட்டுப் போயிற்று. ஜாதி பேதங்கள் இவ்விரண்டுடன் நில்லாமல் நாளடைவில் இன்னமும் பெருகத் தலைப்பட்டன. வாணிபமும், வியவ சாயமும் செய்து நாட்டின் செல்வத்தை வளர்த்து வந்த வர்கள் வைசியர் என்று தனிப்பட்ட ஒரு ஜாதியாராகவும், மேலே குறித்த மூன்று வகுப்பினர்களுக்கு மடங்கி, அவர் களுக்குத் தொண்டு செய்தும், நிலங்களைப் பண்படுத்தியும், உழுது பயிர் செய்துவந்த சாதாரண ஜனங்கள் சூத்திரர் என்று ஒரு வேறு ஜாதியாராகவும் ஏற்பட்டார்கள்.

பொது நன்மையின் பொருட்டும், ஜன சமூகத்தின் சௌகரியத்தின் பொருட்டும், அவரவர்கள் செய்துவந்த தொழிற் காரணமாக முதலில் ஏற்பட்ட பிரிவினைகளை ஜாதி களெனப் பெயரிட்டு, அவற்றுள் உயர்வு தாழ்வாகிய வித்தி யாசங்கள் உள்ளனவாக மதித்து, வாக்குவாதங்கள் பண்ணி யும், சண்டை சச்சரவுகளைச் செய்தும் வருவதற்குப் பேதை மையை யன்றி வேறு காரணமிருப்பதாகக் கருதுவதற்கிட மில்லை.

தொழிற் பிரிவினைகள் ஏற்பட்ட பின்பு ஆரியர்கள் அவரவர்கள் ஏற்றுக்கொண்ட தொழில்களையே முற்றிலுங் கவனித்துவந்து அந்தத் தொழில்களிற் செம்மையாகப் பயின்று, அவற்றில் மிகவும் மேம்பாடடைந்து விளங்கினார் கள். எவ்விதமான கவலையுமில்லாமல் சுகமாக ஜீவனஞ் செய்துவந்த இரண்டாவது வகுப்பினராகிய புரோகிதர்கள் கல்வி கேள்விகளிலும், தெய்வ வணக்கத்திலும், வேதமோது விதிலும், யாகங்கள் செய்வதிலும் மிகுந்த தேர்ச்சியை யடைந்தார்கள். அவர்கள் தங்களுடைய மேன்மையைக் கருதிப் புதிது புதிதாகப் பல்வேறு சடங்குகளை உண்டு

பண்ணிக்கொண்டு, அவற்றைச் செய்தாலன்றி முக்தியடைய முடியாதென்றும், பாவங்களைப் போக்க முடியாதென்றும் அனைவருக்கும் உபதேசித்து வரத் தலைப் பட்டார்கள். சடங்குகளும், யாகங்களும் பெருகப் பெருக, அவற்றைச் செய்வதற்கான முறைகளும் தந்திரங்களும் அதிகரிக்கலாயின. அவற்றையெல்லாம் விவரித்துச் சொல்லும் நூலுக்கு 'யஜுர்வேதம்' என்று பெயர். யாக காலங்களில் தேவதைகளைச் சந்தோஷப்படுத்துவதற்காகவும், செய்பவர்களின் களிப்பிற்காகவும் அப்பொழுது வீணை கானத்துடன் பாடிவந்த இனிய வேதப் பாசுரங்கள் யாவும் 'ஸாமவேதம்' என்னும் பெயர் பெற்று விளங்கின.

பழைய குடிகளின் பழக்கங்களிற் சில அவ்வாறே மாறுபடாமலிருந்து வந்ததனால் சாமான்ய ஜனங்கள் பேய், பிசாசு, சூன்யம் முதலியன உண்டென்றும், அவற்றை மந்திரங்களினால் போக்கக் கூடுமென்றும், பகைவர்களையும், வியாதிகளையும், விஷங்களையுங்கூட மந்திர பலத்தினால் ஜயிக்கக் கூடுமென்றும் எண்ணினார்கள். அதனால், அவற்றிற்கான மந்திரங்களையும், சண்டை செய்யும் மந்திரங்களையும் ஒன்றாகத் திரட்டிப் பிறகு அவற்றை 'அதர்வ வேதம்' என்னும் பெயருடன் வெளியிட்டார்கள்.

ஆரியர்கள் நான்கு வகுப்புக்களாகப் பிரிந்திருந்தாலும் மொத்தத்தில் ஒரே மதத்தைத் தழுவியும், ஒரே விதமான சடங்குகளைச் செய்தும், தங்கள் பழைய தெய்வங்களையே வணங்கியும் வந்தார்கள். நாளடைவில் பிராமணர்களின் உதவியில்லாமல் மற்ற வகுப்பினர்களுக்கு எந்தவிதமான சடங்குகளையும் சொந்தமாகச் செய்துகொள்ள முடியாமற் போயிற்று. அந்தக் காரணத்தினால் புரோகிதர்களுக்கு அந்தஸ்தும், ஆதிக்கியமும் பெருகி, முடிவில் அவர்களுக்கு மதச் சடங்குகளே ஒரு பெருந் தொழிலாக ஏற்பட்டு விட்டது. அன்றியும், புரோகிதர்களான பிராமணர்கள் நாள் செல்லச் செல்ல கல்வி கேள்விகளினாலுண்டான பெருமையினாலும், சாஸ்திராப்பியாசங்களினாலும், வைதிகச் சடங்குகளை முன்

னின்று நிறைவேற்றுவதனாலும் முதல் வகுப்பினராக மதிப் படையத் தொடங்கினார்கள்.

பிராமணர்கள் க்ஷத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கும் குறித்த வயதில் உபநயனம் செய்வித்துத் தங்களைப் போலவே அவர்களையும், த்விஜர்களாக்கினார்கள். த்விஜர் என்பதற்கு இரு பிறப்பினையுடையவர் என்று பொருள். தாய் வயிற்றிலிருந்து பிறப்பது ஒன்று, உபநயனம் முத லான சடங்குகளால் அடையும் பிறப்பு மற்றொன்று. இந்த த்விஜர்கள் மட்டில்தாம் வேதங்களை யோதலாம்.

ருக்வேத காலத்திலிருந்ததுபோலவே, ஆரியர்கள் பற் பல தெய்வங்களைக் கொண்டாடி வந்தார்களேனும், அவர் களில் அறிவு மிகுந்த சிலர் ஆதியந்தமில்லாமல் சுயம்புவா யிருக்கிற கடவுள் ஒருவரே யென்றும், அவருக்கு ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களும் பொருந்தியவை என்றும் உணர்ந்திருந்தார்கள். அவ்வாறு உணர்ந்தவர்கள் "ராஜஸம், ஸாத்விகம், தாமஸம் என்ற மூன்று குணங்களிலிருந்தும் அந்த மூன்று தொழில்களும் உண்டாயின. அந்தக் கடவுள் படைத்தற்றொழிலைச் செய் யும்பொழுது பிரமன் என்றும் காத்தற்றொழிலைச் செய்யும் பொழுது மகாவிஷ்ணு என்றும், ஸம்ஹாரத் தொழிலைச் செய்யும்பொழுது பரமசிவன் என்றும் பெயர் பெறுகிறார்," என்று கூறலானார்கள். கடவுளினுடைய குணங்களை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினதினின்றும், சிருஷ்டிப் பொருள்களுக்கும் சிருஷ்டி கருத்தாவிற்கு முள்ள சம்பந் தத்தைக் கண்டறிய முயன்றதினின்றும் அவர்களுடைய வேதாந்தங்கள் ஏற்பட்டன.

வேதங்களையும், யாகங்களுக்கான சடங்குகளையும், பிரா மணர்கள் தாம் நன்றாகக் கற்றிருந்தார்களானாலும், கல்வி அவர்களோடு மட்டில் நின்றுவிடவில்லை. அப்பொழுது அவர்களுடன் கல்வி கேள்விகளிலும் ஆத்மஞானத்திலும் போட்டி போடவல்ல க்ஷத்திரியர்களு மிருந்தார்கள். விதேகராஜ்யத் தரசரான ஜநகமகா ராஜரிடம் பலர் கற்றுத் தெளிந்தார்கள். க்ஷத்திரிய அரசர்கள் தமக்குள் ஒருவரோ

டொருவர் சண்டை யிட்டார்களேனும், அவர்கள் நாடுகளி லிருந்த கலாசாலைகளுக்கு யாதொரு பயமுமின்றி விரோதி நாட்டினின்றும் மாணாக்கர்கள் சென்று கல்விகற்று வந்தார்கள். நாட்டின் சண்டைகள் இவர்களுக்கு எவ்விதமான தீங்கையும் இழைத்தில. யாகங்களும், சடங்குகளும் அதிகரிக்க, அதிகரிக்க அவற்றின் சம்பந்தமான அநேக அரிய பெரிய விஷயங்களை ஆரியர்கள் எளிதில் கற்கத் தொடங்கினார்கள். அவர்கள் யாகத்தின்பொருட்டு ஆடுமாடுகளைக் கொன்றதனால், அதினின்றும் அவற்றின் உடல் உறுப்புக்களின் அமைப்பையும், சஸ்திர சிகிச்சையையுந் தெரிந்து கொண்டார்கள். யாகங்களைத் தொடங்குவதற்குச் சுப முகூர்த்தங்கள் இன்றியமையாதன வென்று அவற்றை நிச்சயிக்கும் பொருட்டுச் சூரியன் முதலான கிரகங்களின் சம்பந்தமான வானசாஸ்திரத்திற் பயிலத் தொடங்கினார்கள். பலிபீடங்களையும், யாகசாலைகளையும், தேவாலயங்களையும் அமைப்பதன் பொருட்டு அவர்களுக்குப் பூகணித சாஸ்திரம் தெரியவேண்டியது அவசியமாயிற்று. எப்படி யெனில், யாக குண்டங்களும், பலிபீடங்களும் உருவில் வேறுபட்டு அளவில் ஒத்திருக்க வேண்டியிருந்ததனால், அவர்கள் முக்கோண அளவிற்குச் சரியான வட்டத்தையும், வட்டத்திற்குச் சரியான சதுரத்தையும், சதுரத்திற்குச் சமமான அரைவட்டத்தையும் அமைக்கக் கற்றுக்கொண்டார்கள். கணக்கில் முழு எண்களையன்றிப் பின்னங்களையும் கவனிக்கவேண்டி யிருந்ததனால், அவர்கள் தசாபின்னக் கணக்கைக் கண்டுபிடித்தார்கள். வேதங்களையும், யாகமந்திரங்களையும் சரியான ஸ்வரத்துடனும், உச்சரிப்புடனும் சொல்ல வேண்டியதனால், அவர்கள் உச்சரிப்புச் சாஸ்திரத்தை ஏற்படுத்தினார்கள். இவற்றையல்லாமல், அவர்கள் தங்கள் அநுபவத்தினால் வைத்தியம், வியாகரணம், காவ்யம், சட்டம் முதலிய கலா சாஸ்திரங்களையும் நுட்பமாக ஆராய்ச்சிசெய்து கண்டுபிடித்து அவற்றில் தேர்ச்சி பெற்றார்கள்.

அவர்கள் இந்தவிதமாகத் தேர்ச்சி யடைந்ததற்குக் காரணம் கங்காநதி தீரத்தின் செழிப்பும், அவர்களுக் கேற்

பட்ட அவகாசமும் தான். ஹிந்துமதம் என்றும், பிராமண மதம் என்றும் வழங்குகின்ற ஆசார அநுஷ்டானங்களோடு கூடியதான உயர்ந்த மதம் பிறந்ததும் கங்காநதி தீரத்தி லேயே. ஆரிய வொழுக்கத்தின்பாற் பட்ட ஜனங்கள் கல்வி, கேள்விகளிலும், நாகரிகத்திலும் மிகுந்த தேர்ச்சியை யடைந்து உயர்நிலை பெற்றிருந்தார்க ளென்றால், இந்நாட் டுப் பழங் குடிகளே அவ்வாறு மேன்மையை யடையலானார் கள் என்று கொள்ளவேண்டுமே யன்றி, அவர்களையொரு தனி ஜாதியாராக எண்ணுவதற்குத் தகுந்த காரணங்கள் இல்லை.

கங்காநதி தீரத்தில் ஆரியர்கள் அநேக ராஜ்யங்களை ஸ்தாபித்தார்க ளென்று ஏற்கெனவே சொல்லப்பட்ட தல் லவா? அவைகளில் குரு, பாஞ்சால, கோசல, விதேக ராஜ் யங்கள் தான் முக்கியமானவை.

குரு வம்சத்தினரது ராஜ்யம் கங்காநதியின் மேற்பாகத் திலிருந்தது. அதற்கு ஹஸ்தினாபுரம் என்பது தலைநகர். குருவம்சத்தினர் சந்திரகுலத் தரசர்களென வழங்கப்பட்டு வந்தார்கள். இவர்களுடைய முன்னோர்கள் தான் ஸிந்து நதி தீரத்தில் பத்துக் கூட்டத்தினரிற் சேர்ந்து ஸுதாஸ் மன்னவரோடு சண்டை செய்தார்கள்.

பாஞ்சால ராஜ்யம் அதற்குக் கீழ்மைந்திருந்தது. கன் னோசிக் கருகிலிருந்த 'காம்பில்யா' என்பது அதன் முக்கிய பட்டணம்.

அதற்கும் கிழக்கில் கோசல ராஜ்யம் இருந்தது. அந் நாட்டரசர்கள் சூரியகுலத்தைச் சேர்ந்தவர்களென்று கரு தப்பட்டு வந்தார்கள். கோசல ராஜ்யத்தின் தலைநகரம் 'அயோத்தி.'

விதேகராஜ்யம் என்பது கோசலநாட்டிற்குங் கிழக்கில் இருந்தது. அதன் முக்கியபட்டணம் மிதிலை. அந்நாட் டரசரான ஜநகரென்பவர் கல்விக்கடல்.

இந்த ராஜ்யங்களைப் பற்றின பல விவரங்கள் நமக்குப் பெரும் பேறுகக் கிடைத்துள்ள இரண்டு ஒப்புயர்வற்ற

இதிகாசங்களிலிருந்துதான் புலப்படுகின்றன. அவற்றி னின்றும் நாம் சரித்திர சம்பந்தமான உண்மையைக் கற்பனைகளி னின்றும் வேறுபடுத்தி மிகுந்த ஜாக்கிரதையாகக் கண்டறியவேண்டும்.

---

## 5. இதிகாசங்கள்

ஐந்தாவது வேதமென ஹிந்துக்கள் புகழ்ந்து கொண்டாடும் மகாபாரதம், குருவம்சத்திற் பிறந்த திருதராஷ்டிரன், பாண்டு என்னும் இரண்டு சகோதரர்களின் புதல்வர்களான துரியோதனன் முதலான நூறு பெயர்களுக்கும், பாண்டவர்கள் ஐவருக்கும் ஹஸ்தினபுரத் தரசைப் பற்றி ஏற்பட்ட விரோதங் காரணமாகக் குருக்ஷேத்திரம் என்னுமிடத்தில் பதினெட்டு நாட்கள் வரையில் நடந்த அகோர யுத்தத்தையும் அதில் சொல்லரிய கஷ்டங்களையெல்லாம் அனுபவித்தும் தருமநெறி தவறாது நடந்தொழுகின பாண்டவர்பால் பகவானிருந்து அவர்களுக்கு வெற்றியை யுண்டுபண்ணியதையும் விவரமாய்ச் சொல்லுகின்றது.

அந்நூலில் கங்காநதி தீரத்திலிருந்த ஆரியர்களின் நடை, உடை, பாவனைகளும், ஆசார, அநுஷ்டானங்களும் கூறப்பட்டுள்ளன. அன்றியும், அதில் தந்தையின் இன்பத்தை நாடி அரசுரிமையைத் துறந்து பிரம்மசரிய விரதம் பூண்ட ராஜதந்திரங்களில் வல்ல பீஷ்மரைப்பற்றியும், நம்பிக்கையும் பக்தியும் உருவெடுத்தாற்போன்ற ஒப்புயர்வற்ற அருச்சுனனைப் பற்றியும், ஈகைக்குந் தயைக்கும் பழமொழியாக வழங்கிவரும் கர்ணனைப்பற்றியும், இன்னும் இவர்களைப் போன்ற பல சிறந்த வீரர்களைப்பற்றியும் நாம் படிக்கலாம். இவைமாத்திரமல்ல. நளன்-தமயந்தி, சாவித்திரி-சத்தியவான், சகுந்தலை—துஷ்யந்தன், ஹரிச்சந்திரன்—சந்திரமதி, கிருஷ்ணார்ஜுனர் ஆகிய இவர்களைப் பற்றின சிறந்த நீதிகளைப் புகட்டும் கிளைக்கதைகளும் அதில் உள்ளன.

அந்த நூல் 18 பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதைப் பல பெயர்கள் வெவ்வேறு காலத்தில் செய்தார்க

ளென்றும், அவற்றையெல்லாம் வியாசர் ஒன்றாகத் தொகுத்தார் என்றும் ஏற்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்கு யுத்தமுனையில் உபதேசம் செய்ததாகச் சொல்லப்படுவதும் ஆத்ம தத்துவங்களடங்கிய 'பகவத்கீதை' என்னும் பெயரை உடையதும், பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு அநேகராலும் இன்றும் கொண்டாடப்படுவது மாகிய மிகச் சிறந்த நூல் அந்நூலில் அடங்கியதேயாகும். பகவத்கீதை பிற்காலத்திற் செய்யப்பட்டு மகா பாரதத்திற் சேர்க்கப்பட்டது என்பது சிலருடைய அபிப்பிராயம்.

இராமாயணம் என்னும் மற்றொரு இதிகாசம் சூரிய குலத்திற்றோன்றிக் கோசலநாட்டை ஆண்டுவந்த தசரதச் சக்ரவர்த்தியின் குமாரனை இராமன் சரித்திரத்தைக் கூறுவது.

கற்புக்கரசியான சீதாதேவியாரின் ஜீவிய சரித்திரத்தையும், கருணையங்கடலாய்ச் சத்தியமே உருவெடுத்தாற் போன்ற இராமருடைய கதையையும் அறியாத ஹிந்துக்கள் இருக்கமாட்டார்கள் என்பது நிச்சயம். பெண்கள் சீதாதேவியாரையும், பிள்ளைகள் இராமரையும் பின்பற்றி ஒழுகுவார்களாயின், அதனினுஞ் சிறந்ததாகக் கொள்ளக் கூடிய நன்மை வேறொன்று மில்லை.

24,000 சுலோகங்களடங்கிய இராமாயணகாவியம், காவிய நூல்களிற் சிறந்ததென இப்பொழுதுங் கொண்டாடப்பட்டு வருகிறது. அதிலுள்ள ஏழு காண்டங்களில் நடுவிலுள்ள ஐந்து மட்டில்தான் வால்மீகர் இயற்றியன வென்றும் மற்றைய விரண்டும் பிற்காலத்திற் சேர்க்கப் பட்டவை யென்றும் சிலர் கருதுகின்றனர். அது எவ்வாறாயினுமாகுக. 'ஓ! வால்மீக மகாரிஷியே! இராம சரித்திர மாகிய அமுத வெள்ளத்தை எவரும் பானஞ்செய்து உய்யுமாற்றை யுண்டுபண்ணின உம்மை யொப்பாரும் மிக்காரும் வேறு எவரேனும் உளரோ? இல்லை; இல்லை,' என்று நாமும் முனிவரைப் போற்றுதல் வேண்டும்.

இந்த இரண்டு காவியங்களின் காலத்தைச் சரித்திர நிபுணர்கள் கண்டுபிடிக்க முடியாமல் திகைக்கின்றனர். ஹிந்துக்களிற் பலரும் இராமாயணகாலம் முந்தியதென்றும், பாரதகாலம் பிந்தியதென்றும் கருதிக் குருக்ஷேத்திரத்தில் நடந்த சண்டை சுமார் கி. மு. 3102-ல் செய்யப்பட்டது என்றும் எண்ணுகிறார்கள். மற்றுஞ் சிலர் இராமாயண காவியத்திற் கூறப்பட்டுள்ள மனிதர்கள் கல்வி கேள்விகளிலும், நாகரிகத்திலும் மேம்பட்டவர்களாகக் காணப்படுவதுடன், தென்னிந்தியப் படையெழுச்சியைப் பற்றியும் அந்நூல் சொல்லுவதனுலும், மகாபாரதத்திற் கண்டுள்ள ஜனங்களின் நடவடிக்கைகளும், பழக்கங்களும் முரட்டுத்தன்மை பொருந்தியனவாக இருப்பதனுலும், மகாபாரதகாலம் இராமாயணத்திற்கு முந்தியது என எண்ணுகிறார்கள். எந்தவித அபிப்பிராயத்திற்கும் போதுமான யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய சான்றுகள் கிடைத்தில.

## 6. சமண பௌத்த மதங்கள்

கங்காநதி தீரத்திலிருந்த ஆரியர்கள் நாகரிகத்திலும், கல்வி கேள்விகளிலும் மிக்க மேம்பாடடைந்திருந்தார்களென்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கின்றதல்லவா? அவர்கள் நாளடைவில் ஆத்மஞானத்திலும் மிக்க தேர்ச்சியடையலானுர்கள்.

உண்டு, களித்து, வீணு நாதத்துடன் ஸாமகானஞ் செய்து வந்த ஆரியர்களுக்குள் சிலர் மனிதர்கள் படுந் துன்பங்களையும் துயரங்களையுங் கண்டு வருந்தினதல்லாமல், யாக்கை, ஆக்கம், சுகம், சௌந்தரியம் முதலான யாவும் அநித்யமானவைகளென்றும், அவை மானிடர்களுக்குச் சமமாக அளிக்கப்படாமல் அதிகமாகவுங் குறைவாகவு மிருந்து வருவதைக் கண்டுப் பிறவியைத் துன்பமென்றும், வாழ்க்கையைப் பயனற்றதென்றும் தீர்மானித்துப் பிறவித்துன்பத்தினின்றும் நீங்குவதற்கான மார்க்கத்தைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று முயன்று வந்தார்கள். அம் முயற்சியில் சிலர் உலகத்தை விட்டகன்று காடுகளிற் சென்று கொடிய

தவஞ் செய்யலானார்கள். நாளடைவில் இல்லறத்தை நீத்துத் துறவறத்தைக் கைக்கொண்டு தான் பிறவிப் பெருங் கடலைக் கடத்தல் கூடும் என்னும் எண்ணம் ஜனங்களிடம் பரவி வரத்தலைப்பட்டது.

துறவிகளாகாமல் எவரும் வீடுபெற வியலாது என்கிற இக் கொள்கை ஆரியர்களுக்குள் அதிகமாகப் பரவின பொழுது, அந்தணர்களுக்கு மாத்திரம் துறவு நிலை உண்டென்றும் மற்றவர்களுக்கில்லை என்றும் ஏற்பட்டதனால், அதற்குப் போட்டியாக 'மகா வீரரும்' 'கௌதமரும்', க்ஷத்திரியர்களும் துறவிகளாகி வீடு பெறும் ஏற்பாடுகளை யமைத்தார்களென்றும், அதற்குப் பின்பு மற்றைய ஜாதியாரும் அம்முறைகளை அநுசரித்துத் துறவிகளானார்கள் என்றும் ஏற்படுகின்றன. இவ்வாறாகப் பௌத்தமும், சமண மதமும் பிராமண மதத்துக்குப் போட்டியாக உண்டாயின. என்றாலும், இவைகள் புதியமதங்களல்ல என்று சிலர் வாதிக்கிறார்கள். இவ்விரண்டும் வேறு மதங்களா அல்லவா என்பதைப் பற்றி அபிப்பிராய பேதங்களிருந்து வந்தாலும், ஆரியம், பௌத்தம், சமணம் என்னும் இம்மூன்று முறைகளினுடைய கொள்கைகளும் மிகுந்த வேறுபாடுகளை யடைந்திருக்கவில்லை யென்பதும், பிந்திய விரண்டும் முந்திய ஆரிய மதத்திலிருந்தே பிரிந்து ஏற்பட்டவைகளென்பதும் பலரும் ஒத்துக்கொள்ளக் கூடிய விஷயங்களாம். பரத நாட்டிலிருந்த எண்ணிறந்த முறைகளில் இவை சில என்பது தான் உண்மையான கொள்கையாம்.

சமணம் என்னும் மதம் கி. மு. 599-ல் அவதரித்த மஹா வீரர் என்னும் பெயர் பூண்ட வர்த்தமானரால் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் க்ஷத்திரிய ஜாதியைச் சேர்ந்தவர். சித்தார்த்தர் என்னும் பிரபுவின் புதல்வர். அவர் விதேக ராஜ்யத்தின் தலை நகரான வைசாலி என்னும் நகரத்தைச் சார்ந்த ஒரு கிராமத்திற் பிறந்தவர்.

அவருக்குச் சுமார் முப்பது வயதானபொழுது உலகத்தை நீத்துத் துறவறம் பூண்டனர். சுமார் 12-வருஷங்களளவும் அவர் திகம்பரராய் அங்குமிங்கும் அலைந்து திரிந்து

தாம் உண்மை யறிவைப் பெற்று விட்டதாகச் சொல்லி 'மகா வீரர்' என்றும், 'ஜினர்' என்றும் வேறு பெயர்களை வைத்துக்கொண்டார். கோசல, விதேக, மகத ராஜ்யங்களில் அவர் சஞ்சரித்தபொழுது, நூற்றுக் கணக்கான க்ஷத்திரியர்கள் அவரைப் பின் பற்றி அவருக்குச் சிஷ்யர்களானார்கள். மகத ராஜ்யத்தை யாண்ட சைசுநாக வம்சத்தைச் சேர்ந்த பிம்பிசாரரும், அவர் மகன், அஜாதசத்ருவும், ஜினரைச் சந்தித்துச் சம்பாஷித்தனரெனத் தெரிவிக்கும் சில கற்பனைக் கதைகள் இப்பொழுதும் இருந்து வருகின்றன. கி. மு. 527-ல், அவர் தமது எழுபத்திரண்டாவது வயதில் பாவா என்னுமிடத்தில் தேக வியோகமானார்.

சமண மதத்தில் ஜாதிபேத மில்லாமல் எல்லா மதத்தினரும், மிலேச்சருங் கூடச் சேர்ந்து முக்தி பெறலாம் என்று அவர் போதித்து வந்தார். பிறவித் துன்பத்தை யொழிக்க வேண்டுமானால் ஜினரையும், அவருடைய உபதேசங்களையும் நம்புவதல்லாமல், ஒருவன் தீச்செயல்களையும், கொடுமைகளையும் நீத்து, மனத்தினாலும் பாபகாரியங்களை நினையாதவனாய் உலகப் பற்றுகளை விட்டுத் தரும நெறியில் நடந்தொழுக வேண்டும். சிலர் இல்லறத்தை விட்டகலாமல், அவர் போதித்து வந்த உண்மைகளை மட்டில் அநுஷ்டித்தும், மற்றுஞ் சிலர் தரும வழியில் நடந்தொழுகினதேயல்லாமல் துறவறம் பூண்டும் அவருக்குச் சிஷ்யரானார்கள். இவர்களிற் பிந்தியவர்கள்தாம் முக்தியடைய இயலும் என்றாலும், முந்தியவர்களும் முக்தி மார்க்கத்தில் வெகு தூரம் செல்லக்கூடும் என்பதும் ஜினருடைய அபிப்பிராயம். இவ்விரண்டு வகுப்பினர்களும் ஒற்றுமையோடு வாழ்ந்து வந்ததல்லாமல், இல்லறம் நடத்தி வந்தவர்கள் துறவிகளுக்கு உற்ற துணைவர்களுமானார்கள். சமணர்கள் 'அஹிம்சை'யை மிகச் சிறந்த கொள்கையாகப் பாராட்டி வந்ததனால், அவர்களினால் பிற மதத்தினர்களுக்கு எவ்விதமான தீங்கும் ஏற்பட்டிலது.

சமண மதத்தைச்சேர்ந்த திகம்பர, சுவேதம்பர வகுப்பினர்களை நாம் இப்பொழுதும் காணலாம். அவர்களுக்கு

எப்பொழுதும் பிராமண மதத்திலாவது, பிராமணருடைய நூல்களி னிடத்திலாவது விரோதம் இருந்ததாகத் தெரியவில்லை.

மகத ராஜ்யத்தின் வடமேற்கில் ஆரிய வம்சத்தைச் சேர்ந்த சாக்கியர்கள் என்னும் ஒரு வகுப்பினர் இருந்தார்கள். அவர்களுடைய நாடு கோசல, மகத ராஜ்யங்களுக்கு மத்தியில் ரோஹிணி நதியைச் சார்ந்திருந்தது. சாக்கியர்கள் பயிர்த்தொழிலையும், ஆடு மாடுகளை மேய்ப்பதையும் முக்கிய ஜீவனோபாயமாகக் கொண்டொழுகினார்கள். அவர்கள் நாடு சுயேச்சாதிகாரம் பெற்றிருந்தது. சிறியவரும், பெரியவரு மடங்கிய ஒரு சபையே அந்நாட்டைப் பரிபாலித்து வந்தது. ராஜரீகம் நடத்துவதும், நியாயம் செலுத்துவதும் அச்சபையின் பொறுப்பு. அச்சபை கூடும் பொழுது குடிகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதல்வன் அச்சபையில் அக்கிராஸனம் வகித்துச், சபையை நடத்துவான். அம் முதல்வனுக்கு அரசனெனும் பட்டமும் உண்டு. ஒவ்வொரு கிராமத்திலும் அதன் பரிபாலனத்திற்கு வேண்டிய ஒரு சபை இருந்து வந்தது. அச்சபைகள் கிராமத் தோப்புக்களில் கூடித் தத்தம் பொறுப்புக்களை நிறைவேற்றின. இவ்விதமாகச் சாக்கியர்களுக்குள் குடியரசு ஏற்பட்டிருந்தது. பௌத்த மதத்தைக் கண்டு பிடித்த சித்தார்த்தர் அந்தச் சாக்கிய வம்சத்தினர். அவர் கி. மு. ஆறுவது நூற்றாண்டின் மத்தியில் நேபாளத்திலுள்ள கபிலவஸ்து என்னும் நகரத்தினருகில் அவதரித்தவர். அவருடைய தந்தை சாக்கிய வரசரான சுத்தோதனர் என்பவர். சுத்தோதனர் தமது மனைவியான மாயா தேவி கருப்பவதியா யிருக்கையில் அவரைக் கபிலவஸ்துவிலிருந்து அவருடைய தாய் வீட்டுக்கனுப்பினார். அவ்வம்மையார் வழி நடுவில் பிரஸவ வேதனைப்பட்டு, 'லம்பினி தோட்டத்'தில் ஓர் ஒப்பற்ற ஆண் குழந்தையைப் பெற்றார். அக் குழந்தையே உலகம் புகழும் "புத்தர் பிரானார்."

கௌதமர் என்றும் சித்தார்த்தர் என்றும் வழங்கப் பெற்ற அக்குழவி ஜனித்தபொழுது பல விநோதக் காட்சி

கள் தென்பட்டன என்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். ஒரு மகான் அக்குழந்தை ஒரு புத்தர் ஆவார் என்று சொன்னார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தாயைச் சீக்கிரத்திலேயே இழந்துவிட்ட கௌதமர் தமது மாற்றாந்தாயினால் வளர்க்கப்பட்டு வந்தார். அவர் செல்வத்திலும், மேன்மையிலும் வளர்ந்து வந்தாரேனும், க்ஷத்திரிய கலைகள் பலவற்றிலும் நன்றாகப் பயின்று தேர்ச்சி பெற்றார். அவருடைய தந்தையார் அவருந் தம்மைப்போன்று க்ஷத்திரிய தருமத்தையே கைக்கொண்டொழுக வேண்டுமென வெண்ணி அவருக்குப் பிணி, மூப்பு, இறப்பு முதலிய துன்பங்கள் கண்களிற் படாதிருப்பதன் பொருட்டு, அவர் அரண்மனையை விட்டு வெளியே போகும் பொழுது கிழவர்களாவது, நோயாளிகளாவது, கூன், குருடு, செவிடு முதலான அங்கஹீனர்களாவது வீதிகளில் வாராத படி கபிலவஸ்துவின் குடிகளுக்குத் திட்டஞ்செய்திருந்தார். அவரிருப்பதற்கு ஓரழகான நந்தவனத்தின் மத்தியில் ஒரு சிறந்த மாளிகையையும் அமைத்துக் கொடுத்தார். அன்றியும் அவருக்கு வயது சுமார் இருபதான பொழுது அத் தந்தையார் அவருக்கு யசோதரை என்னும் அழகு வாய்ந்த ஒரு பெண்மணியை விவாகஞ் செய்து வைத்தார். சீக்கிரத்திலேயே அந்தத் தம்பதிகளுக்கு ராகுலன் என்று ஒரு புத்திரனும் பிறந்தான்.

உலகத்தில் மனிதர் படும் கஷ்ட நஷ்டங்களைச் சிறிதும் அறியாமல் சுகத்திலும், செல்வத்திலும் வளர்ந்துவந்த சித்தார்த்தர் ஒருநாள் வயது முதிர்ந்த ஒரு கிழவனையும், மற்றொருநாள் நோயாளி யொருவனையும், இன்னமொருநாள் ஒரு பிணத்தையும் கண்டார். அல்லாமலும் பக்ஷிகளும், மிருகங்களும் தங்களுக்குள் சண்டையிட்டு வலியவை மெலியவற்றை யடித்துக் கொன்று தின்பதையும், மனிதர்கள் அவை யனைத்தையும் வதைத்துக் கொன்று உயிர்வாழ்வதையுங் கண்டார். அவர் மிகவும் மனம் நொந்தார். அப்பொழுது அவருக்கு உலகத்தி லுள்ள உயிர்களுடைய கஷ்டங்களைப் போக்கி, அவைகளுக்குச் சுகத்தை யுண்டுபண்ணுவதான

வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்னும் பேரவா உண்டா யிற்று.

அவர் ஒரு நாள் நள்ளிரவில் அரண்மனைச் சுகங்களை யும், அன்புள்ள மனைவியையும், அருமை மகனையும் திரும்பி யும் பாராமல் திடீரென்று விட்டுப் பிரிந்து, ஞானத்தை நாடிக் காடுகளில் திரியலுற்றார். விலங்குகளைக் கொன்று யாகங்கள் செய்வது பயனற்ற காரியம் என்று அவருக்குத் தோன்றவும், அவர் கல்வி கேள்விகளிற் சிறந்த இரண்டு பிரா மணர்களை நாடி அவர்களுடைய சகல கலைகளையும் ஐயந்திரி பறக் கற்றார். அவற்றினின்றும் அவருக்குத் தாம் தேடிச் சென்ற உண்மை மார்க்கம் கிடைக்கவில்லை. பிறகு அவர் ஆறுண்டளவு 'உருவேலா' என்னும் கானகத்தில் அகோர மான தவஞ்செய்தார். அதனால் உடம்பு மெலிந்ததே யல்லாமல், அவருக்கு யாதொரு பயனுங் காணக் கிடைக்க வில்லை. அப்பொழுது அவர் தவத்தினாலும் ஒன்றும் பய னில்லை எனத் தீர்மானித்தார். பலவழிகளில் முயன்றும் அவ ருக்கு மெய்யறிவு உண்டாகவில்லை. என்றாலும், அவர் உண் மையை நாடிப் பலவருஷங்கள் வரையில் அல்லும் பகலும் உழைத்து வந்தார். கடைசியில் ஒருநாள் அவருக்குத் திடீ ரென்று ஞானம் உதயமாயிற்று.

முடிவில் அவர் சகலவிதமான துன்பங்களுக்கும் கார ணம் ஆசை என்பதை நன்றாகக் கண்டறிந்தார். ஆசையை யொழித்துவிட்டால் எந்தவிதமான கஷ்டமும் ஜீவனை யணுகாது என்பதையும் அவர் நன்றாகத் தெரிந்துகொண் கொண்டார். பின்பு அவர் ஆசையை யொழிக்கும் வழி யைக் கண்டறிய வேண்டுமென்று முயன்று வந்தார். அவர் உண்மையான நம்பிக்கை, உண்மையான நாட்டம், உண்மை யான பேச்சு, உண்மையான செயல், உண்மையான வாழ்க்கை, உண்மையான முயற்சி, உண்மையான எண் ணம், உண்மையான தியானம் ஆகிய இவைகளை யொருவன் கைக்கொண் டொழுகினால், அவனுக்கு ஆசை முற்றும் ஒழிந்துபோம் என்னும் உண்மையைக் கண்டறிந்தார். இவைகளை யல்லாமல் நீதி வழுவாமலும், கற்றோரிடத்தில்

மரியாதையுடனும், மனைவி, மக்களிடம் அன்புடனும், தீவினைகளை யொழித்தும், சாந்தம், தாழ்மை, திருப்தி, நன்றி யறிவு, பூத தயை முதலான குணங்களிற் பழகியும் அவற்றை யநுஷ்டித்தும் எல்லோரும் நடந்தொழுக வேண்டு மென்பதும் அவருடைய தீர்மானமான கொள்கை. இவ்வாறான மெய்ஞ்ஞானம் அவருக்கு உண்டான பிறகு அவர் புத்தர் என வழங்கப் பெற்றார்.

புத்தர் தாம் பல நாள் வருந்திக் கண்டறிந்த உண்மைகளை ஜனங்களுக்குப் போதித்து அவர்களையும் உண்மை யறிவுள்ளவர்களாக்க வேண்டுமென்று சுமார் 45 வருஷங்கள் வரையில் ஊர் ஊராகச் சென்று தமது கொள்கைகளைப் பிரசங்கித்தார். அவர் சென்ற சென்ற விடங்கள் தோறும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் அவரைப் பின்பற்றி அவருக்குச் சிஷ்யர்களானார்கள். அவர்களும் அவ்வாறே பெரிய பெரிய பட்டணங்கள் தோறும் சென்று பௌத்த மதத்தின் உண்மைகளைப் போதித்து வந்ததனால், அந்த மதம் பரவிச் செழிக்க வாரம்பித்தது. புத்தர் தமது தயை, சாமர்த்தியம், சாந்தம் முதலான நற்குணங்களினால் கேட்பவர்களின் மனத்தைக் கவர்ந்து அவர்களைத் தமது வசமாக்கிக் கொண்டார். ஜாதிபேத மின்மையும், யாக யக்யங்கள் இல்லாமையும், எல்லோரும் சமம் என மதிக்கப்பட்டமையும் பௌத்த மதம் எளிதிற் பரவினதற்குக் காரணங்களாம். மிகுந்த பராக்கிரமசாலிகளான கோசல, மகத தேசத்து மன்னர்கள் கூட அவரைக் கொண்டாடினார்கள். என்றும் அழியாததான ஒப்பற்ற புகழை எவரு மறிய உலகத்தில் நிலைநாட்டிப் புத்தர் சுமார் கி.மு. 480-ல் குஷிநாகரம் என்னு மிடத்தில் பரகதியை அடைந்தார்.

புத்தர் காலத்திற்குப் பின்பு பௌத்த சந்நியாசிகள் அவருடைய மதத்தை வளர்த்து வந்தார்கள். ஜாதி மத பேதங்க ளில்லாமல் புருஷரும், பெண்டிரும் கூடத் துறவிகளாகி அவரை வழிபட்டு நடந்தொழுகினார்கள்.

பௌத்தர்கள் பிராமணர்களி னின்றும் வேறு பட்டார்களேனும், புத்தர் பிராமணரையாவது, அவர்களுடைய

கொள்கைகளையாவது பழித்துப் பேசினது இல்லை. அவர் அவர்களுடன் எந்த விதமான சச்சரவுஞ் செய்யக்கூடாது என்றும் போதித்து வந்தார். அதனால், அவருடைய சிஷ்யர்களுள் பிராமணர்களு மிருந்து வந்தார்கள். இக்காரணங்களினால் புத்தர் பிராமணர்களுக்கு விரோதமாய்க் கிளம்பி ஒரு புதிய மதத்தை ஏற்படுத்தினார் என்று கொள்ளுவதற்கு இடமில்லை. அவ்விரண்டு மதங்களும் வெகு காலங்கள் வரையில் ஒற்றுமையாகவே இருந்துவந்தன. உற்று நோக்குங்கால் பௌத்த மதத்தை ஒரு நூதன மதமெனக் கொள்ளவும் இடமில்லை.

## 7. பாரஸிக, கிரேக்கப் படையெழுச்சிகள்

வட இந்தியாவில் ஆரியர்கள் ஏற்படுத்தின 16 ராஜ்யங்களில், கொஞ்சகாலம் வரையில் கோசல ராஜ்யம் முதன்மை பெற்றிருந்து, பிறகு தனது முன்னேற்றத்தை இழந்தது. அப்பொழுது மகத ராஜ்யம் முதன்மையானதாயிற்று. அதன் முன்னேற்றத்திற்குச் சைசுநாக வம்சத்தினர்தாம் முக்கிய காரணர். அவர்கள் சுமார் கி. மு. 600-ல் ஆட்சி பெற்றனர். சிசுநாகர் என்னும் மூல புருஷர் பெயரின் காரணமாக அவ்வம்சத்திற்கு அப்பெயர் வந்தது.

சைசுநாக வம்சத்திய முதல் நான்கு அரசர்களைப் பற்றின விவரம் நமக்கு யாதும் கிடைத்திலது. கி. மு. 528-ல் பட்டத்துக்கு வந்த ஐந்தாவதவரான பிம்பிஸாரர் என்பவர் அங்க நாட்டை ஜயித்துத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டதல்லாமல், கோசல, லிச்சாவி ராஜ வம்சங்களிலிருந்து இரண்டு பெண்களை விவாகஞ் செய்து கொண்டு, அந்நாட்டரசர்களைத் தமக்குச் சிறந்த துணையாகவுமாக்கிக் கொண்டார். அவர் ராஜகிருஹம் என்னும் தமது ராஜ்யத்தின் தலை நகரைப் புதுப்பித்தார். அது முடிவதற்கு முன்னாகவே அவர் கொலையுண்டு போனார். சுமார் கி. மு. 500-ல் ஸிம்ஹாஸன மேறிய அவருடைய மைந்தரும் லிச்சாவி மனைவியின் வயிற்றிற் பிறந்தவருமான அஜாதசத்ரு

வென்பவர் தாம் பட்டத்துக்கு வர விரும்பித் தமது தந்தையைக் கொன்று விட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பின்னர், குனிகர் புத்தரிடஞ் சென்று தாம் செய்த பெருங் குற்றத்திற்காக மிகவும் மனம் நொந்து வருந்தினாரென்றும், புத்தர் பிரான் அவருக்குத் தேறுதல் சொல்லி யனுப்பினார் என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

அஜாதசத்ரு கோசல, விதேக ராஜ்யங்களின்மீது படையெடுத்துச் சென்று, அவற்றைத் தமது வசமாக்கிக் கொண்டார். அவரும் கோசலநாட்டரசரின் புதல்வியை மணந்து தமது தந்தைக்குச் சொந்தமாயிருந்த காசி ராஜ்யம் தமக்குஞ் சொந்தம் என்பதை ஸ்தாபித்துக் கொண்டார். அவர் கண்டகி என்னும் ஆறு கங்காநதியில் சங்கமமாகுமிடத்தில் ஒரு சிறந்த கோட்டையைக் கட்டினார். அதுவே பிற்காலத்தில் மகத ராஜ்யத்தின் ராஜதானியான பாடலிபுரம் என்னும் பெரிய நகரமாயிற்று.

பிம்பிஸாரரும், அவருக்குப் பின் அஜாதசத்ருவும் மகத ராஜ்யத்தை யாண்டு வந்த காலத்தில் இந்தியாவிற்கு மேற்கில் பாரஸிகர்கள் மிகப் பிரபலமாகி ஒரு பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்தும், அதை மேன்மேலும் பெருக்கியும் வந்தார்கள். டரையஸ் என்னும் பாரஸிக மன்னவர் கி. மு. 515-க்கும் கி. மு. 490-க்கும் மத்தியில் ஆப்கானிஸ்தானம், பெலுசிஸ்தானம், மேற்பஞ்சாப், ஸிந்து முதலிய நாடுகளை ஜயித்துத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டுவிட்டார். அவர் இந்திய நாடுகளை மட்டில் ஒரு தனி மாகாணமாகச் செய்து அம்மாகாணத்தை க்ஷத்ரபான் என்னும் ஒரு அதிகாரியின் ஆளுகைக்கு உட்படுத்தினார். அந்நாடுகள் அக்காலத்தில் மிக்க வளம் பொருந்திச் செல்வம் நிறைந்து, ஜனப் பெருக்குடையனவகளாக இருந்தன. அவற்றினின்றும் டரையஸ் மன்னருக்கு ஒன்றரை கோடி ரூபாய் வருமானங் கிடைத்து வந்தது. பின்னர் டரையஸ் ஸ்கைலாக்ஸ் என்னும் தமது கப்பற் றலைவரை யனுப்ப, அவர் ஒரு கப்பற் படையுடன் ஸிந்து நதியின் முகத்வாரம் வரையில் அதிலேயே பிரயாணஞ் செய்து அதைச் சார்ந்த நாட்டின் வளப்பையும்,

செழிப்பையுங் கண்டறிந்து சென்றார். அதன் பயனாகப் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த ஸிந்து நதியின் கீழ்ப் பாகம் டரையஸ் மன்னருக்குச் சொந்தமாயிற்று. அதனால் அப்பொழுது இந்தியாவிற்கும், பாரஸிகத்திற்கும் கலப்பு ஏற்பட்டது. அதனால் டரையஸின் மைந்தர் ஸேர்க்ஸிஸ் என்பவருடைய சேனையில் இந்திய வில்லிகள் சேர்ந்து சண்டை யிட்டார்கள் எனத் தெரிய வருகின்றது.

டரையஸ் இறந்து போன சில வருஷங்களுக்கெல்லாம், பாரஸிகர் ஜயித்த இந்திய நாடுகள் யாவும் தமது சுவாதீனத்தை அடைந்துவிட்டன. என்றாலும், இவ்விரண்டு தேசங்களுக்கும் வியாபாரத்தின் பொருட்டுப் போக்கு வரவுகள் ஏற்பட்டன. அவை காரணமாக இந்தியாவிற்குச் சில நன்மைகள் உண்டாயின. நில, நீர் மார்க்கமாக வாணிபம் பெருகின தல்லாமல், பரஸ்பர ஞானாபிவிருத்தியும் உண்டா யிற்று. காரோஷ்டிலிபி ஏற்பட்டதும் இப்பொழுதுதான். பின்பு மௌரியர் காலத்திலேற்பட்ட வட இந்திய ஏகாதிபத்ய ராஜரீக வமைப்புக்களும் பாரஸிகருடைய செயற்கையினால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று எண்ணுவாரு முளர்.

அஜாதசத்ருவுக்குப் பின் மகத ராஜ்யத்தை யாண்டு வந்த சைசுநாக வம்சத்தரசர்கள் மிகக் கொடியவர்களே யாயினும் வத்ச, அவந்தி நாடுகளை ஜயித்துத் தமது ராஜ்யத்தைப் பெருக்கினார்கள். மகத ராஜ்யத்தின் சிறப்பிற்கு அதன் செழிப்பும், அமைப்பும், போக்கு வரவுக்கான சாதனங்களும், செல்வமும், படையும் சிறந்த காரணங்களாம். கி. மு. நாலாவது நூற்றாண்டின் முதல் பாதியில் சைசுநாக வம்சத்தின் கடைசி அரசனைக் கொன்று நந்த வம்சத்தினர் ஆட்சி பெற்றார்கள். இவர்களின் மூல புருஷனான மஹாபத்ம நந்தனுடைய தாய் தாழ்ந்த குலத்தினளானதனால் நந்த வம்சத்தினர் கேவலமாக எண்ணப்பட்டார்கள். இவர்களைப் பற்றின விவரம் யாதொன்றும் கிடைத்திலது. ஆனாலும், இவர்களுக்கு மிகுந்த செல்வமும், பெருஞ் சேனையும் சொந்தமாயிருந்தன. மஹாபத்மநந்தனுக்கு 2,000 இரதங்களும்

4,000 கஜங்களும், 20,000 துரகங்களும், 200,000 பதாதிகளும் இருந்தனவெனச் சொல்லப்பட்டிருக்கிறது.

மஹாபத்மநந்தன் மகத நாட்டை யாண்டுவந்த காலத்திற்றான் மகா பராக்கிரமசாலியான அலெக்ஸான்டர் என்னும் கிரேக்க வரசன் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தான்.

அலெக்ஸான்டர் மாஸிடோனியா என்னும் தேசத்தவன். அவன் இருபது வயதிலேயே அந்தத் தேசத்துக்கு அரசனானான். பின்னர்ச் சில வருஷங்களுக்குள் தனது ஒப்புயர்வற்ற பராக்கிரமத்தினால் கிரீஸ் தேசம் முழுவதையும் ஜயித்துக்கொண்டு விட்டான். அதன் பிறகு அவன் கிழக்குப் புறமாகப் படையெடுத்து வந்து பாரஸிக ராஜ்யத்தை வென்றான். அவனுக்கு அப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டிருந்த உலகம் முழுவதையும் ஜயித்து ஆட்சிசெய்ய வேண்டுமென்னும் பேரவா உண்டாயிருந்தது. அவன் இந்தியாவின் செழிப்பு, செல்வம், நாகரிகம் இவைகளைப் பற்றிக் கேள்விப்பட்டுத் தான் இந்தியாவையும் ஜயிக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டான்.

அலெக்ஸான்டர் கி. மு. 327-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான். தனது சேனையின் பெரும் பாகத்தையும் கைபர்க் கணவாயின் வழியாக இந்தியாவுக் கனுப்பி விட்டு, அலெக்ஸான்டர் மாரிகாலத்தின் மத்தியில் ஒரு சிறிய படையைத் துணைக்கொண்டு வட புறமாகச் சென்று இப்பொழுது சித்ரால் என வழங்கும் நாட்டையும் அதைச் சார்ந்தப் பிரதேசத்தையும் ஜயித்து இந்தியாவுக்கும் தனது நாட்டிற்கும் போக்குவரவில் எவ்விதமான இடையூறும் நேரிடா வண்ணஞ் செய்துகொண்டான். பின்பு அவன் தான் கைபர்க் கணவாயின் வழியாக அனுப்பின சேனையை நடத்திவந்து கி.மு. 326-ம் வருஷத்தின் முதலில், அட்டாக் என்னும் பட்டணத்திற் கருகில் ஸிந்து நதியைக் கடந்து தக்ஷசீலம் என்னும் நகரத்தை நோக்கி வந்தான். அப்பொழுது அவனது சேனையில் சுமார் 80,000 போர்வீரர்க ளிருந்தார்கள்.

தக்ஷசிலம் என்பது அக்காலத்தில் மிகப் பெரிய நகரமாயிருந்தது. அங்கே ஒரு சர்வகலாசாலை யிருந்தது. அதில் கல்வி கற்பதற் கென்று நாலாப் பக்கங்களிலுமிருந்து நூற்றுக் கணக்கான மாணவர்கள் வந்து கூடுவார்கள். அந்தக் கலாசாலையில் வைத்திய சாஸ்திரங்கள் மிகுந்த உயர்நிலையை யடைந்திருந்தன வென்றும் அவற்றைக் கற்பதற்காகவே பலர் வந்தார்கள் என்றும் தெரியவருகின்றன. அந்நகரம் இருந்த விடம் பாழாய்க் கிடப்பதை ராவல்பிண்டிப் பட்டணத்தின் வடமேற்கில் நாம் இப்பொழுதுங் காணலாம்.

அப்பொழுது அம்பி என்னும் அரசன் தக்ஷசிலத்தில் அரசு புரிந்து வந்தான். அவன் தனது சேனையுடன் எதிர்கொண்டு சென்று அலெக்ஸாண்டரை வரவேற்று அவனோடு சமாதானஞ் செய்துகொண்டு அவனுக்குப் பணமும் படைகளும் கொடுத்துதவினன். அல்லாமலும் அவன் அலெக்ஸான்டரையும் அவனது சேனையையும் சில நாள்கள் வரையில் வைத்து உபசரித்தான். அலெக்ஸான்டர் தக்ஷசிலத்திலிருந்து வட இந்திய மன்னர்கள் பலரும் தனக்கு கீழ்ப்படிந்து கப்பம் கட்டவேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லியனுப்பினன். அநேக வரசர்கள் அவ்வாறே செய்தார்கள். ஆனல் ஜீலம், சினப் நதிகளின் மத்தியிலுள்ள நாட்டை ஆண்டுவந்த புருஷோத்தமர் என்னும் ஓர் அரசர் மாத்திரம் அவனை யுத்தமுனையிற் சந்திப்பதாகச் சொல்லியனுப்பிவிட்டு, ஒரு பெருஞ் சேனையையுந் திரட்டினர்.

கி. மு. 326-ம் வருஷம் மே மாதத்தில் அலெக்ஸான்டர் ஜீலம் நதிக்கரையை வந்தடைந்தான்; நதியின் கீழ்க்கரையில் புருஷோத்தமர் தமது சைநியத்துடன் யுத்தத்திற்குத் தயாராக விருப்பதையுங் கண்டான். அப்பொழுது ஆற்றில் வெள்ளம் அதிகமாக இருந்ததனல் கிரேக்க வரசன் அதைக் கடக்கமுடியாமல் திகைத்து நின்றான். அவன் தனது சத்துருக்களை ஏமாற்றும் பொருட்டுத் தான் ஆறு வடிந்த பின்னர்தான் அதைக் கடப்பதாக ஒரு பொய்யான வதந்தியை உண்டுபண்ணினன். அதைப் புருஷோத்தமர் உண்மையென எண்ணும்படி ஏராளமான

உணவுப் பொருள்களையுஞ் சேகரஞ்செய்தான். ஆனால் எதிரிக ளறியாதபடி அருகிலிருந்த மரங்களை வெட்டித் தோணியணைக்கு வேண்டிய கட்டுமரங்களையும், படகுகளை யுஞ் செய்வித்தான். அணைக்கு வேண்டிய யாவும் தயா ரானவுடனே, அலெக்ஸான்டர் சுமார் பதினறு மைல் வடக்கிற் சென்று ஆற்றைக் கடப்பதற்குத் தக்கதோர் இடத்தைக் கண்டறிந்தான். அங்கே ஒரு சிறிய த்வீபம் இருந்ததனால் அணைகட்டுவது எளிதென் றெண்ணினன். அதன்றியும் அவன் ஆற்றைக் கடப்பது புருஷோத்தமருக் குத் தெரியாமல் மறைப்பதற்கு அது ஒரு சிறந்த சாதன மாகுமல்லவா?

அலெக்ஸான்டர் தனது சேனையின் பெரும் பாகத்தை யும் தான் முதலில் தங்கின விடத்திலேயே இருத்திவிட்டு ஒரு சிறிய படையுடன் வடக்கிற் சென்றான். அதிலு மொரு பகுதியை நடுவழியில் வைத்துவிட்டு, சண்டை தொடங்கினதும் அவர்கள் தன்னிடம் வந்து சேரவேண் டும் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டுவிட்டு, எஞ்சிய பன்னிரண்டாயிரம் போர்வீர்களடங்கிய படையுடன் தான் ஆற்றைக் கடத்தற்கு அணைகட்ட எண்ணிய இடம் வந்து சேர்ந்தான். அணைகட்டி முடிந்தது. அலெக்ஸான்டர் நதியைக் கடந்து அங்கிருந்த தீவிற்கு வந்து சேர்ந்தான். அப்பொழுதுதான் அவன் அதைத் தீவெனக் கண்டான். அக்கரைக்கு வந்து சேர்ந்ததாக வெண்ணிய அலெக்ஸான் டர் அத்தீவினின்றும் எதிரிலுள்ள கரைக்குப் போகும் பொருட்டு மத்தியிலிருந்த வாய்க்காலில் மற்றுமொரு அணை கட்டினன். அது முடிந்ததும், அலெக்ஸான்டர் ஜீலம் நதி முழுவதையுந் தாண்டிக் கறீ என்னும் மைதானத்தை வந்தடைந்தான். அதனை யறிந்த புருஷோத்தமர் தமது சதுரங்கத்துடன் அங்கே வந்து சேர்ந்தார். இந்திய வீரர் கள் கத்திகளையும், ஈட்டிகளையும், வில்லம்புகளையுங் கொண்டு சண்டையிட்டனர். விற்கள் ஆளுயரமும், அம்புகள் ஒன்ப தடி நீளமும் இருந்தனவென்று சொல்லப்பட்டிருக்கின்றன. புருஷோத்தமர் மிக்க ஆண்மையுடன் போர்புரிந்தா ராகு




ANCIENT INDIAN ARMS

லும், யுத்தப் பயிற்சியிற் சிறந்து விளங்கிய கிரேக்கர்கள் அவரை வெற்றிகொண்டுவிட்டார்கள்.

புருஷோத்தமர் காயப்பட்டு யுத்தமுனையைவிட்டுத் திரும்பு முன்னமே அலெக்ஸான்டர் அவருடைய வீரத்தையும் ஆண்மையையும் மெச்சி அவரைத் தன்னிடம் வரும்படிச் சொல்லியனுப்பித் தானும் எதிர்கொண்டு சென்றான். ஆறரையடி உயரமும், கம்பீரமான தோற்றமும் பொருந்தியிருந்த புருஷோத்தமரைக் கிரேக்க வரசன் கண் குளிரக் கண்டு களித்துத் தான் அவரை எவ்விதம் நடத்தவேண்டுமென அவரைக் கேட்டான். அவர் அலெக்ஸன்டரை நோக்கி, "அலக்ஸான்டரே! என்னை அரசருக் குறிய முறைப்படி நடத்தும்" என்றார். அதற்கு அலெக்ஸான்டர், "ஓ புருஷோத்தமரே! என் பொருட்டு நான் அங்ஙனமே செய்வேன்; என்றாலும் உமக்கு வேண்டியதென்ன அதனைச் சொல்லும்," என்றார். அதற்குப் புருஷோத்தமர், "எல்லாம் அதற்குள் அடங்கியுள்ளது," என்று பதிலுறைத்தார். அதனைக் கேட்ட அலெக்ஸான்டர் தான் அவரிடமிருந்து ஜயித்த அவருக்குச் சொந்தமான ராஜ்யத்தை யவருக்கே திருப்பிக் கொடுத்துவிட்டதுமன்றிச் சீனப் பியாஸ் நதிகளின் மத்தியிலுள்ள நாட்டையும் ஜயித்து அவருக்கே சொந்தமாகக் கொடுத்துவிட்டான். அதனால் புருஷோத்தமரும் அலெக்ஸான்டருக்குச் சிறந்த நண்பரானார்.

பின்பு அலெக்ஸான்டர் பியாஸைக் கடந்து அதன் கீழுள்ள நாடுகளையும் ஜயிக்கவேண்டுமென் றெண்ணினான். ஆனால், அவனுடைய போர்வீரர்கள் அதற்குக் கொஞ்சமும் இணங்கி வரவில்லை. அதனால், கி. மு. 326-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் அவன் தனது போர்வீரர்களுக்குத் திரும்பிப் போகும்படி உத்தரவளித்தான். மகத ராஜ்யம் அப்பொழுது மிகுந்த பராக்கிரமசாலியான ஓர் அரசனது ஆட்சியின் கீழ் ஓங்கி வளர்ந்திருந்ததனால், அலெக்ஸான்டர் அந்நாட்டைத் தன்னால் ஜயிக்கமுடியாது என்று பயந்து திரும்பிப் போய்விட்டான் என்று எண்ணுவாரு முளர்.

அவன் பியாஸ் நதிக்கரையில் தனது வெற்றியைக் குறிப்பதான பன்னிரண்டு பலிபீடங்களைக் கட்டுவித்தான். திரும்பிப் போகும் வழியில் அலெக்ஸான்டர் ஸிந்து நதியைச் சார்ந்த பள்ளத்தாக்குக்களில் வசித்து வந்த பல ஜாதிக் கூட்டங்களை ஜயித்துக்கொண்டே போனான். கி. மு. 323-ம் வருஷம் ஜூன் மாதத்தில் அலெக்ஸான்டர் பாபிலன் என்னும் நகரத்தில் ஜுரங்கண்டு இறந்துபோனான்.

அவன் இந்தியாவைவிட்டுத் திரும்பின மூன்று வருஷங்களுக்கெல்லாம் அவனுடைய படையெழுச்சியின் அடையாளம் எதுவுங் காணப்படாமல் எல்லாம் முன்போலவே ஆயிற்று. இந்திய குடிகளும் அதைப்பற்றி நினைத்தார்களில்லை. இந்தக் கிரேக்கப் படையெழுச்சியின் காரணமாக வாணிபமும், சாஸ்திர வாராய்ச்சியும் அதிகமானதல்லாமல், யூனானி வைத்திய முறையும், இந்நாட்டைப் பற்றின சரித்திர விவரங்களும் நமக்குக் கிடைத்தன. மேனாட்டினருக்கும் இந்தியாவைப் பற்றின அறிவு அதிகமாயிற்று. அல்லாமலும், பஞ்சாப் ஸிந்து தேசங்களிலுள்ள பல சிற்றரசர்கள் தாங்கள் தோல்வியடைந்து பலங் குன்றப்பெற்றதினின்றும் நமது நாட்டினர் கிரேக்கர்களிடமிருந்து, போர்ப் பயிற்சி பெறுவது இன்றியமையாததென்றும், தாம் ஏகோபித்து ஒரு பெரிய வரசரின் மேலதிகாரத்திற்குட்பட்டு நடப்பதுதான் நலம் என்றும் உணர்ந்தார்களென எண்ணுவதற்கிடமுண்டு.

---

## 8. அலெக்ஸான்டர் காலத்தில் வட இந்தியாவின் நிலைமை

அக்காலத்தில் வட இந்தியாவிலிருந்த ராஜ்யங்களைக் கோசலருடைய நாடு, விதேகருடைய நாடு, காந்தாரருடைய நாடு என்று சொல்லியிருப்பதினால் நாடுகளின் எல்லைகள் செம்மையாக ஏற்பட்டிருக்கவில்லை என்று தெரிய வருகிறது. அதன்றியும், அந்த ராஜ்யங்களைக் கண்டுபிடித்த பல

ஜாதியாரும் ஸ்திரமாக ஒரே இடத்தில் இருந்திருக்கவில்லை யென்றும் நாம் அறியலாம். ஸ்திரமாக அவரவர்கள் ஒவ்வோரிடங்களில் இருக்க வாரம்பித்த பின்னரே பட்டணங்கள் ஏற்பட்டனவென்று தோன்றுகிறது.

அப்பொழுது ஜனங்கள் பெரும்பாலும் கிராமங்களிலும், பட்டணங்களிலும் வசித்தார்கள். அவற்றைச் சுற்றி விஸ்தாரமான காடுகளிருந்தன. அவ்வடவிகள் துஷ்ட மிருகங்களுக்கும், திருடர்களுக்கும், குற்றஞ்செய்து தப்பியோடினவர்களுக்கும் தக்க வாசஸ்தானமாக விருந்தன. வியாபாரத்திற்காக ஏற்பட்டிருந்த சில பழைய பாதைகளையன்றிப் போக்குவரவுக்குவேண்டிய செப்பனிட்ட ரஸ்தாக்கள் இருந்தில. வியாபாரிகள் பட்டு, பொன், நவரத்தினங்கள், சந்தன மரம், தந்தம், பரிமள வஸ்துக்கள் முதலான விலையுயர்ந்த சாமான்களை அந்நியர்களுக்கு விற்றுப் பணம் சம்பாதித்தார்கள். வர்த்தகர்கள் கொள்ளைக்காரர்களுக்குப் பயந்து கூட்டங் கூட்டமாகச் சென்றதன்றிப் பணங் கொடுத்துக் காவலாட்களை நியமித்துக்கொண்டும் போனார்கள். சுமையின் கூலியினாலும், திருடர் பயத்தினாலும், சுங்க வரிகளினாலும் வியாபாரத்திற்கு இடையூறுகள் ஏற்பட்டிருந்தன.

குடிகளிற் பெரும்பாலார் வியவசாயத்தை முக்கியமான ஜீவனோபாயமாகக் கொண்டு கிராமங்களில் வசித்திருந்தார்கள். அவர்களுக்குப் பயிரிடுவதற்குத் தனித்தனியே புலங்களிருந்தாலும், மேய்கால்களும், காடுகளும் கிராமத்தினர்களுக்குப் பொதுவாக விருந்தன. ஜனங்கள் கூலிக்கு வேலை செய்வதைக் கேவலமான தொழிலாகக் கருதினதனால் நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் தாமாகவும், அடிமைகளைக் கொண்டும் பயிர் செய்து வந்தார்கள். அவர்கள் அடிமைகளைத் தமது வீட்டு வேலைக்காரர்களாக வைத்து மிகுந்த பக்ஷமாய் நடத்தி வந்தார்கள். தகப்பனுடைய சொத்துக்களைப் பிள்ளைகள் சமமாகப் பங்கிட்டுக் கொண்டார்கள். ஆனால், சில விடங்களில் மூத்தமகனும், மற்றுஞ் சில விடங்களில் கடைப்பிள்ளையும் கொஞ்சம் அதிகமான பாகத்தைப் பெறுவதும் உண்டு. கிராமத்தார்

களுக்கு வேண்டிய ஏரி, குளம், வாய்க்கால், பாதை, சாவடி முதலானவைகளை அவர்கள் பொதுவில் ஏற்படுத்திக்கொண்டார்கள். குடிகள் கிராமத்தலைவனிடம் தாம் பயிரிட்ட தானியங்களில் பன்னிரண்டிலொரு பங்கு முதல் ஆறிலொரு பங்கு வரையில் வரி செலுத்தி வந்தார்கள். அரசர்கள் அதிவிருஷ்டியினாலும், அநாவிருஷ்டியினாலும் குடிகளுக்கு ஏற்படக்கூடிய துன்பங்களைப் போக்கவும், சைநியங்களுக்குப் போகும் வழிகளில் வேண்டிய உணவை யளிக்கவும் ஆங்காங்குத் தானியக் களஞ்சியங்களைக் கட்டிவைத்திருந்தார்கள்.

ஜனங்கள் பல நாகரிகமான கைத்தொழில்களையுஞ் செய்து வந்தார்கள். அத்தொழில்கள் பெரும்பாலும் பரம்பரையாகவே கையாளப் பட்டுவந்தன. நாளடைவில் வெவ்வேறு கைத்தொழில்களைச் செய்து வந்தவர்களும் வெவ்வேறு வருணத்தினர்க ளானார்கள். சிற்சில சமயங்களில் தொழிலாளிகள் ஒரு பிரமுகனுக் கடங்கிக் கூட்டுத் தொழில் செய்து வந்தார்கள். பெரும்பாலும் நகரங்களில் ஒரு தொழிலைச் செய்துவந்த பலர் கூட்டமாக ஒரே விடத்திற் குடியிருந்து வந்திருக்கிறார்கள். தத்தம் தொழில்களில் மிகவும் தேர்ச்சி பெற்ற சிற்பிகளும், மர வேலை செய்பவர்களும், சித்திர வேலைக்காரர்களும், கொல்லர்களும், கொத்தர்களும் அழகான ஸ்தூபங்களையும், ஸ்தம்பங்களையும், மடங்களையும், மாளிகைகளையும் அமைத்திருக்கிறார்கள்.

முரட்டுத் தாமிர நாணயங்கள் உபயோகத்திலிருந்தனவேனும், ஜனங்கள் பெரும்பாலும் பரிவர்த்தனையே செய்து வந்தார்கள். நாணயங்கள் சர்க்காரினால் செய்யப்படாமல் தட்டார்களினால் செய்யப்பட்டன. பொன் நாணயங்கள் கூட அபூர்வமாக உபயோகிக்கப்பட்டுவந்தன. ஆனால் வெள்ளி நாணயங்கள் மட்டில் செய்யப்படவே இல்லை. ஆடுமாடுகளைக் கொண்டும், நெல்லைக் கொண்டும் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு வந்தன.

வித்வான்கள் நிறைந்திருந்த கலாசாலைகளிலும், பௌத்த சமண மடங்களிலும் 'மாணவர்கள் வந்து கூடிக் கல்வி

கற்றுவந்தார்கள். அரசர்களும், பணக்காரர்களும், நகர பரிபாலகர்களும் கல்வியின்பொருட்டு ஏராளமான பணத்தைச் செலவு செய்ததல்லாமல், வித்வான்களுக்குச் சன்மானங்களும், உபகாரச் சம்பளங்களும், மானியங்களும், கொடுத்துதவி அவர்களை மிக்க பரிவுடனும், மரியாதையுடனும் நடத்திவந்தார்கள். முதலில் வெகுகாலம் வரையில் எழுத்துக்கள் கண்டுபிடிக்கப் படாமையினால், கல்வி வாய்மொழியாகவே கற்பிக்கப்பட்டு, கர்ணபரம்பரையாக வந்தது.

ஜனங்கள் முதலில் பெரும்பாலும் பிராமண மதத்தைக் கைக்கொண்டு ஒழுகினார்களானாலும், நாள் செல்லச் செல்லப் பல காரணங்களை முன்னிட்டுப் பௌத்தமதம் பரவிவரத் தலைப்பட்டது. அப்பொழுது பிராமண மதமும் கொஞ்சங் கொஞ்சமாக மாறுதல்களை யடைந்துவந்தது. உபநிஷத்துக்களில் சொல்லப்பட்ட பிரமனையன்றிப் பரமசிவனும், மஹாவிஷ்ணுவும் சிறந்த தெய்வங்களாகக் கொண்டாடப்பட்டு வந்தார்கள். இம்மூவர்களைத் தான் 'திருமூர்த்திகள்' என்று வழங்குகின்றனர்.

---

## 9. சந்திரகுப்த மௌரியர்

### (கி. மு. 321—கி. மு. 297.)

அலெக்ஸான்டர் இறந்தானென்கிற சமாச்சாரம் இந்தியாவிற் கெட்டினவுடனே அவனுக்குப் புத்திரனில்லாததனால், அவன் ஜயித்த நாடுகளைத் தமக்குக் கிடைத்தவரையில் கவர்ந்து கொள்ளவேண்டுமென்னும் அவாவுடன் பலர் கலகஞ் செய்துகொண்டு முன் வந்தார்கள். அப்பொழுது மகதராஜ வம்சத்தைச் சேர்ந்த சந்திரகுப்தர் என்பவர் ஒரு சேனையைத் திரட்டிக்கொண்டு சென்று, மகாபத்மநந்தன் என்னும் நந்தவம்சத்துக் கடைசி வரசனைத் துரத்திவிட்டுத் தாம் மகத ராஜ்யத்திற் கரசரானார். அவர் தான் மௌரிய வம்சத்தின் முதலரசர். அவருக்குச் சந்திரகுப்த மௌரியர் என்றும் பெயருண்டு. அவருடைய தாய் முரா என்பவள் காரணமாக அந்த வம்சத்துக்கு அப்பெயர் வந்தது. சந்திர

குப்தர் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டதனால் அலெக்ஸான்டரிடஞ் சென்று அவனை மகத ராஜயத்தின்மீது படையெடுத்து வரும்படி வேண்டினார். ஆனால், அந்த எண்ணம் நிறைவேறவில்லை.

மகத ராஜ்யத்தை ஜயித்து ஸிம்ஹாஸனம் ஏறிய சந்திரகுப்தர் சீக்கிரத்திலேயே பஞ்சாப் நாட்டையும் ஜயித்துக் கொண்டுவிட்டார். இந்தியாவுக்குமேற்கில் அலெக்ஸான்டர் ஜயித்த நாடுகளை அவனுடைய தளகர்த்தர்கள் பங்கிட்டுக் கொண்டதில் ஹிந்துகுஷ் மலைக்கு அப்புறம் உள்ள பாக்ட்ரியா, பார்த்தியா நாடுகள் ஸெலியூகஸ் நிகேடார் என்னும் தளகர்த்தனுக்குக் கிடைத்தன. அவனுக்கு அலெக்ஸான்டர் ஜயித்த இந்திய நாட்டையுங் கூடத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுமென்னும் ஆசை உண்டாயிற்று. அவன் கி. மு. 305-ல், இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான். மகா பராக்கிரமசாலியான சந்திரகுப்தர் அவனை எளிதில் தோற்கடித்துத் துரத்திவிட்டார். கி. மு. 303-ல், இருவருக்கும் சமாதானம் ஏற்பட்டது. அதனால், சந்திரகுப்தருக்கு ஹிந்துகுஷ் மலைவரையிலுமுள்ள நாடுகள் சொந்தமாயின. அந்தச் சமாதானத்தில் சந்திரகுப்தர் ஸெலியூகஸினுடைய பெண்ணையும் விவாகஞ் செய்துகொண்டார். அப்பொழுது இந்தியாவுக்கு வந்த ராஜதூதரான மெகாஸ்தனீஸ் என்பவர் எழுதிவைத்த 'இண்டிகா' என்னும் புத்தகத்திலிருந்து நமது நாட்டைப் பற்றின பல விவரங்கள் நமக்குத் தெரிய வருகின்றன. அவர் சந்திரகுப்தருடைய ராஜ்யத்தையும், ராஜரீகத்தையும் மிகப் புகழ்ந்து எழுதியிருக்கிறார்.

சந்திரகுப்தர் தமது ஒப்புயர்வற்ற பராக்கிரமத்தினால் ஹிந்துஸ்தானம் முழுவதையும் ஜயித்துத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டார். இந்திய சரித்திரத்தில் முதன் முதல் ஒரு பெரிய ராஜ்யத்தை ஏற்படுத்தி அதை ஏகாதிபத்யமாக ஆட்சி செய்தவர் இவர்தான் என்பதை நாம் காணலாம். சந்திர குப்தருடைய வெற்றிக்கு நன்றாகப் பயிற்சி செய்யப்பட்ட அவருடைய பெரும் படையே முக்

கிய சாதனமாக விருந்தது. அவருக்கு 8,000 இரதங்களும், 9,000 கஜங்களும், 30,000 துரகங்களும், 600,000 பதாதிகளும் சொந்தமாக விருந்தன.

சதுரங்கங்களும் பொருந்தியிருக்கப் பெற்ற அந்தப் பெரும் படையைக் கவனித்து, அதற்கு வேண்டிய சகல சாதனங்களையும் அமைத்துக் கொடுப்பதன் பொருட்டுத் துரைத்தன வமைப்பில் ஒரு தனி இலாகா இருந்து வந்தது. ஐவைந்து பெயர்களடங்கிய 6 சபைகளைக் கொண்டு ராணுவ இலாகா நடைபெற்றது. அவற்றுள் ஒரு சபை கப்பற் படைகளைக் கவனிக்கவும், மற்றொன்று போர்வீரர்களுக்கு வேண்டிய சாமான்களைத் தயாரித்துக் கொடுத்து ஆங்காங்கு அனுப்பவும், மிகுதியான நான்கு சபைகளும், முறையே காலாட் படைகளையும், குதிரைப் படைகளையும், யானைப் படைகளையும், இரதங்களையும் கவனித்துப் பரிபாலிக்கவும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

மகத ராஜ்யத்தின் தலைநகரான பாடலிபுரம் 15 மைல் விஸ்தீரணமுள்ளதாக விருந்தது. அதைச் சுற்றிலும் கனத்த மரத்தினலாகிய மதில் இருந்தது. அதில் 64 வாயில்களும் அவற்றின் மீது அழகாகக் கட்டப்பட்ட சுமார் எழுநூறு கோபுரங்களு மிருந்தன. மதிலுக்கு வெளியில் அகலமும் ஆழமுமான அகழி இருந்தது. சந்திரகுப்தருடைய அரண்மனை, மரத்தினற் கட்டப்பட்டிருந்தபோதிலும், வெகு அழகாக விருந்தது. அதனுடைய ஸ்தம்பங்கள் பொன்மயமான திராக்ஷைக் கொடிகளினலும், வெள்ளிப் பறவைகளினலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அரண்மனை கண்ணைக் கவரும் ஒரு நந்தவனத்தின் மத்தியி லிருந்தது. அதில் மச்சங்கள் துள்ளி விளையாடும் தடாகங்களும், பழந்தரும் மரங்களும், கந்தங் கமழும் புஷ்பச் செடிகளும் ஏராளமாக இருந்தன.

இவ்வழகிய பட்டணத்தைப் பரிபாலனஞ் செய்வதற்கு முப்பது பெயர்களடங்கிய ஒரு நகர விசாரணைச் சபை இருந்தது. அந்தச் சபை ஐவைந்து பெயர்களடங்கிய ஆறு சிறு சபைகளாகப் பிரிக்கப்பட்டது. அவற்றுள் ஒவ்வொன்றும் தன்தன் வேலைகளைச் செய்து வந்தது. கைத்தொழில்

களைக் கவனித்துவந்த சபை தொழிலாளிகளின் சம்பளங்களையும், அவர்கள் ஒரு தினத்தில் செய்யவேண்டிய வேலையின் திட்டத்தையும் வரையறுத்து வந்தது. அல்லாமலும், நல்ல சரக்குக்களை உபயோகிக்கிறார்களாவென்று கவனிப்பதும், தொழிலாளிகளுக்கு எவருந் தீங்கிழையாமல் அவர்களைக் காத்து ரக்ஷிப்பதும் அந்தச் சபையின் பொறுப்பாம்.

இரண்டாவது சபை அந்நியர்களைக் கவனித்தும், அவர்களுக்கு வேண்டிய விடுதிகளையும், வழித் துணையாட்களையும், வைத்தியர்களையும் கொடுத்துதவியும், அவர்களிலிறந்து போனவர்களைத் தக்கபடி அடக்கஞ் செய்தும், அவர்களுடைய சொத்துக்களைப் பாதுகாத்திருந்து சரியான வார்சுகளுக்கு ஒப்புவித்தும் வந்தது. இதனால் அக்காலத்திற் கூட அந்நியர்கள் பற்பல நாடுகளிலிருந்து வெவ்வேறு வேலைகளை முன்னிட்டு இந்நாட்டிற்கு வந்தார்களென்பது தெரிய வருகின்றது.

மூன்றாவது சபை ஜநன, மாணக் கணக்குக்களை ஒழுங்குபட வைப்பதன் பொருட்டுச் செய்ய வேண்டி வேலைகளைக் கவனித்து வந்தது.

நான்காவது சபை வியாபார சம்பந்தமான விஷயங்களைக் கவனித்து வந்தது. வர்த்தகர்கள் சரியான அளவைகளை உபயோகித்து வருகிறார்களாவென்று மேற் பார்வையிடுவதும், அவர்கள் செலுத்த வேண்டிய வரியை விதிப்பதும் அதனுடைய பொறுப்பு.

ஐந்தாவது, ஆறாவது சபைகள் முறையே வியாபாரச் சரக்குக்களின் உற்பத்தியைக் கவனித்துப் பழைய சரக்குக்களைப் புதியனவற்றோடு கலக்க வொட்டாமற்றடுத்தும் வியாபாரிகள் செலுத்த வேண்டிய வரிகளை வசூலித்தும் வந்தன.

இவற்றையன்றி, நகர விசாரணைச் சபையார் பொதுவில் கடைவீதிகள், துறைமுகங்கள், கோவில்கள் முதலானவைகள் செம்மையாக இருந்து வருகின்றனவாவென்று கவனித்தும் வந்தார்கள். ஆங்காங்குச் செப்பனிடப்பட்ட பாதைகளும், தூரத்தைக் குறிப்பதற்கு ஸ்தம்பங்களும் இருந்தன.

பாடலிபுரத்தைப்போன்று மற்று மநேக நகரங்களும் மேலே சொல்லப்பட்ட வண்ணமே நகர விசாரணைச் சபைகளினால் பரிபாலிக்கப்பட்டு வந்தனவென்றும் தெரிய வருகின்றது.

துரைத்தன வமைப்பில் வியவசாய சம்பந்தமான சகல காரியங்களையும் நிர்வாஹம் செய்வதன் பொருட்டு ஒரு தனி 'வியவசாய இலாகா' இருந்து வந்தது. நிலங்களை யளந்தும், குடியானவர்களுக்கு முறைப்படி தண்ணீர் தவறாமல் பாய்ந்து வருகின்றதாவென்று பார்வையிட்டும், நீர்க் கால்களைக் கவனித்தும் வருவதற்கென்று உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். கத்தியவாரிலுள்ள கிர்ணார் என்னுமிடத்தில் மிகப் பெரியதான 'ஸுதர்சன' என்னும் அழகிய ஏரி இவருடைய காலத்தில்தான் கட்டப்பட்டது. நாடுகளில் சண்டைகள் நடந்து வந்த காலங்களிற்கூட வியவசாயிகள் தங்கள் பயிர்த்தொழிலைத் தீங்கின்றிச் செய்து வந்தார்கள். அரசனுடைய வருமானங்களில் நிலவரிதான் முதன்மையானதாக விருந்தது.

இராஜ்யம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது ; அவற்றுள், ஒவ்வொன்றும் அரச வம்சத்தைச் சேர்ந்த ஒரு பிரதி நிதியின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. நாட்டின் நான்கு பக்கங்களிலும் துரைத்தன உத்தியோகஸ்தர்கள் பலரும் தத்தம் வேலைகளைச் சரியாகச் செய்து வருகின்றார்களாவென்று அப்பொழுதைக் கப்பொழுது அரசருக்குத் தெரிவிப்பதன் பொருட்டுப் பலர் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் யோக்கியர்கள் என்றும் உண்மையையே அரசருக்கு எழுதி யனுப்பி வந்தார்கள் என்றும், இவர்களையல்லாமல் அக்காலத்திய இந்தியர்களே பொதுவில் மெய்யர்கள் என்றும் அறையன், மாக்ஸ் முல்லர் முதலானவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

சந்திரகுப்தர் முத்துச் சரங்கள் கட்டிய பொன் பல்லக்கிலும், குதிரையின் மீதும், யானையின் மீதும் ஏறிச் செல்லுவார். அவர் பொற் பாத்திரங்களிலும் நவரத்தினங்க ளிழைக்கப் பெற்ற செம்புப் பாத்திரங்களிலும் சாப்

பிடுவார். இரண்டு பெயர்கள் சேர்ந்து எளிதிற் றூக்க முடியாததான பொற்பாத்திரங்களும், சித்திரப்பாடுகளமைந்த அழகான மேஜைகளும், நாற்காலிகளும் அரண்மனையில் எங்கும் குவிந்து கிடந்தன. இவற்றைக்கொண்டு நாடு மிகவுஞ் செழித்திருக்க வேண்டுமென்று நாம் அறியலாம். இல்லையேல், அவருக்கு இவ்வளவு செல்வம் வந்திருக்கமுடியாதல்லவா?

அந்த அரசருக்கு யானை, காண்டாமிருகம், எருது, ஆட்டுக்கடா இவைகளின் சண்டைகளையும், எருத்துப் பந்தயங்களையும், குத்துச் சண்டைகளையும் பார்ப்பதில் பிரியம் அதிகம்.

அவ்வேந்தர் குற்றஞ் செய்தவர்களைக் கடுமையாய்த் தண்டித்து வந்தார். அதனால் குடிகள் அவருக்குப் பயந்து அடங்கி நடந்துவந்தார்களெனினும் அவரிடம் அன்பில்லாதிருந்ததோடு அவரைக் கொல்லுவதற்கும் பன்முறை பிரயத்தனங்கள் செய்தாரெனத் தெரிகின்றது. அவ்வேந்தரும் ஒரே இடத்திற் படுத்துறங்காமலும், பகற் பொழுதில் வெவ்வேறு காலத்தில் படுத்துக்கொண்டும் ஜாக்ரதையாக இருந்திருக்கிறார்.

மேலே சொல்லப்பட்ட விவரங்களினின்றும் சந்திரகுப்தர் தமது ராஜ்யத்தை வெகு விமரிசையாக ஆண்டு வந்தார் என்றும், நாடு செல்வம் நிரம்பித் தழைத்தோங்கி இருந்ததென்றும் தெரிகின்றனவல்லவா? மெகாஸ்தனீஸ் தமது 'இண்டிகா' வில் சந்திரகுப்தர் ராஜ தந்திரங்களில் மிகவும் வல்லவரான **சாணக்கியர்** என்னும் பிராமண மந்திரியின் உதவியைக் கொண்டுதான் தமது ராஜ்யத்தை மிக்க மேம்பாட்டுடன் ஆண்டு வந்தார் என்றும் சொல்லியிருக்கிறார். '**கௌடில்யர்**' என்னும் மறு பெயர் பூண்ட சாணக்கியருடைய '**அர்த்த சாஸ்திரம்**' என்னும் அரச நீதியை விவரிக்கும் நூல் ஒப்புயர்வற்றது. மேலே சொல்லப்பட்ட விவரங்கள் யாவும் அந்நூலிலும் சொல்லப்பட்டுள்ளன. ராஜ தந்திரங்களைப்பற்றி அந்நூலிற் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை விவரித்துச் சொல்லுவதற் கிது இட

மல்ல. பொதுவில் அந்நீதி நூலில் அக்காலத்திய ராஜ்ய பரிபாலனத்தில் அநுஷ்டிக்கப்பட்ட முறைகளும், விதிகளும் சொல்லப்பட்டுள்ளன. அர்த்த சாஸ்திரத்தை யன்றி 'முத்ரா ராக்ஷஸம்' என்னும் நாடகத்திலிருந்தும் நாம் சந்திர குப்தருடைய அரசியல் சம்பந்தமான பல விஷயங்களை யறியலாம்.

சந்திரகுப்தருக்குப் பின், அவர் மைந்தர் பிந்துஸாரர் பட்டத்துக்கு வந்தார். அவர் தமது தந்தையின் உயர்ந்த வழிகளைப் பின்பற்றித் தமக்குக் கிடைத்த ராஜ்யத்தைச் சுமார் 25 வருஷ காலம், அதாவது கி.மு. 272 வரையில், ஒழுங்காக ஆட்சிசெய்து வந்தார். அவர் மகத ராஜ்யத்தை அதிகமாகப் பெருக்கவும் இல்லை, சிறியதாகச் சுருக்கவும் இல்லை என்று சிலரும், அவருடைய காலத்திற்றான் மதராஸ் முதல் மங்களூர் வரையில் நேராக இழுக்கப்பட்ட கோட்டிற்கு ளடங்கிய தக்ஷிணத்தின் வடபாகம் மகத ராஜ்யத்திற் சேர்க்கப்பட்டது என்று சிலரும் அபிப்பிராயப்படுகிறார்கள். பிந்துஸாரர் காலத்திற்குப் பிறகு அவர் குமாரர் 'அசோகவர்த்தனர்' பட்டத்துக்கு வந்தார்.

---

## 10. அசோகர்

(கி.மு. 272—கி.மு. 231.)

யாது காரணம் பற்றியோ அசோகர் தாம் பட்டத்துக்கு வந்த மூன்று வருஷம் வரையில் முடிசூட்டிக் கொள்ளவில்லை. அவர் தமது தந்தை மகத ராஜ்யத்தை ஆண்டு வந்த காலத்தில் முதலில் தக்ஷசிலம் என்னும் நகரத்தைத் தலை நகராகவுடைய வடமேற்கு மாகாணத்தையும், அதன் பின்னர் உஜ்ஜயினிபுரத்தை ராஜதானியாகப் பெற்ற மேலிந்திய மாகாணத்தையும் பிரதிநிதியாக விருந்து பரிபாலனஞ் செய்து அரசாட்சி முறைகளில் நன்றாகப் பயிற்சி பெற்றார். அவர் புஜபல பராக்கிரமத்தில் அவருடைய பாட்டனாரான சந்திரகுப்தருக்கு எவ்விதத்திலும் இளைத்தவ ரல்லர்.

கி.மு. 261-ல், அசோகர் கலிங்க தேசத்தின்மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டை முழுவதும் வென்றார். அந்த யுத்தத்தில் சிறைப்பிடிக்கப்பட்டவர்களின் தொகை ஒன்றரை லக்ஷம் என்றும், கொலையுண்டவர்கள் ஒரு லக்ஷம் பெயர்கள் என்றும், அநேக லக்ஷம் பெயர்கள் பஞ்சத்தினாலும், கொள்ளை நோய்களினாலும் மாண்டுபோனார்கள் என்றும் அசோகரே சொல்லி யிருக்கிறார். அவர்கள் பட்ட துயரங்களை யெல்லாம் நேரிற் கண்டு, அவற்றிற்குத் தாமே காரணம் என்று உணர்ந்த 'பிரியதரிசி மஹாராஜா' மனம் இளகி இனித் தாம் எப்பொழுதும் சண்டை செய்வதில்லை என்று தீர்மானித்துக் கொண்டார். அசோகருடைய ராஜ்யம் ஹிந்துகுஷ் பருவதம் முதல் தெற்கே பாலாறு வரையிற் பரவியிருந்தது. மதராஸிலிருந்து பெங்களூர் மார்க்கமாக மெங்களூர் வரையில் ஒரு கோடிட்டால் அந்தக் கோட்டை அவருடைய ராஜ்யத்தின் தென்னெல்லையாகக் கொள்ளலாம். ஆப்கானிஸ்தானம், பெலுசிஸ்தானம், ஸிந்து ஆகிய இவற்றின் பெரும்பாகமும், மாளவம், கூர்ஜரம், வங்காளம், கலிங்கம், காஷ்மீரம், நேபாளம், ஆந்திர நாடு ஆகிய இந்த நாடுகளும் அவருடைய ராஜ்யத்திற் சேர்ந்தவை. அவர் இந்த மிகப் பெரிய ராஜ்யத்தை நான்கு பிரதிநிதிகளின் உதவியைக் கொண்டு மிக்க விமரிசையாகத் தம்மை யொப்பாரும் மிக்காரும் இல்லையாம்படி ஆண்டு வந்தார்.

அசோகர் ஆயுதங்களைக்கொண் டல்லாமல் தருமத்தினாலும், நீதியினாலும் தமது கீர்த்தியை நிலைநாட்ட வேண்டுமென்று தீர்மானித்துப் புத்த, சமண மதங்களின் பாற்பட்டு, ஜீவஹிம்ஸை செய்வதை நீத்துச் சாத்விக குணம் உண்டாகப் பெற்றுத் தரும மார்க்கத்தைக் கொண்டொழுகலானார். தரும மார்க்கத்தைத் தாம் அநுஷ்டிப்பது அல்லாமல், தமது ராஜ்யத்திலுள்ள குடிகளையும் அநுஷ்டிக்கச் செய்யவேண்டுமென்றும் எண்ணினார்.

மறு வருஷத்தில், அதாவது கி.மு. 259-ல், அசோகர் வேட்டையாடுவதை அடியோடு நிறுத்திவிட்டார். அதைப்


இந்தியா
காஸ்மீரம்
அசோக ராஜ்யம்
பாடலிபுத்திரம்
மகாநதி
கலிங்க தேசம்
கோதாவரி
ஆந்திர நாடு
கிருஷ்ணா
வட பெண்ணை ஆறு
காவேரி
சோழ நாடு
அசோக ராஜ்யத்தின் எல்லைகள்

பற்றி அவர் அவருடைய எட்டாவது கல்வெட்டில் சாஸனஞ் செய்திருப்பது என்னவென்றால் :—

‘ திவ்ய தேச யாத்திரை ’

பூர்வ காலங்களில் மன்னர்கள் அடிக்கடி உல்லாசமாகக் காடுகளிற் சென்று, வேட்டையாடியும், விளையாடியும் காலங் கழித்தார்கள். ஆனால் பிரியதரிசி மகாராஜர் தமது ஆட்சியின் பதினோராம் ஆண்டு முதல் வேட்டை முதலிய வீணான விளையாட்டுக்களை நீத்துத் தரும வழிகளைக் கைப்பற்றிப் பல திவ்ய தேசங்களுக்கும், புண்ணிய தீர்த்தங்களுக்கும் யாத்திரை செய்து வந்தார். மேலும் பிரியதரிசி மகாராஜா பல விரதங்களை அநுஷ்டித்தும், தபோதனர்களுக்கும், பிராமணர்களுக்கும், துறவிகளுக்கும் தருமஞ் செய்தும், குடிகளுக்குப் பல நன் கொடைகளை யளித்தும், பெரியோர்களின் அநுக்ரஹத்தைப் பெற்றும், தரும வழியை உபதேசஞ் செய்தும், பிரசுரம் செய்தும் வந்தார். பிரியதரிசி மகாராஜா அன்று முதலாக நல் வழியிலேயே ஈடுபட்டு இன்புற்று வரலானார்.’

அசோகர் தாம் தரும மார்க்கத்தைக் கைக்கொண்டொழுகினதே யல்லாமல், ஸிலோன், எகிப்து, ஸிரியா, மாஸிடோனியா முதலான அந்நிய நாடுகளுக்கும் பௌத்த சந்யாஸிகளை யனுப்பிப் பௌத்த மதத்தை நன்றாகப் பரவச் செய்தார். அவருடைய சகோதரர் மஹேந்திரர் என்பவரும், சகோதரியார் ஸங்கமித்திரை என்பவரும் ஸிம்ஹளத் தீவிற்குச் சென்று அங்கே புத்தருடைய நற்போதனைகளை யாவரு மறியப் பரப்பினார்கள்.

அசோகர் பௌத்த மதத்தில் ஈடுபட்டிருந்தாரேனும், பௌத்தர்கள் மற்ற மதத்தினர்களுக்கு எந்த விதத்திலும் தீங்கிழைக்கக் கூடாது என்று கண்டிப்பாய்த் திட்டஞ் செய்திருந்தார். அவருடைய பன்னிரண்டாவது கல்வெட்டில் அடியிற் கண்டுள்ளபடி செதுக்கப்பட் டிருக்கிறது.

சகிப்பு

‘ பிரியதரிசி மகாராஜர் எல்லா மதத்தினர்களையும், அம் மதங்களிற் சேர்ந்த கிரஹஸ்தர்களையும், துறவிகளையும்

யாதொரு வித்தியாசமுமின்றி வந்தனை வழிபாடுகள் செய்து உபசரிக்கிறார். சிலமுள்ளவர்கள் எம் மதத்தினராயினும் அவர் அவர்களைப் போற்றுவார். எப்பொழுதும் மத த்வேஷம் கூடாது.........ஒரு மதத்தைத் தூஷிப்பதால், ஒருவன் தன் மதத்தையே தூஷிப்பவனாவான்......... தன்னைத்தா னடக்கிக்கொள்வது மிக மேலானது...... தரும மார்க்கத்திலேயே கீர்த்தி உண்டாகும் என்று அறிவிப்பதற்காகவே பிரியதரிசி மகாராஜா கல்வெட்டொன்றைச் செதுக்கி யுள்ளார்.'

கி. மு. 256-ல் இருந்து அசோகர் மேல் கண்டுள்ளன போன்ற பல தரும வழிகளையும், நன்னடக்கைக்கான நீதி மார்க்கங்களையும், கற்பாறைகளிலும், குகைகளின் புறங்களிலும், அதன் பொருட்டு நாட்டப்பட்ட ஸ்தம்பங்களிலும் காரோஷ்டி லிபியிலும், பிராம்மி லிபியிலும் பெரிய எழுத்துக்களில் செதுக்கி வைத்தார். ஒரு கற்பாறையில் அவர் "பிரியதரிசி மகாராஜா சொல்லுகிறார். பிள்ளைகள் தாய் தந்தையர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். சகலமான ஜீவன்களினிடத்தும் அன்பு பாராட்டவேண்டும். எப்பொழுதும் உண்மையையே பேசவேண்டும். இவை தாம் ஒவ்வொருவரும் அநுஷ்டிக்க வேண்டிய தரும வழியின் நீதிகளாம். அவ்வாறே சிஷ்யன் குருவை வணங்கவேண்டும். உறவினர்களிடத்தில் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும். இவை தான் மிகப் பழமையான தருமத்தின் அளவாம். இவற்றை அநுஷ்டிக்க ஆயுள் பெருகும். இவற்றின்படி யாவரும் நடக்கவேண்டும்," என்று செதுக்கி வைத்திருக்கிறார்.

கி.மு. 249-ல், அசோகர் பௌத்தமத சம்பந்தமான புண்ணிய ஸ்தலங்களை நாடிச் சென்றார். அவர் புத்தர் பிரானார் பிறந்த லம்பினி தோட்டத்தில் அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு ஸ்தம்பம் நாட்டினார். புத்தர் இருந்து, வளர்ந்து, மதப் பிரசாரஞ் செய்து, ஞானத்தைப் பெற்று, உயிர் நீத்துப் பரிசுத்தப்படுத்தின ஸ்தலங்களான கபில வஸ்து, சாரநாத், சிராவஸ்தி, கயை, குஷிநாகாம் முதலான

க்ஷேத்திரங்களுக்கும் அவர் சென்றிருந்தார். அவர் நேபாளத்துக்குச் சென்ற பொழுது, அவர் புத்திரி சாருமதி என்பவள் ஒரு கன்னிகா மாடத்தை யமைத்துக்கொண்டு அங்கேயே தங்கிவிட்டாள். அசோகர் தாம சென்ற விடங்கள் தோறும் மடங்களுக்குப் பணம் உதவியும், பல ஞாபகச் சின்னங்களை உண்டுபண்ணியும் திரும்பினார்.

கி. மு. 243-ல், அசோகர் தரும மஹா மாத்திரர்கள் என்னும் பிரசாரகர்களை நியமித்து ஜீவஹிம்ஸை செய்யாதபடி ஜனங்களைக் கண்டிக்கவும், அவர்களுக்குத் தரும மார்க்கத்தைப் போதிக்கவும் ஏற்பாடு செய்தார். அவருடைய ஐந்தாவது கல்வெட்டில் செதுக்கி இருப்பதாவது :—

“இராஜாதிராஜர் பிரியதரிசி மகாராஜர் கூறுகின்றார்:—நற்காரியங்கள் செய்வது என்றும் கஷ்டமே. அவற்றைச் செய்பவன் கஷ்டமான காரியத்தைச் செய்தவனாவான்... ......நான் என்னுடைய ஆட்சியின் பதின்மூன்காவது ஆண்டில் நீதி மார்க்கத்தைத் தெரிவிக்கத் தரும மஹா மாத்திரர்களை நியமித்தேன். ஒவ்வொரு ஜாதியி லிருந்தும் தர்மாநுஷ்டானஞ் செய்பவர்களை நியமித்து, தரும வழிகளை ஜனங்களுக்குப் போதிக்கும்படி நான் ஏற்பாடு செய்தேன். .........என்னுடைய ராஜ்யத்தின் எல்லைக்குள்ளும், அதற்கப்பாலுள்ள மித்திரர்களான மன்னவர்களின் ராஜ்யங்களுக்குள்ளும் தரும மஹா மாத்திரர்கள் நீதிகளைப் போதித்தும், தர்மாநுஷ்டானங்களைச் செய்யுமாறு ஜனங்களைத் தூண்டியும், தருமஞ் செய்தும், ஜனங்களைக் காத்தும் வருகின்றார்கள். என் சந்ததியார்களும், மகா ஜனங்களும் தர்மாநுஷ்டானஞ் செய்யவேண்டியதன் பொருட்டாகவே இந்தக் கல்வெட்டு என்னால் செதுக்கி வைக்கப்பட்டது.”

பிரியதரிசி மன்னர் பிரயாணிகளின் சௌகரியத்தின் பொருட்டுச் சில சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அவர் மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் உண்டாகின்ற வியாதிகளைத் தீர்ப்பதற்காகப் பல வைத்திய சாலைகளையும் ஏற்படுத்தினார். அவற்றைப் பற்றின விவரங்



# TRANSLITERATION

1. Devānapiyena piyadasina lājina visativasābhisitena
2. atana āgācha mahīyite hida budhe jāte sakyamunīti
3. silā vigadabhīchā kālāpita silāthabhecha usapāpite
4. hida bhagavam jāteti lumminigāme ubalikekate
5. athabhāgiyeha

கள் அவருடைய இரண்டாவது கல்வெட்டில் செதுக்கப்பட்டன. அவை வருமாறு :—

"பிரியதரிசி மகாராஜாவாகிய நான் என் ஆணையின் கீழுள்ள எல்லாத் தேசங்களிலும் என்னுடைய ஆக்ஞைக்குட்படாத சேர சோழ பாண்டிய கேரள ராஜ்யங்கள்,

இலங்கை, ஆண்டியோகஸ் ஆளும் கிரீஸ்தேசம், அவருடைய ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களுடைய நாடுகள் ஆகிய இவற்றிலும் மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் வைத்திய சாலைகளைக் கட்டுவித்தேன். மருந்துக்கான பச்சிலைகள், மூலிகைகள், இதரமான மருந்துகள் முதலியவைகளைப் பிரியதரிசி மகாராஜாவான நான் மேற்குறித்த வைத்தியசாலைகளுக்கனுப்புவேன். அல்லாமலும், ஆங்காங்குப் பச்சிலைகளையும், மூலிகைகளையும் வைத்துப் பயிராக்கவும் ஏற்பாடு செய்வேன். பாதைகளில் மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் நிழல் தரும் ஆல், மா முதலான பல மரங்களை வைத்து வளர்த்திருக்கிறேன். ஆங்காங்குக் கிணறுகள் வெட்டிச் சத்திரங்களைக் கட்டியிருக்கிறேன்.''

அசோகருடைய காலத்தில் ஆயிரக் கணக்கான கட்டடங்கள் கட்டப்பட்டன. அவற்றிற் பல பார்ப்பவர்களின் கண்ணையும் கருத்தையும் கவருவனவாக இருந்தன. அவற்றைப் பார்த்தால் அக்காலத்திய சிற்பிகளின் ஒப்பற்ற திறமை நன்றாக விளங்கும். காலம் என்னும் கூற்றின்வாய் வீழ்ந்து அவை முற்றும் அழிந் தொழிந்தன. வட இந்தியாவின் பல விடங்களில் அவற்றின் சின்னங்களையும், பின்னங்களையும் நாம் இப்பொழுதுங் காணலாம்.

அசோகர் பௌத்த மதத்தின் கொள்கைகளை ஒழுங்குபடுத்துவதற் கென்று ஒரு பெரிய பௌத்த சபையைக் கூட்டினார் என்றுஞ் சொல்லப்பட் டிருக்கிறது. குடிகளைச் சன்மார்க்கத்தில் நடத்தவேண்டு மென்பதையே முதன்மையான நோக்கமாகக் கொண்ட அவர் குடிகளுக்கு அம்மார்க்கத்தில் நடப்பதற்கான நீதிகளைப் போதிப்பித்ததையன்றித் தாமும் நன்னெறியிலேயே நடந்து காட்டினார்.

சுமார் 40 வருஷகாலம் மிக்க பெருமையுடன் அரசியற்றி உலகம் முழுவதும் அழியாப் புகழை நாட்டித் தம்மின் மிக்கார் எக்காலத்திலும், எந்நாட்டிலும், எவரும் இல்லை என்று நற்பெயரெடுத்து அந்த மன்னவர் பெருமான் பரகதியை யடைந்தார்.

"அசோகர் மகா பராக்கிரமசாலி, ஆனாலும் சாந்த குண முடையவர்; மிகக் கியாதி பெற்றவர், ஆனாலும் தாழ்மை யுடையவர்; பக்ஷபாத மில்லாமல் நியாயம் நடத்துபவர், ஆனாலும் தயை பொருந்தினவர்; மத வைராக்கியமுள்ளவர், ஆனாலும் பிற மதத்தில் பகை கொள்ளாதவர்; புஜபல பராக்கிரம முடையவர், ஆனாலும் சண்டையில் மனமில்லாதவர்; யுத்தஞ் செய்வதில் நிபுணர், ஆனாலும் சமாதானத்தையே நாடுபவர்; ஆயாஸமின்றி உழைப்பவர், ஆனாலும் இன்னும் அதிகமாக உலகத்துக்கு உழைக்கக்கூடவில்லையே என்று மன வருத்த மடைபவர்," என்று அவருடைய குணங்களைத் தொகுத்துச் சொல்லலாம்.

---

## 11. அசோகருக்குப் பின் இந்தியாவின் நிலைமை

அசோகர் இறக்கவும், மகத ராஜ்யம் க்ஷீணிக்க வாரம்பித்தது. அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த மௌரிய வம்சத் தரசர்கள் கி.மு. 184 வரையில் மகத ராஜ்யத்தை யாண்டு வந்தார்கள். ஆனால் அவர்கள் யாவரும் பலஹீனர்கள். அவர்கள் காலத்தில் அந்த ராஜ்யம் ஐக்கிய மாகாணங்கள் முதல் நருமதை நதி வரையில் தான் பரவி யிருந்தது. உத்தேசம் கி.மு. 225-ல் கோதாவரி, கிருஷ்ணா நதிகளின் மத்தியிலுள்ளதான ஆந்திரநாடு சுயஆட்சியைப் பெற்று மகத ராஜ்யத்தினின்றும் பிரிந்துவிட்டது. அதற்குச் சுமார் பதினைந்து வருஷங்களுக்குள் கலிங்க நாடும் காரவேலர் என்னும் சமணவரசர் காலத்தில் சுயாதீனம் பெற்றுவிட்டது. சற்றேறக்குறைய அதே காலத்தில் காபூல் நாடும், பஞ்சாப், ஸிந்து நாடுகளின் பெரும்பாகமும் ஸெலியூகஸ் நிகேடாரின் வம்சத்தைச் சேர்ந்த கிரேக்கவரசர்களால் ஜயிக்கப்பட்டு மகத ராஜ்யத்தினின்றும் பிரிந்து போய்விட்டது. ஆதலின், அசோகருக்குப் பிந்திய மௌரிய வரசர்கள் மிகச் சிறிய நாட்டையே தமக்குச் சொந்தமாகக்கொண்டு ஆண்டுவந்தார்கள். மௌரிய வம்சத்தின் கடைசி அரசன் பிருகத்ரதன் என்பவன். அவனை அவ

னது சேனைத் தலைவனான புஷ்யமித்ரா ஸங்கா என்பவன் கொன்று கி.மு. 183-ல் தான் மகத ராஜ்யத்திற் கரசனானன்.

சுமார் கி.மு. 155-ல், காபூல், பஞ்சாப் முதலான மேனாடுகளை அப்பொழு தாண்டுவந்த மீனண்டர் என்னும் கிரேக்க வரசன் மகத ராஜ்யத்தின்மீது படையெடுத்து வந்தான். ஆனால், புஷ்யமித்ரன் அவனை யடித்துத் துரத்தி விட்டான்.

மீனண்டர் நீதிநெறி தவறாத மன்னன் என்றும், அவன் பௌத்த மதத்தைக் கைக்கொண்டான் என்றும், அவனுடைய பௌத்த மதப் பிரசாரங்கள் 'மிலிந்தப்ரச்நம்' என்னும் நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. நில மார்க்கமாக இந்தியாவின் மீது படை யெடுத்து வந்த கடைசி ஐரோபியன் இவனே.

புஷ்யமித்ரன் மீனண்டரை ஜயித்த அதே சமயத்தில் அவன் மகன் அக்நிமித்ரன் என்பவன் விதர்ப்ப ராஜனைத் தோற்கடித்து விட்டான். இவ் வெற்றிகள் காரணமாக புஷ்யமித்ரன் ஒரு உயர்ந்த அசுவமேதயாகம் செய்தானென்று பதஞ்சலி தமது வியாகரணத்திலும், காளிதாஸன் தனது மாளவிகாக் நிமித்ரம் என்னும் நாடகத்திலும் எழுதியிருக்கிறார்கள். இதனால் பிராமண மதம் மறுபடியும் கொஞ்சம் முன் வரலாயிற் றென்று ஏற்படுகிறது. இதையன்றிப் புஷ்யமித்ரன் பௌத்தர்களுக்கும், சமணர்களுக்கும் தீங்கிழைத்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அது எவ்வளவு வரையில் உண்மை யென்பதை நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. புஷ்யமித்ரனுக்குப் பின், ஸங்கா வம்சத்தார்கள் கி. மு. 72 வரையில் ஆட்சி செய்திருந்தார்கள். ஸங்கா வம்சத்தின் கடைசி அரசனான தேவபூதி என்பவனை அவனுடைய பிராமண மந்திரியான வாஸுதேவ கான்வ என்பவன் கொன்றுவிட்டுத் தான் பட்டத்துக்கு வந்தான். இவன் கான்வாயன வம்சத்தின் முதலரசன். இவனும், இவனுக்குப் பின் பட்டத்துக்கு வந்த இவன் சந்ததியாரும் கி. மு. 27 வரையில்தான் மகத ராஜ்யத்தை ஆண்டு வந்

தார்கள். இந்த வம்சத்தின் கடைசி அரசன் ஆந்திர வம்சத்தரசரால் கொலையுண்டுபோனான்.

ஆந்திரர்கள் தென்னாட்டுத் திராவிடர்களிற் சேர்ந்தவர்கள். அவர்களுடைய ராஜ்யம் அசோகருடைய அதிகாரத்திற் கடங்கி அவருக்குக் கப்பமும் செலுத்தி வந்தது. என்றாலும், அது அவருடைய ராஜ்யத்திற் சேர்க்கப்படாமல் ஒரு தனி அரச வம்சத்தாரால் ஆளப்பட்டது. அவர்களுக்குச் சாதவாகனர் அல்லது சாலிவாகனர் என்றுபெயர். அவர்களிற் பலர் சாதகர்ணி என்னும் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது ஒரு பிருதுப் பெயர் போலும். அசோகர் இறந்து போனதும், மகத ராஜ்யத்திற் சேர்ந்தனவும், அதற்கடங்கி யிருந்தனவுமான பல நாடுகள் சுயாதீனம் பெற்று விட்டன வென்று மேலே சொல்லப்பட்டதல்லவா? அவற்றுள் ஆந்திர ராஜ்யமும் ஒன்று. சிமுகர் என்னுமரசரது ஆட்சியில்தான் அந்த ராஜ்யம் சுயாதீனத்தைப் பெற்றது. பிறகு அது கொஞ்சங் கொஞ்சமாகப் பரவி மேற்குக் கடலிலிருந்து கிழக்குக் கடல் வரையில் வியாபித்து விட்டது. சாதவாகன வம்சத்தைச் சேர்ந்த அரசர்கள் பலரில் ஹாலா என்பவர் ப்ராகிருத பாஷையில் 'சப்த சதகம்' என்னும் நூலை இயற்றினாரெனச் சொல்லப்பட்டிருக்கிறது. மகதராஜ்யம் கான்வாயன வம்சத் தரசர்கள் காலத்தில் பலங்குன்றிப் போனதனால், கடைசி கான்வாயன வரசனைக் கொன்று அந்த ராஜ்யத்தை ஆந்திர ராஜ்யத்திற் சேர்த்துக்கொள்வது எளிதாக முடிந்தது.

அவ்வண்ணமாகவே, ஹிந்துகுஷ் மலையைச் சார்ந்து அதுவரையிற் பரவியிருந்த வடமேற்கு எல்லை மாகாணமும் சுயாதீனம் பெற்றுவிட்டது. அந்த மாகாணம் ஸெலியூகஸ் நிகேடார் கி. மு. 303-ல் சந்திரகுப்தருடன் செய்துகொண்ட சமாதானத்தின்படி மௌரிய வரசருக்குக் கிடைத்ததென்று ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது. அசோகர் இறந்ததும், அந்நாடும் ஆந்திர நாட்டைப்போல் சுயாதீனத்தைப் பெற்றது.

ஸெலியூகஸ் நிகேடார் அலெக்ஸான்டருக்குப் பின்பு அவனுக்குச் சொந்தமாயிருந்த பாக்ட்ரியா, பார்த்தியா முதலான நாடுகளை ஆண்டு வந்தார் என்று முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய ராஜ்யத்துக்கும், மௌரிய ராஜ்யத்துக்கும் ஹிந்துகுஷ்மலை எல்லையாக இருந்தது. அவருடைய பெயரன் காலத்தில் பாக்ட்ரியாவும் பார்த்தியாவுங் கலகஞ் செய்யத் தலைப்பட்டன. அந்த நாடுகளிரண்டும் முதலில் பாரஸிகர்களுக்கும், பின்னர்க் கிரேக்கர்களுக்கும் அடங்கி அவர்களுடைய அதிகாரங்களுக் குட்பட்டிருந்தன. நாளடைவில் பாக்ட்ரியர்கள் மட்டில் கிரேக்கர்களுடைய வழிகளையும் நாகரிகத்தையும் யநுஷ்டித்துக் கொண்டுவிட்டார்கள். ஆனால், பார்த்தியர்களோ தமது பழைய வழக்கங்களையே கொண்டொழுகினார்கள். ஒரே காலத்தில், அதாவது சுமார் கி. மு. 250-ல், அந்த இரண்டு ஜாதியரும் கிரேக்க அதிகாரத்தைத் தொலைத்துவிட முன் வந்தார்கள். அதை முன்னும் பின்னுமாகத் தொலைத்தும் விட்டார்கள். பின்னர்ப் பாக்ட்ரியாவும், பார்த்தியாவும் இரண்டு தனி ராஜ்யங்களாய்விட்டன. அவற்றுள் பாக்ட்ரியாவை ஆண்டு வந்த கிரேக்கர்கள்தான் அசோகருக்குப் பின்பு சுய ஆட்சியைப் பெற்றுக்கொண்டு பஞ்சாப் ஸிந்து முதலான நாடுகளையும் ஆட்சி செய்து வந்தார்கள். பாக்ட்ரியாவைப் போன்றுப் பார்த்தியாவும் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றத்தை யடைந்து வந்தது. அந் நாட்டை யாண்டு வந்த பராக்கிரமசாலியான ஒரு மன்னன் தனது ராஜ்யத்தை ஸிந்து நதி வரையில் பரப்பியும், பின்னர் ஸிந்துநதிக்கும் ஜீலம் நதிக்கும் மத்தியிலுள்ள நாட்டையுங் கூடத் தனது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டும் விளங்கினான்.

சுமார் கி. மு. 160-ல், துருக்கிஸ்தானத்தின் கீழ்ப் பாகத்தில் வசித்து வந்த 'சாகர்கள்' என்னும் நாடோடி ஜாதியாரை 'யூசிகள்' என்னும் மற்றொரு நாடோடிகள் அவ்விடத்திலிருந்து துரத்திவிட்டு அதைத் தாங்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். தம்மிருப்பிடத்தை விட்டுத் துரத்

தப்பட்ட சாகர்கள் பாக்ட்ரியா நாட்டிற்கு வந்து அங்கிருந்த கிரேக்கர்களை யவர்களுடைய நாட்டினின்றுந் துரத்தி விட்டுத் தாங்கள் அதைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டார்கள். அதே காலத்தில் அவர்கள் ஆப்கானிஸ்தானம், பஞ்சாப், மாளவம், ஸிந்து, கூர்ஜரம், கத்தியவார் முதலான நாடுகளிலும் பரவினார்கள். இரண்டு சாகா வம்சங்கள் வட இந்தியாவில் ஆட்சி பெற்றிருந்தன. தக்ஷசீலமும், மதுரையும் அவர்களுடைய தலை நகரங்களாக விருந்தன. அந்த வரசர்களுக்கு 'க்ஷத்ரபான்' அல்லது 'க்ஷத்ரபதி' என்று பெயர். மாளவம், ஸிந்து, கூர்ஜரம் முதலான மேனாடுகளில் தமது அதிகாரத்தை நிலை நிறுத்தி ஆட்சி செய்த சாகர்களுக்கு மேனாட்டுச் சாகர்களென்று பெயர். அவர்கள் மத்திய இந்தியாவின் மேற்பாகத்தையும், ஆந்திரர்கள் அதன் கீழ்பாகத்தையும் ஆண்டு வந்தார்கள்.

சாகாதிபதிகள் பாரஸிகப் பட்டமாகிய க்ஷத்ரபதி என்னும் பெயரை வைத்துக் கொண்டதனின்றும் அவர்கள் பார்த்திய நாட்டு மன்னர்களுக்குக் கட்டுப்பட்டிருக்கக் கூடுமென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். அதற்கேற்றவாறு அப்பொழுது பார்த்திய மன்னர்களிற் சிலர் பலாட்டியர்களாகவு மிருந்திருக்கிறார்கள். அவர்களி லொருவரான 'கந்தோபரஸ்' என்பவர் காலத்திற்றான் கிறிஸ்தவ மதம் இந்தியாவில் முதன் முதல் தாமஸ் என்னும் இயேசுவின் சிஷ்யனால் பிரசிங்கிக்கப்பட்டது.

மேனாட்டுச் சாகா க்ஷத்ரபதிகளில் சுமார் கி. பி. 130-ல் ருத்ரதாமன் என்று ஒருவர் பட்டத்துக்கு வந்தார். அவர் பராக்கிரமசாலி. அவர் தாம் பட்டத்துக்கு வந்த பதினைந்தாவது வருஷத்தில் தமது பாட்டன் காலம் முதல் ஆந்திர வரசனுக்கு உட்பட்டு இருந்த தமது நாட்டைச் சுவாதீனஞ் செய்து கொண்டார். அன்றியும், அவர் ஆந்திரவாசனுடைய நாட்டின் சில பாகத்தையும் ஜயித்துக்கொண்டுவிட்டார். புலிமாயி என்னும் ஆந்திர வரசன் தமது மகளை மணந்துள்ள காரணத்தைப் பற்றி அவர் அம்மன்னனை அவ்வளவில் விட்டு விட்டார். அவர் காலத்தில் 'ஸுதர்ஸன' ஏரியின் கரை

புயற் காற்றினால் உடைந்து விட, அவர் அதை முன்னி லும் மும்மடங்கு பலமாகக் கட்டுவித்தார். தாம் அங் ஙனம் செய்ததை அவர் சிலாசாஸனஞ் செய்துள்ளார். கி. பி. நான்காவது நூற்றாண்டின் கடைசியில் மேனாட்டுச் சாகா வம்சத்தாருடைய அதிகாரம் முற்றிலும் அழிந்து விட்டது. ஆந்திர ராஜ்யமும் கி. பி. மூன்றாவது நூற்றாண் டின் முதலில் க்ஷீணித்துப் போயிற்று.

---

## 12. குஷான் ராஜ்யம்.

சாகர்களைத் துரத்திவிட்டுத் துருக்கிஸ்தானத்தில் வந்து குடியேறின யூசிகள் சுமார் பதினைந்து வருஷங்கள் வரையில் அங்கேயே யாதொரு அசௌகரியமுமின்றி வசித்திருந்தார் கள். ஆனால், அவர்களைச் சீனதேசத்தின் வடமேற்கிலிருந்து துரத்தியனுப்பிய ஹ்யூங்னு என்னும் ஜாதியார் அவர்களைத் துருக்கிஸ்தானத்திலிருந்துந் துரத்திவிட்டார்கள். அதனால், யூசிகள் பாக்ட்ரியா நாட்டில் வந்து குடியேறினார்கள். அப் பொழுது அவர்கள் ஊர் ஊராகச் செல்வதை யொழித்து அங்கேயே தங்கிவிட்டார்கள். அன்றியும் அவர்கள் ஒரு நூறு வருஷங்களுக்குள் நாகரிக வளர்ச்சி யுண்டாகப் பெற்று ஒரு பராக்கிரமமுள்ள ஜாதியார்கள் ஆனார்கள். அவர்களுக்குள் ஐந்து வகுப்புக்கள் ஏற்பட்டு ஒவ்வொன்றும் ஒரு தலைவனது அதிகாரத்திற் குட்பட்டிருந்தது. அந்த வகுப்புக்களில் ஒன்றிற்குக் ‘குஷான்’ என்று பெயர்.

கி. பி. முதல் நூற்றாண்டின் மத்தியில் குஷான் வகுப் பைச் சேர்ந்த முதலாம் காட்பீஸஸ் என்பவன் மற்றைய வகுப்புக்களைத் தன்னதிகாரத்திற் குட்படுத்திக்கொண்டு ஹிந்துகுஷ் மலையைக் கடந்து பாக்ட்ரிய, பார்த்திய நாடு களை யெல்லாம் வென்று ஒரு பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித் தான். அவன் மகனும் தந்தையைப் போலவே முயன்று தனது ராஜ்யத்தை வட இந்தியாவின் பெரும் பாகம் வரை யில் பரப்பினான். அவனுடைய ராஜ்யம் கிழக்கில் காசி வரை யிலும், தெற்கில் ஸிந்துதேசம் வரையிலும் பரவியிருந்தது.


கனிஷ்கா
காலத்திய
இந்தியா
டர்க்கிஸ்டான்
சைநிஸ் டர்க்கிஸ்டான்
ஆப்கானிஸ்தான்
காஷ்மீர்
புருஷபுரம்
சிண்ட்
உஜ்ஜினி
பொம்பாய்
மதராஸ்
இந்து
மகா சமுத்திரம்

அதன்றியும், அவனுடைய ராஜ்யம் ரோம, பாரஸிக, சீன ராஜ்யங்களின் எல்லைவரையில் பரவி அதற்குமுன் இருந்த பற்பல சிறிய ராஜ்யங்களையெல்லாம் அடியோடு தொலைத்து விட்டதனால், அசோகர் காலத்திற்குப் பின்பு தடைப்பட்டிருந்ததான மேனாட்டு வியாபாரம் மறுபடியும் செம்மையாக நடந்தேறிற்று. குஷான் வம்சத்தரசர்களில் கி. பி. 125-ல் பட்டத்துக்குவந்த **கனிஷ்கர்** என்பவர்தான் பிரசித்தி பெற்றவர். அவருடைய ராஜ்யம் மேற்கில் மத்திய ஆசியாவிலுள்ள பாமிர் பீடபூமி முதல் கிழக்கில் விந்திய பருவதம் வரையில் வியாபித்திருந்தது.

கனிஷ்கருடைய பெயர் திபெத், சீனு, மங்கோலியா, முதலான தேசங்களில் தெரிந்திருந்தது. பௌத்தர்கள் அவரை மிகவும் கொண்டாடிவந்தார்களேனும், அவருடைய காலத்தைமட்டில் சரியாக நிச்சயிக்க முடியவில்லை. சில சரித்திர மேதாவிகள் அவர் கி. பி. 78-ல் பட்டத்துக்கு வந்தாரென்றும், மற்றுஞ் சிலர் அவர் கி. மு. 58-ல் வந்தாரென்றும் சொல்லுகிறார்கள்.

கனிஷ்கர் காஷ்மீர நாட்டை ஜயித்துத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டார். அவர் அங்கே **கனிஷ்கபுரம்** என்னும் ஓர் அழகிய பட்டணத்தை அமைத்தார். கனிஷ்கர் மேனாட்டுச் சாகர்களை ஜயித்துத் தம்முடைய அதிகாரத்திற் குட்படுத்தினார் என்று எண்ணவு மிடமுண்டு. பிறகு அவர் பாமிர் பீடபூமிக்குக் கிழக்கிலும், திபெத்துக்கு வடக்கிலுமுள்ள துருக்கிஸ்தானத்தின்மீது இருமுறை படையெடுத்துச் சென்றார். முதலில் அவர் தோல்வியையடைந்ததனால் சீன வாசனுக்குக் கப்பங்கட்டவும் நேர்ந்தது. ஆனால், இரண்டாவது படையெழுச்சியில் அவர் முற்றிலும் ஜயமடைந்தார். அதன் பயனாக அவருக்குக் **காஷ்கர், யார்கண்ட், கோடன்** என்னும் மாகாணங்கள் கிடைத்தன. அவர் கட்டிவந்த கப்பமும் தள்ளுண்டுபோயிற்று. அவையன்றியும், அவர் சீனதேசத் தரசரது ஆட்சிக்குட்பட்டிருந்த ஒரு சிற்றரசரிடமிருந்து அவருடைய நன்னம்பிக்கைக் கடையாளமாகச் சிலரை ஜாமீனாகப் பெற்றார். கனிஷ்கர்

அவர்களைச் செம்மையாக நடத்திவந்தார் என்றும், அதனால் அவர்களும் பௌத்த சந்யாசிகளுக் காகவும், மடங்களுக் காகவும் ஏராளமான பணம்கொடுத் துதவினார்களென்றும் சொல்லப்பட் டிருக்கின்றன. பஞ்சாபில் அவர்கள் இருந்த விடுதிக்குச் சீனபுக்தி என்னும் பெயர் வழங்கிவந்தது.

கனிஷ்கருடைய ராஜ்யத்துக்கு இப்பொழுது பெஷாவர் என்று வழங்கும் புருஷபுரம்தான் தலைநகராக விருந்தது. அங்கே அவர் 400 அடி உயரமுள்ள மிகப்பெரிய ஸ்தூபி ஒன்றைக் கட்டினார். அதனருகில் ஒரு பெரிய மடமும் அமைக்கப்பட் டிருந்தது. இவைகள் பிற்காலத்தில் மகம்மதியர்களால் இடித்துத் தகர்க்கப்பட்டன.

கனிஷ்கர் தாம் பட்டத்துக்குவந்த சில வருஷங்கள் கழித்துப் பௌத்த மதத்தைத் தழுவிக்கொண்டார். ஆனால், கனிஷ்கர் காலத்தில் பௌத்தமதம் விசேஷ மாறுபாடுகளை யடைந்துவிட்டது. ஜனங்கள் கௌதம புத்தரைத் தெய்வமாகக் கொண்டாடினதல்லாமல், அவருடைய அருளைப் பெருவதற்குப் போதிசத்வர்கள் என்னும் ஆசாரியர்களின் துணைவேண்டும் என்றும் எண்ணினார்கள். பௌத்த மதத்தை நாகரிகமற்ற அக்காலத்திய துருக்கியரைப்போன்ற சில அந்நியர்கள் அநுஷ்டித்ததனாலும், கிறிஸ்தவ, பாரஸிக, கிரேக்கர்களுடைய சேர்க்கையினாலும்தான் பௌத்தமதத்தில் பல புதிய ஆசாரங்களும், கொள்கைகளும் ஏற்பட்டு விட்டன. அப்போது மாறுதலை யடைந்து விட்ட பௌத்தமதத்திற்கு 'மஹாயானம்' என்னும் பெயர் உண்டாயிற்று. பழைய பௌத்தமதம் 'ஹீனயானம்' ஆய்விட்டது.

பின்னர் நாகார் ஜுனர் என்பவர் மஹாயான பௌத்தக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பினதன்றி, அவற்றையெல்லாந் தொகுத்து ஒரு சிறந்த நூலையும் இயற்றினார். ஸிம்ஹள நாட்டில் மட்டில்தான் ஹீனயான மதம் யாதொரு மாறுபாட்டையு மடையாம லிருந்தது.

பௌத்த சாஸ்திர வாராய்ச்சி செய்ததில் கனிஷ்கருக்குப் பல சந்தேகங்கள் ஏற்பட்டன. அவர் பௌத்த சம

யத்தை யநுஷ்டித்துவந்தவர்களுக்குள் பல முரணான கொள்கைகளிருப்பதைக் கண்டுங் கலங்கினர். அவற்றை யெல்லாம் ஒத்திட்டுப்பார்த்து உண்மையைக் கண்டறிந்து யாவருக்கும் பொதுவான ஒரேவிதக் கொள்கைகளைத் தீர்மானிக்க வேண்டுமென்று நிச்சயித்து, அவர் ஒரு பெரிய பௌத்த சபையைக் கூட்டவேண்டுமென எண்ணினர். அவருடைய குருவான பார்சுவர் என்பவரும் அதை ஆமோதிக்கக் காஷ்மீரத்தில் சுமார் கி. பி. 100-ல், ஒரு மகா சபை சேர்ந்தது. அந்தச்சபைக்கு வாசுமித்ரர் அக்ராஸனாதிபதியாகவும், 'புத்தசரிதம்' என்னும் நூலை இயற்றிய அசுவ கோஷா வென்பவர் உப அக்ராஸனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டார்கள். சுமார் 500 பெயர்கள் கூடிப் பழைமையான கிரந்தங்கள் யாவற்றையும் பரிசோதித்து அவற்றிற்குத் தக்க வியாக்யானங்களைச் செய்தார்கள். பௌத்த வேதாந்தக் களஞ்சியம் என்னும்படியான 'மஹாவிபாஷா' வென்னும் நூல் அப்பொழுதுதான் ஏற்பட்டது. அந்த வியாக்யானங்களைத் தாமிரங்களில் சாஸனஞ்செய்து அதற்கென்று கட்டப்பட்ட ஒரு ஸ்தூபியின்கீழ்ப் புதைத்து வைத்துவிட்டார்கள் என்று தெரியவருகிறது.

'சரகன்' என்னும் வைத்திய சாஸ்திரி இருந்தது கனிஷ்கருடைய காலத்திற்றான். சுமார் 25 வருஷம் ஆட்சி செய்தபிறகு கி. பி. 150-ல், கனிஷ்கர் இறந்துபோனர். அவர் இறக்கவும், குஷான்ராஜ்யம் க்ஷீணிக்க வாரம்பித்தது. ஆந்திர ராஜ்யம் அழிவுற்ற அதே காலத்தில், அதாவது சுமார் கி. பி. 225-ல், குஷான் ராஜ்யமும் அழிந்துபட்டது. ஆனாலும் குஷான் வம்சத்தைச்சேர்ந்த சிற்றரசர்கள் ஐந்தாவது நூற்றாண்டுவரையில் காபூலையும் பஞ்சாபையும் ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள். பின்னர் ஹூணர் என்னும் ஒரு நாடோடி ஜாதியார்கள் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து அவர்களை அடியோடு தோற்கடித்துவிட்டார்கள்.

குஷான், ஆந்திர ராஜ்யங்கள் முற்றிலும் அழிந்து போன காலம்முதல் சுமார் நூறுவருஷங்கள் வரையில் இந்தியாவைப் பற்றின விவரம் ஒன்றுந் தெரியவில்லை.

பௌத்த, சமண, பிராமண மதங்கள் தம்மைக்கொண்டொழுகின அரசர்கள் காலத்தில் விருத்தியை யடைந்தும், மற்றைய சமயங்களில் தமது பெருமை குறைந்தும் இருந்து வந்தன வென்பது நமக்கு நன்றாகப் புலப்படுகிறது. அன்றியும், அவைகள் நாளடைவில் பல மாறுபாடுகளையும் அடைந்துவிட்டன வெனவும் ஏற்படுகின்றது. பிராமண மதத்தில் யாக, யெக்யங்கள் முதலான சடங்குகள் குறைந்து, தத்வ விசாரணை மேலிட்டது. அது காரணமாக மீமாம்ஸ சாஸ்திரம் உண்டாயிற்று. மனுவினுடைய தென்று வழங்கும் தர்மசாஸ்திரமும், சூத்ரகன் எழுதின மிருச்சகடி என்னும் நாடகமும், சுஸ்ருதன் எழுதின 'சஸ்திரசிகிச்சை' நூலும், சரகனுடைய வைத்திய சாஸ்திரமும், பதஞ்சலியினுடைய வியாகரணமும் ஒருபக்கம் ஏற்பட்டுவருகையில், பௌத்தர்கள் ஸ்தூபிகளையும், மடங்களையும் கட்டுவித்துச் சிற்பிகளையும், சித்திர மெழுதுகின்றவர்களையும் முன்னுக்குக் கொண்டுவந்தார்கள். பஞ்சாபிலும், காந்தார நாட்டிலும் கிரேக்கர்கள் மிகவும் அழகிய ஒரு புதிய மாதிரியான கட்டடங்களையும், சிற்பங்களையும் அமைத்து வந்தபொழுது, மத்திய இந்தியாவிலும், தக்ஷிணத்திலும் சுதேசச் சிற்பிகளும், கட்டட நிபுணர்களும் வேறுவிதமான சிற்பங்களையும், கட்டடங்களையும் உண்டாக்கி வந்தார்கள்.

---

## 13. குப்த ராஜ்யம்

சுமார் கி. பி. 308-ம் வருஷத்தில் பாடலிபுரத்துக் கருகில் ஆட்சி பெற்றிருந்த சந்திர-குப்தர் என்னும் ஒரு சிற்றரசர் லிச்சாவி வம்சத்தைச் சேர்ந்த 'குமாரதேவி' என்னும் அரச கன்னிகையை மணந்து அவளுடைய குடும்பத்தவர்களுக்குச் சொந்தமாயிருந்த நாட்டையும் ஸ்திரீதனமாகப் பெற்றார். பின்னர் அவர் தமது ராஜ்யத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருக்கி யமுனாநதி கங்கையில் சங்கமமாகுமிடம் வரையில் உள்ள நாடுகளை ஜயித்துக்கொண்டுவிட்

டார். அந்த ராஜ்யத்தை அவர் கி. பி. 320 முதல் கி. பி. 325 வரையில் விமரிசையாக ஆண்டுவந்தார்.

அவருக்குப்பின், அவர் மைந்தர் **ஸமுத்ர-குப்தர்** என்பவர் பட்டத்துக்கு வந்தார். அவர் சுமார் 50 வருஷம் ராஜ்யபாரம் நடத்தினர். அவர் மகா பராக்கிரமசாலி. அவர் வட இந்தியாவிலிருந்த அநேக நாடுகளை வென்று தமது ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டார். அதன் பின்பு அவர் சூடிய நாகபுரியின் வழியாகத் தக்ஷிணத்தின்மீது படையெடுத்து வந்து அங்கிருந்த பதினோராசர்களை வென்று தம்முடைய அதிகாரத்திற் குட்படுத்தினர். அவர் தெற்கில் காஞ்சீபுரம் வரையில் வந்து பின்பு மஹாராஷ்டிரத்தின் வழியாகத் தாம் தக்ஷிணத்தில் ஜயித்த நாடுகளிலிருந்து ஏராளமான திரவியத்தைச் சம்பாதித்துக்கொண்டு தமது நாட்டிற்குத் திரும்பினர். அல்லாமலும், அவர் மத்தியமாகாணத்திலும், கலிங்க நாட்டிலுமிருந்த பல காட்டுவாசிகளான முரட்டு ஜாதியர்களையும் வென்றார். என்றாலும், மேற்கில் சம்பல், யமுனை நதிகள் முதல் கிழக்கில் ஹுக்ளிவரையிலும், வடக்கில் ஹிமாலய பருவதம் முதல், தெற்கில் நருமதையாறு வரையிலும் உள்ள நாடுதான் அவருடைய ராஜ்யத்திற் சேர்ந்திருந்தது. காமரூபம், நேபாளம், ராஜபுதனம், பஞ்சாப், மாளவம் முதலிய நாடுகள் அவருடைய அதிகாரத்திற் குட்பட்டுக் கப்பஞ்செலுத்தி வந்தனபோலும். ஸிம்ஹள நாட்டை ஆண்டுவந்த **மேகவர்ணன்** என்னும் அரசன் ஸமுத்ர-குப்தருக்கு விலையுயர்ந்த காணிக்கைகளை யனுப்பிப் புத்த கயையில் பௌத்தர்களுக்கு ஒரு மடத்தைக் கட்டுவதற்கு உத்தரவைப் பெற்றான்.

ஸமுத்ர-குப்தர் தமது வெற்றிக் கடையாளமாக ஒரு அசுவமேதயாகஞ் செய்து, அதற்கென்று பொன்னுணயங்களை யடித்து ஏராளமாக வழங்கினர். அன்றியும், அவர் தமது வீரச்செயல்களை ஒரு கவிவாணரைக்கொண்டு பாடுவித்து அப்பாடல்களைக் கற்களிற் செதுக்கி வைத்தார். அசோகர் செதுக்கி வைத்த தருமநீதிகளின்கீழ் இவர் தமது வீரத்தைக் குறிக்கும் வெற்றிகளைச் செதுக்கிவைத்திருப்பது விந்தையே.

ஸமுத்ர-குப்தர் கவிவாணர். அவருக்குச் சங்கீதமும் நன்றாகத் தெரியும். ஒரு சரித்திர நிபுணர் அவரை இந்திய 'நேபோலியன்' என்று சொல்லலாம் என்றெழுதியிருக்கிறார். ஸமுத்ர-குப்தருக்குப் பிறகு அவர் மைந்தர் இரண்டாவது சந்திர-குப்தர் பட்டத்துக்கு வந்தார். அவர் விக்ரமாதித்யர் என்னும் பிருதுப்பெயரை வைத்துக்கொண்டதனால், அவருக்குச் சந்திர-குப்த விக்ரமாதித்யர் என்னும் பெயர் வந்தது. சாகர்களை ஜயித்த காரணத்தினால், அவருக்குச் 'சாகாரி' என்னும் பெயரும் உண்டு. அவர் சுமார் கி. பி. 375-ல் பட்டத்துக்கு வந்தார்.

அவர் மேனாட்டுச் சாகரர்களின் மீது படையெடுத்துச் சென்று மாளவம், கூர்ஜரம், கத்தியவார் முதலிய நாடுகளை வென்று தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டார். அவ்வாறாக அவருடைய ராஜ்யம் மேற்குக் கடற்கரை வரையில் வியாபித்திருந்தது. அதனால் கடல் மார்க்கமாய் அந்நிய தேசங்களோடு வியாபாரஞ் செய்வதற்கு சௌகரியம் உண்டாயிற்று. ருத்ரதாமனுடைய சாகராஜ்யத்தின் தலைநகராக விருந்த உஜ்ஜயினிபுரம் அப்பொழுது கல்விக்கும், நாகரிகத்துக்கும், வியாபாரத்திற்கும் சிறந்த உறைவிடமாக விருந்தது.

விக்ரமாதித்யர் வைதிக வைஷ்ணவரா யிருந்தும், பௌத்த, சமண மதத்தினர்களைப் பரிவுடன் பார்த்து வந்திருக்கிறார். அவர் அயோத்தியைத் தமது ராஜ்யத்தின் தலைநகராகச் செய்துகொண்டு அங்கே ஒரு நாணய சாலையையும் ஏற்படுத்தினார். ஆயினும், பாடலிபுரம் தனது சிறப்பை முற்றிலும் இழந்துவிடவில்லை. அது ஆறாவது நூற்றாண்டில் ஹூணர்களால் அழித்துவிடப்பட்டதெனினும் ஹர்ஷா சக்ரவர்த்தி யதைப் புதிக்கினார். விக்ரமாதித்யரைப் பற்றின விவரங்கள் நமக்குப் 'பாஹியன்' என்னும் சீன யாத்திரிகர் எழுதிவைத்த கதைகளினின்றும் கிடைத்துள்ளன.

பாஹியன் பௌத்த சமயத்தினர். அவர் மதவாராய்ச்சியின் பொருட்டும், சமய நூல்களைச் சம்பாதிக்கக்


விக்கிரமாதித்திய
குப்த ராஜ்யம்
கி.பி.400
இங்கிலீஷ் மைல்
1 100 200
காஸ்மீரம்
சிந்து நதி
கங்கை நதி
யமுனா நதி
பாடலிபுத்திரம்
குப்த ராஜ்யம்
உஜ்ஜினி
கோதாவரி நதி
பாளயக்காரர்
கிருஷ்ணா நதி
சோழநாடு
பாளயக்காரர்
கஞ்சி (காஞ்சிபுரம்)
சேரநாடு
பாண்டிய நாடு
இலங்கை

கருதியும் இந் நாட்டிற்கு வந்து இங்கே பத்து வருஷம் இருந்தனர். அதில் மூன்று வருஷகாலம் வரையில் பாடலி புரத்தி லிருந்தார்.

அவர் பாடலிபுரத்திலிருந்த அசோகருடைய அரண் மனையைக் கண்டு மிக்க வியப்படைந்தார். புத்தத் திரு விழாவும் அவருக்கு மிகுந்த ஆச்சரியத்தை யுண்டாக்கிற்று. சித்திரிக்கப்பட்ட இருபது அழகிய ரதங்களில் புத்த விக்ர ஹங்களை யமைத்து, வாத்ய கோஷத்துடன், ஊர்வலம் வரும் கோலத்தைக் கண்டு அவர் களித்தார். மஹாயான வகுப்பினருக் கொன்றும், ஹீனயான வகுப்பினருக் கொன் றும் ஆக இருந்த இரண்டு மடங்களில் சுமார் எழுநூறு சந் யாசிகள் இருந்தார்களெனவும் அவர் சொல்லியிருக்கிறார். மகத நாட்டுக் குடிகள் செல்வம் நிறைந்தும், தழைத்தும் இருந்ததன்றி மிகுந்த தரும சிந்தையுள்ளவர்களாகவு மிருந் தார்களென்றும், எளியவர்களுக்குத் தரும சாலைகளும், பிர யாணிகளுக்கு விடுதிகளும், நோயாளிகளுக்குத் தரும வைத்ய சாலைகளும் அமைக்கப்பட் டிருந்தன வென்றும் சொல்லியுள்ளார். அவரால் அப்பொழுது பௌத்த மதம் வடநாட்டில் உயர்நிலை பெற்றிருந்த தென்றும், ஆயிரக்கணக் கான பிக்ஷுகள் மடங்களில் வசித்திருந்தார்களென்றும் தெரியவருகின்றன. ஆனால் அப்போது கயை, ச்ராவஸ்தி, கபிலவஸ்து, குஷிநாகரம் முதலான பட்டணங்கள் எக் காரணம்பற்றியோ ஜனத்தொகையிலும் செல்வத்திலும் குறைந்துபோய்க் கொஞ்சங் கொஞ்சமாகப் பாழடைந்து வந்தன.

பாஹியன் விக்ரமாதித்யருடைய அரசாட்சியை மிக வும் புகழ்ந்து எழுதியிருக்கிறார். அவருடைய துரைத்தன உத்தியோகஸ்தர்கள் குடிகளினுடைய வியவஹாரங்களில் தலையிட்டுக் கொள்வதில்லை. குற்றஞ் செய்தவர்களுக்கு இலகு வான தண்டனைகள் விதிக்கப்பட்டன. குடிகள் யாதொரு நிபந்தனையுமின்றித் தமதிஷ்டம்போல் போகவும் வரவும் கூடும். வரிகள் மிதமாக விதிக்கப்பட்டிருந்தன. உத்தியோ கஸ்தர்கள் குடிகளைத் துன்புறுத்திப் பரிதானம் வாங்குவ

நில்லை. பாதைகளில் திருடர் பயம் கிடையாது. ஜனங்கள் பொதுவில் பௌத்த முறைகளைப் பின்பற்றிப் பெரும்பாலும் ஜீவஹிம்ஸையை நீத்தும், மதுபானத்தை யொழித்தும், தரும வழிகளில் நடந்துவந்தார்கள் என்றும் கூறி யிருக்கிறார். அப்பொழுது பலகாரைகளும், பொன், வெள்ளி நாணயங்களும் உபயோகிக்கப்பட்டு வந்தன. சுருங்கச் சொல்லுவோமானால் விக்ரமாதித்யர் தமது ராஜ்யத்தை மிக்க விமரிஸையாக ஆட்சிசெய்துவந்தாரெனத் தெரியவருகின்றது. கி. பி. 413-ல், அவர் காலஞ் சென்றார்.

விக்ரமாதித்யருக்குப் பின்பு மகதராஜ்யம் க்ஷீணிக்கத் தொடங்கிவிட்டது. அவருடைய பெயரரான ஸ்கந்த-குப்தர் காலத்தில் மங்கோலிய வம்சத்தைச் சேர்ந்த ஹூணர் என்னும் ஜாதியார்கள் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து கங்காநதி தீரம் வரையிலுள்ள நாடுகளை ஜயித்துக் கொண்டுவிட்டார்கள். அவர்கள் கொள்ளையையும் கொடுமையையும் விரதமாகப் பூண்டிருந்தார்கள் போலும். அவர்கள் தலைவனை தோரமாணு என்பவன் குப்த ராஜ்யத்தை யழித்துப் பஞ்சாப், ராஜபுதனம், மத்திய இந்தியா ஆகிய இவற்றைச் சேர்த்து ஒரு ராஜ்யமாக்கி, மகாராஜா என்னும் பெயர் பூண்டு அதனை ஆண்டுவந்தான். அவனுக்குப் பின் அவன் மகன் மிஹிராகுலன் என்பவன் கி. பி. 510 முதல் கி. பி. 540 வரையில் அந்நாட்டை யாண்டுவந்தான். அவன் மிக்க் கொடியவன். தீமையே உருவெடுத்தாற்போன்றவன். அவனிழைத்த துன்பங்களைப் பொறுக்கமுடியாமற் பல சிற்றரசர்களும் ஒன்றுசேர்ந்து மிஹிராகுலனுடைய அதிகாரத்தைக் குலைத்து, அவனையும் காஷ்மீரத்தை நோக்கி ஓடிவிடும்படிச் செய்தார்கள். அவர்களில் குப்த வம்சத்தைச் சேர்ந்த நரஸிம்ஹ-குப்தரும், மத்திய இந்தியாவில் ஆட்சி பெற்றிருந்த 'யசோதர்மன்' என்னும் சிற்றரசரும் முதன்மையானவர்கள். ஐந்தாவது நூற்றாண்டின் கடைசியில் பிரபாகரவர்த்தனர் என்னும் ஒரு சிற்றரசர் பல சிற்றரசர்களைத் தமக்கு உதவியாக்கிக்கொண்டு மகதராஜ்யத்தை யழித்த ஹூணர்களை முற்றிலுந் தொலைத்துவிட்டார்.

குப்தவாசர்கள் மகத ராஜ்யத்தை யாண்டுவந்த காலத்தில் வட இந்தியா கல்வி, கேள்விகளிலும் நாகரிக வளர்ச்சியிலும் உன்னத நிலையைப் பெற்றிருந்தது.

பௌத்தமதத்தை நாகரிகமற்ற அந்நியர்கள் அநுஷ்டித்ததனால் அது பல மாறுதல்களை யடைந்துவிட்டதென்பது ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது. பௌத்த மதத்தின் அபிவிருத்தியையும், ஜனங்களுக்கு அதனிடத்திலுண்டான அபிமானத்தையுங் கண்ட பிராமணர்கள் தாங்களும் பௌத்தர்களுடைய வழியைப் பின்பற்றி அந்நியர்களைத் தமது மதத்திற் சேர்த்துக்கொண்டும், விக்ரஹங்களையும், உத்ஸவங்களையும் ஏற்படுத்தியும், சாமாந்ய ஜனங்களுக்குண்டாயிருந்தகொள்கைகளைத் தாங்கள் ஒப்புக்கொண்டும், தங்களுடைய மதத்தின் கோட்பாடுகளையும், மனோத சிருஷ்டிகளையும் பதினெட்டு புராணங்களாகத் தொகுத்து யாவருமறிய வெளியிட்டும் வந்தார்கள். அல்லாமலும், அவர்கள் தாங்கள் பௌத்த மதத்தில் நல்லதெனக் கண்டனவற்றைத் தமது மதத்தில் சேர்த்துக்கொண்டுவிட்டார்கள். அதனால், இப்புதிய பிராமண மதத்திற்கும், பௌத்த மதத்திற்கும் வேற்றுமையே யில்லா தொழிந்தது. இந்தப் புதிய மதந்தான் 'ஹிந்து மதம்' என்றபிப்பிராயப்படுகின்றவர்கள் பலர் இருந்து வருகிறார்கள். பிராமண மதம் பௌத்தமதக் கொள்கைகளையும், ஆசார வநுஷ்டானங்களையும் ஆகருஷித்துக் கொண்டதுதான் பௌத்த மதத்தின் க்ஷீணத்துக்கு முக்கிய காரணமாகும். சிற்சில சமயங்களில் ஹிந்து வாசர்கள் அவர்களை ஹிம்ஸித்தும் வந்திருக்கிறார்கள்.

இப்போது மனு நூலை ஆதாரமாகக்கொண்டு சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. சொத்துக்களை விற்கவும், வாங்கவும், தானஞ் செய்யவும், உரிமையாகப் பெறவும் விதிகள் உண்டாக்கப்பட்டன.

இக்காலத்தில் மிகச் சிறந்த வித்வான்கள் இருந்து பெரிய பெரிய நூல்களை இயற்றி யிருக்கிறார்கள். விக்ரமாதித்யருடைய சபையிலிருந்த நவரத்தினங்களைப்பற்றி யாவ

ரும் அறிந்திருக்கக்கூடும். 'சாகுந்தலம், விக்ரம-ஊர்வசீயம், மாளவிகா-அக்நிமித்ரம் என்னும் நாடகங்களையும், ரகுவம்சம், குமாரஸம்பவம், மேகசந்தேசம் என்னும் காவியங்களையும் இயற்றிய காளிதாஸ மகாகவி தான் அவர்களிற் சிறந்தவர். 'ப்ருஹத்ஸம் ஹிதை' என்னும் நூலை யியற்றிய வராஹமிஹிரர் என்னும் வான சாஸ்திரியும், நிகண்டுவை எழுதின 'அமரஸிம்ஹரும்', வைத்திய சாஸ்திரத்தைச் செய்த 'தன்வந்தரி'யும் வியாகர்ணம் இயற்றிய 'வரருசியும்' அந்த நவரத்னங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்களையல்லாமல், யாக்யவல்கியர் என்னும் தர்ம சாஸ்திர பண்டிதரும், ஆரியபட்டர், ப்ரம்மகுப்தர் என்னும் வான சாஸ்திரிகளும் காதம்பரி, தசகுமாரசரித்ரம் என்னும் கற்பனைக் கதைகளைச்செய்த ஸுபந்து, தண்டி என்னும் கற்பனைக் கதாசிரியர்களும் வாமனர், ஜயாதித்யர் என்னும் வையாகரணிகளும், நீதிசாஸ்திரத்தையும், பட்டிகாவ்யத்தையும் இயற்றிய பர்த்ருஹரியும் இருந்த காலமும் இதுவே.

சில்ப வித்தை, சித்திர வித்தை, சிற்ப சாஸ்திரம் முதலியனவும், இக்காலத்தில் மேம்பாடடைந்து இருந்தன.

---

# மத்தியகால இந்தியா

## 14. ஹர்ஷவர்த்தனர்

### (606 கி. பி.–648 கி. பி.)

ஹூணர்களைச் சண்டையிட்டு ஜயித்துத் துறத்திய பிரபாகரவர்த்தனர் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முதலில் ஒரு சிறிய ராஜ்யத்தை ஏற்படுத்தினார். அதற்கு ஸ்தானேசுவரம் என்னும் பட்டணம் தலைநகராக விருந்தது. அவர் கி. பி. 605–ல் இறந்ததும், அவருடைய மூத்த மைந்தரான ராஜ்யவர்த்தனர் பட்டத்துக்குவந்தார். மாளவ வரசன் தமது சகோதரியான ராஜ்யசிரி என்பவளுடைய புருஷரான, க்ருஹவர்மன் மௌகாரி என்பவரைக் கொன்று, அவ் வம்மையையும் சிறைப்படுத்தினனென ராஜ்யவர்த்தனர் கேள்வியுற்று ஒரு பெரும்படையுடன் சண்டைக்குப் புறப்பட்டுச்சென்று மாளவ வரசனை வென்று திரும்பி வரும் பொழுது, மாளவ வரசனுடைய நண்பனான சசாங்கன் என்னும் வங்காள மன்னவன் அவரை வஞ்சனையினால் கொன்று விட்டான். அப்பொழுது அவருடைய தம்பியான 'ஹர்ஷவர்த்தனர்' பட்டத்துக்கு வந்தார்.

ஹர்ஷர் சிறையினின்றும் தப்பியோடி விந்தியமலையைச் சார்ந்த காடுகளில் வசித்திருந்த தமது சகோதரியைத் தேடிச்சென்று தமது ஊருக்கு அழைத்துவந்தார். பின்னர் அவர் தமது பெரும்படையைக்கொண்டு விக்ரமாதித்யர் காலத்தில் மகதராஜ்யத்திற் சேர்ந்திருந்த நாடுகளையும், வங்காளம், நேபாளம் ஆகிய நாடுகளையும் வென்று தம்முடைய ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டார். இவ்வாறாக அவருடைய ராஜ்யம் ஹிமயமலை முதல் நருமதை நதிவரையில் பரவியிருந்தது. அதையன்றிக் காமரூபம், வல்லபி என்னும் நாட்டரசர்கள் அவருக்குக் கப்பங்கட்டி வந்தார்கள். மாளவம், கூர்ஜரம், ஸௌராஷ்ட்ரம் என்னும் நாடுகளும் அவருடைய ராஜ்யத்திற் சேர்ந்திருந்தன வென்று தோன்றுகின்றது. ஹர்ஷர் தென்னிந்தியாவின்மீது படை


7-ம் நூற்றாண்டில்
இந்தியா
ஹர்ஷா ராஜ்யம்
இங்கிலீஷ் மைல்
0 200 400
காஸ்மீரம்
ஸட்லஜ் நதி
நேபாளம்
கனோஜ்
பிரயாகை
பாடலிபுத்திரம்
கங்கை நதி
பிரம்மபுத்திரா நதி
ஸிந்து நதி
ஸிந்து
மாளவம்
உஜ்ஜினி
குஜராத்
நர்மதை நதி
அஜண்டா
கோதாவரி நதி
கலிங்க தேசம்
வாதாபி
சோழநாடு
பல்லவர்கள்
இலங்கை

யெடுத்துச் செல்லவும், இரண்டாவது புலிகேசன் என்னும் சாளுக்கிய மன்னவர் அவரை அடியோடு தோற்கடித்தார்.

ஹர்ஷர் நியாயம் நடத்துவதில் நிபுணர். அவர் தமது உத்தியோகஸ்தர்களையே முழுவதும் நம்பி விடாமற்றுமே நேரில் ஊர் ஊராகச்சென்று துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனஞ் செய்துவந்தார். ஹர்ஷர் குற்றவாளிகளைக் கடுமையாய்த் தண்டித்தார்.

வியவசாயிகள் தமது வருமானத்தில் ஆறிலொரு பங்கை வரியாகச் செலுத்தி வந்தார்கள். துரைத்தன உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளத்திற் கீடாக மானியங்கள் விடப்பட்டிருந்தன. ஹர்ஷர் சிறந்த கல்விமான். அதனுல் அவர் வித்வான்களையும் ஆதரித்துவந்தார். பாணன் என்னும் கவிஞர் ஹர்ஷரைப்பற்றி 'ஹர்ஷசரிதம்' என்னும் நூலை இயற்றினர். ஹர்ஷர் நாகானந்தன், ரத்னவளி, ப்ரயதர்ஸிகா என்னும் நாடகங்களையும், சில சிறிய காவ்யங்களையும், ஒரு வியாகரண நூலையும் செய்திருக்கிறர்.

மதவிஷயத்தில் ஹர்ஷருக்கு வைராக்கியம் இருந்ததில்லை. அவர் தமது பிற்காலத்தில் பௌத்தமதத்திற் பற்றுள்ளவராக விருந்தும், சிவனையும், விஷ்ணுவையும் பூஜித்து வந்ததாகத் தெரியவருகின்றது. ஹர்ஷர் கி. பி. 640-ல் கன்னோசிநகரில் ஒரு பெரிய பௌத்தசபையைக் கூட்டினர். அதற்கு அவருடைய சிற்றரசர்கள் பலரும், பல்லாயிரம் பௌத்த சந்யாசிகளும், சமணர்களும், பிராமணர்களும் வந்திருந்தார்கள். அச்சபைக்கு அப்பொழுது இந்தியாவுக்குப் பௌத்த சமய சம்பந்தமான நூல்களைச் சம்பாதிப்பதின் பொருட்டும், திவ்ய தேசயாத்திரை செய்வதன் பொருட்டும் வந்திருந்த யுவான்சுவாங் என்னும் சீனயாத்திரிகரும் வரவழைக்கப் பட்டார். அவர் செய்த பிரசங்கங்களைக்கேட்டு ஹர்ஷரும், அங்கு வந்திருந்த பலரும் பரவசரானர்கள். அந்தச் சபையையல்லாமல், கன்னோசியில் புத்தருக்கு வெகு விமரிசையாக ஒரு திருவிழாவும் நடந்தேறிற்று. ஹர்ஷர் அதன் பொருட்டு ஏராளமான பொருளைச் செலவிட்டார். புத்தருடைய பொன்னுலாகிய விக்ரஹம்

ஊர்வலம் வரும்பொழுது, அரசர் முத்துக்களையும், பொன்னாற் செய்த புஷ்பங்களையும், விலையுயர்ந்த மற்றும் பல வஸ்துக்களையும் வாரி வழங்கினார்.



svahasto mama maharajadhiraja sri Harshasya

யுவான்சுவாங் இந்நாட்டில் பதினைந்து வருஷமிருந்து பற்பல விடங்களுக்குஞ் சென்று தாம் கண்டதையும் கேட்டதையும் விவரமாக எழுதிவைத்திருக்கிறார். அவர் தெற்கில் காஞ்சீபுரம் வரையில் வந்திருக்கிறார். அவர் வழிகளில் திருடர்பயம் உண்டென்றும், பௌத்த மடங்களில் மிகக் குறைவான சந்யாசிகளே இருந்தார்களென்றும், சசாங்கனைப் போன்ற சில ஹிந்துவரசர்கள் பௌத்தர்களுக்குப் பலதீங்குகளை இழைத்து, ஹிந்து மதத்தைப் பரப்பினார்களென்றும் சொல்லியிருக்கிறார். அவர் சென்ற விடங்கள்தோறும் மிகுந்த மரியாதையுடன் வரவேற்கப்பட்டதல்லாமல் பொருளுதவியையும் பெற்றார். கி. பி. 645-ல் அந்த யாத்திரிகர் 657 பௌத்த நூல்களையும், பொன், வெள்ளி, சந்தன மரம் ஆகிய இவற்றிற் செய்த பல புத்த விக்ரஹங்களையும் எடுத்துக்கொண்டு தம்மூருக்குத் திரும்பினார்.

அதையன்றிப் பிரயாகையிலும் ஹர்ஷர் ஐந்துவருஷங்களுக் கொருமுறை ஒரு பெரிய சபைகூட்டி புத்தரையும், ஆதித்யனையும், பரமசிவனையும் பூஜைசெய்து பௌத்தர்களுக்கும், பிராமணர்களுக்கும், அளவற்ற சன்மானங்களைச் செய்தனுப்பி வந்தார். யுவான்சுவாங் வந்திருந்தபொழுது கி. பி. 643-ம் வருஷத்தில் அத்தகைய ஆறாவது திருக்கூட்டம் நடைபெற்றது. ஹர்ஷர் அசோகரைப் பின்பற்றிச் சாலைகளையும், சத்திரங்களையும், வைத்திய சாலைகளையும் அமைத்துவைத்தார். கி. பி 648-ல், அவர் தேகவியோகமானார்.

## 15. ராஜபுத்திரர்களும், அவர்களுடைய ராஜ்யங்களும்

ஹர்ஷருடைய காலத்திற்குப் பிறகு மகம்மதியர்கள் இந்தியாவை ஜயித்து அவர்களுடைய ராஜ்யங்களை ஏற்படுத்த வாரம்பித்த காலம்வரையில் சுமார் 500 வருஷகாலம் ராஜபுத்திரர்கள் என்னும் ஜாதியார் முன்னேற்றத்தை அடைந்து ஆட்சிசெய்து வந்தார்கள். இந்தியாவின்மீது படையெடுத்துவந்து ராஜ்யங்களை ஸ்தாபித்த சாகர், பல்லவர், கூர்ஜரர், ஹூணர் முதலான ஜாதியர்கள் நாளடைவில் ஹிந்து மதத்தையும், ஹிந்துக்களுடைய ஆசார, அநுஷ்டானங்களையும் தழுவிக்கொண்டதை யல்லாமல் அவர்களுடைய பெண்களையும் மணந்துகொண்டு கலந்து உறவாட ஏற்பட்டபொழுது, அவர்களிற் புஜபல பராக்கிரமங்கள் பொருந்தி யிருந்தவர்கள் க்ஷத்திரியர்கள் என மதிக்கப்பட்டார்கள். அவர்கள் பூர்வத்திற் பற்பல ஜாதியைச் சேர்ந்தவர்களாக விருந்தும், ஹிந்துக்க ளானபின்பு தமக்குள் யாதொரு வித்தியாசத்தையும் பாராட்டிக் கொள்ளாமல் விவாகங்கள் செய்துகொண்டும், எல்லோரும் ராஜபுத்திரர்கள் என்று சொல்லிக்கொண்டும் ஆண்மை, பராக்கிரமம், உண்மை, உதாரம் முதலிய நற்குணங்களைப் பொருந்தியும், ஜாதிக் கட்டுப்பாட்டுடனும் இருந்தார்கள். மிகப் பழைமையான க்ஷத்திரிய வம்சங்களைச் சேர்ந்தவர்களும் பிற்காலத்தில் ராஜபுத்திரர்க ளெனவே மதிக்கப்பட்டார்கள். ராஜபுத்திரர்கள் தங்களுடைய ஸ்திரீகளின் கௌரவத்தை மிகுந்த வைராக்கியத்துடன் பாதுகாத்து வந்தார்கள். புருஷர் இறந்துவிட்டால் ஸ்திரீகள் உடன்கட்டை ஏறிவிடுவார்கள். அந்நியர்கள் அவர்களுடைய கோட்டைகளை முற்றுகைசெய்து பிடித்துக்கொண்டார்களேயானல், அவர்களுடைய பெண்டிர்கள் பெரிய தீயைமூட்டி அதில் உயிருடன் வீழ்ந்து மாண்டுபோவார்கள். உயிரைவிடக் கற்பே சிறந்தது என்பது அந்த ராஜபுத்திரப் பெண்களின் கொள்கை. ராஜபுத்திரர்கள் ஹோம குண்டத்தினின்றும்

தோன்றினார்கள் என்றும் ஒரு கற்பனைக்கதை வழங்கிவந்துள்ளது. ராஜபுத்திரர்கள் வட இந்தியாவில் அநேக ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு அவற்றை ஐந்நூறு வருஷங்கள் வரையில் ஆண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் ஏற்படுத்திய ராஜ்யங்களில் முக்கியமான சிலவற்றைப் பற்றின சரித்திரத்தை மட்டில் நாம் கவனிப்பது அவசியமானது.

ஹர்ஷர் இறந்ததும், அவருடைய பெரியராஜ்யம் சிதறிப் பல சிறிய ராஜ்யங்களாயின வென்று ஏற்கெனவே சொல்லப்பட்டதல்லவா? கூர்ஜரம், ஸிந்து, பஞ்சாப் ஆகிய நாடுகள் ஒழிந்த மற்றைய பாகம் பழைய குப்தவம்சத்தவர்களின் தாயாதிகளான ஒரு வம்சத்தாரால் ஆளப்பட்டு வந்தது. சௌகரியத்தின் பொருட்டு இவர்களைப் பிற்காலத்திய குப்தர்கள் என்று சொல்லுவோம். இவர்களுடைய மூலபுருஷரான கிருஷ்ணகுப்தரின் வம்சத்திற்றோன்றிய ஆதித்யசேனர் என்பவரும், அவருடைய சந்ததியாரும் சுமார் இருநூறு வருஷங்கள்வரையில் அந்நாட்டை ஆண்டுவந்தார்கள். ஆனால் எட்டாவது நூற்றாண்டில் அந்தராஜ்யம் மிகக் குறுகிப் பீஹார், வங்காள மாகாணங்கள் வரையில்தான் பரவியிருந்தது.

கி. பி. ஏழாவது நூற்றாண்டின் இறுதியில் யமுனாநதியின் இருபுறத்திலும் இரண்டு ராஜ்யங்கள் இருந்தன. ஒன்றின் தலைநகர் கன்னோசியும், மற்றொன்றின் ராஜதானி உஜ்ஜயினி யுமாக விருந்தன. உஜ்ஜயினியில் கூர்ஜர ராஜபுத்திரர்கள் ஆண்டுவந்தார்கள். கூர்ஜரர்கள் முதலில் பஞ்சாபிலும், ராஜபுதனத்திலும் குடியேறிப் பின்னர் மாளவ, மத்திய இந்திய நாடுகளிற் பரவினார்கள். அப்பொழுதுதான் அவர்கள் உஜ்ஜயினியைத் தங்களுடைய ராஜதானியாக்கிக் கொண்டார்கள். எட்டாவது நூற்றாண்டின் மத்தியில் போஜன் என்னும் கூர்ஜரமன்னவன் யமுனையாற்றின் மற்றொருகரையில் கன்னோசியைத் தலைநகராகக் கொண்டிருந்த ராஜ்யத்தையும் ஜயித்துத் தன் ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டான். அவனுடைய காலத்தில் கூர்ஜரர்களுடைய ராஜ்யம் உயர்நிலை பெற்றிருந்தது. ஆனால், ஒன்ப

தாவது நூற்றாண்டின் முதலில் சாந்தள ராஜபுத்திரர்களின் தலைவனான யசோவர்மன் என்பவன் சுயேச்சாதிகாரம் பெற்று ஜஜாகபுக்திக்கு அரசனானான். அதற்குப் பின்பு பரமாரர் என்றும், சோஹன் என்றும் பெயர்பெற்ற வேறு இரண்டு ராஜபுத்திர வம்சத்தவர்கள் மாளவத்தையும், ராஜபுதனத்தையும் பிடுங்கிக்கொண்டுவிட்டார்கள். அது முதல் கூர்ஜரர்களுக்கு (அவர்களுக்கு இப்பொழுது தோமரர்கள் என்னும் பெயரும் உண்டாயிற்று) மிகச் சிறிய ராஜ்யந்தான் சொந்தமாக விருந்தது. அதுவும் கி. பி. 1019-ல் மகம்மதியரால் கொள்ளை யடிக்கப்பட்டுத் தனது மேன்மையை முற்றிலும் இழந்தது. அதற்கு இருபது வருஷங்களுக்குப் பின்பு சந்திரதேவன் என்னும் கஹர்வார் ராஜபுத்திரன் தோமரவரசனிட மிருந்து அவனுடைய ராஜ்யத்தின் பெரும்பாகத்தையும் பிடுங்கிக் கொண்டுவிட்டான். அப்பொழுது தோமரவரசனுக்கு டில்லி மட்டில்தான் சொந்தமாக விருந்தது. கி. பி. 1170-ல், அதுவும் அஜ்மீர் ராஜ்யத்திற் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

கூர்ஜர போஜனது காலம்முதல் அஜ்மீர் நாட்டை சோகன் ராஜ புத்திரர்கள் என்னும் ஒரு வகுப்பினர் இருபத்தைந்து தலை முறைகள் வரையில் ஆட்சி செய்து வந்தார்கள். அந்த வம்சத்தைச் சேர்ந்த சோமேசுவரன் என்னுமரசன் டில்லியை யாண்டுவந்த தோமரத் தலைவரது ஒரே பெண்ணை விவாகஞ் செய்து கொண்டதனால், அவர்கள் மைந்தரான பிருதிவி என்பவர் இரண்டு ராஜ்யத்திற்கும் அரசரானார். கி. பி. 1193-ல் ஸ்தானேசுவரத்தில் அவர் மகம்மது கோரியுடன் சண்டையிட்டுத் தோல்வி யடைந்து உயிர் துறந்தபொழுது, அவருடைய ராஜ்யமும் மகம்மதியர்கள் வசமாயிற்று.

தோமரர்களிடமிருந்து கவர்ந்துகொண்ட கன்னோசி ராஜ்யத்தைச் சந்திரதேவனுடைய சந்ததியார்கள் ஒரு நூறு வருஷங்களுக்குமேல் ஆண்டு வந்தார்கள். அந்த வம்சத்தின் கடைசி யரசர் ஜயச்சந்திரர் என்பவர். இவர் பிருதிவியின் மாமனார். இவருடைய மகளான ராணி ஸம்யுக்தையைப்

பிருதிவி மன்னவர் மணந்து கொண்டார். பிருதிவியைத் தோற்கடித்து அஜ்மீர் ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்ட மகம்மது கோரி மன்னர் இவரையும் சண்டையிற் றோற் கடித்துவிட்டு, இவருடைய கன்னோசி ராஜ்யத்தையும் தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டுவிட்டார்.

கூர்ஜர ராஜபுத்திரர்களுக்கு விரோதமாகக் கிளம்பி ஜஜாகபுக்தியைத் தனி ராஜ்யமாகச் செய்துகொண்ட யசோவர்மனுடைய சந்ததியாருக்கும், தோமார்களுக்கும், கஹார்வாரர்களுக்கும், மாளவத்தை யாண்டுவந்த பரமாரர் களுக்கும் அடிக்கடிச் சண்டைகள் நடந்து வந்ததனால், அவர்கள் முன்னுக்கு வர இடமில்லாமற் போயிற்று. கடைசியில் அவர்களும் கி. பி. 1193-ல் மகம்மது கோரியின் தளகர்த்தரான குத்புடீன் என்பவரால் தோற்கடிக்கப் பட்டுத் தமது ராஜ்யத்தை இழந்துவிட்டார்கள்.

ஒன்பதாவது நூற்றாண்டின் முதலில் பரமார ராஜ புத்திரர்கள் சுயாதீனம் பெற்று மாளவத்தை யாளத் தொடங்கினார்க ளென்று ஏற்கெனவே சொல்லப்பட்ட தல்லவா? கி. பி. 1010 முதல் கி. பி. 1060 வரையில் அந் நாட்டை யாண்டுவந்த போஜன் என்னு மரசர் மிகக கியாதி பெற்றவர். அவர் தமது சமஸ்தானத்தில் வித்வான் களை வைத்து ஆதரித்துவந்தார். அவர் தாமே வான சாஸ்திரம், சிற்பம், காவியம் ஆகிய இவற்றின் சம்பந்தமான பல நூல்களைச் செய்திருக்கின்றாரெனவும் சொல்லப்பட்டிருக் கின்றது. அவர் சரஸ்வதியின் கோயிலில் ஒரு ஸம்ஸ்கிருத கலாசாலையையும் அமைத்திருந்தார். 250 சதுர மைல் விஸ்தீரணமுள்ள போஜபுரத்தேரி அவரால் தான் கட்டப் பட்டது. அதைப் பார்க்கின் அக்காலத்திலிருந்த சிற்பம் வல்லவர்களின் திறமை நன்றாக விளங்கும். மகம்மதியர்கள் அவ்விரண்டையும் இடித்துப் பாழாக்கிவிட்டார்கள்.

போஜருடைய ராஜ்யத்தைப் பதின்மூன்றாவது நூற் றாண்டு முதல் தோமார்களும், சோகனர்களும் முறையே ஆண்டு வந்தார்கள். பதினான்காம் நூற்றாண்டின் முதலில் மாளவம் மகம்மதியர் வசமாயிற்று.

எட்டாவது நூற்றாண்டில் பிற்காலத்திய குப்தர்களுடைய ஆட்சியி லடங்கியிருந்த பீஹார், வங்காள நாடுகள் பிரிவுபட்டு முந்தியது பாலவம்சத்தாராலும், பிந்தியது சேன வம்சத்தாராலும் ஆளப்பட்டு வந்தன. ஆனால், கி. பி. 1199-ல் அவையிரண்டும் மகம்மது கோரியின் அரசாட்சிக்குட்பட்டுவிட்டன. குஜராத் என்று வழங்கும் கூர்ஜரநாடு ஹர்ஷருடைய காலத்திற்குப் பின்பு ஒரு தனி ராஜ்யமாகி வல்லபி சாளுக்கிய ராஜபுத்திரர்களால் ஆளப்பட்டுப் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் மகம்மதியருடைய ஆட்சிக்கு உட்பட்டுவிட்டது.

ஸிந்து நாடும் சுதேச பௌத்த, பிராமண அரசர்களால் முறையே ஆளப்பட்டு வந்து கி. பி. 712-ல் அராபியர்களுடைய வசமாயிற்று. அது முதல் அந்நாடு மகம்மதியர்களது அதிகாரத்திற்கே உட்பட்டிருந்து கடைசியில் பதினோராவது நூற்றாண்டின் முதலில் கஜினி மஹ்மூதுவினால் ஜயிக்கப்பட்டு அவருடைய ராஜ்யத்திற் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

சற்றேறக்குறைய அதே காலத்தில் கஜினி மஹ்மூது பஞ்சாப் நாட்டை யாண்டுவந்த ஜயபாலரையும், அநந்தபாலரையும், த்ரிலோசன பாலரையும் யுத்த முனையில் வென்று அந்த ராஜ்யத்தையும் தம்முடைய ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டுவிட்டார்.

பீராரும் மத்திய மாகாணங்களு மடங்கிய சேடி ராஜ்யத்தைக் கல்ஜி வம்சத்தைச் சேர்ந்த மகம்மதியர்கள் பதினான்காவது நூற்றாண்டின் முதலிலும், காஷ்மீரத்தை அங்கிருந்த வேறொரு மகம்மதிய வம்சத்தரசர்கள் சற்றேறக் குறைய அதே காலத்திலும் தமது வசமாக்கிக் கொண்டார்கள். பின்னர் கி. பி. 1587-ல் முகலாய மன்னரான அக்பர் சக்ரவர்த்தி அவற்றைக் கைப்பற்றிக்கொண்டுவிட்டார். இவ்வாறாக, வட இந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும் சிற்சில காலங்கள் மின் மினிப் பூச்சியைப் போன்று விளங்கின பல சிறிய ராஜ்யங்களும் மகம்மதியர்களால் ஜயிக்கப்பட்டு அவர்களுக்குச் சொந்த

மாய்விட்டன. நேபாளம், காமரூபம் என்னும் இரண்டு நாடுகள் தான் மகம்மதியருடைய அதிகாரத்திற் குட்படாம லிருந்தன.

---

## 16. ஹர்ஷருக்குப் பின் வட இந்தியாவின் நிலைமை

பௌத்த மதாபிவிருத்தியின் காரணங்களைக் கண்டறிந்த பிராமண மதத்தினர் பௌத்தமதக் கொள்கைகளையும், ஆசார அநுஷ்டானங்களையும் தங்களுடைய மதத்திற் சேர்த்துக்கொண்டுவிட்டதனால் பிராமண மதத்தினின்றும் அதற்குப் போட்டியாக வெளிக் கிளம்பின பௌத்த மதம் கொஞ்சங் கொஞ்சமாக க்ஷீணித்து வந்தது என்று ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளதல்லவா? அதன்றியும், ஹர்ஷர் காலத்திற்குப் பின்பு வட இந்தியாவில் பிரசித்தி பெற்றிருந்த பல ராஜபுத்திர மன்னவர்களும் இப்பொழுது 'ஹிந்து மதம்' என்று வழங்கப்பெற்ற நூதன மதத்தை யாதரித்து வந்தார்கள். என்றாலும், அவர்கள் பௌத்த சமண மதங்களுக்கு எவ்விதமான தீங்கையும் இழைத்ததில்லை. பரமார வம்சத்து ராஜபுத்திர வரசர்கள் சமண வித்வான்களை யாதரித்தும் வந்திருக்கிறார்கள்.

பௌத்த மதத்தில் சந்யாசிகளுக்கும், மற்றவர்களுக்கும் நாளடைவில் வித்தியாசங்கள் பெருகிப் போனதனாலும், ஹிந்து மதத்தைச் சீர்திருத்துவதன் பொருட்டு முன்வந்த குமரிலபட்டரும், ஸ்ரீமத் சங்கரரும் மடங்களை ஏற்படுத்தியும், மதப் பிரசங்கங்களைச் செய்தும் ஹிந்து மதத்தில் ஜனங்களைச் சேர்த்து வந்ததனாலும், பௌத்த மதம் க்ஷீணிக்கலாயிற்று. மகம்மதியர் படையெழுச்சியும் பௌத்தருடைய க்ஷீணத்திற் கொரு காரணமாகும்.

பௌத்த மதத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டு ஹிந்து மதம் என்னும் பெயர் பூண்டு பரவி வந்த மதம் பழைய பிராமண மதத்தினின்றும் உண்டாயிற்றென்றாலும்

அவ்விரண்டிற்கும் ஒற்றுமை குறைந்து பேதங்களே அதிகரித்துவிட்டன. சக்தி பூஜையும் இப்பொழுதுதான் ஏற்பட்டது. ஹிந்து மதத்திற் பல பிரிவுகள் ஏற்பட்டு ஜனங்கள் உண்மையை நீத்துப் பொய் வேஷங்களைப் பூண்டொழுகித் தமக்குள் சண்டைகள் செய்து வந்ததனுற்றான் மதச் சீர்திருத்தத்தின் பொருட்டு மதாசாரியர்கள் ஏற்பட்டார்கள்.

ராஜபுத்திர வரசர்களின் ஆதரவின் கீழ் வித்வான்கள் முன்னேற்றத்தை யடைந்து பல நூல்களை இயற்றி வந்ததுபோல், வியவசாயிகளும், தொழிலாளர்களும், வியாபாரிகளும் தத்தந் தொழில்களைச் செம்மையாக நடத்தி வந்தார்கள். மாலதி-மாதவம், உத்தரராம சரித்திரம், சிசுபால வதம், நைஷதம், கீத கோவிந்தம், ராஜதரங்கிணி முதலான நூல்கள் இக்காலத்திற்றான் உண்டாயின. இவற்றை யல்லாமல் அநேக சமய நூல்களும், வேதாந்த சாஸ்திரங்களும் ஏற்பட்டு நாட்டின் கல்வியையும், தேர்ச்சியையும் வளர்த்தன.

---

## 17. தக்ஷிணத்தின் சரித்திரம்

### i. சாளுக்கியர்கள்

வடக்கில் விந்தியமலையும், நருமதையாறும், தெற்கில் துங்கபத்திரை, கிருஷ்ணா நதிகளும், கிழக்கிலும், மேற்கிலும் கடலும் சூழ்ந்த பீடபூமிக்குத்தான் '**தக்ஷிணம்**' என்று பெயர்.

அந்தப் பீடபூமியின் கீழ்ப்பாகத்தில் கோதாவரி, கிருஷ்ணாநதிகளுக்கு இடையிலுள்ள நாட்டை '**ஆந்திரர்கள்**' என்னும் தென்னிந்தியத் திராவிட ஜாதியார்கள் ஆண்டு வந்தார்கள் என்று முன்னமேயே சொல்லப்பட்டிருக்கின்றதல்லவா ? ஆந்திர வரசர்களின் ராஜதானிக்கு **ஸ்ரீகாகுளம்** என்று பெயர். அசோகருடைய காலத்தில் ஆந்திர ராஜ்யம் மகத ராஜ்யத்தின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தது. அசோகருக்குப் பின்பு, ஆந்திரர்கள் சுயாதீனம்

பெற்று ஆட்சிசெய்து வந்தார்கள். சுமார் நானூற்றைம்பது வருஷகாலம் அவர்கள் தக்ஷிணத்தில் சிறப்புடன் விளங்கி வந்தார்கள். உத்தேசம் கி.பி. 225-ல் அவர்களுடைய ராஜ்யம் க்ஷீணித்துப் போயிற்று. அதன் விவரங்கள் மட்டில் நமக்குக் கிடைத்தில. ஆந்திர வம்சம் அழிந்து போன காலந் தொடங்கிச் சுமார் முன்னூறு வருஷங்கள் வரையில் தக்ஷிணத்தில் ஆட்சிசெய்து வந்தவர்களைப்பற்றியும் நமக்கு ஒன்றும் தெரியவில்லை.

ஆருவது நூற்றாண்டின் மத்தியில் கூர்ஜர ராஜ வம்சத்தைச் சேர்ந்த 'சாளுக்கியர்' என்னும் ஜாதியார் முன்னேற்றத்தை யடைந்து தக்ஷிணத்தை ஆளத் தொடங்கினார்கள். அவர்கள் ராஜபுதத்தினிலிருந்து வந்தார்களென்று மட்டில் தெரிய வருகின்றது. எப்பொழுது, எவ்விதமாக வந்தார்கள் என்பதைத் தெரிவிக்க யாதொரு சாதனமும் கிடைக்கவில்லை.

சுமார் கி.பி. 550-ல், முதற் புலிகேசன் என்னும் தலைவன் வெங்கி நாட்டை ஜயித்து வாதாபி என்னும் இடத்தில் சாளுக்கிய அதிகாரத்தை ஸ்தாபித்தான். சாளுக்கிய வரசர்களில் இரண்டாவது புலிகேசன என்பவன் தான் கீர்த்தி பெற்றவன். அவன் கி.பி. 608-ல் பட்டத்துக்கு வந்தான். அவன் சாளுக்கிய ராஜ்யத்தை நருமதை நதி முதல் பாலாறு வரையிலும், அராபிக்கடல் முதல் வங்காள விரிகுடா வரையிலும் பரப்பினான்.

கி.பி. 609-ல் இரண்டாவது புலிகேசன் தன்னுடைய தம்பியான விஷ்ணுவர்த்தனனை வெங்கி நாட்டிற்கு ராஜப் பிரதிநிதியாக நியமித்தான். சில வருஷங்களுக்கெல்லாம் விஷ்ணுவர்த்தனன் சுயாதீனம் பெற்றுக்கொண்டுவிட்டான். அப்பொழுது அவனுடைய சந்ததியாருக்குக் கீழ் நாட்டுச் சாளுக்கியர்கள் என்று பெயர் வந்தது. புலிகேசனுடைய சந்ததியார் மேனாட்டுச் சாளுக்கியர்கள் என்று வழங்கப் பெற்றார்கள். கீழ் நாட்டுச் சாளுக்கியர்கள் கி.பி. 1070 வரையில் விஷ்ணுவர்த்தனன் ஏற்படுத்திய நாட்டை

யாண்டு வந்தார்கள். பிறகு அவர்களுடைய ராஜ்யம் சோழ ராஜ்யத்திற் சேர்ந்துபோயிற்று.

நீங்கள் புலிகேசன் தென்னிந்தியாவின்மீது படையெடுத்து வந்த ஹர்ஷனைத் தோற்கடித்துத் துரத்திவிட்டானென்று முன்னமேயே படித்திருக்கிறீர்களல்லவா? அஃதன்றியும், அவன் தமிழ் நாட்டு மூவேந்தர்களுடனும், பல்லவர்களுடனும் பன்முறை சண்டை செய்திருக்கிறான். அஜாந்த குகையில் எழுதப்பட்ட ஒரு சித்திரத்தினின்றும் புலிகேசனுக்கும், பாரஸிக மன்னனுக்கும் நட்பு ஏற்பட்டிருந்ததென்றும், ஒரு நாட்டிலிருந்து மற்றொன்றிற்கு ராயபாரிகள் அனுப்பப்பட்டு வந்தார்களென்றும் தெரிய வருகின்றது.

கடைசியில் காஞ்சீபுரத்தை யாண்டுவந்த **நரஸிம்ம வர்மன்** என்னும் பல்லவ வரசன் அவனைத் தோற்கடித்து, வாதாபி நகரைக் கொள்ளை கொண்டு அவனையுங் கொன்று விட்டனன். அவ னிறந்தது முதல் சுமார் பதின்மூன்று வருஷங்கள் வரையில் சாளுக்கியர்களுடைய அதிகாரங் குறைந்து பல்லவர்களுடைய அதிகாரம் மேம்பட்டிருந்தது. அப்பொழுதும், அதற்குப் பின்பும் சாளுக்கியர்களுக்கும், பல்லவர்களுக்கும் அநேக சண்டைகள் நடந்து வந்தன. கடைசியில் கி.பி. 753-ல் மேனுட்டுச் சாளுக்கிய வம்சம் அழிந்துபோயிற்று. **ராஷ்டிரகூட** வம்சத்தார் அந்த அதிகாரத்தைக் கைப்பற்றித் தக்ஷிணத்தில் சுமார் 225 வருஷகாலம் அட்சி புரிந்து வந்தார்கள். அவர்களுடைய காலத்தில் அநேக கோயில்கள் கட்டப்பட்டன. அவற்றுள் எல்லோராவிற் கட்டப்பட்ட **'கைலாஸர் கோவில்'** மிகவும் அற்புதமானது. அதற்குப் பின்பு சாளுக்கிய வம்சத்தைச் சேர்ந்த **'தயிலப்பா'** என்பவன் அந்த வம்சத்தை மறுபடியும் தனது முன்னோர்கள் காலத்திலிருந்த நிலைமைக்குக் கொண்டு வந்தான். இவனுடைய சந்ததியார்களுக்குக் **கல்யாணி சாளுக்கியர்** என்று பெயர். இவர்களுடைய அதிகாரம் சற்றேறக்குறைய 225 வருஷங்கள் வரையில் மேம்பாட்டை அடைந்திருந்தது. கி.பி. 1190-ல், இவர்களுடைய அதிகார

மும் சீர்குலைந்து போயிற்று. அதற்குச் சில வருஷங்களுக்கு முன் விக்ரமாங்கன் என்னும் சாளுக்கிய வரசனுடைய சேனாதிபதியான பிஜ்ஜலன் என்பவன் தனது எஜமான னுடைய நாட்டைத் தான் அபகரித்துக் கொண்டு சுமார் 20 வருஷகாலம் ஆட்சிசெய்து வருகையில் அவனுடைய பிராமண மந்திரியான பஸவன் என்பவனால் உண்டாக்கப் பட்ட லிங்காயத்துக்கள் என்னும் வீர சைவர்கள் ஏற்பட் டார்கள். அவர்கள் வேதங்களையும், பல ஜன்மங்கள் உண் டென்பதையும் ஒத்துக் கொள்வதில்லை. அவர்கள் பிரா மணர்களிடம் மிகுந்த விரோதம் பாராட்டிவந்தார்கள்.

## ii. பல்லவர்கள்

இவர்கள் அந்நியர்கள் என்றும், முதலில் ஆப்கானிஸ் தானம் முதலிய வடமேற்கு நாடுகளில் வந்து குடியேறினர் கள் என்றும் அங்கிருந்து தெற்கு முகமாக வந்து தென் இந்தியாவில் பரவினதை யல்லாமல், இவர்கள் சமண, பௌத்த, ஆரிய முறைகளைக் கைக்கொண்டு ஒழுகிவரத் தலைப்பட்டார்கள் என்றும் தெரிய வருகின்றன. இவர்க ளில் அதிகாரம் பெற்று ராஜரீகம் நடத்தினவர்கள் ஆரிய மதாநுஷ்டானத்தையே கொண்டு ஆரிய முறைப்படி ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள். அதனால் இவர்கள் பிராமண ரையும், அவர்களுடைய கல்வியையும் போற்றி வந்தார்கள். இவர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் எண்ணிறந் தன. இப்பொழுது தென்னிந்தியாவிலுள்ள கள்ளர், மறவர், வன்னியர் முதலிய ஜாதியார்கள் தாங்கள் பல்லவ வம்சத் தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

ஆந்திர வம்சம் அழியவும், பல்லவர்கள் முன்னேற் றத்தை யடைந்தார்களென்று தெரிய வருகின்றது. இரண் டாவது நூற்றாண்டில் அவர்களுடைய ராஜ்யம் கிருஷ்ணாநதி முதல் காவேரி யாறு வரையில் பரவி யிருந்தது. பல்லவ அரசர்களில் சிவஸ்கந்த வர்மன் பெரியவன். அவன் ஒரு அசுவமேத யாகஞ் செய்தானென்றும் சொல்லப்பட் டுள்ளது. ஆறுவது நூற்றாண்டின் முதலில் பல்லவ ராஜ்

யத்தை யாண்டுவந்த மஹேந்திர வர்மன் என்பவனைத் தான் சாளுக்கிய புலிகேசன் தோற்கடித்து வெங்கி நாட்டைப் பிடுங்கிக் கொண்டு வாதாபியில் சாளுக்கிய அதிகாரத்தை ஸ்தாபித்தான். மஹேந்திர வர்மன் வடஆற்காடு, திரிசிராப்பள்ளி ஜில்லாக்களில் பெரிய பெரிய மலைக் கோயில்களைக் கட்டிவைத்தான். அரக்கோணத்திற் கப்பாலுள்ள மகேந்திரவாடி என்னும் ஊர் அவனால்தான் ஏற்படுத்தப் பட்டது போலும். இரண்டாவது புலிகேசனைத் தோற்கடித்துக் கொன்ற நரஸிம்ம வர்மர் இவனுக்குப் பின் பட்டத்துக்கு வந்தார். இவருடைய காலத்திற்றான் யுவான் சுவாங் என்னும் சீன யாத்திரிகர் காஞ்சிக்கு வந்திருந்தார். நரஸிம்ம வர்மர் சென்னைக்குத் தெற்கில் சுமார் முப்பது மைல் தூரத்திலுள்ள மகாபலிபுரம் என்றும் திருக்கடன் மல்லை என்றும் வழங்கும் ஏழு கோவிற் பட்டணத்திலுள்ள பல ரதங்களையும், கோயில்களையும், கல் வெட்டுக்களையும் அமைத்து வைத்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. காஞ்சியிலுள்ள ஏகாம்பரேசுவரர் கோயிலும் இவரால் தான் கட்டப்பட்டதென்று தெரிகிறது.

முதலில் சாளுக்கியர்களுடனும், பிறகு ராஷ்டிரகூடர்களுடனும், அதற்குப் பின்பு கங்க வம்சத்தினருடனும் பல சண்டைகள் நடக்கவும், நாளடைவில் பல்லவ ராஜ்யம் சீர் குலைந்து விட்டது. பிற்காலத்தில் பல்லவர்கள் கப்பங் கட்டுஞ் சிற்றரசர்களாகவும், தமிழ் நாட்டரசருடைய சமஸ்தானங்களில் உத்தியோகஸ்தர்களாகவும் இருந்து வந்தார்கள். ஆரியமுறைகளும், ஸம்ஸ்கிருத பாஷையும் இவர்களால் தான் தமிழ் நாட்டிற் பரவிற்றென்பது பல மேதாவிகளின் தீர்மானமான கொள்கை.

## 18. தென்னிந்தியாவின் சரித்திரம்

துங்கபத்திரை நதிக்குத் தெற்கில் கன்னியாகுமரி வரையிலுமுள்ள நாட்டைத் தென்னிந்தியா வென்று சொல்லலாம். அதுதான் தமிழகம்; திராவிடர்கள் வெகு

நீண்ட காலமாக இருந்த விடம். தமிழகம் மிகப் பழைமை யானது. நாகரிக வளர்ச்சிக்கும், கல்விக்கும், வியாபாரம், கைத் தொழில் முதலியவற்றின் அபிவிருத்திக்கும் அது பல்லாயிரம் வருடங்களாகப் பெயர் பெற்றிருந்தது. அந் நாட்டினராகிய திராவிடர்கள் இந்தியா முழுவதும் பரவி யிருந்தார்கள் என்று முன்னமே சொல்லப்பட் டிருக்கின்ற தல்லவா? நடித்தல், சித்திரித்தல், சிற்பவேலை செய்தல் ஆகிய இவற்றில் அவர்கள் மிகுந்த நிபுணர்கள். அவர்க ளுக்குக் கப்பற்படை இருந்து வந்ததனால், அவர்கள் யவ னர், ரோமர் முதலான அந்நிய நாட்டினரோடு வியாபாரம் செய்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய பாஷைகளும் வேறு. அவர்களுடைய பழக்க வொழுக்கங்களும் வேறு.

வட இந்தியாவில் அக்காலத்தில் இருந்தவை போன்ற ஜாதிகளும், ஜாதி வித்தியாசங்களும் தென் னிந்தியாவில் இல்லையென்றும், தொழிற் பிரிவினைக் கேற்றவாறு அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்று நான்கு வகுப்புக்கள் மட்டில் இருந்தனவென்றும், இவைகள் வரம்பு கடத்தற் கரியவைக ளல்லவென்றும், இப்பொழுதுள்ள வேறுபாடு கள் ஆரிய வொழுக்கக் கலப்பினால் ஏற்பட்டவைகள் என் றும் சில மேதாவிகள் எண்ணுகிறார்கள். அந்நியர்களின் படையெழுச்சிக்களினால் வட இந்தியா பல்வேறு வேற் றுமைகளை யடைந்துவிட்டதுபோ லன்றித் தென்னிந் தியா தனது மிகப் பழைய வழிகளினின்றும் விசேஷமாக மாறுபடாததி னின்றும், தமிழர்களுடைய கல்வியின் உறுதி நன்றாக விளங்குகின்றது. நாம் தமிழ் நாட்டில் அடி மைகளில்லை என்பதைக் கொண்டும், ராஜ்ய பரிபாலனத் தை அரசர்கள் குடிகளின் பிரதிநிதிகளைக் கொண்டுதான் நிறைவேற்றி வந்தார்கள் என்பதைக் கொண்டும், அவ்வரசர் கள் சமுத்திரத்தைத் தாண்டிச் சென்று வெளி நாடுகளை ஜயித்தார்கள் என்பதைக் கொண்டும், கிராம பரிபாலன முறைகள் வியக்கத்தக்க பெருமை வாய்ந்து குடிகளுக்கான நன்மைகளைச் செய்துவந்தன வென்பதைக் கொண்டும் தமிழர்களுடைய பெருமையை அறியலாம். தமிழர்கள்

மிளகு முதலிய வாசனைத் திரவியங்களையும், முத்து, மாணிக்கம், கோமேதகம், மரகதம் முதலான விலையுயர்ந்த சாமான்களையும் அந்நிய நாடுகளுக்கனுப்பி அவற்றினின்றும் ஏராளமான திரவியத்தைச் சம்பாதித்தார்கள். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான நூல்களைக்கொண்டு தமிழருடைய கல்வியின் தேர்ச்சியை நன்றாக வறியலாம். அந்நூல்களினின்றும் தென்னிந்திய சரித்திர சம்பந்தமான பல விவரங்களும் நமக்குக் காணக் கிடைக்கின்றன.

இத்தகைய பெருமை வாய்ந்த தமிழ் நாட்டில் மூன்று பெரிய ராஜ்யங்கள் இருந்து வந்தன. அவை பாண்டிய ராஜ்யம், சேர ராஜ்யம், சோழ ராஜ்யம் என்பன. பாண்டிய நாட்டில் மதுரை, திருநெல்வேலி, திருவாங்கூரின் தென் பாகம் ஆகிய இந்த ஜில்லாக்கள் அடங்கியிருந்தன. அந் நாட்டின் தலை நகரம் மதுரை. சேரராஜ்யம் என்றும் கேரள ராஜ்யம் என்றும் வழங்கி வந்த நாடு மலையாளம், கொச்சி, திருவாங்கூரின் மேல் பாகம் ஆகிய இந்த ஜில்லாக்கள் அடங்கியது. அந்நாட்டின் தலை நகரம் வஞ்சி. சோழ மண்டலம் என்பது வட பெண்ணை முதல் வெள்ளாறு வரையிற் பரவியிருந்தது. அந்நாட்டின் தலை நகரம் உறையூர்.

பாண்டிய நாட்டை அரசாண்டு வந்த மன்னர்களில் நெடுஞ்செழியன் என்பவர் ஒருவர். அவருடைய காலம் இரண்டாவது நூற்றாண்டு. ஏழாவது நூற்றாண்டில் மதுரையில் ஆட்சி பெற்றிருந்த சுந்தர பாண்டியர் கியாதி பெற்றவர். அவருக்குக் கூன் பாண்டியர் என்றும் நெடுமாறர் என்றும் பெயர்கள் உண்டு. சைவ சமயத்தைச் சேர்ந்த திருஞான சம்பந்தர் என்னும் பக்தர் அவரைச் சமண மதத்தை விட்டுச் சைவ மதத்தைத் தழுவப் பண்ணினார். சுந்தரருக்குப் பின்பு அநேக அரசர்கள் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தார்கள். கடைசியில் சோணாட்டு மன்னர்கள் அந்த நாட்டை வென்று தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள். பாண்டியவரசர்கள் தங்களுடைய சமஸ்தானத்தில் வித்வான்களை வைத்து ஆதரித்துத் தமிழ்க் கல்வியைப்

பெருக்கினார்கள். மதுரையிலிருந்த முதல், இடை, கடைச் சங்கங்களைப் பற்றிக் கேள்வி யுற்றிராத தமிழர்கள் இருக்க மாட்டார்கள்.

சேர ராஜ்யத் தரசர்களில் செங்குட்டுவன் என்றொருவர் இருந்தார். அவர் காலத்தில் அந்த நாடு உயர் நிலை பெற்றிருந்தது; வியாபாரத்திலும் தழைத்திருந்தது. அந் நாட்டின் மேற்கில் முசிரி என்றும் வைக்கரை என்றும் இரண்டு துறைமுகப் பட்டணங்கள் இருந்தன. அந்நாட்டைப் பற்றின விவரங்கள் ஒன்றும் கிடைக்க வில்லை. அதுவும் சோழ மண்டலத்திற் சேர்ந்து தனது பெருமையை இழந்தது.

சோழ ராஜ்யம் மிகப் பழைமையானது. அசோகர் அதைத் தமததிகாரத்திற் குட்பட்ட ஒரு தனி ராஜ்யமாக அங்கீகரித்தார். அது வியாபாரத்திலும், செல்வத்திலும் தழைத்திருந்தது. ஒன்பதாவது நூற்றாண்டின் முதலில் சோழ ராஜ்யத்திற்குப் பராந்தகர் என்பவர் அரசரானார். முதலாவது நூற்றாண்டில் சோழ ராஜ்யத்தை யாண்ட கரிகாலர் காலம் முதல் சுமார் எண்ணூறு வருஷத்திய சரித்திரம் கிடைத்திலது. சில காலம் சோழவரசர்களுடைய அதிகாரம் குறைந்து, சேரவரசர்கள் மேம்பட்டிருந்தனரெனத் தெரியவருகின்றது. நான்காவது நூற்றாண்டின் மத்தியில் ஸமுத்ர—குப்தர் தென்னிந்தாவின் மீது படை யெடுத்து வந்த பொழுது, சோழ நாட்டின் தலை நகராக விருந்த காஞ்சிபுரம் பல்லவர்களுடைய ஆதீனத்திலிருந்தது. எட்டாவது நூற்றாண்டின் மத்தியில் காஞ்சிக்கு வந்திருந்த யுவான்சுவாங் சோழ ராஜ்யம் அப்பொழுது மிகச் சிறியதாக இருந்ததென்றும் அதன் சுற்றளவு சுமார் 500 மைல்தான் இருந்ததென்றும், அது பல்லவ வரசருடைய அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த தென்றும் எழுதியிருக்கிறார். அப்பொழுது தென்னாட்டில் சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்கும் தான் ஆதிக்கியத்தைப்பற்றிச் சண்டைகள் நடந்தனவேயல்லாமல், சோழ ராஜ்யத்தைப் பற்றிக் கவனிப்பாரெவரு மில்லாதிருந்தனர்.

கி. பி. 907-ல் பட்டத்துக்கு வந்த பராந்தகர் காலந் தொடங்கித்தான் சோழநாட்டைப்பற்றின விவரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவர் பல்லவர்களை முற்றிலும் ஜயித்துப் பாண்டியனையும் வென்றார் என்று தெரியவருகின்றது. அவருடைய சிலா சாஸனங்களிலிருந்து சோழ நாட்டில் ஸ்தலசுய ஆட்சியின் பொருட்டுப் பஞ்சாயத்துச் சபைகள் மிகவும் விமரிசையாக அமைக்கப்பட்டிருந்தனவென்றும் அச்சபைகள் தங்கள் கடமைகளைக் குடிகளின் பொது நலத்தை நாடிச் செவ்வனே நடத்தி வந்தனவென்றும் தெரிகின்றன.

பராந்தகருக்குப் பின்பு பட்டத்துக்கு வந்த சோழ மன்னர்கள் பலவீனர்கள். கி. பி. 985-ல் பட்டத்துக்குவந்த ராஜராஜ தேவர் சேர ராஜனது கப்பற்படைகளை நாசஞ் செய்து, வெங்கி நாட்டை யாண்டுவந்த சாளுக்கியர்களைத் தோற்கடித்துப் பாண்டியனிடமிருந்து குடகு நாட்டை ஜயித்துத் தம்முடைய அதிகாரத்தை நிலை நிறுத்தினார். அவர் ஸிம்ஹள நாட்டையும் வென்று தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டார் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அவர் லக்ஷத்தீவுகளையும் ஜயித்தனரெனத் தெரிகின்றது. தஞ்சாவூரிலுள்ள பிருகதீசுவரர் கோவில் அவரால்தான் கட்டப்பட்டது. அவர் அந்தக் கோயிலின் சுவர்களிற் றமது வெற்றியைப் பற்றின விவரங்களைச் செதுக்கி வைத்திருக்கிறார். அவற்றை நாம் இப்பொழுதும் காணலாம்.

அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த கங்கைகொண்ட சோழரும் கியாதி பெற்றவர். அவர் பெகு என்னும் நாட்டை ஜயித்தார் என்று அந்நாட்டிலுள்ள ஸ்தூபிகளிலிருந்து தெரியவருகிறது. அவர் அண்டமான் தீவுகளைத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டார்.

அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்தவர்களில் முதலாவது குலோத்துங்க சோழர் ஒருவர். அவருடைய தாய் கங்கைகொண்ட சோழரின் மகள். அவர் தம்முடைய பாட்டன் அரண்மனையிலேயே வளர்ந்து வந்து கடைசியில் அவருடைய நாட்டையும் ஆண்டார். அவருடைய காலத்தில்

அவர் தம் ராஜ்யத்திலுள்ள நிலங்களை அளந்து எல்லை கட்டும்படி ஏற்பாடு செய்தார். க்ஷாமகாலத்தில் அவர் வரியைக் குறைத்தும் தள்ளியும் வியவசாயிகளை ரக்ஷித்தார். அவர் வியவசாயத்திற்கு வேண்டிய வாய்க்கால்களையும், அணைகளையும், பாலங்களையும் கட்டுவதற்கும், மராமத்து செய்வதற்கும் ஏராளமான பணத்தைச் செலவிட்டார். அவர் சுங்கவரியை அடியோடு தள்ளிவிட்டார். அவர் பல அரசர்களை வென்று தம்முடைய ஆட்சியைப் பரப்பினார். அவர் கலிங்கநாட்டைவென்ற செய்தியை வர்ணித்து அவரது சமுக வித்துவான்களில் ஒருவராகிய ஜெயங்கொண்டார் என்பவர் கலிங்கத்துப் பரணி என்னும் நூலை இயற்றினார். அவருக்குப் பின் வந்த சோழ அரசர்கள் பராக்கிரமசாலிகளல்லர். அவர்களது காலத்தில் சோழ ராஜ்யம் சீர்குலையத் தலைப்பட்டது. ஆயினும், அவர்கள் காலத்தில் கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய சிறந்த கவிகள் தோன்றி இராமாயணம், மூவருலா, நளவெண்பா முதலிய நூற்களை இயற்றினார்கள். அன்றியும் அக்காலத்தில் பவணந்திமுனிவர் என்பவர் தோன்றி இப்பொழுது எல்லாரும் புகழும் நன்னூல் என்னும் இலக்கண நூலை இயற்றினர். கடைசியில் தமிழ் நாடுகள் யாவும் தமது சுயாதீனத்தை முற்றிலும் இழந்து மகம்மதியர்களுடைய அதிகாரத்தின் கீழ் வந்துவிட்டன.

சோழவரசர்கள் கிழக்கில் மலேயாவுடனும், மேற்கில் எகிப்து முதலான தேசங்களுடனும் வியாபாரஞ் செய்து வந்திருக்கிறார்கள். அப்பொழுது அவர்களுடைய நாட்டிற்குக் காவிரிப்பூம் பட்டினம் முக்கிய துறைமுகமாக விருந்தது.

சோழவரசர்களுக்கு நிலப்படை நீர்ப்படை ஆக இரண்டும் இருந்தன. உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளமோ அல்லது மான்யமோ கொடுக்கப்பட்டிருந்தது.

கிராமங்கள் ஒரு பொது சபையினால் பரிபாலிக்கப்பட்டு வந்தன. கிராமத் தலைவர்கள் வருஷப் பிரதி

வருஷம் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அந்தப் பொதுச் சபையையன்றிப் பல சிறு பஞ்சாயத்துச் சபைகளும் இருந்தன. அவை கிராம சம்பந்தமான வேலைகளைத் தமக்குள் பங்கிட்டுக்கொண்டு செய்து வந்தன. கிராம உத்தியோகஸ்தர்கள் அந்தச் சபைகளுக்கடங்கித் தமது வேலைகளைச் செய்து வந்தார்கள். சபையின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குச் சட்டங்கள் இருந்தன. அந்தோ! இவை யாவும் எவ்வாறு முற்றும் அழிந்து போயின!

மேலே சொல்லப்பட்ட பல விவரங்களைக் கொண்டு தமிழ் நாட்டின் சிறப்பை மெய்ப்பிப்பதன்றி மற்றொரு சிறந்த காரணத்தினாலும் அதற்குப் பெருமை அமைந்திருந்தது என்று சொல்லலாம். ஹிந்து மதம் நாளடைவில் பல் வேறு காரணங்களினாலும் க்ஷீணிக்க வாரம்பித்தபொழுது அதைச் சீர் திருத்துவதற்குச் சில மதாசாரியர்கள் தோன்றி ஹிந்து மதத்தை நிலை நாட்டினதும் முதலில் தமிழ் நாட்டில்தான்.

சடகோபர் முதலிய ஆழ்வார்களும், சம்பந்தர் முதலிய நாயன்மார்களும் தோன்றிப் பக்திரச மிக்கனவும், சிறந்த பொருள்களை உடையனவுமாகிய தமிழ்ப் பாக்களைப் பாடி வைஷ்ணவ மதத்திலும், சைவ மதத்திலும் ஜனங்களுக்குப் பற்றுண்டாகும்படி செய்தார்கள்.

அவர்களில் முதல்வரான ஸ்ரீமத் சங்கராசாரியர் எட்டாவது நூற்றாண்டில் மலையாளத்தில் காலடி என்னும் கிராமத்திற் பிறந்து சிறு வயதிலேயே சகல கலைகளையும் கற்று ஊர் ஊராகச் சென்று பௌத்த மதத்தைக் கண்டித்து ஹிந்து மதத்தில் ஆத்துமக் கியானமே சிறந்தது என்று யாவருமறிய போதித்தார். அவருடைய மதம் அத்வைதம். வேதவ்யாச முனிவரது பிரம்ம சூத்திரத்திற்கு அவர் எழுதியுள்ள சங்கரபாஷ்யம் என்னும் உரைநூல் அத்வைதத்தை யொட்டினதேயாகும்.

அவருக்குப் பின்பு பதினோராவது நூற்றாண்டின் இறுதியில் செங்கற்பட்டு ஜில்லாவில் ஸ்ரீ பெரும்பூதூர் என்னும் கிராமத்தில் ஸ்ரீமத் ராமாநுஜர் எனபவர் அவதரித்து

விசிஷ்டாத்வைத மதத்தை யாவரு மறியப் பிரசங்கித்து ஊர் ஊராகச் சென்று தம்முடைய வைஷ்ணவ மதத்திற்கு ஆயிரக்கணக்கான சிஷ்யர்களைச் சம்பாதித்துக் கொண்டார். அவர் வேதவ்யாச முனிவாது பிரம்ம சூத்திரத்திற்குத் தாம் போதித்துவந்த விசிஷ்டாத்வைத மதத்தை யொட்டி **ராமாநுஜபாஷ்யம்** என்னும் உரை நூல் செய்திருக்கிறார்.

அவருக்குப் பின் 12-வது நூற்றாண்டில் தென் கன்னடம் ஜில்லாவில் உடுப்பி என்னும் கிராமத்திற் பிறந்த **ஸ்ரீமத் மத்வாசாரியர்** த்வைத மதத்தைப் போதித்து வந்த தல்லாமல். அதை யொட்டித் தாமும் வேதவ்யாச முனிவராது பிரம்ம சூத்திரத்திற்கு **மத்வபாஷ்யம்** என்னும் உரை நூலையும் செய்திருக்கிறார். இவர்களை யன்றி இன்னும் அநேக மதபோதகர்களும் அக்காலத்தில் இருந்திருக்கிறார்கள்.

---

## ஆப்கானியர் ராஜ்யம்

### 19. மகம்மதுநபி (ஆதி மகம்மது)

இப்பொழுது இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் ஆறிலொருபங்கு மகமதியர்கள் என்பது யாவரும் அறிந்த விஷயமேயாம். மகம்மதியர்கள் யார் என்பதையும் எங்கிருந்து, எப்பொழுது, என் நமது நாட்டிற்கு வந்தார்களென்பதையும் நாம் சற்றுக் கவனிப்போம். அவர்கள் முதலில் அந்நியர்களே யாயினும், இப்பொழுது இந்நாட்டினரே யாய்விட்டார்கள். அவர்களும் இந்தியர்கள்தான்.

இந்தியாவிற்கு மேற்கேயுள்ள அரேபியா என்னுந் தேசத்தில் ஒரு கொடிய முரட்டு ஜாதியார்கள் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு அராபியர் என்று பெயர். அந்நாடு பாலைவனங்கள் நிறைந்துள்ள மணற்பாங்கானது; ஆதலினால், அவர்கள் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு ஊர் ஊராகச் சென்று வசித்து வருவார்கள். அவர்கள் பல தெய்வங்களைப் பூஜித்து வணங்கி வந்தார்கள்.

கி. பி. 570-ல், அரேபியாவிலுள்ள மெக்கா என்னும் பட்டணத்தில் அப்துல்லா என்பவருக்கு அமீனு என்பவள் வயிற்றில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்த அற்புத மான குழந்தை தான் உலகமெங்கும் பிரசித்திபெற்ற 'மகம்மது' என்பவர். மகம்மது பிறப்பதற்கு முன்னமேயே அவருடைய தகப்பனும், பிறந்த சில வருஷங்களுக்குப் பின்னர் அவர் தாயும் காலஞ்சென்று விட்டதனுல், அவர் தமது மாமன் வீட்டில் வளர்ந்து வந்தார்.

மகம்மதுவுக்குச் சுமார் இருபத்தைந்து வயதான பொழுது, செல்வத்தில் மிகுந்திருந்த கடிஜா என்னும் ஒரு விதவையினிடம் அவர் வேலைக்கமர்ந்தார். அவள் மகம் மதுவினுடைய நற்குண நற்செய்கைகளைக் கண்டு வியந்து அவர் மீது மோகங்கொண்டு அவரைத்தான் மணந்து கொள்ள விரும்பினுள். மகம்மதுவும் அவள் எண்ணிய வண்ணமே அவளைக் கலியாணஞ் செய்துகொண்டார். அப்பொழுது கடிஜாவுக்குச் சற்று முன் பின்னுக வயது நாற்பது இருக்கும்.

மகம்மது தமது சிறு பருவம் முதற்கொண்டே பற்பல தெய்வங்களை வணங்கியும், முரட்டுக் குணங்களிற் பழகியும் வந்த அராபியரிடம் வெறுப்புக்கொண்டிருந்தார். அவர் பரம்பொருள் ஒருவரே யென்றும், எல்லோரும் அவரைத் தாம் நாடித் தொழவேண்டும் என்றும் கண்டறிந்தார். அவருக்கு வயது சுமார் நாற்பதான பொழுது, அவர் கடவுள் ஒருவரே யென்றும், அவர் முன்னிலையில் எல்லாரும் சமானர் என்றும், ஆண்மக்கள் பெண்மக்களிடத்திலும், குழந்தைகளிடத்திலும் அன்புடனும் தயையுடனும் நடந்து கொள்ளவேண்டும் என்றும், எவரும் மதுபானம் செய்யலாகாது என்றும், யாவரும் தினந்தோறும் ஐந்து முறை தெய்வ வணக்கஞ் செய்யவேண்டும் என்றும் போதித்து வரத் தொடங்கினுர்.

மகம்மது தங்களுடைய புராதன வழக்கங்களை யெல்லாம் மாற்றிவிட முயன்று வருகிறுர் என்று அவரிடம் கோபங்கொண்ட அராபியர்கள் அவரைக்கொல்லப் பிரயத்

தனஞ் செய்தபொழுது, அவர் கி. பி. 622-ல் மெக்காவி லிருந்து மெடீனாவுக்கு ஓடிப்போய்விட்டார். அன்று முதற் கொண்டுதான் மகம்மதியர்கள் தங்களுடைய வருஷத்தை வேறாகக் கணக்கிட்டு வருகிறார்கள். அந்த வருஷத்திற்கு ஹிஜரா என்று பெயர். மெடீனாவிலிருந்த ஜனங்கள்மெக்காவி லிருந்த முரட்டு மனிதர்களைப் போலல்லாமல் அவரை மிகவும் கொண்டாடியும், அவருடைய நற்போதனைகளைக் கேட்டும், அவற்றின் உண்மைகளைச் சிரமேற்கொண்டொழுகி யும் வந்ததல்லாமல், அவரை அந்த மெடீனா நகரத்துக்குத் தலைவராகவும் ஆக்கினார்கள்.

கி. பி. 630-ல், மகம்மது ஒரு பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டு மெக்காவின்மீது படையெடுத்துச் சென்று அந் நகரத்தைப் பிடித்துக்கொண்டார். நாள் செல்லச் செல்ல அவருடைய அதிகாரமும் கொஞ்சங் கொஞ்சமாக அதிகரித்துக்கொண்டே வந்தது. கி. பி. 632-ல் மகம்மது இறந்த பொழுது, அரேபியாவின் பெரும் பாகமும் அவ ருடைய ஆட்சியின் கீழ்ப்பட்டிருந்தது.

அவருடைய காலத்திற்குப் பின்பு மகம்மதியர்கள் பாரஸிகம், துருக்கிஸ்தானம், ஆப்கானிஸ்தானம் என்னும் நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று, அந் நாடுகளி லுள்ள ஜனங்களை மகம்மதியர்களாக்கினார்கள். மகம்மது இறந்த நூறு வருஷங்களுக்குள் மகம்மதிய மதம் ஸ்பெயின் தேசம் முதல் ஸிந்துநதி வரையில் பரவிப் போயிற்று.

கி. பி. 712-ல், மகம்மது காஸிம் என்பவர் இந்தி யாவின் மீது படையெடுத்து வந்து ஸிந்துநதி தீரத் தில் ஒரு மகம்மதிய ராஜ்யத்தை ஏற்படுத்தினார். அப் பொழுது ஸிந்துநதி தீரத்திலிருந்த பல ஜாதியர்களும் ஒற்றுமையை நீத்துத் தம்முள் சண்டையிட்டு வந்ததனால் அவர்களிற் சிலர் மேளதாளங்களுடன் மகம்மதியரை வர வேற்று அவர்களுடன் சேர்ந்துகொண்டு விட்டார்கள். காஸிம் தமது விரோதிகளிடமிருந்து அவர்களுடைய நன் னடக்கைக்காக ஜாமீன் பெற்றுக்கொண்டு, அவர்களைத் தயையுடன் நடத்தவேண்டுமென உத்தரவு செய்தார்.

அவர் அவர்களுக்காவது, அவர்களுடைய சொத்துக்களுக் காவது, எவ்விதமான தீங்கையு மிழைக்கவில்லை. அவர்க ளுடைய கோயில்களையும் அவர் தீண்டவில்லை. மகம்மதிய வழக்கப்படி அவர் அவர்களுக்குத் தலை வரியை மட்டில் விதித்தார். சிற்சில பொழுது மகம்மதியர்கள் ஹிந்துக்களு டைய கோயில்களைத் தகர்த்து விக்ரஹங்களை உடைத்தார்க ளாயினும், யாத்திரிகர்கள் செலுத்திவந்த வரியினின்றும் அவர்களுக்கு விசேஷமான வருமானங் கிடைத்து வந்தத ஞல், அவர்கள் பொதுவில் ஹிந்துக்களுக்குத் துன்பத்தை யுண்டுபண்ணவில்லை. காஸிமுக்குப் பின்பு அராபியர் சுமார் இருநூறு வருஷங்கள் வரையில் இந்தியாவின் மீது படை யெடுத்து வரவில்லை. அவர்கள் இன்னும் அதிகமான நாட்டை ஜயிக்க வேண்டுமென்று முயற்சியும் செய்யவில்லை. ராஜபுத்திரர்கள் தங்களுடைய புராதனமான நாகரிக வளர்ச்சியினுலும், கல்வி, கேள்விகளினுலும், புஜபல பராக் கிரமத்தினுலும் அராபியர்களை ஓங்கவிடாமற் றடுத்து வந்தார் கள் போலும். அல்லாமலும், அராபியர்கள் தங்கள் தேசத் தின் மீது அடிக்கடி படையெடுத்து வந்த துருக்கியர்களுடன் சண்டை செய்து தங்கள் நாட்டைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியது அவர்களுக்கு அப்பொழுது அவசியமான செய லாயிருந்தது.

நாளடைவில் மகம்மதிய மதத்தைத் தழுவிக்கொண்ட துருக்கியர்கள் பலாட்டியர்களாகிக் கொஞ்சங் கொஞ்சமாக அராபியர்களுடைய நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டு விட் டார்கள். அவர்கள் ஆப்கானிஸ்தானம் வரையிலுமுள்ள நாடுகளை வென்று இந்தியாவின் மீதும் படையெடுத்துவரத் தலைப்பட்டார்கள். வெகு காலம் ஆப்கானிஸ்தானத்திலுள்ள கஜினி என்னும் பட்டணம் அவர்களுடைய ராஜதானியாக விருந்தது.

# 20. கஜினி மஹ்மூது

## கி. பி. 997—கி. பி. 1030

கஜினிப் பட்டணத்தில் முதன்முதல் தனியதிகாரத்தை ஸ்தாபித்தத் துருக்கியமகம்மதியன் அல்ப்டிஜின் என்பவன். அவனுக்குப் பின்பு அவன் அடிமையான ஸபக்டிஜின் என்பவன் கி. பி. 976-ல், கஜினியில் அரசனுனன். அவன் ஆப்கானியர்களைத் தனது வசமாக்கிக்கொண்டு அயல் நாடுகளை ஜயித்துத் தன்னுடைய ராஜ்யத்தைப் பெருக்கினன். அதனால், அவனுக்கு அப்பொழுது கிழக்கில் காபூலின் ஒரு பெரும் பாகம் சொந்தமாயிற்று. அதன் பின்னர் அவன் வடமேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவின்மீதும் படையெடுத்துவர லானன். அவன் பஞ்சாப் அரசரான ஜயபாலரைப் பன் முறை சண்டையிற் றோற்கடித்துத் தனக்குக் கப்பங் கட்டும்படிச் செய்து கொண்டான். துருக்கியருக்கு இந்தியாமீது படையெடுத்தற்கு வழி காட்டினவன் ஸபக்டிஜன் தான். கி. பி. 997-ல், அவன் இறக்கவும், அவன் மைந்தர் கஜினி மஹ்மூது என்பவர் பட்டத்துக்கு வந்தார்.

மஹ்மூது சிறந்த போர்வீரர். சேனையை யுத்தமுனையில் நடத்துவதில் அவர் நிபுணர். மத வைராக்கியமும், விடாமுயற்சியும் அவரிடத்திற் குடிகொண்டிருந்தன. அதனல், அவர் செழுமையும், வளமையும் பொருந்திய இந்தியாவின் மீது சுமார் பதினறு முறை வரையில் படையெடுத்து வந்து, ஹிந்துக்களுடைய தேவாலயங்களை யிடித்தும், அவற்றிலுள்ள பொருள்களைக் கொள்ளையடித்தும் ஏராளமான விலையுயர்ந்த பொருள்களைக் கொண்டு கஜினிப் பட்டணத்திற் சேர்த்தார்.

அவர் முதன் முதல் தமது தந்தையுடன் பன்முறை சண்டையிட்டுத் தோல்வியை யடைந்த ஜயபாலருடன் பேஷாவர் என்னுமிடத்தில் போர் புரிந்து அவரையும், அவருக்குத் துணை செய்ய வந்த பல ராஜ குமாரர்களையும் சிறைப் படுத்தினர். ஜயபாலர் தமக்கு நேர்ந்த அவமானத்தைச்

சகிக்கமுடியாதவராய்த் தீமூட்டியதில் விழுந்து இறந்து போனார். மஹ்மூதுவுக்குப் பத்துலக்ஷம் ரூபாய் விலை பெறத்தக்க கண்டாபரணங்களும், கணக்கில்லாத திரவியமுங் கிடைத்தன.

மறுபடி கி. பி. 1008-ல், மஹ்மூது ஜயபாலரின் மைந்தர் அநந்தபாலரையும் வெற்றிகொண்டு விட்டார். பஞ்சாப் நாடுகளில் ஆட்சி பெற்றிருந்த பலவரசர்களும் ஒன்று சேர்ந்து பேஷாவரில் மறுபடியும் மகம்மதியர்களை யெதிர்த்துச் சண்டை செய்தார்களேனும், ஹிந்து அரசர்கள் தோல்வியடைந்து விட்டார்கள். ஹிந்து அரசர்களின் பக்கம் வீராவேசத்துடன் சண்டை செய்த காக்கரின் சேனைக்குப் பயந்து மஹ்மூது திரும்பி யோடிப்போய்விடத் தீர்மானித்த பொழுது, அநந்தபாலர் யுத்தமுனையினின்றும் ஓடிப்போய்விட்டார் என்று ஒரு பொய்வதந்தி பிறந்ததனால் ஹிந்துக்களுடைய சேனை முதுகுகாட்டி யோடத்தலைப் பட்டது. தெய்வாதீனமாய்த் தங்களுக்குத் தக்க சமயம் ஏற்பட்டதென்பதைக் கண்ட மகம்மதியர்கள் அவர்களை யடியோடு தோற்கடித்து விட்டார்கள்.

அதற்குப் பின், மஹ்மூது சத்துருக்களால் ஜயிக்க முடியாததென்று பலரும் எண்ணியிருந்த நாகர்கோட்டையை யெதிர்த்துத் தகர்த்து, அளவிடவொண்ணாத செல்வத்தைக் கவர்ந்துகொண்டு கஜினிக்குத் திரும்பினார். அதைப் பார்ப்பதற்கு நாலாட்பக்கங்களிலிருந்தும் ஜனங்கள் திரண்டுருண்டு சென்றார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அளவற்ற திரவியம் எளிதிற் கிடைக்கப்பெற்ற மஹ்மூது மேலும் மேலும் இந்தியாவின்மீது படையெடுத்து வரத் தலைப்பட்டார். அப்பொழுது வடமேற்கில் ஆட்சி பெற்றிருந்த காந்தார, டில்லி, கன்னோசி, மகத, மாளவ நாட்டரசர்கள் தங்களுடைய சச்சரவுகளை நீத்து ஒன்று சேர்ந்து மஹ்மூதை வரவொட்டாமற்றடுத்து நாட்டைக் காத்திருக்கக்கூடும். ஆனால், அவர்கள் ஒருவர்மீதொருவர் கொண்டிருந்த அழுக்காற்றினாலும், விரோதத்தினாலும்

ஒன்றுபட இயலாமற் போயிற்று. நமது நாட்டின் அழிவிற்கு இத்தகைய அழுக்காறும், ஐக்கியமின்மையும் பல நூற்றாண்டுகளாகச் சிறந்த காரணங்களாக இருந்து வந்தன வன்றி, இப்பொழுதும் அவை காரணமாகவே நமது நாடு முன்னேற்றத்தையடைய முடியாமற் றிகைக்கின்றது. கி. பி. 1018-ல், மஹ்மூது மறுபடியும் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து, ஸப்த ஸிந்துவையுங் கடந்து, மதுரையைக் கைப்பற்றிக் கொண்டார். அவர் அசுரர்களாலன்றி மனிதர்களால் கட்டப்படக் கூடாதவை என்று எண்ணத்தகும் வனப்பு வாய்ந்த, கண்ணைக்கவரும் கோயில்களை முற்றிலும் இடித்து விக்ரஹங்களையும், நகைகளையும் அபகரித்துக் கொண்டார். கன்னோசி நகரமும் அவ்வாறே எதிர்த்துக் கொள்ளை கொள்ளப்பட்டது. அதன் பின்னர், இரண்டு வருஷங்களுக்குள் லாகூரும், குவாலியரும் அவருக்குக் கீழ்ப்பட்டுவிட்டன.

கி. பி. 1024-ல், அவர் இந்தியாவின்மீது கடைசிமுறை படையெடுத்து வந்தார். அந்தக் காலத்தில் கூர்ஜர நாட்டிலுள்ள ஸோமநாதபுரம் என்னும் பட்டணத்தில் பிரசித்தி பெற்ற ஒரு கோயிலிருந்தது. மஹ்மூது அதனைக் கொள்ளையிட்டு அங்குள்ள செல்வத்தை அபகரிக்கவேண்டுமென எண்ணினர். அவர் வரவைக் கேள்வியுற்ற ஸோமநாதபுரத்து ஜனங்கள் ஒரு பெருஞ் சேனையைச் சேர்த்துக் கொண்டு மஹ்மூதைக் கோவிலுக்குள் நுழையவொட்டாமற் றடுக்கவேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர்கள். அயல்நாட்டுச் சிற்றரசர்களிற் சிலரும் தங்கள் சேனைகளையும் அனுப்பி யவர்களுக்கு உதவி புரிந்தார்கள். பெண்டிர்கள் தங்கள் உயிரினும் அதிகமென மதித்துத் தாங்கள் அணிந்துகொண்டிருந்த ஆபரணங்களைக்கூட விற்று அந்த யுத்தத்திற்குவேண்டிய சாதனங்களை யமைத்துக் கொடுத்தார்கள்.

ஹிந்துக்கள் எதிர்பார்த்தவண்ணமே மஹ்மூது ஸோமநாதபுரம் வந்து சேர்ந்தார். ஸோமநாத ஸ்வாமியின் கோயில் வாசலில் இருதிறத்தாருக்கும் கொடிய சண்டை

நடந்தது. முதலில், ஹிந்துக்கள்தான் ஜயமடைவார்கள் என்று தோன்றிற்று. ஆனால், மகம்மதியர்கள் அதிக ஊக்கத்துடனும், வீராவேசத்துடனும் சண்டைசெய்து, ஹிந்துக்களைத் தலைவிரி கோலமாகச் சிதறவடித்துக் கோயிலுக்குள் நுழைந்துவிட்டார்கள். தோற்றுப்போனவர்களிற் பலர் படகுகளிலேறிக் கடல் மார்க்கமாகத் தப்பித்துக் கொண்டு ஓடிப்போனார்கள்.

மஹ்மூது கோயிலுக்குள் நுழைந்ததும், ஹிந்துக்கள் அவருக்கு ஏராளமான பணம் கொடுப்பதாகச் சொல்லி விக்ரஹத்தை யுடைக்காம லிருக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். ஆனால், மஹ்மூது தாம் விக்ரஹத்தை யுடைப்பவரேயன்றி விக்ரஹத்தை விற்பவரல்லர் என்று சொல்லிக்கொண்டு தம் கதையைத் தூக்கியடித்து ஸோமநாத விக்ரஹத்தை யுடைத்துத் தள்ளினார். அது ஒரு லிங்கமானதனால், அந்த விக்ரஹத்திலிருந்து நவரத்தினங்கள் கீழே சிதறி விழவும், அவர் அவற்றைத் திரட்டிக் கொண்டு கஜினிக்குத் திரும்பினார் என்று சொல்வது உண்மையல்ல என்பது சிலருடைய அபிப்பிராயம். அது எவ்வாறாயினு மாகுக. அவ்வாலயத்தில் ஏராளமான பொருள் குவிந்திருந்ததென்றும், அதை முழுவதும் அவர் எடுத்துக்கொண்டுவிட்டார் என்றும் நம்புவதற்கு இடமுண்டு. கி. பி. 1030-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் மஹ்மூது கஜினியில் இறந்துபோனார். மஹ்மூது இந்நாட்டின் செல்வத்தைப் பன்முறையும் கவர்ந்து சென்றாராலும், அவர் தாம் குன்றுபோற் குவித்த செல்வத்தை நல்வழிகளிற் செலவு செய்தார். அவருடைய சமஸ்தானத்தில் பிரூனி என்னும் வான சாஸ்திரியும், பராபி என்னும் வேதாந்தியும், பருகி என்னும் பாரஸிகக் கவியும், இன்னும் இவர்களைப் போன்ற பிர்தாஸி முதலிய வித்வான்களும் ஆதரிக்கப்பட்டு மிகப் பெரிய நூல்களை இயற்றியிருக்கிறார்கள். மஹ்மூது அவர்களின் பொருட்டு வருஷத்தில் 22 லக்ஷம் ரூபாய் செலவிட்டு வந்தார். அதன்றியும், அவர் கஜினியில் ஒரு கலாசாலையையும், ஒரு புஸ்தகசாலையையும், ஒரு பொருட்

காட்சிச் சாலையையும் ஏற்படுத்தினார். கஜினியில் ஓர் அழகிய மசூதியையு மமைத்து அவர் அதைச் சிறந்த சிற்பிகளையும், சித்திரிப்பவர்களையும், பொன் வெள்ளி வேலைக்காரர்களையுங் கொண்டு அலங்கரித்து அவர்களைத் தத்தந் தொழில்களில் தேர்ச்சியடையும்படி உற்சாகப்படுத்தினார். அவர் ராஜரீகத்தில் கைதேர்ந்தவரல்லர்; ஆதலின், துரைத்தன வமைப்பில் சிறந்ததான எவ்வித ஏற்பாட்டையும் அமைத்திலர். ஆனாலும், அவர் நடுவுநிலைமையுடன் நியாயம் நடத்தி வந்தார். அதைத் திருஷ்டாந்தப்படுத்த அநேக கதைகள் வழங்கி வருகின்றன. ஒரு நாள் ஓர் எளியவன் மஹ்மூதினிடம் வந்து யாரோவொரு ராஜ சேவகன் தனது வேலைக்காரியைத் துன்புறுத்துவதாகச் சொன்னபொழுது, அந்தச் சேவகன் அவனுடைய வீட்டிலிருக்கும்பொழுது வந்து தம்மிடம் சொல்லும்படி அவர் அந்த எளியவனுக்குக் கட்டளையிட்டு விட்டுத் தாம் அவனது துன்பத்தைப் போக்கின பின்னரே உண்பதாகத் தீர்மானித்துக்கொண்டு அவனுடைய வரவை எதிர்பார்த்திருந்தார். மறுநாள் அவன் அந்தச் சேவகன் வந்திருப்பதை அரசருக் கறிவிக்கவும், மஹ்மூது அவனுடன் சென்று அவன் வீட்டிற்குள் புகுந்து அங்கெரிந்து கொண்டிருந்த தீபங்களை யவித்துவிட்டு, அத்துஷ்டனைத் தமது உடைவாளினாற் கொன்று தள்ளினார். பின்னர் அவர் தீபத்தைக் கொண்டுவரச்சொல்லி வெட்டுண்டவனை யாவனென அறிந்துகொண்டு அவன் பக்கத்தில் முழங்காற்படியிட்டுக் கடவுளைத் தொழுது அந்த எளியவனைத் தமக்கு உண்ண உணவும் குடிக்கத் தண்ணீரும் தரும்படிக் கேட்டார். அவன் அவற்றைக் கொணர்ந்து கொடுக்க, அவர் அவற்றை யுட்கொண்டு, அவ்வெளியவனை நோக்கி, 'நான் விளக்கை அணைத்ததற்குக் காரணம் யாதென உனக்குள் ஐயமுண்டாயிருக்கும். உனக்குத் தீங்கிழைத்த துஷ்டன் ஒருகால் எனது மகனாக விருந்தால் அவனைத் தண்டிக்க எனக்கு மனம் வராமற்போகும். ஆதலின், அவனை இன்னான் என அறியாமலே தண்டிக்க வேண்டுமென்று கருதித்தான் விளக்கை அணைத்துவிட்டேன்.

அன்றியும், அவனைத் தண்டித்த பின்புதான் உணவு கொள்வதென நிச்சயித்துக்கொண்டு இதுகாறும் உண்ணுமலிருந்தேன். ஆதலினாலேதான் உணவுகொண்டுவரச்சொன்னேன்,' என்றுகூறினார். அவன் தனது மகனாகவன்றி வேறொருவனாக விருந்ததனால் அவர் அப்பொழுது கடவுளைத் தொழுதேத்தினார். மஹ்மூதின் நடுவுநிலைமையை யுணர்த்தும் கதைகள் இதுபோல் பலவுள.

## 21. மகம்மது கோரி

### கி. பி. 1184--கி. பி. 1206

மஹ்மூதுக்குப் பின் பட்டத்துக்கு வந்த கஜினி அரசர்கள் பலஹீனர்கள். அவர்களுடைய காலத்தில் கஜினி ராஜ்யம் சீர்குலைந்துவிட்டது. கஜினி அரசர்களில் பெஹ்ராம் என்றொருவன் இருந்தான். அவன் மிகக் கொடியவன். அவனுடைய அதிகாரத்திற்குட்பட்டுக் கோரில் ஆட்சிசெய்து வந்த சிற்றரசன் தன்னுடைய மருமகனாக விருந்தும், பெஹ்ராம் அவனைக் கொன்றுவிட்டான். உடனே அச் சிற்றரசனுடைய தம்பி பெஹ்ராமின்மீது படையெடுத்துச் சென்று அவனைக் கஜினியினின்றும் துரத்திவிட்டான். ஆனால் சீக்கிரத்திலேயே பெஹ்ராம் திரும்பி வந்து கோரி வரசனையும் அவன் மந்திரியையும் சிறைப்படுத்தினான். அவன் கோரி மன்னன் முகத்திற் கரியைப் பூசி, அவனை எருதின்மேல் அதன் பின்புறத்தை நோக்கின வண்ணமாக ஏற்றி, ஊர் வலம் வரச்செய்தான். பின்னர் அவன் அவனைக்கொன்று அவனுடைய மந்திரியைக் கழுவேற்றினான்.

அதையறிந்த அலாவுதீன் என்னும் அவனுடைய சகோதரன் பெஹ்ராமைத் தோற்கடித்துத் துரத்திவிட்டதல்லாமல், கஜினிப்பட்டணத்தையும் தீயினாற் சுட்டெரித்து விட்டான். அதனால் அவனுக்கு ஜஹான்ஸாஸ் அதாவது 'ஜகத்தை எரித்தவன்' என்னும்பெயர் உண்டாயிற்று.

அதற்குப் பின்பும் பெஹ்ராமின் சந்ததியார்கள் கி. பி. 1184-ம் வருஷம் வரையில் லாகூரில் ஆட்சிசெய்து வந்திருக்

கிறார்கள். அலாவுதீன் வம்சத்தினர்களும் கோரில் ஆண்டு வந்தார்கள். ஆனால், மகம்மதுகோரி என்னும் மறுபெயர் பூண்ட ஷஹாப் உத்தீன் மன்னர் அப்பொழுதிருந்த குஸ்ரூ என்னும் கஜினி வம்சத்தரசனைச் சிறைப்படுத்தி, அவனுடைய ராஜ்யத்தை வென்று தமது கோரிராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டுவிட்டார். சில வருஷங்களானதும் கடைசி கஜினி அரசனும், அவன் மகனும் கொலையுண்டு போனார்கள்.

கஜினி மஹ்மூதைப் போலவே மகம்மது கோரியும் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து ஏராளமான பணத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்று எண்ணினார். அஃதன்றியும், அவருக்கு இந்தியாவில் தமது அரசாட்சியை நிலையாக ஸ்தாபிக்க வேண்டுமென்னும் விருப்பமும் இருந்தது. அதனால், அவர் இந்தியாவின்மீது பதினேழுமுறை படையெடுத்துவந்தார். அப்பொழுது வட இந்தியாவிலிருந்த பல ராஜபுத்திர ராஜ்யங்களிலும் ஜயச்சந்திரர் ஆண்டுவந்த கன்னோசி ராஜ்யமும், பிருதுவி யரசர் ஆண்டுவந்த டில்லி—அஜ்மீர் ராஜ்யமும்தான் சிறப்புற்றிருந்தன. அந்த இரண்டு அரசர்களும் ஒற்றுமையின்றித் தங்களுக்குள் மனம் வேறுபட்டு அடிக்கடிச் சண்டையிட்டு வந்தார்கள். பிருதிவி மன்னர் ராணிஸம்யுக்தையை ஸ்வயம்வர மண்டபத்தினின்றுத் தூக்கிச்சென்று மணந்துகொண்டதன் காரணமாக ஜயச்சந்திரர் அவர்மீது அடங்காக் கோபங்கொண்டு அவரை எவ்விதத்திலாவது தண்டிக்க வேண்டுமெனக் கருதி, அவர் கோரியைத் தமக்குத் துணைவரும்படி வேண்டினார். இந்தியாவின் மீதுபடையெடுத்தற்குத் தக்கசமயம் எப்பொழுது வாய்க்குமென்று மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மகம்மதுகோரி உடனே ஜயச்சந்திரரது வேண்டுகோளுக் கிணங்கினார்.

கி. பி. 1191-ல், ஸ்தானேசுவரம் என்னுமிடத்தில் கோரிக்கும் பிருதிவி ராஜருக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. அதில் மகம்மதியர்கள் தோல்வியடைந்து போனார்கள். கோரி தமது போர்வீரரை அவமானப்படுத்தி, அவர்களுக்கு நற்புத்தி உண்டாமாறு செய்வதன் பொருட்டு, அவர்களின் கழுத்துக்களில் வாற்கோதுமைப் பைகளைக் கட்டி அவர்

கள் குதிரைகளைப் போன்று தங்களுணவைப் பைகளினின்றுந் தின்றுகொண்டே கஜினிப்பட்டணத்து வீதிகளைச் சுற்றிவரும்படி செய்தார். மறுபடியும் கி. பி. 1193-ல், அதேயிடத்தில் இருதிறத்தாருக்கும் இரண்டாவது சண்டை நடந்தது. அதில் மகம்மதியர்கள் ஜயமடைந்தார்கள். பிருதுவிராஜர் சண்டையில் அநியாயமாகக் கொல்லப்பட்டுப் போனார். அவருக்குத் துணையாக நின்று சண்டைசெய்து தோல்வியடைந்த ராஜபுத்திரர்கள் இப்பொழுது ராஜபுதனம் என்று வழங்கிவரும் நாட்டிற்போய்க் குடியேறினார்கள்.

அடுத்த வருஷத்தில் கோரி மகம்மது ஜயச்சந்திரர் மீதும் படையெடுத்துவந்து அவரையுந் தோற்கடித்து அவருடைய ராஜ்யத்தையும் கைப்பற்றிக் கொண்டுவிட்டார். ஹிந்துஸ்தானத்தில் மாளவம் ஒழிந்த மற்றைய நாடுகளையெல்லாம் அவர் முழுவதும் வென்று, அவற்றை ஆளுவதற்குத் தமது சேனைத் தலைவர்களி லொருவரான குத்புடீன் ஐபேக் என்பவரைப் பிரதிநிதியாக ஏற்படுத்தினார். பின்னர்க் கோரியரசர் கி. பி. 1206-ல், காக்கர்மீது படையெடுத்துச் செல்ல, அவர்கள் ஒருநாள் அவர் படுத்துறங்குஞ் சமயம் பார்த்து அவரைக் கொன்றுவிட்டார்கள். அவருக்குப் பிள்ளை யில்லாததனால், அவருடைய ராஜ்யம் முற்றிலும் சிதைவுண்டு போயிற்று. ஆனாலும், அவருடைய இந்திய ராஜ்யத்தை யாண்டுவந்த குத்புடீன் சுயாதீனம் பெற்று டில்லியில் அரசரானார்.

## 22. மாமலூக் ஸுல்தான்கள்

### கி. பி. 1206—கி. பி. 1290

குத்புடீன் கி. பி. 1206-ல் டில்லியில் அரசராகப் பட்டாபிஷேகம் பெற்றார். அவர் இளமையில் கோரி மகம்மதுவுக்கு அடிமையாக இருந்தவர். அதனால் அவருக்கும், அவர் வம்சத்திற்சேர்ந்து அவருக்குப்பின் பட்டத்துக்குவந்த சில

அரசர்களுக்கும் அடிமையரசர்கள் அல்லது மாமலூக் ஸுல்தான்கள் என்று பெயர் வந்தது.

டில்லியில் சுமார் 650 வருஷங்கள் வரையில் ஆட்சி செய்துவந்த மகம்மதிய அரசர்களில் குத்புடீன் ஐபெக் என்பவர்தான் முதல்வர். அவர் தைரியமும், சாமர்த்தியமும் உள்ளவர். அவருடைய செங்கோலில் குடிகள் தீங்கின்றிச் சுகமாக வாழ்ந்திருந்தார்கள். அவருடைய காலத்தில் ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒரே குளத்தில் பயமின்றித் தண்ணீரருந்தின வென்று சொல்லப்பட்டிருப்பதினின்றும், நாம் அவர் தமது குடிகளைப் பேதமின்றி நடுவுநிலைமையுடன் பார்த்துவந்தார் என்று கொள்ளலாம். ஐபெக் மிகுந்த உதார குணமுடையவர். அவருக்கு 'லக்பக்ஷ்' அதாவது லக்ஷக்கணக்கிற் கொடுப்பவர் என்று பெயர் வந்துள்ளது.

அவர் டில்லியிலும், அஜ்மீரிலும் இரண்டு பெரிய மசூதிகளைக் கட்டுவித்தார். டில்லியில் 250 அடி உயரமுள்ள குட்ப்மினர் என்னும் ஸ்தூபியும் அவரால் தான் கட்டப்பட்டது. 'அந்த ஸ்தூபி அவரால் கட்டப்படவில்லை; அல்டமிஷினால் குத்புடீன் என்னும் ஒரு மஹானின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது' என்று கூறுவாருமுளர். கி. பி. 1210-ல், குத்புடீன் போலோ விளையாடும்பொழுது குதிரையினின்றுங் கீழேவிழுந்து இறந்துபோனார். அவருக்குப் பின் அவருடைய அடிமையான அல்டமிஷ் என்பவர் அரசரானார். அவர் அழகிலும், அறிவிலும், குணத்திலும், சீலத்திலும் தம்மையொப்பார் எவருமில்லாதவராயும், தயை, ஈவு, இரக்கம் முதலான நற்குணங்களைப் பொருந்தியவராயும், பெரியவர்களிடத்திலும், கற்றோரிடத்திலும் அன்புடையவராயும் நடந்துவந்தார். அவருடைய காலத்தில் சிங்கிஸ் கான் என்னும் தார்த்தாரியன் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான். ஆனால், சீக்கிரத்திலேயே அவன் மேனாடுகளின் புறமாகச் சென்றொழிந்தான். தார்த்தாரியர்கள் நாடோடிகள். அவர்கள் உயர்ந்த கன்னமும், சப்பை மூக்கும், சிறிய கண்களும் உடையவர்கள். அவர்களுடைய

தேகத்தில் அழுக்குப்படிந்தும், சீலைகளிற் பேன்பிடித்தும் இருந்தன. அவர்கள்மீது எவரும் சமீபத்தில் போகமுடியாதபடி துர்நாற்றம் வீசியது.

அல்டமிஷ்ஷாம், கஜினி மஹ்மூதைப் போன்று ஹிந்துக்களின் கோயில்களை யிடித்தும், அவர்களுடைய விக்ரஹங்களை யுடைத்தும் வந்தார். உஜ்ஜயினி நகரத்திலிருந்த பெரிய காளிகோயில் அவரால்தான் இடிக்கப்பட்டது.

அல்டமிஷ் 175 தானியமணி எடையுள்ள டங்கா வென்னும் வெள்ளி நாணயத்தை முதன் முதல் இந்நாட்டில் வெளியிட்டார். அதில் எழுத்துக்கள் அரபிபாஷையில் செதுக்கப்பட்டிருந்தன. என்றால், அந்த நாணயம் சற்றேறக் குறைய நமது ரூபாயை யொத்திருக்கவேண்டும்.

அல்டமிஷ் இறந்துபோன காலம் முதற் பத்துவருஷங்கள் வரையில், அதாவது கி. பி. 1236 முதல் கி. பி. 1246 வரையில், அவருடைய ராஜ்யத்திற்கு அவருடைய பிள்ளைகளினூற் றுன்பம் நேரிட்டது. அவருடைய மகனை, பிரோஸ்ஷா என்பவன் ஏழுமாத காலந்தான் ஆட்சி செய்திருந்தான். அவன் ஆடிப்பாடி, உண்டுகளித்துச் சிற்றின்பத்திலும் துன்மார்க்கருடைய சகவாசத்திலும் பணத்தையெல்லாம் செலவிட்டு வந்ததனால், குடிகள் அவனிடம் வெறுப்புற்று அவனையும் அவன் தாயையும் சிறைப்படுத்தினார்கள். அவனும் சீக்கிரத்திலேயே இறந்துபோனான். அவனுக்குப் பின் அவனுடைய சகோதரியான ஸுல்தான் ரஜியா வென்பவள் பட்டத்துக்கு வந்து மூன்றரை வருஷங்கள் வரையில் டில்லியில் ஆட்சி செலுத்திவந்தாள். அவளிடத்தில் அரசர்களுக் கிருக்க வேண்டிய பல நற்குணங்களும் அமைந்திருந்தன. என்றாலும், துருக்கியர்கள் அவளைப் பெண்ணென வெறுத்தார்கள். அவள் டில்லியில் அரசாண்ட அதே காலத்தில் எகிப்த் தேசத்தில் ஒரு பெண்ணும், பர்ஸ் என்னும் மாகாணத்தில் மற்றொரு பெண்ணும் ஆட்சி செலுத்திவந்தார்கள். இதுவு மொரு அதிசயமேயல்லவா? கி.பி 1240-ல், அவளுடைய பிரபுக்களே யவளுக்கு விரோதமாகக் கிளம்பி அவளையும் அவள் புருஷனையும்

கொன்று விட்டார்கள். அவளுக்குப் பின்னர்ப் பட்டத்துக்கு வந்த அவள் தம்பியும், மருமகனும் பயனற்றவர்கள். அவர்கள் காலத்தில் தார்த்தாரியர்கள் மறுபடியும் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார்கள்.

அவர்களுக்குப் பின்பு அல்டமிஷின் மூன்றாவது குமாரரான நாஸர் உத்தீன் என்பவர் டில்லியில் அரசரானார். அவர் மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர். அவர் தமது காலத்தைப் படிப்பிலும், தெய்வ வணக்கத்திலுமே கழித்து வந்ததனால், ராஜ காரியங்களைக் கவனிப்பதற்குப் பால்பன் என்னும் அடிமையை நியமித்துக்கொண்டார். அவர் தமது செலவிற்கு வேண்டிய பணத்தைக் கொரானை யெழுதி விற்று அதனின்றும் சம்பாதித்துக் கொண்டார். அவருடைய உணவை ராணியாரே வேலைக்காரருடைய உதவியின்றிச் சமைத்து வந்தார். கி.பி 1266-ல், அவர் மறிக்கவும், பால்பன் அரசரானார்.

கியாஸ் உத்தீன் பால்பன் வெகு சமர்த்தர்; சிறந்த பராக்கிரமசாலி. இவர் நாஸர் உத்தீன் காலத்தில் சுமார் 20 வருஷம் மந்திரியாக விருந்தார். ஒரு வருஷ காலம் இவர் நாட்டை விட்டு வெளியிலிருக்க நேர்ந்தபொழுது, ராஜ்யத்திற் பல கஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டன. அதனால் ஜனங்கள் இவரைத் திரும்பவும் ராஜ்யத்திற்கு வரும்படி கேட்டுக் கொண்டார்கள். இவர் அப்பொழுதைக் கப்பொழுது கலகஞ் செய்துவந்த ஹிந்துக்களை அடக்கியும், துருக்கியப் பிரபுக்கள் தங்களுக்குள் செய்துவந்த சண்டைகளைத் தமது பராக்கிரமத்தினால் நிறுத்தியும், வட மேற்கு மாகாணத்தைப் பலபடுத்தி மங்கோலியர்களை வர வொட்டாமற் றடுத்தும், நாட்டிற்கு அமைதியை யுண்டு பண்ணினார்.

துக்ரல் என்னும் வங்காள கவர்னர் பால்பனுக்கு விரோதமாகக் கிளம்பிச் சுயாதீனம் பெற்றுவிட வெண்ணினான். ஆனால், அவனுடைய எண்ணம் நிறைவேறவில்லை. பால்பன் தாமே நேரில் வங்காளத்திற்குச் சென்று கலகத்தை யடக்கி, துக்ரலைக்கொன்று வெற்றியுடன் திரும்

பினர். அவர் அப்பொழுது தமது மகனை வங்காள கவர்ன ராக நியமித்தார். அவனும், அவனுடைய சந்ததியாரும் சுமார் ஐம்பது வருஷம் வரையில் வங்காளத்தில் ஆட்சி செய்து வந்தார்கள்.

கியாஸ் உத்தீனின் மூத்த மகனான மகம்மது வெகு சமர்த்தன். கி.பி 1285-ல், அவன் மங்கோலியரோடு சண்டை செய்து வருகையில் கொலை யுண்டுபோனான். அதைக் கேள்வியுற்ற பால்பன் மன்னர் சோகத்தில் மூழ்கி, வாய் விட்டலறினர். புத்ரசோகத்தினால் அவர் தேகம் மெலிந்தும், மனம் நொந்தும், நெஞ்சம் உருகியும் இரண்டு வருஷங்களுக் கெல்லாம் இறந்துபோனார். அவர் இறந்த மூன்று வருஷங் களுக்குள் அடிமை வம்சத்தரசர்கள் டில்லி ராஜ்யத்தை இழந்துவிட்டார்கள்.

கியாஸ் உத்தீனின் பெயரனான கைகுபாத் என்பவன் சிற்றின்பங்களில் காலத்தைக் கழித்ததனால், அவனுடைய மந்திரி தனது கொடுமையினாலும் பேராசையினாலும் நாட்டின் அமைதியை முழுவதும் போக்கிவிட்டான். அப்பொழுது நாலாப் பக்கங்களிலும் கலகங்கள் ஏற்பட்டன. அதில் கல்ஜி வம்சத்தைச் சேர்ந்த ஆப்கானியர் ஜயமடைந்து ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

## 23. கல்ஜி வம்சத்தரசர்கள்

### கி.பி. 1290—கி. பி. 1320

அடிமை யரசர்களுக்குப்பின் பட்டத்துக்கு வந்த கல்ஜி வம்சத்தின் முதலரசர் ஜலால் உத்தீன் என்பவர். அவர் வயது சென்றவர்; பலஹீனர்; மிகுந்த தயாளகுணமுடையவர். அவர் கொலையாளிகளையும், குற்றவாளிகளையும், ராஜத்ரோஹிகளையும் ஒருங்கே தண்டியாமற் பரிவுடன் நடத்தி வந்ததனால், நாட்டில் அமைதி குறைந்து வரத் தலைப்பட்டது. அல்லாமலும், அவர் டம்பத்தை நீத்து விநயத்துடன் நடந்து வந்ததனாலும், சாதாரண ஜனங்களுக்கு அவரிடம்

அசட்டை உண்டாயிற்று. அவர் ஐந்து வருஷ காலந்தான் ஆட்சி செய்தார். கி. பி. 1296-ல், அவருடைய மருமகனை அல்லா உத்தீன் என்பவர் அவரைக் கொன்றுவிட்டுத் தாம் ஸிம்ஹாஸனம் ஏறினார்.

அல்லா உத்தீன் பட்டத்துக்கு வருவதற்குமுன்னமேயே விந்திய பருவதத்தைக் கடந்து மஹாராஷ்டிரத்தின் மீது படையெடுத்து வந்து மஹாராஷ்டிரர்களது தலைநகரான தேவகிரியை எதிர்த்து அங்கு ஆண்டு வந்த வரசனைச் சிறைப்படுத்தினார். தென்னிந்தியாவின்மீது முதன்முதல் படையெடுத்து வந்த மகம்மதிய வரசர் அல்லா உத்தீன்தான். அல்லா உத்தீன் தமது சிற்றப்பனைக் கொன்று பட்டத்துக்கு வந்ததையன்றி, அவருடைய பிள்ளைகளைச் சிறையிலடைப்பித்து அவர்களுடைய கண்களையும் குருடாக்கி விட்டார். தமது குரூரத்திற்காக ஜனங்கள் தம்மைப் பழிக்காமலிருத்தற் பொருட்டு, அவர் ஜனங்களுக்கு அளவற்றபொன்னை வழங்கினார். ஆனால், சீக்கிரத்திலேயே அவர் தமக்குக் குடிகளினாலேற்படக்கூடிய தீங்கு யாதொன்றுமில்லை என்று கண்டுகொண்டு ஜலால் உத்தீனுக்குத் துரோகஞ் செய்து தம்முடைய பணத்தைப் பெற்றுத் தம்மிடம் அன்பு பாராட்டிய பிரபுக்களைச் சிறையிலிட்டு அவர்களுடைய சொத்துக்களையும் தாம் கவர்ந்துகொண்டுவிட்டார்.

அல்லா உத்தீன் சிறந்த பராக்கிரமசாலி; ஒப்பற்ற போர்வீரர். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அவர் கி. பி. 1298-ல் கூர்ஜர நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, அந்த ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டார். அல்லாமலும், அவர் அதே வருஷத்தில் இந்தியாவின்மீது பன்முறை படையெடுத்து வந்த தார்த்தாரியரைத் தோற்கடித்துத் துரத்திவிட்டார். தார்த்தாரியர் என்னும் அந்த மங்கோலிய நாடோடிகள் எல்லை மாகாணங்களில் வந்து வசித்துவந்தாலும், இந்தியப் படையெழுச்சியின் பொழுதெல்லாம் அவர்களிற் சிலர் இங்கேயே தங்கிவிட்டதனாலும், நாளடைவில் அவர்கள் இந்நாட்டில் விசேஷமாகக் காணப்பட்டார்கள். ஆனால், அவர்கள் மகம்மதியர்களாகிப்




THE INDIAN PUBLISHING HOUSE, LTD.

'புது மகம்மதியர்கள்' என்னும் பெயர் வழங்கப் பெற்றனர். ஒருகால் டில்லியில் இருந்த மங்கோலியர்கள் (அவர்களுக்கு முகலாயர்கள் என்றும் பெயர் வழங்கி வந்தது) கலகஞ் செய்தார்கள் என்று அல்லா உத்தீன் அவர்களை முற்றும் கொன்றுவிடும்படிக் கட்டளையிட்டார். அவ்வாறே அவர்களுடைய பெண்களும், குழந்தைகளுங்கூடக் கொலையுண்டு போனார்கள். 'இதுவரையில் இந்நாட்டில் புருஷர்களுடைய துர் நடத்தையின்பொருட்டு ஸ்திரீகளையும், சிசுக்களையுங் கொல்வதென்னுந் தீய வழக்கங் கிடையாது' என்றொரு சரித்திராசிரியர் எழுதியுள்ளார். முதன் முதல் அக்கொடுந் தொழிலைச் செய்த அல்லா உத்தீன்மீது குடிகளுக்கு வெறுப்பு உண்டாயிற்று.

அல்லா உத்தீன் செல்வத்திலும் அதிகாரத்திலும் விருத்தியடைந்து வந்ததனால், கர்வங்கொண்டு தாம் அலெக்ஸான்டரை யொத்து ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்த வெண்ணினார். அவர் தம்முடைய நாணயங்களில் தமது பெயரை 'இரண்டாவது அலெக்ஸான்டர்' என்று செதுக்கி வைத்தார்.

கி.பி. 1303-ல், அல்லாஉத்தீன் சித்தூரை முற்றுகை செய்தார். அப்பொழுது அவர் தந்திரத்தினால் பீம்ஸிங்கைச் சிறைப்படுத்தினார். பீம்ஸிங்கின் மனைவியான பத்மினி உபாயத்தினால் தனது கணவனை மீட்டுக் கொண்டுவந்து விட்டாள். பின்னர் அல்லாஉத்தீனுக்கும் ராஜபுத்திரர்களுக்கும் அகோரமான யுத்தம் நடந்தது. அதில் பீம்ஸிங்க் கொலையுண்டதனால், பத்மினியும் அவளைச் சேர்ந்த அரச குலப் பெண்களும் தீக்குளித்து விட்டார்கள். அதனுடன் சித்தூரும் அழிந்து போயிற்று.

அதற்குப் பிறகு அல்லாஉத்தீன் தமது சேனைத் தலைவனை மாலிகாபூர் என்பவனைப் பெருஞ் சேனையுடன் தக்ஷிணத்தை ஜயித்து வரும்படி அனுப்பினார். மாலிகாபூர் வாரங்கல் நாட்டையும், மைசூர் ராஜ்யத்தின் முக்கிய பட்டணமான துவார சமுத்திரத்தையும் கைப்பற்றிக் கொண்டு,

தெற்கில் ராமேசுவரம் வரையில் படையெடுத்துச் சென்று எதிர்பட்ட நாடுகளையெல்லாங் கொள்ளை கொண்டு ஏராளமான திரவியத்துடன் டில்லிக்குத் திரும்பினான். அல்லாமலும், அவன் கூர்ஜர மன்னனுடைய மிகவும் அழகு வாய்ந்த மகளைச் சிறைப்படுத்திக் கொண்டுவந்து அல்லாஉத்தீனின் மகனுக்கு மணஞ் செய்வித்தான்.

மாலிகாபூர் வாரங்கல் நாட்டின்மீது படையெடுத்துச் சென்றபொழுது, அந்நாடு இரண்டாவது பிரதாபருத்ரரால் ஆட்சி செய்யப்பட்டிருந்தது. அவர் ஆந்திர வம்சத்தைச் சேர்ந்தவர். முதலாவது பிரதாபருத்ரர் என்பவர் வாரங்கல் நாட்டின் முதலரசர். அவர் கி.பி. 1187-முதல் 1196-வரையில் அந்நாட்டை ஆண்டு வந்தார். வாரங்கலில் பிரதாபருத்ரருடைய வம்சத்தைச் சேர்ந்த ருத்ரம்மா என்றொரு அரசியும் ராஜ்யபாரம் செய்திருக்கிறாள். அவளுடைய காலத்தில் வாரங்கல் நாட்டுக் குடிகள் சௌக்கியமாகவும், சந்தோஷமாகவும் இருந்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. மகம்மது துக்ளக்கின் படையெழுச்சிக்குப் பின்பு வாரங்கல் தனது சிறப்பை முற்றிலும் இழந்துவிட்டது.

அல்லாஉத்தினுடைய குடிகள் அவருக்குப் பயந்து நடுங்கிக் காலங்கழித்து வந்தார்கள். அவர் மிகவும் கொடியவர். அவர் தம்முடைய பிரபுக்கள் மதுபானஞ் செய்யக்கூடாதென்றும், அவர்கள் தம் முத்தரவில்லாமல் தங்களுடைய பெண் பிள்ளைகளுக்கு விவாகஞ் செய்விக்கக்கூடாதென்றும், அவர்கள் ஒருவர் வீட்டிற்கொருவர் போகக்கூடாதென்றும், அவர்கள் ஒருவருக்கொருவர் விருந்து செய்து உபசரிக்கக்கூடாதென்றும், அவர்கள் சபை கூடிப் பேசக்கூடாதென்றும் திட்டஞ் செய்தார். அவர் காலத்தில் ஹிந்துக்கள் குதிரையேறிச் சவாரி செய்யலாகாதென்றும், கத்தி முதலிய ஆயுதங்களை எடுத்துச் செல்லலாகாதென்றும் நிபந்தனைகள் செய்யப்பட்டிருந்தன. அவர் மீறி நடந்தவர்களைக் கடுமையாய்த் தண்டித்தார். அதனால், ஜனங்கள் மிகவும் பயந்து, நடு நடுங்கி வாழ்ந்து வந்தார்கள். அவரிடம் குடிகளுக்குக் கொஞ்சமேனும் அன்பு கிடையாது.

நாட்டிலுள்ள சகல பொருள்களுக்கும் விலைகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின்படியே விற்கப்பட்டும், வாங்கப்பட்டும் வந்தன. வர்த்தகர்களும், குடியானவர்களும் குறித்த விலைப்படியே சரக்குக்களை விற்றும் வாங்கியும் வருகிறார்களா வென்று கவனிப்பதற்குப் பல உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட் டிருந்தார்கள். இவ்வாறாகக் குடிகள் சகல சுதந்தரங்களையு மிழந்து, அடிமைகளை யொத்துக் காலங் கழித்து வந்தார்கள். ஆயினும், அவருடைய அந்திய காலத்தில் நாட்டிற் கலகங்கள் பெருகியதனால், அமைதி குன்றி விட்டது ; அன்றியும் பல சிற்றரசர்கள் சுயாதீனம் பெற்று விட்டார்கள். கி.பி. 1316-ல் அவர் மரண மடைந்தார்.

அவருக்குப் பின் அவர் மகன் மூபாரக் என்பவன் பட்டத்துக்கு வந்தான். அவன் சோம்பேறி. மிகக் கொடியவன்; சிற்றின்பப் பிரியன். அவனுக்கு ராஜ்யத்தை யாளுந் திறமையில்லை. உண்ண உணவும், உடுக்க வஸ்திரமும் இல்லாமல் வரியின் கொடுமையினாலும், சட்ட திட்டங்களின் உபத்திரவத்தினாலும் பரிதவித்து வந்த ஹிந்துக்கள் அவன் காலத்தில் கொஞ்சம் தீங்கின்றி வாழ நேர்ந்தது.

மூபாரக் தனது கௌரவத்தையும், மானத்தையும் கொஞ்சமும் மதியாமல் அசப்பியமான பேச்சுக்களைப் பேசியும், துன்மார்க்கரது நட்பிற் பழகியும், தெய்வத்தை மறந்தும், ரம்ஜான் முதலான விருதங்களை நீத்தும், மனம்போன போக்கில் நடந்தும் காலங்கழித்து வந்தான். அதன்றியும், அவன் செய்த குரூரச் செயல்களைச் சொல்லவும் ஒண்ணாது. தேவகிரி அரசரான ஹரிபால தேவர் கலகஞ் செய்ய, மூபாரக் அவ்வரசரை உயிரோடு தோலை உரித்துவிடும்படி ஆக்யாபித்தான். அவனுடைய தீச்செயல்களைக் கண்டு சகிக்க முடியாமல், அவனுடைய தாயாதி யொருவன் சதியாலோசனை செய்தான். மூபாரக் அவனையும் நிரபராதிகளான அவனுடைய 29 சகோதரர்களையும் கொன்று விட்டான். அவன் தன்னுடைய சொந்த சகோதரர்கள் மூவரைக் கண்ணைக் குத்திக் கொன்றான்; குற்றமொன்றையு மறியாத கூர்ஜ

ஜர மன்னனைச சிரச் சேதஞ் செய்தான்; தேவகிரி யரசன் கலகஞ் செய்தானெனக் கேள்வியுற்று, அவனுடைய காது களையும், மூக்கையும் அரிந்து தள்ளினான். இத்தகைய தீச் செயல்களைச் செய்வதில் அவனுக்கு உற்ற துணையாக விருந்த குஸ்ருகான் என்னும் இழி குலத்தினன் கி. பி. 1321-ல் அவ்வரசனைக் கொன்றுவிட்டுத் தான் ஸிம்ஹாஸனம் ஏறினான்.

குஸ்ருகானின் கொடுமைகளைச் சொல்லவும் நாவெழாது. அவன் மூபாராக்கின் உற்று றுறவினர்களுக்கும், மனைவி மக்கள்களுக்கும் இழைத்த தீங்கிற்கெல்லை யில்லை. அவனை மகம்மதியர்களும், ஹிந்துக்களும் ஒருங்கே வெறுத்தார்கள்; அவனுக்கு விரோதமாகக் கிளம்பிக் கலகஞ் செய்தார்கள். அவர்கள் அப்பொழுது பஞ்சாப் கவர்னராக விருந்த கியாஸ் உத்தீன் துக்ளக் என்பவரைத் தங்களுக்குத் துணையாகக் கொண்டு குஸ்ருகானோடு போர்புரிந்து அவனைக் கொன்று விட்டார்கள். பின்னர்த் துக்ளக் ஜனங்களின் வேண்டுகோளுக் கிணங்கித் தாமே டில்லியில் அரசரானார்.

---

## 24. துக்ளக் வம்சம்

### கி.பி. 1321—கி.பி. 1414

கியாஸ் உத்தீன் துக்ளக் நான்கு வருஷ காலந்தான் டில்லியில் அரசாண்டார். அவர் குடிகள் செலுத்திவந்த கடுமையான வரிகளைக் குறைத்து வியவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ததனால், நாடு முன்போல் செழித்து ஜனங்களும் சந்தோஷமாக வாழ்ந்து வரலானார்கள். அவர் வங்காளத்தையும், தக்ஷிணத்தின் பெரும்பாகத்தையும் தமது வசமாக்கிக் கொண்டார். ஒருவீடு இடிந்து மேலே விழுந்ததனால், அவர் மரணமடைந்தார்.

அவருக்குப் பின் அவர் மைந்தர் ஜூனு மகம்மது துக்ளக் என்பவர் பட்டத்துக்கு வந்தார். அவர் 26-வருஷம்

ராஜ்யபாரம் நடத்தினார். அவர் சிறந்த புத்திமான்; கல்விக்கடல்; பாரஸிகம், அரபி ஆகிய இரண்டு பாஷைகளி லும் தேர்ச்சி பெற்றவர்; கவிபாடுந் திறமை வாய்ந்தவர்; கணிதம், வானசாஸ்திரம், தர்க்கம் வேதாந்தம் முதலிய கலை களை நன்றாகக் கற்றவர்; பேசுந் திறமுடையவர். மிகுந்த தெய்வ பக்தி யுள்ளவர். இவற்றை யல்லாமல், விடாமுயற்சி யும், ஆச்சரியமான ஞாபக சக்தியும், கூர்மையான புத்தியும் அவரைத் தங்களுக்கு உறைவிடமாகக் கொண்டிருந்தன. இவ்வாறு பல நற்குணங்களையும் பொருந்தி யிருந்த அவருக்குப் பயித்தியக்காரத் துக்ளக் என்று பெயர் வந்த தற்குக் காரணம் அவருடைய மூர்க்க குணமும், பிடிவாத முமே யாகும். அல்லாமலும், அவர் சாத்தியமான காரியம் எதுவென்றும் அசாத்தியமான காரியம் எதுவென்றும் கண் டறிந்து நடப்பதில்லை. முடியாத காரியமாக விருந்தாலும் மனத்தில் நினைத்துவிட்ட வொன்றை யெப்படியாயினுஞ் செய்து முடித்தே தீரவேண்டு மென்பது அவருடைய பிடிவாதம். அதனால், அவர் பல கொடுமையான காரியங் களைக் கூடச் செய்ய நேரிட்டது. எவ்வித நற்காரியமாக விருந்தாலும், அதைச் சரியான காலத்தில், சந்தர்ப்பங்களை யும், சௌகரியங்களையும் நோக்கி யல்லவா செய்ய முயல வேண்டும்? அவர் இந்த உண்மையை ஒரு பொழுதும் கவனித்து நடந்து வரவில்லை.

அவர் தமது ராஜ்யத்தைத் தென்னிந்தியாவிற் கிருஷ்ணாநதி தீரம் வரையில் பரப்பினார். அவர் தாம் பெருக் கின பெரிய ராஜ்யத்திற்குத் தலைநகர் மத்தியில் இருக்க வேண்டுமென் றெண்ணங் கொண்டு, டில்லியை விட்டுத் தேவகிரியைத் தமக்கு ராஜதானியாக்கிக்கொள்ள ஏற்பாடு செய்தார். நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியுங்கூட இந்நாட்டின் ராஜதானியைக் கல்கத்தாவை விட்டு டில்லிக்கு மாற்றிவிட வில்லையா? ஆனால், இவ்விஷயத்தில் துக்ளக் செய்த குற்றம் என்னவென்றால், அவர் டில்லியிலிருந்த ஜனங்களை யெல்லாம் தங்கள் பொருள்களையும், ஆடு மாடுகளையும், தேவகிரிக்குக் கொண்டு சென்று அங்குக் குடியேற வேண்டும் என்று

ஆக்யாபித்தார். டில்லியிலிருந்து தேவகிரி நாற்பது நாள் பிரயாணமிருக்கும். ஐயோ! பாவம், அந்த ஏழை ஜனங்கள் பசியினாலும், தாகத்தினாலும், களைப்பினாலும், இன்னும் பற் பல நோய்களினாலும் வருந்தி நடுவழியிலேயே அவர்களில் ஆயிரக்கணக்கில் மடிந்து போனார்கள். மிகுந்தவர் சிலரே தேவகிரியை யடைந்தார்கள். தேவகிரியில் அவர்களுக்கு உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப் பொருள்கள் கொஞ்சமும் கிடைக்காதபடியினால்; அவர்கள் பசியினால் வருந்திக் கஷ்டப்பட்டார்கள். அதனைக் கண்ட துக்ளக் அவர்களைத் திரும்பவும் டில்லிக்குப் போய்விடும்படி உத்தரவு செய்தார்.

மகம்மது துக்ளக்குக்குப் பாரஸிகம், நேபாளம், சீனா முதலிய தேசங்களைப் பிடிக்க வேண்டுமென்று எண்ணம் உண்டாயிற்று. அதன்பொருட்டு அவர் பெரும் படைகளைத் திரட்டியும் அதற்காக மிகவும் ஏராளமான பணத்தைச் செலவிட்டும் வந்தார். இமயமலையைக் கடந்து சென்று சீன தேசத்தைப் பிடிக்கும் வண்ணம் அனுப்பப் பட்ட அந்தப் பெரும் படைகள் குளிருக்கும், பனிக்கும் ஆற்றாமல் அடியோடு மடிந் தொழிந்தன.

கல்வியின் பொருட்டும், தமது ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்த மொகலாயர்களுக்கு லஞ்சம் கொடுக்கும் பொருட்டும் அவர் அளவில்லாதபடி செல்வத்தைச் செலவு செய்ததனால், பொக்கிஷத்தில் பணமில்லாமற் போயிற்று. பின்னர் அவர் வரிகளை யதிகப்படுத்தியும், செம்பு நாணயங்களை வெள்ளி நாணயங்களுக்குச் சமமாக உபயோகிக்க வேண்டுமென்று ஜனங்களுக்கு உத்தரவிட்டும், குடிகளைத் துன்பப்படுத்தினார். அதனால், வியாபாரமும், விவசாயமும் அழிய வாரம்பித்தன. குடிகளிற் பலர் நாட்டைக் கைவிட்டுக் காடுகளிற் புகுந்து வசிக்கத் தொடங்கினார்கள். அவர் அதனைக் கண்டு கடுஞ்சினங் கொண்டுத் தமது சேனையை யனுப்பி யந்த ஏழைக் குடிகளிடங் கொஞ்சமும் இரக்கமில்லாமல் விலங்குகளைக் கொல்வதுபோல் அவர்களனைவரையும் அப்படியே வேட்டையாடிக் கொன்றார்.

அந்தக் கொடுமையான செய்கை வெளிப்பட்ட மாத்திரத்தில் நாடெங்கும் குழப்பமும், கலகங்களும் அதிகரித்தன. அந்தச் சமயத்தில் வங்களாமும், தக்ஷிணமும் சுயாதீனம் பெற்றுவிட்டன. அப்பொழுதுதான் தக்ஷிணத்தில் பஹ்மினி ராஜ்யமும் விஜயநகர ராஜ்யமும் ஏற்பட்டன. அதே காலத்தில் மாளவமும், கூர்ஜரமும் கலகஞ் செய்தன. கி.பி. 1351-ல், துக்ளக் கூர்ஜர நாட்டிலுண்டான கலகத்தை அடக்குவதற்காக முயன்று வருகையில், அதிகமான மீனுணவை உண்டதனால், தாத்தா என்னும் இடத்தில் இறந்து போனார்.

தலைநகரம் ராஜ்யத்தின் மத்தியிலிருக்க வேண்டுமென விரும்பியதும், மாதிரி நாணயத்தையும், காகித நாணயத்தையுங் கொண்டு லாவா தேவிக்கான செல்வத்தைப் பெருக்கி வியாபாரத்தை விருத்தி செய்விக்க வெண்ணியதும் மிகச் சிறந்த உபாயங்களேயானாலும், அவற்றை யநுஷ்டிக்கும் முறைகளைக் கவனியாது நடந்தொழுகினதினாற்றான் அவருடைய சிறந்த ஏற்பாடுகளும் நியனவாக முடிந்துவிட்டன. துக்ளக்கைக் கற்றறி மூடனுக் கொரு சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

மகம்மது துக்ளக்குக்குப் பின்பு அவருடைய தாயாதி பிரோஜ்ஷா பட்டத்துக்கு வந்தார். அவர் 40 வருஷ காலம் அரசு புரிந்தார். அவர் வங்காளத்தையும், தக்ஷிணத்தையும் ஜயித்துத் தமது ராஜ்யத்தைப் பரப்ப வேண்டுமென்றெண்ணி அதன் பொருட்டு மிகவும் பாடுபட்டு முயன்றாராலும், அந்த எண்ணம் ஈடேறவில்லை.

பிரோஜ்ஷா தமது குடிகளுக்குப் பல நன்மைகளைச் செய்தார். அவர் காலத்தில் ஜனங்கள் சந்தோஷமாகவும், சௌக்கியமாகவும் இருந்து வந்தார்கள். அவர் அநேக சத்திரங்களையும், மசூதிகளையும், பள்ளிவாசல்களையும் கட்டி வைத்தார்; பாய்ச்சலுக்கு அநுகூலமாகப் பல வாய்க்கால்களை வெட்டி வைத்தார். பானிப்பட்டு முதல் பிகானீர் வரையிலுமுள்ள யமுனை வாய்க்கால் அவரால்தான் வெட்

டப்பட்டது. இவைகளையன்றி அவர் சில புதிய பட்டணங்களையும் உண்டாக்கினர்.

அவர் குற்றவாளிகளுக்குக் குரூரமான தண்டனைகளை விதிக்கக் கூடாதென்று நியாயாதிபதிகளுக்கு உத்தரவிட்டார். அவர் வியாபாரிகள் செலுத்தி வந்த வரிகளையும், புறம்போக்கு நிலங்களில் ஆடு மாடுகளை மேய்ப்பதற்காக ஜனங்கள் செலுத்திவந்த வரிகளையும் தள்ளிவிட்டார். நாஸ்திகர்களையும், லஞ்சங் கொடுப்பவர்களையும், லஞ்சம் வாங்குபவர்களையும் அவர் தமது ராஜ்யத்தை விட்டுத் துரத்திவிட்டார். பிரோஜ்ஷா பல வைத்தியசாலைகளையும், பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபித்து அடிமைகள் கூட கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளை அமைத்து வைத்தார். அவர் வயது முதிர்ந்த போர்வீரர்களுக்கும், யுத்தத்தில் காயமடைந்து கை கால் முதலிய உறுப்புக்களை யிழந்த சிப்பாய்களுக்கும் ஆயுள் பரியந்தம் உபகாரச் சம்பளம் கொடுத்து உதவினர். அவருடைய ஆட்சியின் பெருமையும், குணத்தின் நேர்மையும் அவரே எழுதி வைத்துள்ள விவரங்களினின்றும் செம்மையாய்ப் புலப்படுகின்றன.

"எனக்கு முன் ராஜ்யபாரம் நடத்தி வந்த அரசர்களிற் சிலர் அற்பமான காரணங்களை முன்னிட்டு மகம்மதியர்களைக் கொன்றும், சிறிய குற்றங்களைச் செய்ததற்காக ஜனங்களைக் கை கால்களை வெட்டியும், கண்களைக் குத்தியும், மூக்குக் காதுகளை அறுத்தும், உயிரோடு குற்றவாளிகளின் எலும்புகளை நொருக்கியும், உயிருடன் தோலை உரித்தும், சிலுவையிலடித்தும், கண்டங் கண்டமாக வெட்டியும் ஹிம்ஸித்துத் தண்டனைகளை விதித்து வந்துள்ளார்கள். இக் கொடிய வழக்கங்களை நிறுத்திவிடும்படி கடவுள் எனக்கு நற்புத்தியைப் புகட்டியிருக்கிறார். எனக்கு முன் டில்லியில் ஆட்சி செய்த வரசர்களுக்குக் கடவுள் அருள் செய்யுமாறு அவர்களின் பொருட்டுத் தெய்வ வணக்கஞ் செய்யும்படி நான் தீர்மானித்திருக்கிறேன். மேய்கால் வரியையும், வியாபாரிகள் செலுத்தி வந்த வரிகளையும் நான் தள்ளிவிட்டேன். அவற்றை வசூல் செய்வதில் எனது உத்தியோகஸ்தர்கள்

குடிகளுக்குப் பலவித தீங்குகளைச் செய்வதனால், குடிகள் வருந்துவதைவிட நான் வருமானத்தை யிழப்பதே மேன்மையானது என்பது எனது அபிப்பிராயம். நாஸ்திகர்களையும், லஞ்சம் வாங்குபவர்களையும், குடிகளைக் கெட்ட வழிகளிற் பழக்கும் ஏற்பாடுகளை அமைத்து வருபவர்களையும் நான் நாட்டைவிட்டுத் துரத்திவிடுவேன். குடிகளுக்குத் தாழ்மையின் சிறப்பை உணர்த்துமாறு நான் பட்டாடைகளையும், விலையுயர்ந்த ஆபரணங்களையும் நீத்துவிட்டேன். பொதுக் கட்டடங்களின் பொருட்டு நான் எனது வருமானத்தின் பெரும் பகுதியைச் செலவிட்டு வந்தேன். நான் மகம்மது துக்ளக்கினால் பலவிதமான துன்பங்களை அநுபவித்தவர்களின் உற்றார், உறவினர்களை வரவழைத்து அவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கொடுத்து, அவர்களைப் பெரியவர்களின் முன்னிலையில் தாங்கள் அவர் செய்த தீங்குகளை யெல்லாம் மறந்து விட்டதன்றி அவரையும் மன்னித்துவிட்டதற் கடையாளமாக அவர்களுடைய கையொப்பங்களை வாங்கி யவற்றை அவருடைய மசூதியில் புதைத்து வைத்தேன். நான் வித்வான்களுக்கும், சண்டையிற் காயப்பட்டுத் திரும்பி வந்த யுத்த வீரர்களுக்கும், வயது முதிர்ந்த சிப்பாய்களுக்கும் அவர்களுடைய ஆயுள் பரியந்தம் உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். சிலரால் இரு முறை எனக்கு விஷத்தைக் கொடுத்துக் கொல்லுமாறு செய்யப்பட்ட பிரயத்தனங்கள் வீணாயின" என்று அவர் எழுதியிருக்கிறார்.

பிரோஜ்ஷா மேற் சொல்லியவாறு குடிகளுக்குப் பல நன்மைகளைச் செய்து, அவர்களுடைய அன்பையும், நன்றியறிவையும் அவற்றிற்குக் கைம்மாறாகப் பெற்றுக் கி.பி. 1388-ல் காலகதியை யடைந்தார். இறக்கும்பொழுது அவருக்கு வயது தொண்ணூறு.

பிரோஜ்ஷாவுக்குப் பின் பட்டத்துக்கு வந்த துக்ளக் அரசர்கள் கொஞ்சமும் பலமில்லாதவர்கள். அவர்கள் காலத்தில் மாளவம், கூர்ஜரம், காண்டேஷ், ஜான்பூர் ஆகிய நான்கும் சுயாதீனம் பெற்றுத் தனித்தனி மகம்மதிய ராஜ்

யங்களாயின. தக்ஷிணத்தில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாகி, அதனால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மாண்டு போனார்கள். அப்படிப்பட்ட கொடிய சந்தர்ப்பத்தில் கி.பி. 1398-ல், தைமூர் என்னும் மங்கோலிய தார்த்தாரியன் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான்.

தைமூர் உலகத்தில் கொலையையும், கொள்ளையையுமே தனக்குப் பெருந் தொழிலாகக் கொண்டொழுகினான். பஞ்சாபிலும், டில்லியிலும் அவன் கொன்ற ஜனங்களின் கணக்கை எண்ணி முடியாது. அவன் கொள்ளை யடித்துச் சென்ற பொருள்களையும் அளவிட வொண்ணாது. டில்லியில் நடந்த பெருஞ் சண்டையில் துக்ளக் மன்னவன் முற்றிலுந் தோல்வியடைந்து, தைமூருக்குப் பயந்து ஸிம்ஹாஸனத்தை விட்டு ஓடிப் போய்விட்டான். தைமூர் டில்லியைப் பதினைந்து நாட்கள் வரையிற் கொள்ளையிட்டும் ஜனங்களைக் கொன்றும் ஏராளமான திரவியத்துடன் தன்னூருக்குத் திரும்பினான்.

தைமூருக்குப் பயந்து நாட்டைவிட்டுக் கி.பி. 1398-ல் ஓடிப் போய்விட்ட துக்ளக் ஏழு வருஷ காலம் கழித்து டில்லிக்குத் திரும்பும் வரையில் அவனுடைய மந்திரி ராஜ்யத்தை நடத்தி வந்தான். திரும்பி வந்த துக்ளக் கி. பி. 1413 வரையில் டில்லியில் பேருக்குமட்டில் அரசனாக இருந்து வந்தான். அவன் இறந்துவிடவும், துக்ளக் வம்சம் அவனோடு அற்றுப் போயிற்று. அவனுடைய கடைசி காலத்தில் டில்லியில் பஞ்சமும், கொள்ளை நோய்களும் உண்டாகி ஜனங்கள் மடிந்தார்கள். இரண்டு மாத காலம் டில்லியில் ஒரு குருவிகூடக் கண்களிற் காணப்படவில்லை.

## 25. ஆப்கானிய ஆட்சியின் அழிவு

தைமூர் தான் இந்தியாவினின்றும் திரும்பிப் போன பொழுது கிஸிர்கான் என்பவனைப் பஞ்சாப் கவர்னராக நியமித்துச் சென்றான். கடைசி துக்ளக் அரசன் இறந்த

வுடன் அவன், தான் தைமூரின் பிரதிநிதியென்று சொல்லிக் கொண்டு டில்லியில் அரசனானான். அவனும், அவனுக்குப் பின் பட்டத்துக்கு வந்த மூன்று அரசர்களும் ஸையத் வம்சத்தரசர்கள் என வழங்கப் பெற்றார்கள். அவர்கள் காலத்தில் டில்லியும் அதைச் சார்ந்த மிகச் சிறிய நாடுந் தான் அவர்களுடைய ராஜ்யத்திற் சேர்ந்திருந்தன. அந்த மிகச் சிறிய ராஜ்யத்தைக் கூட ஆளத் திறமையில்லாமல் காலங்கழித்த ஸையத் வம்சம் கி. பி. 1451-ல் முடிவுற்றது.

அவர்களுக்குப் பின் சுமார் எழுபது வருஷகாலம் டில்லியில் ஆண்டுவந்த அரசர்களுக்கு லோடி வம்சத்தினர்கள் என்று பெயர். அவர்களில் பெலால் லோடி என்பவன் முதல் அரசன். அவன் பஞ்சாபையும், ஜான்புரியையும் ஜயித்துத் தனது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டான். கி. பி. 1489-ல், பெலால் இறந்துபோகவும், அவனுடைய மகன் ஸிகான்டர் என்பவன் பட்டத்துக்கு வந்தான். அவன் பீஹார், டிரூட் என்னும் நாடுகளைவென்று தனது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டான். இவ்வாறாக, டில்லி ராஜ்யம் முன்னிலும் அதிகமாகப் பரவிற்று. அவனுடைய காலத்தில் ஹிந்துஸ்தானத்தில் ஒரு பெரிய பூகம்பம் உண்டாயிற்று. அவன் கி. பி. 1517-ல், இறந்துபோனான்.

ஸிகான்டருக்குப் பின்னர் அவன் மகன் இப்ராஹீம் லோடி பட்டத்துக்கு வந்தான். இப்ராஹீம் மிகக் கொடியவன். அவன் ஆப்கானிய பிரபுக்களைத் தனது முன்னிலையில் கைகட்டி வாய் பொத்திக்கொண்டு, அசையாமல் நிற்கும்படி செய்தான். அவன் தனது குடிகளை மிகவும் குரூரமாக நடத்தி வந்தான். அவனுக்கு ராஜ்யத்தை ஆளுந்திறமை கொஞ்சமேனுங் கிடையாது. அவனுடைய காலத்தில் நாடெங்கும் கலகங்கள் ஏற்பட்டன. அப்பொழுது இப்ராஹீமின் சிற்றப்பனான அல்லாவுத்தீன் என்பவனும், பஞ்சாபில் கவர்னராகவிருந்த தௌலத்கான் லோடி என்பவனும் காபூலில் ஆட்சி செய்துவந்த முகலாய வரசான பாபரைத் தங்களுக்கு உதவி புரியும்படி வேண்டினார்கள். இந்தியாவின் மீது படையெடுத்து வந்து, இங்கு ஒரு ராஜ்யத்தை

ஸ்தாபிக்க வேண்டுமென்று எண்ணி, அதற்குத் தக்க சமயத்தை யெதிர் பார்த்திருந்த பாபர் அவ் வேண்டு கோளுக்கிணங்கினார். அவர் லோடி வரசனைச் சண்டையிற் றோற்கடித்துக் கொன்றுவிட்டு, டில்லி ராஜ்யத்தைக் கைப் பற்றிக் கொண்டுவிட்டார். இப்ருஹீம் தோல்வியடைந்து இறக்கவும், இந்தியாவில் ஆப்கானிய அதிகாரம் அழிந்து போயிற்று.

ஆப்கானியருடைய அரசாட்சியில் இந்தியாவின் நிலைமை எவ்வாறிருந்ததென்று அறிந்து கொள்வது அவசியமானது. மகம்மதிய வரசர்கள் எந்தவிதமான சட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்படாமல் மனம் போல் ஆண்டு வந்தார்கள். அதனால் நாட்டின் அமைதி யும், குடிகளின் சௌக்கியமும் மன்னனது குணத்தைப் பொருந்தியிருந்தன. தீங்குகள் பலவற்றை யியற்றிய மன் னர்கள் மகம்மதியர் என்றும் ஹிந்துக்கள் என்றும் வேற்று மையைப் பாராட்டாமல் பிரபுக்களில் எவர்கள் தங்களுக்கு விரோதஞ் செய்யக் கூடுமோ அவர்களைத் தலையெடுக்க வொட்டாமற்றடுத்து வந்ததன்றித் துன்புறுத்தியும் வந்திருக் கிறார்கள். சாதாரண குடிகள் பெரும்பாலும் நீங்கின்றித் தத்தம் வேலைகளைச் செய்து வந்திருக்கிறார்கள். மகம்மதிய வரசர்கள் கிராம பரிபாலனத்தின் பொருட்டு ஏற்பட்டிருந்த புராதனமான அமைப்புக்களை அவைகளிருந்த வண்ண மாகவே விட்டுவந்ததனால், கிராம வாசிகள் தங்களுக்கான ஸ்தல சுய ஆட்சியின் கீழ்ப்பட்டும், ஜமீன்தாரர்களின் ஆதரவைப் பெற்றும், வியவசாயம், கைத்தொழில், வாணி பம் முதலியவற்றைச் செவ்வனே நடத்தி வந்திருக்கிறார்கள். டில்லியில் பல அரச வம்சங்கள் தோன்றப் பல வரச வம்சங் கள் அழிந்தன. என்றாலும், கிராமக் குடிகள் அவற்றைக் கவனித்தார்களில்லை. கொடுங்கோன் மன்னர்கள் விதித்த கடுவரிகளினாலும் அவர்கள் இழைத்த பல தீங்குகளினாலும் நாட்டில் உண்டான சண்டைகளினாலும், கலகங்களினாலும் சிற்சில சமயங்களில் ஜனங்கள் துன்பப்பட்டார்களானாலும், பொதுவில் அத்துன்பங்கள் அவர்களை அதிகமாகப் பாதிக்க

வில்லை. அல்லாமலும், நாளடைவில் மகம்மதியர்கள் இந் நாட்டையே தமது சொந்த நாடாகச் செய்துகொண்டு இங்கேயே தங்கிவிட்ட காரணத்தினால், பிற்காலத்தில் அவர்களிற் சிலர் கவர்ந்துகொண்ட செல்வம் முழுவதும் நாட்டை விட்டு வெளிச் செல்லாமல் இங்கேயே உபயோகப்பட்டதனால், நாட்டின் செல்வம் குறைவுபடவில்லை.

மதவிஷயத்திலும், மகம்மதிய வரசர்களிற் சிலர் அந்நியர்களைத் தமது மதத்திற் சேரும்படிக் கட்டாயப் படுத்தினார்களென்றாலும், பெரும்பாலார் ஹிந்துக்களை உதாசீனமாக நடத்தி வந்ததையல்லாமல் அவர்களுக்குத் தீங்கொன்றையும் இழைக்கவில்லை. ஜஸியா என்னும் தலைவரியைக் கட்டுவதற்குப் பதிலாகச் சில ஹிந்துக்கள் மகம்மதியர்களானார்கள். அல்லாமலும் ஹிந்துக்கள் பல உயர்ந்த உத்தியோகங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நாட்டின் சுபிக்ஷம் அக்காலத்தில் ஏற்பட்ட நூற்றுக் கணக்கான கட்டடங்களினாலும், வியவசாயத்திற்கான வாய்க்கால்கள், ஏரி, குளங்கள், பாலங்கள் முதலிய சாதனங்களினாலும், வைத்திய சாலைகளினாலும் கல்வியின் அபிவிருத்தியினாலும் நன்றாக விளங்குகின்றது.

அல்லாமலும், வைஷ்ணவ மதத்தை நிலைநிறுத்தின முதன்மையான மதாசாரியர் என்று ஏற்கெனவே சொல்லப்பட்ட ஸ்ரீராமாநுஜரை யன்றி, ராமாநந்தர், கபீர், நானக், சைதன்யர் முதலான மகான்கள் தோன்றி ஹிந்து மதத்தை வளர்த்துக் குடிகளுக்குப் பக்தியையும், ஆஸ்திக புத்தியையும் உண்டு பண்ணினதும், ஆப்கானிய வரசர்கள் காலத்திற்றான். இப்பொழுது பரவியிருக்கும் சைவம், வைஷ்ணவம் என்னும் சமயங்களும், பிராமணர்கள் கொண்டொழுகும் ஸ்மிருதிகளும் இக்காலத்திற்றான் பிரபலமடைந்தன. நமது நாட்டின் வழக்கங்கள் என்றும், நமக்கான சட்டங்கள் என்றும் மேனாட்டினர் வழங்கும் பலவும் இப்பொழுதுதான் உண்டானவை. இன்னும் இக்காலத்தில் ஸம்ஸ்கிருத பாஷையிலன்றித் தென்னாட்டு பாஷையாகிய தமிழிலும் சிறந்த நூல்கள் எழுதப்பட்டன. இப்பொழுது எழுதப்

பட்ட நூல்களில் முக்கியமானவை கம்ப ராமாயணம், நள வெண்பா, நைஷதம் முதலியன. வட இந்தியாவிலும் இக்காலத்தில் ஹிந்தி பாஷையில் பல சமயநூல்கள் எழுதப் பட்டன.

இக்காரணங்களினாலும், காஷ்மீரம், நேபாளம், காமரூபம் முதலிய வட நாடுகளிலும், மத்திய இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் பல மாட்சிமைதங்கிய ஹிந்து ராஜ்யங்கள் மகம்மதியர்கள் பலாட்டியர்களாக இருந்துவந்த காலத்திலுங் கூடச் சிறப்புற்று விளங்கி வந்ததனாலும், மகம்மதியர்கள் இந்தியாவுக்கு வந்தது முதல் மகம்மதியர் காலம் என்றுவது, அவர்களுடைய ஆட்சி ஏற்பட்டதனால் ஹிந்துக்களினுடைய ஆட்சி உடனே அழிந்துபோய்விட்ட தென்றுவது கொள்ளுதல் தவறு.

---

## 26. பஹ்மினி விஜயநகர ராஜ்யங்கள்

மகம்மது துக்ளக்கின் கடைசி காலத்தில் அவருடைய ராஜ்யத்தில் கலகங்கள் உண்டாயினவென்றும், அப்பொழுது தக்ஷிணம் சுயாதீனம்பெற்றுவிட்டது என்றும் ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது. டில்லி ஸுல்தானுடைய உத்தியோகஸ்தர்களிலொருவரான ஹாஸன் ஜாபர்கான் என்பவர் கி.பி. 1347-ல், தௌலதாபாத்தைக் கைப்பற்றிக்கொண்டு தான்சுயாதீனத்தைப் பெற்றார். அவர்தான் பஹ்மினி வம்சத்தின் மூலபுருஷர். அவர் தாம் ஸுல்தான் அல்லாஉத்தீன் ஹாஸன் பஹ்மினி என்று பெயர் வைத்துக்கொண்டார். பஹ்மன் என்றவொரு பாரஸிக மன்னன் வம்சத்திற் றோன்றியதனால் அவருக்கும் அவர் சந்ததியாருக்கும் பஹ்மினி எனப்பெயர் வந்தது என்று சிலரும், ஜாபர்கான் ஒரு பிராமணரிடத்தில் அடிமையாக விருந்து அவருடைய அநுக்கிரஹத்தினால் தாம் உயர்ந்த பதவிக்கு வந்ததனால், அந்தப் பிராமணருடைய பெயர் என்றும் அழியாவண்ணம் தமது பெயரோடு பஹ்மினி என்பதைப் பட்டப்பெயராகப் பூண்டார் என்று சிலரும் அபிப்பிராயப்படுகிறார்கள். அது

எவ்வாருயினுமாகுக. அவர் உண்டுபண்ணின ராஜ்யத்திற்கு மட்டில் பஹ்மினி ராஜ்யம் என்று பெயர் உண்டாயிற்று. அவர் அந்த ராஜ்யத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருக்கி வடக்கில் பேன் கங்காநதி முதல் தெற்கில் கிருஷ்ணா நதி வரையிலும், மேற்கில் அராபிக் கடலிலிருந்து கிழக்கில் பாங்கீர் பட்டணம் வரையிலும் பரவும்படிச் செய்தார். அந்த ராஜ்யத்திற்குக் கொஞ்ச காலம் வரையில் குல்பர்க்கா என்ற பட்டணம் தலை நகராக விருந்தது. பின்னர் ஆமத்ஷா என்னும் ஸுல்தான் காலத்தில் மகம்மதாபாத்—பீடார் என்பது தலை நகரமாயிற்று.

பீடார் வெகு அழகான பட்டணம். அந்தப் பட்டணம் சமுத்திர மட்டத்திற்குச் சுமார் 2,500 அடி உயரத்தில் கட்டப்பட்டிருந்தது. அதன் கோட்டை சுற்றிலுமுள்ள அகழியிலிருந்து வெட்டி யெடுக்கப்பட்ட கற்களினலமைக்கப்பட்டுச் சத்துருக்களினல் எளிதிற் பிடிக்க முடியாதபடி வலிமை பொருந்தி யிருந்தது. கோட்டையின் சுவர் சுமார் 4,500 கஜம் நீளமும், 15 கஜம் அகலமும், 12 கஜம் உயரமும் உடையது. கோட்டைக்குள் அரண்மனைகளும், மசூதிகளும், தங்கசாலை, மருந்துக் கிடங்கு, படை வீடு முதலியவைகளும் இருந்தன. கோட்டையைக் காப்பதற்குப் பல பீரங்கிகள் சுற்றிலும் வைக்கப்பட்டிருந்தன. அவைகளி லொன்று 23 அடி நீளமும், 19 அங்குலம் அகலமுள்ள வாய்ப்புறமும் உள்ளது. அந்தக் காலத்தில் அக்கோட்டை எளிதில் ஜயிக்க முடியாத தெனவே பலராலும் கருதப்பட் டிருந்தது. இன்னும் அது தக்ஷிணத்திற்கு ஒரு திறவுகோலாகவு மிருந்தது. கோட்டைக்கு மேற்கில் மாமரங்களும், புளிய மரங்களும் நிறைந்த தோப்பு ஒன்று வளர்ந்திருந்தது. நகரம் கோட்டையைச் சார்ந்திருந்த தென்றாலும், கோட்டைக்கும் நகரத்துக்கும் இடையில் ஒரு பெரிய மைதானம் அமைந்திருந்தது. நகரத்தின் வீதிகள் மிகவும் அகலமாக விருந்தன. வீதிகளின் இருபுறத்திலும் வீடுகள் வெகு அழகாகக் கட்டப்பட் டிருந்தன. கிணறுகளில் தண்ணீர் ஆழத்திலிருந்த போதிலும், அந்நகரம்

மிருந்த நீர்வளம் பொருந்தியிருந்ததென்றே சொல்லவேண்டும்.

இத்தகைய வனப்பு வாய்ந்த பீடார் பட்டணத்தைத் தலை நகராகப் பெற்ற பஹ்மினி ராஜ்யம் சுமார் இருநூறு வருஷங்கள் வரையில் முதன்மை பெற்றிருந்தது. அந்த ராஜ்யத்தை அல்லா உத்தீனுக்குப் பின்பு அநேக ஸுல்தான்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களில் ஹுமாயூன் என்பவர் ஒருவர். அவர் கி. பி. 1457 முதல் கி. பி. 1461 வரையில் ஸுல்தானாக விருந்தார். அவருக்கு க்வாஜா மஹ்மூது காவான் என்று ஓர் ஒப்பற்ற மந்திரி இருந்தார். அவர் ஹுமாயூன் காலத்திற்குப் பின்பும் மந்திரியாக விருந்தார். அவர் ராஜ்ய பரிபாலனத்திலன்றி யுத்த முனையிற் சேனைகளை நடத்திச் சண்டை செய்வதிலும் நிபுணர். அவர் கி. பி. 1473-ல், பெல்காம் கோட்டையைக் கைப்பற்றி விஜயநகர வரசரிடமிருந்து கோவாவை மீட்டுக் கொண்டார். அப்பொழுது தான் பஹ்மினி ராஜ்யம் வெகு தூரம் பரவி யிருந்தது. ஆனால், தக்ஷிணத்தில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டு ஜனங்கள் மடிந்து போனார்கள். கி. பி. 1481-ல் ஸுல்தான் மகம்மதுஷா கோண்டபல்லியை எதிர்த்துச் சண்டை செய்தபொழுது, மந்திரியான காவானின் வேண்டுகோளின் படி காஜீ என்னும் பட்டத்தைப் பூண்டார். ஸுல்தான் தமது கையினாலேயே சில பிராமணர்களைக் கொன்றதனால் அந்தப் பட்டத்துக்கு உரியவரானார். கொண்டபல்லியில் கோவிலிருந்த விடத்தில் ஒரு மசூதி கட்டப்பட்டது. அதன் பின்பு பஹ்மினி ஸுல்தான் காஞ்சீபுரத்தை எதிர்த்து வந்து ஏராளமான பொருளைக் கொள்ளை கொண்டு சென்றதாகச் சொல்லப்பட் டிருக்கிறது. காவானுக்கு விரோதிகளான சிலர் அவர் ராஜத்ரோகி என்று அவர் மீது குற்றஞ்சாட்டி அவர் எழுதினதாகச் சொல்லி அவருடைய கையொப்பம் போடப்பட்டிருந்த ஒரு பொய் நிருபத்தையும் ஸுல்தானுக்குக் காட்ட, ஸுல்தான் தமது குடிவெறியில் காவானைக் கொன்று விடும்படி உத்தரவு செய்தார். கி. பி. 1481-ம் வருஷம் எப்ரல் மாதத்தில் காவான் அநியாயமாகக் கொலை

யுண்டு போனார். அவர் இறக்கவும், பஹ்மினி ராஜ்யம் க்ஷீணிக்கத் தலைப்பட்டது.

மெடோஸ் டெய்லர் என்பவர் காவானை மிகவும் புகழ்ந்து எழுதி யிருக்கிறார். 'அவர் அக்காலத்திலும் அவருக்கு முந்திய காலத்திலும் இருந்த மகம்மதியர்கள் யாவரினுஞ் சிறந்தவர். அவர் செய்தன போன்ற புத்திசாலித்தனமான சீர்திருத்தங்களும், அவரிடத் திருந்தனபோன்ற திறமையும், தைரியமும், அவர் செய்து வந்ததை யொத்த நடுவு நிலைமையான நியாயமும், அவரளித்தன போன்ற நற்கொடைகளும், அவரிடத்திற் குடிகொண் டிருந்ததவை யொத்த ஒப்புரவும், தேர்ச்சியும் வேறு எந்த மகம்மதியரிடத்திலு மில்லை. அவர் பீடாரில் ஒரு பெரிய கல்லூரியை ஏற்படுத்தி நடத்தி வந்ததை யல்லாமல், தமது பணத்தைக் கொண்டு பல கோட்டைகளை யமைத்து வைத்தார்' என்று கூறி யிருக்கிறார். பெரிஷ்டா என்னும் சரித்திராசிரியரும் அவரைக் கொண்டாடி யிருக்கிறார்.

பஹ்மினி ராஜ்யத்தின் கடைசி யரசன் மஹ்மூதுஷா என்பவன். அவன் கி.பி. 1482 முதல் 1518 வரையில் ஆட்சி பெற்றிருந்தான். அவன் உபயோக மற்றவன். அவன் துஷ்ட சிநேகிதர்களைச் சேர்த்துக்கொண்டு, ராஜ காரியங்களைக் கவனியாமல் சிற்றின்பங்களிலேயே தனது காலத்தைக் கழித்து வந்தான். அதனால், அவன் கீழிருந்த மாகாண கவர்னர்கள் சுயேச்சாதிகாரம் பெற்றுத் தனித் தனிச் சிற்றரசர்களானார்கள். பஹ்மினி ராஜ்யத்தின் தலைநகரான பீடாரும் அதைச் சார்ந்த ஒரு சிறிய பிரதேசமுந்தான் மஹ்மூதுஷாவுக்குச் சொந்தமாயிருந்தன. அதுவும் கொஞ்ச காலத்திற்கெல்லாம் ஒரு தனி ராஜ்யமாய் விட்டது. ஆகவே, ஒன்றாக விருந்த பஹ்மினி ராஜ்யம் பீரார், ஆமது நகரம், பீடார், பீஜப்பூர், கோலகோண்டா என ஐந்து சிறிய ராஜ்யங்களாகப் பிரிந்து போயிற்று. இந்த ராஜ்யங்கள் தங்களுக்குள் ஒற்றுமையை நீத்து அடிக்கடி ஒன்றோடொன்று சண்டையிட்டு வந்தன. அவற்றுள் பீரார் கி.பி. 1574 வரையில் தனி ராஜ்யமாக விருந்து, அந்த வருஷத்

தில் ஆமதுநகரத்திற் சேர்த்துக் கொள்ளப்பட்டுத் தனது சுயாதீனத்தை இழந்து விட்டது. பீடார் ராஜ்யமும் கி.பி. 1609-ல் தனது சுயாதீனத்தை இழந்து பீஜப்பூர் ராஜ்யத்திற் சேர்ந்து விட்டது. ஆமதுநகரம் கி. பி. 1576-ல் ஒரு முறையும், கி. பி. 1600-ல் மற்றொரு முறையும், அக்பர் சக்ரவர்த்தியால் எதிர்க்கப்பட்டது. அப்பொழுது அது பேருக்குமட்டில் அக்பருக்கு உட்பட்டிருந்ததே யல்லாமல், அதன் பெரும்பாகமும் தனிப்பட்ட ராஜ்யமாகவே இருந்தது. கி. பி. 1637-ல் அதை ஷாஜஹான் தமது ராஜ்யத்திற் சேர்த்துக்கொண்டுவிட்டார். பீஜப்பூரும், கோலகொண்டாவும் கி. பி. 1686, 1687-ல் ஒளரங்கஜீப்பினால் முகலாய ராஜ்யத்திற் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இவ்வண்ணமாக அந்த ஐந்து ராஜ்யங்களும் அழிந்து போயின.

துருக்கிய ஜாதியைச்சேர்ந்த யூஸப் அடில்ஷா என்பவர் பஹ்மினி ராஜ்யத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து நாளடைவில் பீஜப்பூருக்குக் கவர்னரானார். அவர் பீடாரில் ஆண்டு வந்த பஹ்மினி ஸுல்தான் பலஹீனன் என்றறிந்து கி. பி. 1490-ல் சுயாதீனம் பெற்றுப் பீஜப்பூரைத் தனி ராஜ்யமாகச் செய்து கொண்டு ஆட்சி செய்யத் தொடங்கினார். அவர் ஒரு சமயத்தில் விஜயநகரத்தின் மீது படையெடுத்துச் சென்று ஜயமடைந்தார். அவருக்குப் பின் அவருடைய சந்ததியார்கள் வெகு காலம் வரையில் பீஜப்பூரில் ஆண்டு வந்தார்கள். அவர்கள் காலத்தில் அந்த ஐந்து மகம்மதிய ராஜ்யங்களும் தமக்குள்ளேயே பல தடவை சண்டை செய்து பலங் குன்றப்பெற்றன. கடைசியில் கி. பி. 1565-ல் பீஜப்பூர், கோலகொண்டா, ஆமதுநகரம் ஆகிய இந்த மூன்று ராஜ்யங்களின் அரசர்களும் ஒன்று சேர்ந்து தலைக் கோட்டை என்னுமிடத்தில் விஜயநகர வரசரைச் சண்டையிற் றோற்கடித்து அவருடைய ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள்.

பீஜப்பூரை ஆண்டு வந்த அரசர்களில் ஒருவரான ஆலி என்பவர் பீஜப்பூரில் ஒரு பெரிய பள்ளிவாசலையும், ஏரியை

யும், அதிலிருந்து பல வாய்க்கால்களையும், நகரத்தைச் சுற்றி லும் மிகவும் கனமான மதிலையும் கட்டி வைத்தார்.

மகம்மது துக்ளக்கின் தென்னிந்தியப் படையெழுச்சி யைப்பற்றி ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கின்றது. அவர் கி. பி. 1323-ல் வாரங்கல் நாட்டையும், கி. பி. 1327-ல் துவார சமுத்திரத்தையும் கைப்பற்றிக்கொண்டா ரல்லவா? துக் ளக்கின் கொடுமை காரணமாகக் கலகங்கள் உண்டாகவும், அவருடைய ராஜ்யம் பிரிவு பட்டுவிட்டது. அவற்றிலொன் றான ராஜ்யத்தைப்பற்றின விவரங்கள் மேலே சொல்லப்பட் டுள்ளன.

துக்ளக்கின் கொடுமையே பஹ்மினி ராஜ்யத்தைப் போன்று விஜயநகர ராஜ்யமும் ஏற்பட்டதற்கு முக்கிய காரணமாம். வாரங்கல் துவாரசமுத்திரம் ஆகிய இவ் விரண்டிலொன்று துக்ளக் வசமானபொழுது, அந்நாட் டில் அரசருக்குக் கப்பங்கட்டியும், அவருடைய அதிகாரத் திற்கு உட்பட்டும் ஐந்து சகோதரர்கள் இருந்து வந்தார்கள். மகம்மதியர்களுடைய கொடுமையைத் தடுக்கவேண்டு மென் னும் பேரவா அவர்களுக்குண்டாயிற்று. அதனால், அவர்கள் தங்களுடைய நாட்டை விட்டுவிட்டுத் துங்கபத்திரையைக் கடந்து, அதன் தென் கரையில் ஒரு தனி ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று முயன்று வந்தார்கள். அவ்வை வரில் ஹரிஹரர், புக்கர் என்பவர்கள் தான் முதன்மையான வர்கள். அந்த இரண்டு சகோதரர்கள் ஏற்படுத்திய ராஜ்ய மே விஜயநகர ராஜ்யம் என்பது. அந்த ராஜ்யத்தின் தலை நகரம் விஜயநகரம். அந்த நகரம் மிகவும் அழகானது. ஹரிஹரன் அதைச் சத்துருக்கள் எளிதிற் கைப்பற்றா வண் ணம், சுற்றிலும் உறுதியும், உயரமுமான மதில்களை எழுப்பி, ஆழமும், அகலமுமான அகழிகளை வெட்டிப் பலப்படுத் தினான். அந்தப் புதிய நகரம் ஏழாண்டளவு கட்டப்பட் டது. அது அக்காலத்திலிருந்த பட்டணங்களுக்கெல்லாம் மிகவும் பெரியது. அதில் ஆகாயத்தை அளாவும் அநேக மாடமாளிகைகள் சித்திர வேலைப் பாடுகள் விளங்கக் கட் டப்பட்டிருந்தன. எங்கும் பழந்தரும் மரங்கள் அடர்ந்த

உத்தியானங்களும், மலர்கள் நிறைந்த பூஞ்சோலைகளும் அழகாக வளர்ந்து காண்பவர்களின் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து பொலிந்தன. நகரத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் வளம் பொருந்திய நன்செய், புன்செய் நிலங்கள் சமமாக அமைந்திருந்தன. உழவர்களும், வியாபாரிகளும் நெருங்கித் தத்தம் தொழில்களை விமரிசையாக நடத்தி நாட்டைச் செழிக்கச் செய்து வந்தார்கள். துங்கபத்திரை நதியிலிருந்து புறப்படுகின்ற பல வாய்க்கால்கள் நாட்டின் நான்கு பக்கங்களிலும் நுழைந்து சென்று பயிர்த் தொழிலை வளர்த்துவந்தன.

அந்தப் பெரிய பட்டணத்தின் கடைவீதிகள் மிகவும் அழகுள்ளவை. அங்கே வியாபாரிகள் விலையுயர்ந்த சாமான்களை ஏராளமாகத் தருவித்து விற்று வந்தார்கள். அந்தக் கடைகளில் சிறந்த வஸ்திரங்களும், உயர்ந்த ரத்தினங்களும் மலைகள்போலக் குவிந்து கிடக்கும். அவற்றைக் கொள்வதன் பொருட்டும், தாங்கள் கொண்டு வந்த சரக்குக்களைக் கொடுப்பதன் பொருட்டும் எண்ணிறந்த ஜனங்கள் கூட்டங் கூட்டமாக நிறைந்து வேண்டிய பொருள்களை வாங்கியும், விற்றும் வந்தார்கள். சுருங்கச் சொல்லுவோமானால், அந்நகரம் அமராவதியோ அல்லது அளகாபுரியோ என்று சொல்லத்தகுந்த பெருமை வாய்ந்து விளங்கிற்றென்பது மிகையாகாது. ஒப்புயர்வற்ற சிறப்புப் பொருந்திய அந்தப் பட்டணத்துக்கு ‘ **விஜயநகரம்** ’ என்று பெயரிடப்பட்டது. **மாதவ வித்யாரண்யர்** என்னும் பிராமணரின் சிஷ்யனான ஹரிஹரன் அந்நகரத்தைத் தனது குருவின் ஞாபகார்த்தமாக ‘ **வித்யாரண்யம்** ’ எனவும் வழங்கினான். கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கின பல வித்வான்கள் நெருங்கி வசித்து வந்த அந்த நகரத்திற்கு ‘**வித்யாரண்யம்**’ என்னும் பெயரும் பொருந்தியதேயாகுமல்லவா? ஹரிஹரன் அந்த விஜயநகரத்தைத் தனது ராஜ்யத்திற்குத் தலைநகராக வைத்துக்கொண்டு மிகுந்த கீர்த்தியுடன் ஆட்சி செய்து வந்தான். துங்கபத்திரா நதியின் வடகரை வரையிற் பரவியிருந்த பத்மினி ராஜ்யத்திற்கும், அவ்வாற்றின் தென்கரை முதல் கன்னியா

குமரி வரையிற் பரவிவிட்ட விஜயநகர ராஜ்யத்திற்கும் பற்பல காரணங்களை முன்னிட்டு அடிக்கடிச் சண்டைகள் நடந்து வந்தன.

விஜயநகரத்தை ஆண்டு வந்த அரசர்களில் **கிருஷ்ண தேவராயர்** என்பவர் மிகச் சிறந்தவர். அவர் கி. பி. 1509 முதல் கி. பி. 1530-வரையில் ஆட்சி செய்தார். அவர் பராக்கிரமசாலி. அவர் அப்பொழுது வியாபாரம் செய்வதற்கென்று இந்தியாவுக்கு வந்திருந்த போர்ச்சுகீஸியருக்கு அநுகூலமாக இருந்தார். அவருக்குச் சுற்றிலுமுள்ள நாடுகளை வென்று தமது ராஜ்யத்தைப் பெருக்கவேண்டுமென்னும் எண்ணம் உண்டாயிற்று. அவர் மைசூரின்மீது படையெடுத்துச் சென்று சிவசமுத்திரம், ஸ்ரீரங்கப்பட்டணம் என்னும் ஊர்களைக் கைப்பற்றி, மைசூரைத் தமக்குச் சுவாதீனஞ் செய்து கொண்டார். பிறகு ஒரிஸ்ஸா, கோலகொண்டா நாடுகளின்மீது படையெடுத்துச் சென்று ஜயம் பெற்றார். அவர் பீஜப்பூர் ஸுல்தானுடன் சண்டைசெய்து ரைச்சூர் மாகாணத்தைப் பிடித்துக் கொண்டார். அப்பொழுது அவர் பஹ்மினி ராஜ்யத்தின் பழைய தலைநகரான குல்பர்க்காவிலிருந்த கோட்டையை யிடித்துச் சமன் செய்துவிட்டார். இவ்வாறாக அவருடைய ராஜ்யம் தென்னிந்தியா முழுவதும் பரவி விட்டது.

அந்தப் பெரிய ராஜ்யத்தை அவர் மிகுந்த கீர்த்தியுடன் பரிபாலித்து வந்தார். அவருடைய அதிகாரத்தின் கீழிருந்த பல சிற்றரசர்கள் அவருக்கு அடங்கிக் கப்பங் கட்டி வந்தார்கள். அவ்வரசர்கள் யுத்த காலங்களில் கிருஷ்ண தேவராயருக்குச் சைந்யங்கள் கொடுத்தும் உதவி வந்தார்கள்.

கிருஷ்ணதேவராயர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர். அவர் தம்முடைய சமஸ்தானத்தில் அநேக வித்வான்களை வைத்து ஆதரித்து வந்தார். அவர்களுள் அவருடைய மந்திரியான **திம்மரசுவும், பெத்தண்ணாவும்** முக்கியமானவர்கள். அந்த அரசருக்கே கவிபாடுந் திறமையுண்டு. தெலுங்கு




THE INDIAN PUBLISHING HOUSE, LTD.

பாஷையில் அவர் மிகத் தேர்ச்சி பெற்றவர். அந்த மன்னர் தெலுங்கு பாஷையில் 'ஆமுக்த மால்யத' என்னும் மிகச் சிறந்த காவ்யத்தை இயற்றி யிருக்கின்றார். அது ஆழ்வார்கள் பன்னிருவரில் பெரியாழ்வார் சரித்திரத்தைக் கூறுவது. அவர் பார்ப்பதற்கு வெகு லக்ஷணமாக இருப்பார்.

அவ்வரசர், தாம் வைஷ்ணவராயிருந்தும் மற்றைய சமயத்தினரிடத்திலும் அன்பாக விருந்தார். அவர் தோற்றுப் போன சத்துருக்களையும், தமது வசப்பட்ட கைதிகளையும் தயையுடன் நடத்தி வந்தார். அவர் தம்மிடம் வருபவர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்று, இனிமையாகப் பேசிச் சந்தோஷிப்பித்தனுப்புவார். அவர் எப்பொழுதும் தமது குடிகளினிடத்து அன்பு பாராட்டி, அவர்களுடைய நன்மையையே நாடி உழைத்துவந்தார். அவர் கணக்கிட வொண்ணுத திரவியத்தைச் செலவு செய்து அநேக ஆலயங்களையும், தர்மசாலைகளையுங் கட்டிவைத்தார். காஞ்சீபுரத்தில் தேவாதிராஜன் கோவிலின் ஒரு கோபுரம் அவரால்தான் கட்டப்பட்டதென்று சொல்லுகிறார்கள். அதற்கிணங்க அக்கோபுரத்திற்கு இன்னமும் 'ராயகோபுரம்' என்னும் பெயர் வழங்கி வருகின்றது. கிருஷ்ண தேவராயர் கி. பி. 1530-ல் காலஞ் சென்றார்.

கிருஷ்ண தேவராயருக்குப் பின் முறையே அச்சுத தேவராயரும், சதாசிவ ராயரும் பட்டத்துக்கு வந்தார்கள். அவர்கள் காலத்தில் பல சிற்றரசர்கள் சுயாதீனம் பெற்று விட்டார்கள். அதனுல், விஜயநகர ராஜ்யம் க்ஷீணிக்கலாயிற்று.

ராமராயர் காலத்தில் விஜயநகர ராஜ்யம் மறுபடியும் கொஞ்சம் மேம்பாட்டை அடைந்தது. ஆயினும், அவர் மகம்மதியர்களை அதிக அலக்ஷியமாகவும், குரூரமாகவும் நடத்தி வந்ததனுலும், பல தடவைகளில் ஹிந்துக்கள் மகம்மதிய ஸ்திரீகளை அவமானப்படுத்தி, மகம்மதியர்களுடைய மசூதி முதலியவற்றை யிடித்துப் பல தீமைகளை யியற்றி வந்ததனுலும், பீஜப்பூர், கோலகொண்டா, ஆமது நகரம்] ஆகிய நாடுகளை யாண்டுவந்த ஸுல்தான்கள் தங்

களுக்குள்ளிருந்த விரோதங்களை மறந்து மூவரும் ஒன்று சேர்ந்து விஜயநகரத்தை யெதிர்த்துச் சண்டையிட்டார்கள். கி. பி. 1565-ல், தலைக்கோட்டை என்னுமிடத்தில் நடந்த அந்தச் சண்டையில் மகம்மதியர்கள் வெற்றி பெற்றார்கள் என்று நீங்கள் முன்னமே படித்திருக்கிறீர்கள். அந்தச் சண்டையில் ராம ராயரும், அவர் சகோதரர், வெங்கடாத்திரி என்பவரும் மாண்டு போனார்கள்.

மகம்மதியர்கள் விஜயநகரத்தைக் கைப்பற்றி ஹரிஹரன் கட்டிவைத்த அழகிய மாளிகைகளையும், கோபுரங்களையும் இடித்துத் தகர்த்து, நகரத்தை முழுவதும் பாழாக்கி விட்டார்கள். இவ்விதமாக அந்தப் பெரிய நகரம் தனது பெருமையை முற்றிலும் இழந்து அழிந்து போயிற்று. பல்லாரி ஜில்லாவில் துங்கபத்திரை யாற்றின் கரையிலுள்ள ஹம்பி என்னும் கிராமத்திற் கருகில் பாழாய்க் கிடக்கின்ற மாளிகைகளையும், வெளவாலுங் குரங்கும் வாசஞ் செய்து வருகின்ற பல தேவாலயங்களையும், இடிந்துபோன கோட்டைச் சுவர்களையும், தூர்ந்துபோன அகழிகளையும் நாம் இன்னமும் காணலாம். ராம ராயருக்குப் பின்னர், அவருடைய மற்றொரு சகோதரராகிய திருமலை ராயர் சந்திரகிரிக்கு ஓடிப்போய்விட்டார். சந்திரகிரிக் கோட்டையில் அவரும், அவருடைய சந்ததியாரும் கொஞ்ச காலம் வரையில் இருந்து ஆண்டுவந்தார்கள். சந்திரகிரியில் ஆட்சிசெய்து வந்த ஸ்ரீரங்கராயரிடமிருந்து தான் ஆங்கிலேயர்கள் சென்னப்பட்டணத்தை வாங்கிக் கொண்டார்கள். இவ்வாறாக விஜயநகர ராஜ்யம் அழிந்துபோயிற்று.

விஜயநகரத் தரசர்கள் செழித்தோங்கிச் செல்வத்தில் மூழ்கி யிருந்தார்கள். அரண்மனையில் ஓர் அறை முழுவதுந் தந்தத்தினால் அமைக்கப்பட் டிருந்தது. கம்பங்கள் தந்தத்தினாற் செய்யப்பட்ட ரோஜாப் புஷ்பங்களினாலும், தாமரைப் பூக்களினாலும் அலங்கரிக்கப்பட் டிருந்தன.

அரசர்கள் தங்களுடைய உத்தரவுகளை வாய் மொழியாகவே செய்துவந்தார்கள். அதற்கென்று ஏற்படுத்தப்

பட்டிருந்த உத்தியோகஸ்தர்கள் அவற்றைப் புஸ்தகங்களிற் பதிவுசெய்து கொண்டார்கள்.

ராஜ்யம் சுமார் நூறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு பிரபுவின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தது. அந்தப் பிரபுக்கள் அரசருக்கு வரிசெலுத்தி வந்ததையன்றிச் சேனைகளும் கொடுத்துதவினார்கள். குடிகள் தங்களுடைய வருமானத்தில் ஆறிலொரு பங்கை வரியாகச் செலுத்தி வந்தார்கள். குற்றஞ் செய்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள்.

விஜயநகரத் தரசர்கள் ஸம்ஸ்கிருத, தெலுங்கு வித்வான்களைத் தமது சமஸ்தானத்தில் வைத்து ஆதரித்து வந்திருக்கிறார்கள். அவர்களிற் சிலர் தாங்களே சிறந்த கல்விமான்களாகவும் இருந்தார்கள். அல்லாமலும், அவர்கள் அநேகம் பலமான கோட்டைகளையும், அளவில்லாத வியவசாயத்திற்கான ஏரி, குளம், வாய்க்கால் முதலான சாதனங்களையும், அழகான மாளிகைகளையும், சித்திரங்களினாலும், சிற்பங்களினாலும் அலங்கரிக்கப்பட்ட கோயில்களையும் கட்டி வைத்தார்கள். ஹஸார ராமஸ்வாமி கோயிலின் சுவர்களில் செதுக்கப்பட்டிருந்த இராமாயணக் கதையை யுணர்த்தும் அழகிய சித்திரங்கள் கண்ணைக் கவரும் வனப்பு வாய்ந்தன. அவற்றால், நானாவிதமான வித்தைகளையும் அவ்வரசர்கள் பரிவுடன் ஆதரித்து வந்திருக்கிறார்கள் என்று ஏற்படுகின்றது.

---

## முகலாய ராஜ்யம்

## 27. பாபர்

### (கி. பி. 1526—கி.பி. 1530)

தௌலத்கான் என்னும் பஞ்சாப் கவர்னரும், இப்ருஹீமின் சிற்றப்பனை அல்லாவுத்தீனும் இப்ருஹீம் லோடிக்கு விரோதமாகக் கிளம்பி அப்பொழுது காபூலில் ஆட்சிசெய்து வந்த மொகலாய வம்சத்தைச் சேர்ந்த பாபரை டில்லியின்மீது படையெடுத்து வந்து லோடி யாசனைத் தண்டிக்கும்படி வேண்டினார்களென்று ஏற்கெனவே

சொல்லப்பட்ட தல்லவா? பாபரும் அவ்வேண்டுகோளுக் கிணங்கி ஒரு பெருஞ் சேனையைத் திரட்டிக் கொண்டு டில்லியின் மீது படையெடுத்து வந்தார்.

பாபருடைய தகப்பன் துருக்கிய ஜாதியையும், தாய் மங்கோலிய ஜாதியையும் சேர்ந்தவர்க ளானதனால், அவரிடம் மங்கோலியருடைய ஊக்கமும், துருக்கியருடைய தைரியமும் கலந்திருந்தன.

தைமூர் இறந்துவிடவும், அவருடைய பெரிய ராஜ்யம் சிதைவுண்டு அநேகம் சிறிய ராஜ்யங்களாகப் பிரிந்து போயிற்று. அவற்றில் பாபருடைய தகப்பனுக்கு ஒரு சிறிய பாகந்தான் கிடைத்தது. அவர் இறந்தபொழுது கி. பி. 1494-ல், பாபர் பர்க்கானு என்னும் மாகாணத்துக்கு அரசரானார். அப்பொழுது அவருக்கு வயது பதினொன்று. தமது ராஜ்யத்தைப் பரவச் செய்து தைமூரைப்போலத் தாமும் ஒரு பெரிய ராஜ்யத்தை யாளவேண்டுமென்னு மாசை அவருக்கு உண்டாயிற்று. பத்து வருஷ காலம் விடா முயற்சியுடன் சண்டையிட்டு அவர் இருமுறை ஸாமர்கண்ட் என்னு மிடத்தில் ஸிம்ஹாஸனம் ஏறினார். ஆனால் அவர் அங்கிருந்து துரத்தப்பட்டதனால், காபூலை நோக்கி வந்து விட்டார். அங்கே தைமூர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் ஆண்டு வந்த ராஜ்யத்தைத் தாம் கைப்பற்றி யரசாளத் தொடங்கினார்.

காபூலுக்கு வந்த பிற்பாடுங்கூடப் பாபருக்கு ஸாமர்கண்டை ஜயித்துத் தமது வசமாக்கிக் கொள்ளவேண்டுமென்னும் எண்ணம் இருந்து வந்தது. கி. பி. 1512-ல், அவர் அந்நாட்டின்மீது படையெடுத்துச் சென்றார். அந்தச் சண்டையிலுந் தோல்வியடையவே, அவருக்குத் தமதெண்ணம் நிறைவேறாதென்று தோன்றிற்று. தாம் ஒரு பெரிய ராஜ்யத்தைக் கைப்பற்றி யாளவேண்டுமானால், ஹிந்துஸ்தானத்தை நோக்கிச் செல்லவேண்டுமென்று அவர் அப்புறம் தீர்மானித்தார். அந்தத் தீர்மானத்தின்படியே அவர் ஒரு முறை சித்ரால் என்னும் நாட்டிற் கருகிலுள்ள எல்லை மாகாணத்தின்மீது படையெடுத்து வந்தார்.

இந்தியாவின்மீது படையெடுத்து வந்து ஒரு பெரிய ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று ஆவல்கொண்டிருந்த பாபரைத் தௌலத்கானும், அல்லாவுத்தீனும் அழைக்கவும், அதுதான் தக்க சமயமென்று அவர் இப்ராஹீம் லோடியை எதிர்த்து வந்தார். கி. பி. 1526-ல், இருதிறத்தாருக்கும் பானிப்பட்டு என்னு மிடத்தில் பெரிய சண்டை நடந்தது. அந்தச் சண்டையில்தான் இந்தியாவில் முதன் முதல் பீரங்கிகள் உபயோகப்படுத்தப்பட்டன. பாபர் நூற்றுக்கணக்கான பீரங்கிகளை முன்னிருத்திப் பீரங்கி வண்டிகளை யொன்றோடொன்று முறுக்கிய தோலினாற் பிணைத்து எதிரிகளின் குதிரைப்படையின் வீரம் பயனற்றுப் போகும்படி செய்துவிட்டார். அதுவுமல்லாமல், அவர் தமது சேனையை வெகு விமரிசையாக அணி வகுத்துச் சத்துருக்களை நான்கு பக்கங்களிலும் எதிர்த்துச் சண்டை செய்வதற்கான ஏற்பாடுகளையு மமைத்து வைத்தார். டில்லியரசனுடைய சேனை சிதைவுண்டு போயிற்று. ஆயிரக் கணக்கான போர்வீரர்கள் சண்டையிற் கொலையுண்டு போனார்கள். முடிவில் இப்ராஹீம் லோடியும் இறந்தான். பாபர் டில்லி ராஜ்யத்தைக் கைப்பற்றி ஸிம்ஹாஸனம் ஏறினார். பாபர் உடனே இரண்டு சைந்யங்களை யனுப்பி டில்லியையும், ஆக்ராவையும் கைப்பற்றிக் கொண்டு, அவ்விரண்டிடங்களிலு மிருந்த அளவில்லாத பணத்தைத் தமது போர்வீரர்களுக்கும், காபூல் நாட்டுக் குடிகளுக்கும் இனமாகப் பங்கிட்டுக் கொடுத்தார். பானிப்பட்டுச் சண்டையில் மிகுந்த ஆண்மையுடன் போர்புரிந்த தமது மகன் ஹுமாயூனுக்கு அவர் 2 லக்ஷம் ரூபாய் சன்மானஞ் செய்தார். கொடையில் அவர் கர்ணன் போன்றவர். பாபருடைய போர்வீரர்கள் தங்களுக்குக் கிடைத்த பொருள்களுடன் காபூலுக்குப் போக எண்ணங்கொண்டார்கள். அவர்களுக்கு இந்தியாவின் வெப்பம் பிடிக்கவில்லை. ஆனால் பாபர் அவர்களுக்கு நற்புத்தியைப் போதித்து அவர்களைத் தமதிஷ்டப்படி நடந்துகொள்ளும்படி செய்து கொண்டார். பிறகு பாபர் தமது சாமர்த்தியத்தினால் ஆப்கானிய பிரபுக்களைத்

தமக்குச் சிறந்த துணைவர்களாகச் செய்துகொண்டு விட்டார். இனி, அவர் ஹிந்துக்களைத் தான் ஜயிக்கவேண்டியிருந்தது.

அப்பொழுது ராஜபுதனத்தில் ஆண்டுவந்த பல சிற்றரசர்கள் சித்தூர் அரசரான **ராணாசாங்கா** என்பவரைத் தமது தலைவராக ஏற்படுத்திக்கொண்டு பாபருடன் சண்டை செய்வதற்குத் தயாரானார்கள். பாபர் **ஸிக்ரி** என்னுமிடத்திற் றங்கி யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தார். ராஜபுத்திரர்களுடைய ஆண்மையையும், வீரத்தையும் பற்றிக் கேள்வியுற்ற முகலாய வீரர்கள் மனத் தளர்ச்சி அடைந்தார்கள். ஜோதிஷன் ஒருவன் ஹிந்துக்கள் தான் ஜயமடைவார்களென்று சொல்லவும், பாபருடைய சேனை நடுக்கமுற்றது. அதனை யறிந்த பாபர் தாம் இனி மதுபானஞ் செய்வதில்லை யெனச் சபதஞ் செய்துகொண்டு, அப்பொழுது கையிலிருந்த மதுவை யெல்லாங் கீழே கொட்டிவிடும்படி யுத்த வீரர்களுக்குக் கட்டளையிட்டு, அவர்களுக்கு நற்புத்தி யுண்டாகும் வண்ணம் யுத்த வீரர்களுடைய கடமைகளை யெடுத்துக் காட்டினார். அதனைக் கேட்ட மாத்திரத்தில் அவர்களுக்குத் தைரிய முண்டாயிற்று. உடனே **கான்வாஹா** என்னுமிடத்திற் சண்டை நடந்தது. அதில் ராஜ புத்திரர்கள் தோற்றோடிப் போனார்கள். பிறகு பாபர் **சாண்டேரி** என்னுங் கோட்டையை முற்றுகை செய்து மாளவத்தைத் தமது வசமாக்கிக் கொண்டார். அது முதல் ராஜபுத்திரர்கள் அவரை எதிர்த்து வரவில்லை.

மறுவருஷத்தில் அதாவது கி. பி. 1528-ல், பீஹாரிலும், வங்காளத்திலும் கலகஞ் செய்து பாபருக்கு விரோதமாய்க் கிளம்பின ஆப்கானியரைப் பாபர் **கோக்ரா** வென்னுமிடத்தில் அடியோடு தோற்கடித்து அவ்விரண்டு மாகாணங்களையும் தமது வசமாக்கிக்கொண்டார். இவ்வாறாக, மூன்று சண்டைகளில் பாபர் வட இந்தியா முழுவதையும் வென்று விட்டார். என்றாலும், அவர் தாம் சண்டை செய்து ஜயித்த மன்னர்களின் நாடுகளைத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக்

கொண்டு அவைகள் மறுபடியும் தலை கிளம்பாமல் செய்து விடவில்லை. அந்த மன்னர்கள் பாபருடைய வீரத்திற்கும், பராக்கிரமத்திற்கும் அஞ்சி யொருவாறுதான் கீழ்ப்பட்டிருந் தார்கள். அதனால், பாபர் ஸ்தாபித்த முகலாய ராஜ்யம் செவ்வனே வேரூன்றிவிட்டதென்றாவது, அதற்குச் சத் துருக்களா லேற்படக்கூடிய பயம் ஒன்றுமில்லை யென்று வது கொள்வது தவறு.

யுத்தங்கள் முடிந்து நாட்டிலமைதி யுண்டானதும், பாபர் தாம் ஜயித்த ராஜ்யத்தை ஒழுங்கு படுத்துவதில் முயன்று வந்தார். அவருடைய பிரபுக்களும், ஜாகீர்தார் களும் குடிகளினிடமிருந்து நிலவரி, வியாபாரவரி, ஹிந்துக் கள் செலுத்த வேண்டிய தலைவரி முதலானவற்றை வசூல் செய்துகொண்டு, அவருக்கு நிலைவரமான தொகைகளை வரி யாகச் செலுத்தியும், வேண்டும்பொழுது போர்வீரர்களை யனுப்பி உதவியும் வந்தார்கள். அவருக்கு மொத்தத்தில் இரண்டரை கோடி ரூபாய்க்கு மேல் வருமானங் கிடைத்து வந்தது.

பாபர் இந்தியாவை ஜயித்து முகலாய ராஜ்யத்தை ஸ்தாபித்தாராலும், அவருக்கு இந் நாட்டின்மீது அன் பில்லை. "ஹிந்துஸ்தானமும், அதன் பட்டணங்களும் மிகவும் அவலக்ஷணமானவைகள். அவை பார்ப்பதற்கு ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. அங்கே தோட்டங் களுக்குச் சுவர்களில்லை. அதன் பெரும்பாகமும் ஒரே சம வெளி. அங்கே மானிடர் அனுபவிக்கக்கூடிய இன்பங்கள் ஒன்றுமில்லை. ஜனங்கள் குரூபிகள். சங்கங்களின் பயனை யவர்கள் அறியமாட்டார்கள். அவர்களுக்கு நுண்ணறிவு, மரியாதை, அன்பு, கைத்தொழில்களில் சாமர்த்தியம், சிற்பசாஸ்திர வார்ய்ச்சி முதலான யாதொன்றும் கிடை யாது. அவர்களுக்குக் குதிரைகளில்லை; திராக்ஷையாவது கொம்மட்டிக்காயாவது கிடையாது; நல்ல பழங்களில்லை; பனிக்கட்டி, ஸ்நானகட்டம், கல்லூரி, மெழுகுவத்தி முதலிய எதுவுமில்லை," என்று அவர் தமது சரித்திரத்தி லெழுதி யிருக்கிறார்.

கி. பி. 1530-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் பாபர் 49-வது வயதில் ஆக்ராவில் மரணமடைந்தார். ஆனால் அவருடைய தேகம் காபூலில் அடக்கஞ் செய்யப்பட்டது.

பாபர் என்றால் சிங்கம் என்று பொருள். அதற் கிணங்க, அவரிடத்தில் பராக்கிரமம், வீரம், தைரியம், பலம் முதலிய சிறந்த குணங்கள் குடிகொண்டு விளங்கின. குதிரையேறிச் சவாரி செய்வதிலும், நீந்துவதிலும் அவர் வெகு சமர்த்தர். தயை, அன்பு, விடாமுயற்சி முதலான நற்குணங்கள் அவரைத் தமக்குறைவிடமாகக் கொண்டிருந் தன. அவர் ஒரு சிறந்த பாரஸிகக் கவி. அவருக்குத் துருக்கியிலும் தேர்ச்சியுண்டு. அவர் தம்முடைய சரித்திரத் தில் எதையும் ஒளிக்காமல் தமது குணங்களையுங் குற்றங்களை யும் உண்மையாக எழுதியுள்ளார்.

---

## 28. ஹுமாயூன்

### கி. பி. 1530—கி. பி. 1556

பாபரின் மைந்தரான ஹுமாயூன் பட்டத்துக்கு வந்த பொழுது அவருக்கு வயது 23. அவர் நன்றாகக் கற்றவர். வான சாஸ்திரத்திலும், பூகோள சாஸ்திரத்திலும் அவர் தேர்ச்சி பெற்றவர்; சிறந்த புத்திமான்; மிகுந்த தயாள குணமுடையவர். அவருக்கு யுத்தத்திலும், ராஜ்யபரிபால னத்திலும் அனுபவம் உண்டு. என்றாலும், அவரிடம் ஸ்திர புத்தி, ஊக்கம், விடாமுயற்சி முதலான இன்றியமையாத நற்குணங்கள் கிடையா. அதனாற்றான் அவர் மிகுந்த துன்பத்தை யனுபவிக்க நேர்ந்தது. ஹுமாயூனுக்குக் காம்ரான், ஹின்டால், அஸ்காரி என்று மூன்று சகோதரர் கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவனான காம்ரான் காபூல், காண்டஹார், பஞ்சாப் ஆகிய நாடுகளுக்குக் கவர்ன ராக விருந்தான். அவன் பெயருக்கு மட்டில் ஹுமாயூ னுடைய அதிகாரத்திற்குட்பட் டிருந்தானே யன்றி, உண்மையில் அவருக்கு விரோதமான பல காரியங்களைச் செய்து வந்திருக்கிறான். அவன் துருக்கிஸ்தானத்திலிருந்

தும், ஆப்கானிஸ்தானத்திலிருந்தும் முகலாய மன்னருக்குத் தேவையான யுத்தவீரர்களை வரவொட்டாமற் றடுத்துவிட்டான். அதனால், ஹுமாயூனுடைய சேனைச் சண்டைகளினாலும், இந்திய நாட்டின் வெப்பத்தினாலும், விசேஷ போகத்தினாலும் பலங்குன்றப் பெற்றபொழுது, அதைப் பலப்படுத்துவதற்கு வேண்டிய யுத்தவீரர்களை அவர் தம்முடைய தாய் நாடுகளிலிருந்து வரவழைக்க இயலாமற் போயிற்று. இதுவுமொரு பெரிய துர்ப்பாக்கியமே. அஸ்காரியும், ஹிண்டாலும் தாங்களே நேரில் ஹுமாயூனுக்குத் தீங்கிழைத்திலர்களானாலும், அவ்விருவர்களும் முகலாய வரசருடைய விரோதிகளுக் குற்ற துணைவர்களாக இருந்து வந்தார்கள். ஹுமாயூன் இரக்கமின்றியவர்களைத் தொலைத்திருப்பாரேயானால், அவருக்கு அப்பொழுதிருந்த மூன்று பெருஞ் சத்துருக்களிலொரு வகுப்பினர்கள் மாண்டுபோயிருப்பார்கள். அவ்வாறு ஹுமாயூன் செய்யக்கூடியவரல்லர். ஹுமாயூனுக்கு அவருடைய சகோதரர்களை யன்றி வேறு இரண்டு பெருஞ் சத்துருக்க ளிருந்தார்கள். அவர்களிலொருவர் பீஹார்நாட்டை யாண்டு வந்த ஆப்கானிய ஷேர்ஷா என்பவர்; கூர்ஜர, மாளவ நாடுகளை யாண்டு வந்த பஹதுர்ஷா மற்றொருவர்.

ஹுமாயூன் முதலில் ஆப்கானியர்களின் மீது படையெடுத்துச் சென்று கி. பி. 1531-ல் லக்னௌ என்னுமிடத்தில் மகம்மது லோடியை யடியோடு தோற்கடித்தார். பிறகு அவர் ஷேர்ஷா பலப்படுத்தி வைத்திருந்த சூனார் கோட்டையை முற்றுகை செய்த பொழுது, அந்த ஆப்கானியன் அவருக்கு ஒப்புக்குக் கீழ்ப்படிந்து விடவும், அவர் சூனாரை அம்மட்டிலேயே விட்டுத் திரும்பி வந்துவிட்டார். அவர் ஷேர்ஷாவை அடியோடு த்வம்சஞ் செய்வதை விட்டு, வளர விட்டது மிகவும் பிசகான காரியமாயிற்று. அவர் டில்லியை ஜயித்துவிட வேண்டுமென்று முயன்று வந்த பஹதுர்ஷாவுக்குப் பயந்து இவ்வாறு செய்தார். அதன்றியும் குரங்கைப் போன்றதான சஞ்சல புத்தியை யுடைய அவருக்குத் தாம் மேற்கொண்ட யாதொரு

காரியத்தையும் அது முற்றுப்பெறும் வரையில் செய்யக் கூடவில்லை.

பிறகு ஹுமாயூன் கி. பி. 1534-ம் வருஷத்தின் கடைசியில் பஹதுர்ஷாவை எதிர்த்துச் சென்றார். அப்பொழுது பஹதுர்ஷா ராஜபுத்திரர்களை எதிர்த்துச் சென்று அவர்களுடைய ஒப்பற்ற சித்தூர் கோட்டையை முற்றுகை செய்து கொண்டிருந்தார். அது தான் தக்க சமயமென்பதை அவர் உணர்ந்து, பஹதுர்ஷாவைச் சண்டைக்கிழுத்திருப்பாரே யானால், இரு திறத்தாருக்கும் மத்தியில் கூர்ஜர மன்னவர் தோல்வி யடைந்திருப்பார். அப்படிச் செய்யாமல் ஹுமாயூன் பஹதுர்ஷா மகம்மதிய ரல்லாதாரோடு சண்டை செய்வதைக் கண்டு களித்திருந்து, அவர் ராஜபுத்திரர்மீது ஜயம்பெற்றுத் திரும்பிய பின்னர் தாம் அவருடன் சண்டை செய்யத் தொடங்கினார். யுத்தகளத்தினின்றும் பஹதுர்ஷா தப்பி யோடவும், ஹுமாயூன் அவரை ஊர் ஊராகத் துரத்திக் கொண்டு சென்றார். அந்தச் சண்டையில் கூர்ஜரமும், மாளவமும் ஹுமாயூன் வசமாயின. ஹுமாயூன் அந்நாடுகளை யடக்கி யாள்வதற்கான வொழுங்குகளைச் செம்மையாக வமைத்துப் பஹதுர்ஷா அவற்றை மறுபடியும் கைக்கொள்ள வொட்டாமற் செய்ய வேண்டிய திருத்தமான ஏற்பாடுகளைச் செய்யாமல் மாளவத்தில் உண்டு, களித்து, ஆடிப்பாடி உல்லாசமாகக் காலங் கழித்து வந்தார். அதனைக் கண்ட பஹதுர்ஷா அப்பொழுது வியாபாரத்தின் பொருட்டு இந்தியாவிற்கு வந்திருந்த போர்ச்சுகீஸியருடைய உதவியைப் பெற்றுக் கூர்ஜரத்தைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டார்.

இதற்கிடையில் ஷர்ஷா பீஹாரிலன்றி, வங்காளத்திலும் தனது அதிகாரத்தைப் பலப்படுத்தினான். அதனால் ஹுமாயூன் கூர்ஜர மன்னனை விட்டுவிட்டு ஆப்கானியரை எதிர்த்துச் செல்லவேண்டியது அவசியமாயிற்று. அவர் போன சமயத்தில் கூர்ஜரத்தையல்லாமல் மாளவமும் பஹதுர்ஷாவுக்குச் சொந்தமாயின. வங்காளத்தை நோக்கிச் சென்ற ஹுமாயூன் நேராகக் கலகம்

நடக்குமிடத்திற்குச் சென்று அதை அடக்குவதில் முயல் வதை விட்டு, ஓராண்டளவும் ஆக்ராவிற்றங்கிக் கஞ்சா குடித் தும், ஆடிப்பாடியும் காலத்தை வீணிற் கழித்தார். அதன் பின்னரும் அவர் அங்கிருந்து வந்து தாம் முதலில் மாளவத்தையும், கூர்ஜரத்தையும் ஜயித்துக் கொண்டு விட்டு, அப்புறம் ஷர்ஷாவைத் தண்டிக்கப் போகலாம் என வெண்ணினார். கடைசியில், அவர் கி. பி. 1537-ம் வருஷம் ஜுலை மாதத்தில் புறப்பட்டுச் சென்றுச் சுனார்கோட்டை யைப் பிடித்துக்கொண்டார். அப்பொழுது ஷர்ஷா வங் காளத்தை ஜயிப்பதில் கண்ணாக விருந்து அதற்கான ஏற் பாடுகளைச் செய்து வந்தான். அதன்றியும், அவன் பீஹாரி லிருந்து வங்காளத்திற்கு வரும் வழியில் தனது மகனை யொரு பெருஞ் சேனையுடன் நிருத்தி ஹுமாயூனை வர வொட்டாமற் றடுத்து வருகையில், தான் எளிதில் ஜயிக்க முடியாததான ரோடாஸ் என்னும் கோட்டையில் தன் னுடைய பெண், பிள்ளைகளையும், தான் கொள்ளையடித்த சாமான்களையும், பீரங்கி முதலான யுத்தத்திற்கான உபகா ணங்களையும் பத்திரப்படுத்தி வந்தான். இந்த வேலைகள் முடிந்ததும் தனயன் தந்தையுடன் சேர்ந்துகொண்டு விட் டான். ஹுமாயூன் யாதொரு கஷ்டமுமின்றி வங்கா ளத்தை வந்தடைந்தார். அங்கே ஆறுமாசகாலம் வழக்கம் போல் இன்பத்தில் மூழ்கி யிருந்தார். அந்தச் சமயத்தில் அவருடைய சகோதரர்களான காம்ரானும், ஹிண்டா லுங்கூட அவருக்கு விரோதமாகக் கிளம்பி டில்லி ராஜ் யத்தைக் கவர்ந்துகொள்ள முயன்றார்கள். ஆறு மாதங் களானதும் ஹுமாயூன் ஷர்ஷா பக்ஸாருக் கருகிற் றங்கி யிருந்த விடத்திற்கு வந்து தாம் அவரை வெல்லுவது முடி யாத காரியமென் றெண்ணிச் சமாதானத்திற்கான ஏற்பாடு களைச் செய்து வருகையில் ஷர்ஷாவினுடைய சேனை டில்லிப் படையைத் திடீரென்றெதிர்த்துத் தோற்கடித்துவிட்டது. ஹுமாயூன் கங்காநதியை நீந்திக் கடந்து உயிர்தப்பி யோடிக் கி. பி. 1539-ம் வருஷம் மே மாதத்தில் ஆக்ரா வுக்கு வந்து சேர்ந்தார். அதன் பின்பு இருதிறத்தாரும்

சண்டைக்கு வேண்டிய ஏற்பாடுகளை யமைத்துக்கொண்டு கி. பி. 1540-ம் வருஷம் மே மாதத்தில் கன்னோசிக்கப்பால் ஒருவரை யொருவர் எதிர்த்துப் போர் செய்தார்கள். ஹுமாயூன் தோல்வியடைந்து, நாட்டை விட்டு உயிர் பிழைக்க வோடினார்.

அவர் மூன்று வருஷங்கள் வரையில் ராஜபுதனம், ஸிந்து நாடுகளிலுள்ள பாலைவனங்களிற் சுற்றித் திரிந்து, சொல்லரிய துன்பங்களையெல்லாம் அனுபவித்துக் காலங் கழித்தார். அப்பொழுது தான் அவர் ஹமீடா பீகம் என்னும் ஸ்திரீயை விவாகஞ் செய்துகொண்டார். அவர் அந்நாடுகளிலிருந்து பாரஸிகத்தை நாடிச் செல்லும் வழியில் கி. பி. 1542-ம் வருஷம் அக்டோபர் மாதம் 15-ம் தேதி யன்று அமரக்கோட்டையில் அவருக்கு அக்பர் பிறந்தார். அந்தப் பிள்ளையின் கீர்த்தி தகப்பன் வேண்டியவாறே கஸ்தூரியின் மணத்தையொத்து நாலாப் பக்கங்களிலும் பரவிற்று. பின்னர் ஹுமாயூன் பாரஸிக மன்னனுடைய உதவியைப் பெற்றுக் கி. பி. 1545-ல் அஸ்காரியினிட மிருந்து காண்டஹாரையும், கி. பி. 1547-ல் காம்ரானிட மிருந்து காபூலையும் கைப்பற்றிக்கொண்டு அங்கே ஆட்சி செய்து வந்தார். அவருடைய சகோதரர்கள் இறந்துவிட வும், ஹுமாயூனுக்குக் கொஞ்சம் அமைதி உண்டாயிற்று.

கி. பி. 1555-ல், ஷர்ஷாவின் சந்ததியார்களுக்குள் கலகங்கள் ஏற்பட்டு, ஒருவரோடொருவர் சண்டையிட்டு வந்த சமயம் பார்த்து ஹுமாயூன் ஒரு சேனையைத் திரட்டிக்கொண்டு வந்து ஸிகன்டர்ஷாவை ஸர்ஹிண்ட் என்னுமிடத்தில் தோற்கடித்து மறுபடியும் டில்லியில் அரச ரானார். ஆனால், ஆறு மாதங்களுக்கெல்லாம் அவர் தடுக்கி விழுந்து உயிர் துறந்தார். ஆயுள் முழுவதும் இடறி விழுந் தும், சமாளித்து எழுந்தும் உயிர் வாழ்ந்த அவர் இடறி விழுந்தே உயிர் நீத்ததும் ஒரு விந்தையே! விந்தையினும் விந்தை அதிர்ஷ்ட ஹீனரான அவரை 'அதிர்ஷ்டசாலி' எனும் பொருள்படும் ஹுமாயூன் என்றழைத்தது! ஹுமாயூன் நாட்டைவிட் டோடிப்போகவும், ஷர்ஷா

ஹிந்துஸ்தானத்தின் பெரும் பாகத்தையும் ஜயித்து மிக்க விமரிசையாக ராஜ்யபாரம் நடத்திவந்தான். அவன் சிறந்த புத்திமான். ஷர்ஷா சண்டையிலன்றித் துரைத்தனத்தை நடத்துவதிலும் கைதேர்ந்தவன். அவன் ஹிந்துக்களைப் பக்ஷமாய் நடத்தி நாட்டில் அமைதியை யுண்டுபண்ணினுன். அவன் குடிகளின் நன்மையை நாடிச் சட்டதிட்டங்களை யேற்படுத்தினுன். அவன் குற்றஞ் செய்தவர்களைக் கடுமையாகத் தண்டித்ததனுல், ஜனங்கள் அவனுக்குப் பயந்து நடுங்கி உயிர் வாழ்ந்து வந்தார்கள். அவனுடைய காலத்தில் திருடர்களாவது, கொள்ளைக்காரர்களாவது கிடையார். போட்டது பொன்னுகவிருந்தது. அவனுடைய காலத்திற்றுன் முதன் முதல் தபால் வண்டிகள் ஏற்பட்டன.

அவன் பிரயாணிகளின் சௌகரியத்திற்காகப் பாதையோரங்களில் நிழல்தரும் மரங்களை வளர்ப்பித்தும், கிணறுகள் வெட்டியும், சாவடிகள் கட்டியும் உதவினுன்.

கி. பி. 1545-ல், அவன் பண்டில்கண்ட் மாகாணத்திலுள்ள கலிஞ்சார் என்னும் கோட்டையை முற்றுகை செய்யும்பொழுது மருந்துக் கிடங்கு வெடித்துக் காயப்பட்டதனு லிறந்துபோனுன். அவனுக்குப் பின் அவன் மகன் இஸ்லாம்ஷா வென்பவன் ஒன்பது வருஷகாலம் ஆட்சி பெற்றிருந்தான். அவனுக்கு ஸலீம்ஷாவென்றும் பெயர் வழங்கி வந்தது.

அவனிறக்கவும், அவனுடைய மைத்துனனுன அடில்ஷா வரசனுனுன். அவன் ராஜ்ய காரியங்களை முற்றிலுந் தனது மந்திரியான ஹேமு என்பவனிடம் ஒப்புவித்திருந்தான். அப்பொழுது ஷர்ஷாவின் வம்சத்தைச் சேர்ந்த இப்ருஹீமும், ஸிகண்டரும் டில்லி ஸிம்ஹாஸனத்தைப் பற்றித் தமக்குள் சண்டையிட்டு வந்தார்கள். கடைசியில் ஸிகண்டரே டில்லி, ஆக்ரா, பஞ்சாப் ஆகிய இவற்றைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டான். அந்தச் சமயத்தில் தான் ஹுமாயூன் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து ஸிகண்டரை ஸர்ஹிண்ட் என்னுமிடத்திற் றேற்கடித்துவிட்டுத் தாம்

பதினைந்து வருஷங்களுக்கு முன் னிழந்துவிட்ட ஸிம்ஹா ஸனத்தை மீண்டும் அடையப் பெற்றார். ஆனால், அவர் இப்பொழுது மிகச் சிறியதான ஒரு ராஜ்யத்திற்குத் தான் பேருக்குமட்டில் அரசராக விருந்தார். அதையும் அவர் ஆறுமாதகாலந்தான் ஆண்டனரல்லவா ?

---

## 29. அக்பர் மஹா சக்ரவர்த்தி

### கி. பி. 1556—கி. பி. 1605

கி. பி. 1556-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் ஹுமா யூனின் மூத்த குமாரரான அக்பர் மகுடம் சூட்டப்பெற்றார். அப்பொழுது அவருக்கு வயது பதின்மூன்று. அதனால், அவருடைய அத்தையின் புருஷரான பைராம்கான் என் பவர் ராஜ்ய காரியங்களைக் கவனித்து வந்தார். அக்பர் ஸிம்ஹாஸனம் ஏறினபொழுது, அவருக்குப் பஞ்சாபும், டில்லியும்தான் சொந்தமாயிருந்தன. வங்காளமும், கங்கா நதி தீரமும் இன்னமும் ஆப்கானியர் வசத்திலேயே இருந்து வந்தன. மேல் ஹிந்துஸ்தானத்தில், ராஜபுத்திரர்களிற் பலர் சுயாதீனம் பெற்று அநேகம் சிறிய ராஜ்யங்களை ஏற் படுத்திக்கொண்டு அவற்றை யாண்டுவந்தார்கள். காபூல், காண்டஹார், காஷ்மீரம், ஒரிஸ்ஸா (காமரூபம்), ஸிந்து, கூர்ஜரம் முதலிய நாடுகளும் தனித்தனி ராஜ்யங்களாக விருந்தன. அதனால், அக்பர் அந்தத் தனி ராஜ்யங்களை யெல்லாம் ஜயித்து அவற்றி னரசர்களைத் தம்முடைய வதி காரத்திற் குட்படுத்திக்கொண்டால்தான் கவலையற்று ராஜ்ய பாரம் நடத்தக்கூடும். அவர் இந்தத் தொழிலில் சுமார் இருபது வருஷகாலம் முயன்று வந்து கடைசியில் ஒரு பெரிய ராஜ்யத்தை சம்பாதித்துக் கொண்டார்.

ஹுமாயூன் இறந்தவுடனே, அடில்ஷா வென்னும் ஆப்கானிய வரசனுடைய மந்திரியான ஹெமு வென்பவன் ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு வந்து ஆக்ராவை யெளிதிற் கைப்பற்றிக் கொண்டுவிட்டுப் பின்பு டில்லியை

நோக்கி வந்தான். அங்கே யவன் பைராம்கானால் நிய மிக்கப்பட்டிருந்த டார்டிபேக் என்பவனைத் தோற்கடித்துத் துரத்திவிட்டு விக்ரமாதித்யன் என்னும் பிருதுப் பெயருடன் தானே அரசனெனச் சொல்லிக்கொண்டு விளங்கினான். அதே சமயத்தில் காபூலிலும் கலகங்கள் ஏற்பட்டன. என்றாலும், பைராம்கான் மனந்தளரவில்லை. அவர் டில்லியை யிழந்ததற்காக டார்டிபெக்கைச் சிரச்சேதஞ் செய்துவிட்ட தன்றி மற்றைய சில ராணுவ உத்தியோகஸ்தர்களையுஞ் சிறையலடைப்பித்தார். அதைக் கண்ட சேனைகள் தங்க ளுடைய கடமைகளை நன்றாக வறிந்து கொள்ளலாயின.

அதன் பின்பு அக்பரும், பைராம்கானும் ஹெமுவை யெதிர்த்து வந்து கி. பி. 1556-ம் வருஷம் நவம்பர் மாதத் தில் பானிப்பட்டில் அவனுடன் சண்டைசெய்து அவனை யடியோடு தோற்கடித்துவிட்டார்கள். பைராம்கான் அவனைத் தமது வாளினாற் கொன்று கீழே வீழ்த்தினார். உடனே டில்லியும் ஆக்ராவும் அக்பருக்குச் சொந்தமாயின. அப்பொழுது ஸிகன்டரும் பஞ்சாபைவிட்டு வங்காளத்திற்கு ஓடிப்போய் விட்டதனால், அக்பருக்கு இந்தியாவின் வட மேற்கிலிருந்த நாடுகள் முழுவதும் கிடைத்துவிட்டன.

கி.பி. 1560-ல், அக்பர் தாமே நேரில் ராஜ்ய பரிபால னஞ் செய்ய வாரம்பித்தார். அப்பொழுது பைராம்கான் அரசருடைய உத்தரவின்படியே மெக்காவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார். ஆனால், அவர் வழியில் சில துன் மார்க்கருடைய துர்போதனையினால் கலகஞ்செய்து தோல்வி யடையவும், அக்பர் அவரை மன்னித்து மெக்காவுக் கேகும் படி யனுப்பிவிட்டார். வழியில் அவர் ஒரு சத்துருவின் வஞ்சனையினாற் கொலையுண்டு போனார். அதற்குப் பின்பு அக்பரின் செவிலித் தாயான மஹம்அனகா வென்பவள் அரசருக்கொரு சிறந்த மந்திரியைப் போன்று அவரைத் தன திஷ்டப்படி நடந்துவரச் செய்தாள். அவளுடைய உதவி யினால் உயர்ந்த பதவியை யடைந்த அவள் மகன் ஆதம்கான் என்பவன் தனது நிலைமையை மறந்து கருவங் கொண்டு அரசரின் பிரதான மந்திரியான ஷாம்ஸடீன் என்பவரைக்

கொன்றதனுல், அக்பருக்குக் கோபம் மூண்டு அவனைக் கொன்று அவனுடலைக் கோட்டைக்கு வெளியில் வீசி யெறிந்து விட்டார். அவனுடைய தாயும் புத்திர சோகத்தினுல் சீக்கிரத்திலேயே உயிர் துறந்தாள். அக்பருக்கு அபக்யாதியை யுண்டு பண்ணின அவ்விருவருந் தொலைந்து விட்டதும் நன்மையே யாயிற்று.

அக்பருக்குச் சண்டை யில்லாமல் தமது ராஜ்யத்தை யொன்று படுத்தி யாளவேண்டு மென்னும் விருப்பம் இருந்தது. ஆனுல், அந்த எண்ணம் எளிதில் நிறைவேறத் தக்கதன் றென்பதை யவர் கண்டு கொண்டார். அக்பர் முதலில் மாளவத்தையும், அதன் பின்பு பீஹாரையும் ஜயித்துக் கொண்டார். அவர் மத்திய இந்தியாவிலுள்ள காண்டவன என்னும் நாட்டின்மீது படையெடுத்துச் சென்ற பொழுது, அந்நாட்டரசியாரான துர்காவதி என்பவர் மிக்க ஆண்மையுடன் சண்டை செய்தார். என்றாலும், முடிவில் அக்பர் அந்நாட்டைத் தமது வசமாக்கிக் கொண்டார். அபுல்பஜல் துர்காவதியாரின் அரசாட்சியையும், பராக்கிரமத்தையும் மிகவும் புகழ்ந்து எழுதி யிருக்கிறர். அவ்வரசியார் தாமே நேரில் துஷ்ட மிருகங்களை வேட்டையாடிக் கொன்ருரென்றும் சொல்லப்பட் டிருக்கிறது.

கி.பி. 1561-ல், அக்பர் ஜயபுரத் தரசரின் மகளைத் தாம் மணந்து கொண்டதன்றி, ஜோதிபுரத் தரசருடைய பேத்தியைத் தமது மகன் ஸலிமுக்கு மணஞ் செய்வித்தார். அதனுல், பல ராஜபுத்திர வரசர்கள் அக்பரைத் தமக்கு யஜமானராக வொப்புக் கொண்டு அவருடன் சமாதானஞ் செய்து கொண்டுவிட்டார்கள். மீவார் நாட்டரசர் மட்டில் அக்பரை மதிக்கவில்லை. ஆகையினுல், அக்பர் கி.பி. 1567-ல் சித்தூரை முற்றுகை செய்து பிடித்துக் கொண்டார். ஆனுல், ஒப்பற்ற போர்வீரரான ராணுபிரதாபஸிங்க் மறுபடியும் மறுபடியும் சண்டையிட்டுக் கடைசியில் உதயபுரம் என்னுமிடத்திற் றமது அதிகாரத்தை ஸ்தாபித்துச் சௌக்கியமாக இருந்து வந்தார். கி. பி. 1572-ல் அக்பர் கூர்ஜரத்தின் மீது படையெடுத்துச் சென்று அந் நாட்டை

யும் வென்றார். பிறகு அவர் வங்காளத்தில் கலகஞ் செய்து வந்த தாவுத்கானை ஜயித்து வங்காளத்தைத் தமது வச மாக்கிக் கொண்டார். உதயபுரியில் தமததிகாரத்தை ஸ்தாபித்துக்கொண்டு ஆட்சி செய்து வந்த மீவார் நாட்டரசர் மறுபடியுங் கலகஞ் செய்யவும், அவரை ஜயித்து வரும்படி அக்பர் தமது சேனைத்தலைவரான ராஜாமான்ஸிங்க் என்னும் ராஜபுத்திரரை அனுப்பினார். கி.பி. 1576-ம் வருஷம், ஜூன் மாதத்தில் ஹல்டிகாட் என்னுமிடத்தில் மான்ஸிங்க் மீவாரரசரை யடியோடு தோற்கடித்துவிட்டார். மூன்று வருஷங்களுக்குப் பின்பு கி. பி. 1579-ல் அக்பரின் சகோதரரான ஹகிம்மிர்ஜா வென்பவர் காபூலில் கலகஞ் செய்து பஞ்சாபின் மீது படையெடுத்து வந்து லாகூரை எதிர்த்தார். ராஜாமான்ஸிங்க் தோல்வியை யடையவும், அக்பர் தாமே நேரிற் சென்று அவரை வெற்றிகொண்டார். ஹகிம் அக்பருடைய அதிகாரத்தை ஒப்புக்கொண்டதினால், முகலாய சக்ரவர்த்தி யவரையே காபூலுக்குப் பிரதிநிதியாக ஏற்படுத்தினார். அவ்வாறே அவர் மாளவ நாட்டரசர் மும்முறை கலகஞ் செய்து தமக்கு விரோதமாகக் கிளம்பினாராயினும், அவரை மும்முறையும் மன்னித்துக் கடைசியில் அவரையே மாளவ கவர்னராக நியமித்தார். இவற்றினின்றும் அக்பருடைய பெருந்தன்மை நன்றாக விளங்குகின்றதல்லவா? கி. பி. 1586-ல், ஹகிம் இறந்துபோன பொழுது, காபூல் நாடு முழுவதும் அக்பருக்கே சொந்தமாய் விட்டது. அவர் அதற்கு ராஜாமான்ஸிங்கைக் கவர்னராக நியமித்துத் தாமும் லாகூரைத் தமது ராஜ்யத்தின் தலைநகராக்கிக் கொண்டார். அங்கே யவர் சுமார் பதினைந்து வருஷகாலம் ராஜ்யபாரம் நடத்திவந்தார். கி. பி. 1587-ல் அக்பர் காஷ்மீரத்தைத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டார். அப்புறம் மூன்று வருஷங்களுக்குள் கத்தியவார், ஸிந்து நாடுகள் அக்பருக்குச் சொந்தமாயின. அதே காலத்தில் ஆப்கானிஸ்தானத்திலுள்ள காண்டஹாரும் அக்பருடைய வசமாயிற்று. இவ்வாறாக ஹிந்துஸ்தானம் முழுவதும் அக்பருடைய ராஜ்யத்திற் சேர்ந்துவிட்டது.


அக்பர் ராஜ்யம்
கி.பி. 1600
இங்கிலிஷ் மைலின் அளவுகோல்
0 100 200 300 400
காபூல
காண்டஹார்
காஸ்மீரம்
லாகூர்
முல்தான்
பாணிபட்
டில்லி
அக்ரா
கனோஜ்
ஸிந்து
பதேபூர் ஸிக்ரி
ஆஜ்மீர்
சித்தூர்
உதயபுரம்
அலஹாபாத்
காசி
பேஹார்
பாட்னா
மாங்கிர்
வங்காளம்
ஆமதாபாத்
மாளவம்
உஜ்ஜயினி
குஜராத்
ஸூரத்
தையு
போம்பாய்
ஆமதுநகரம்
கோலகோண்டா
குல்பர்கா
பிஜாபூர்
தலைகோட்டை
ராய்ச்சூர்
கோவா
விஜயநகர்
கள்ளிக்கோட்டை
கொச்சி
மதுரை
இலங்கை
அரபிக் கடல்
வங்காளக் குடாக் கடல்

பிறகு அவர் தக்ஷிணத்தை ஜயிக்க வேண்டுமென் றெண்ணினார்.

கி. பி. 1595-ல் ஆமதுநகரத்தை யாண்டுவந்த அரசருக்கு விரோதமாக அவருடைய பிரபுக்கள் கிளம்பிக் கலகஞ் செய்யத் தலைப்பட்டார்கள். அப்பொழுது பீஜபுரத்தரசர் ஆமதுநகரத்தரசருக்குத் தாம் துணை நின்றதல்லாமல், அக்பருடைய மகனை மூராட் என்பவரையும் சகாயத்திற்கு வேண்டினார். அது தான் தக்க சமயம் என்று மூராட் ஆமதுநகரத்தின் மீது படையெடுத்து வந்தார். அந்தச் சமயத்தில் காண்டேஷ் அரசர் முகலாய மன்னரினதிகாரத்தை யொப்புக்கொண்டு அவர் பக்கஞ் சேர்ந்துகொண்டார். மூராட் ஆமதுநகரத்துக்கு வந்தபொழுது அவரை வரவழைத்த பீஜபுரத்தரசர் தம் மூரை நோக்கிச் சென்று விட்டதனால், சாண்ட் பிபி என்னும் ஸ்திரீ ரத்தினம் கோட்டையைக் காத்துச் சத்துருக்களை நுழைய வொட்டாமற் றடுத்தாள். அக்பருடைய குமாரன் அவளுடன் சமாதானஞ் செய்துகொண்டு திரும்பி விட்டான். அந்தச் சமாதானத்திற் சாண்ட் பிபி பீரார் நாட்டைக் கொடுத்து விடுவதாக வொப்புக்கொண்டாள். ஆனால், உடனே ஆமதுநகரத்திற் கலகம் உண்டானதனால், அக்பர் தாமே நேரில் சண்டைக்குப் புறப்பட்டார். சாண்ட் பிபி முன்போலவே வெகு தைரியமாகவும், சாமர்த்தியமாகவும் கோட்டையைப் பாதுகாத்துப் பகைவர்கள் உள்ளே நுழைய வொட்டாமற் றடுத்து வந்தாள். ஆனால், அவளுடைய போர் வீரர்கள் சாண்ட் பிபி கோட்டையை மோசமாக அக்பருக்கு விட்டுவிட எண்ணியிருக்கிறாளென்று அவள் மீது துரபிப்பிராயங்கொண்டு அவளுக்கு விரோதமாகக் கிளம்பி யவளைக் கொன்று விட்டார்கள். அவளிறக்கவும், ஆமதுநகரம் அக்பர் வசமாயிற்று. கொஞ்சமும் சுயநலம் பாராட்டாமல், பொது நன்மையையே நாடி ஆமதுநகரத்தின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு உழைத்தும், ஆண்வேடந் தரித்துச் சண்டையிட்டும் தனது ஒப்பற்ற பராக்கிரமத்தையும், உயர்ந்த நற்குணத்தையும் யாவரு

மறிய நிலைநிறுத்திய சாண்ட் பிபியின் சரித்திரம் நிகரற்றதே யாகும்.

அக்பர் தக்ஷிணத்திலிருந்த பொழுது, அவருடைய மூத்த மைந்தரான ஸலிம் என்பவர் அவருக்கு விரோதமாய்க் கிளம்பித் தாமே அரசராக வேண்டுமென்று தீர்மானித்தார். அவர் அலஹாபாத்திலிருந்த பொக்கிஷத்தைக் கைப்பற்றிக் கொண்டு தாமே அரசரென்றும் தெரிவித்தார். அல்லாமலும், அவர் அக்பருக்கு அத்யந்த நண்பரும், ஆலோசனை யுரைப்பவருமான அபுல்பஜல் என்பவரைக் கொல்லும்படியும் ஏற்பாடுகள் செய்தார். என்றாலும், அக்பர் தம்மைந்தர் செய்த குற்றங்களை யெல்லாம் மன்னித்து, அவரிடம் முன்போலவே அன்பு பாராட்டி வந்தார்.

கி. பி. 1605-ம் வருஷம் ஜனவரி மாதம் 17-ம் தேதி வியாழக்கிழமை யன்று காலையில் அக்பர் தேக வியோகமானார். அவர் தாம் இறப்பதற்கு முன்னர்த் தமது பிரபுக்களை வரவழைத்து அவர்களுக்குப் புத்திமதிகளைச் சொல்லி யவர்களுக்குத் தாம் ஏதாவது அபராதஞ் செய்திருந்தால் அதனை மன்னிக்கும்படி வேண்டித் தமது கடவுளைத் தியானித்துக் கொண்ட வண்ணம் உயிர் துறந்தார். அப்பொழுது அவருக்கு வயது 63.

கி. பி. 1873-ல், இந்தியாவுக்கு ராஜப் பிரதிநிதியாக வந்த நார்த் ப்ருக் என்பவர் அக்பருடைய சமாதியின் பேரில் நேர்த்தியான ஒரு மண்டபம் கட்டுவித்தார். ஆங்கிலேயருக்கு அக்பரிடத்திலிருந்த மரியாதையை யுணர்த்துவதற்கென்றே அந்த மண்டபம் கட்டப்பட்டது.

---

## 30. அக்பருடைய ராஜ்ய பரிபாலனம்

அசோகருடைய காலத்திற்குப் பின்பு இந்தியாவை உலகம் புகழும் கீர்த்தி பொருந்த ஆட்சி செய்தவர் அக்பர் மஹா சக்ரவர்த்தியேயாவர். என்றும் அழியாததான அவருடைய புகழுக்குக் காரணம் அவர் அநுஷ்டித்து வந்த கொள்கைகளும், அவருடைய ஒப்பற்ற ராஜ்ய பரிபாலன

முறைகளுமேயாம். இற்றைக்குச் சுமார் நானூறு வரு ஷங்களுக்கு முன்னமேயே அக்பர் இப்பொழுதுள்ள துரைத்தன முறைகளின்பாற்பட்ட சில சிறந்த வமைப்புக் களை யுண்டுபண்ணி மிக்க விமரிசையாக ராஜ்யத்தை யாண்டு வந்தாரென்றால், அதனினுஞ் சிறந்ததாகக் கொள்ளக் கூடியது வேறொன்றுண்டோ? பிற்காலத்தில், கல்வி கேள்வி களிலும், நாகரிகத்திலும் மேம்பட்டு ராஜ தந்திரங்களில் நிபுணர்கள் என்று வழங்கப்பட்டு வருகின்ற ஆங்கிலேயர் கள்கூட அவருடைய பழக்க வொழுக்கங்களைச் சிறந்தன வெனக் கொண்டு அவற்றுள் சிலவற்றைத் தாம் முழுவதும் அநுஷ்டித்ததல்லாமல், அவருடைய சில நல்வழிகளைப் பின் பற்றி நடக்க வியலாமற் றிகைக்கின்றார்களென்றால், அக்ப ருடைய பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ? அவர் தம்மைக் கடவுளினுடைய பிரதிநிதியென வெண்ணித் தாம் அதற்குத் தக நடந்து வந்தார். அவர் சிறு பிராயம் முதற் கொண்டே ஜாதிமதங்களின் வேற்றுமைகளைப் பாராட் டாமற் றமது குடிகள் எல்லோரையும் ஒன்று சேர்த்து அவர்களனைவரையும் ஒருமனப் படுத்தி, சுயநலங்களைப் பாராட்டாமற் பொது நன்மைக்கான காரியங்களையே கவனிக்குமாறு அவர்களைப் பயிற்றி, அவர்கள் அமைதி யும், சந்தோஷமும், செல்வமும் உண்டாகப்பெற்று வாழும் படி தாம் ராஜ்ய பரிபாலனம் பண்ணவேண்டுமென்னும் நோக்கமுடையவராக இருந்தார். இந்த உயர்ந்த நோக்க மும், அதை யொட்டின அநுஷ்டானமுமே அவருக்கு ஒப்பற்ற கீர்த்தியை உண்டாக்கின. அவருக்குப் பின் இது காறும் நாம் அவரைப்போன்ற மற்றொருவரைக் காணக் கூடவில்லை. அதுவும் அவருடைய சிறப்பை நமக்கு நன்றாக உணர்த்துகின்றது. அக்பர் தாம் ஹிந்துக்களுடைய கூட் டுறவைக் கொண்டுதான் தமது ராஜ்யத்தை நிலைநிறுத்த முடியுமென்பதை நன்குணர்ந்தவராய், அவர்கள் செலுத்தி வந்த ஜஸியாவென்னும் தலை வரியைத் தீர்மானமாகத் தள்ளிவிட்டார். தீர்த்த யாத்திரை செய்பவர்கள் செலுத்தி வந்த வரியும் அவ்வாறே தள்ளுண்டது. அக்பர் ராஜ

புத்திரர்களையும், இதர ஹிந்துக்களையும் சிநேகம் செய்து கொள்வதன் பொருட்டே, அவர்களுடைய பெண்களைத் தாம் விவாகம் செய்துகொண்டு, தமது பிள்ளைகளுக்கும் அங்ஙனமே செய்வித்தார். அந்தக் காரணத்தினால் ராஜபுத்திரர்கள் அவருக்குச் சிறந்த உதவியானார்கள். அல்லாமலும், அவர் ஹிந்துக்களைப் பெரிய பெரிய உத்தியோகங்களுக்கு நியமித்துக்கொண்டார். ராஜாமான்சிங் என்பவர் காபூலிலும், வங்காளத்திலும் கவர்னராக இருந்ததையல்லாமல், அவரும் ராஜாபகவன்தாஸ் என்பவரும் அக்பர்பொருட்டுத் தங்களுடைய இனத்தைச் சேர்ந்த உதயகிரி மன்னவனோடுஞ் சண்டை யிட்டிருக்கிறார்கள். ராஜாபிர்பால் என்னும் பிராமணரை அக்பர் அதிக பிரியத்துடன் நடத்தி வந்தார். இவைகள் காரணமாக ஹிந்துக்களுக்கும், மகம்மதியர்களுக்கும் ஒற்றுமை அதிகமாயிற்று.

அக்பர் ராஜா தோடர்மால் என்பவரைத் தமது ராஜ்யத்தின் வரவு செலவுகளைக் கவனித்து, அவற்றின் சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்யும் அதிகாரியாக்கினார். அவர் நிலங்களை அளவிட்டும் அவற்றைப் பல வகுப்புக்களாகப் பிரித்தும், வகுப்புகளுக்குத் தக்கபடி வரிகளை விதித்தும், நில வரி சம்பந்தமான ஏற்பாடுகளை மிக்க விமரிசையாக அமைத்து வைத்தார். காம்பு நிலங்களுக்கல்லாமல், நல்ல நிலங்களுக்கும் அதிவிருஷ்டியினாலாவது, அநாவிருஷ்டியினாலாவது பயிர்கள் சேதமடைந்து விளைவு குறைவுபட்ட பொழுது வரிகள் மட்டுப்படுத்தப் பட்டன. குடிகளிடமிருந்து மூன்றிலொரு பங்கு வரி வசூலிக்கப்பட்டு வந்தது. பத்தொன்பது வருஷங்களி லிருந்துவந்த தானிய விலைகளின் சராசரியைக் கொண்டு குடிகள் செலுத்தவேண்டிய நில வரியின் தொகை நிர்ணயிக்கப்பட்டது. என்றாலும், அந்த விலையை ஒப்புக்கொள்ளாத வொருவன் பணத்திற்குப் பதிலாகத் தான் பயிரிட்ட தானியத்தையே கொடுத்துவிடலாம். அல்லாமலும், அவர் காலத்தில் ஏழைக் குடியானவர்களுக்குச் சர்க்காரிலிருந்து முன் பணம் கொடுத்துதவி அதனைக் கொஞ்சங் கொஞ்சமாக வசூல் செய்யும் ஏற்பாடுகளும்

செய்யப்பட் டிருந்தன. வரி வசூல் செய்யும் உத்தியோகஸ்தர்கள் குடிகளை வருத்தாதபடி பல நிபந்தனைகள் உண்டாக்கப்பட்டன. ஒவ்வொருவருக்கும் சொந்தமான நிலம் எவ்வளவு என்பதையும், அவரவர்கள் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய பாக்கி எவ்வளவு என்பதையும் தெரிவிக்கக் கணக்குக்கள் இருந்தன. மத பேதமில்லாமல் வரிகள் விதிக்கப்பட்டன. ஆங்கிலேய துரைத்தனத்தார் இப்பொழுது அநுஷ்டித்து வரும் நில வரி வசூல் சம்பந்தமான ஏற்பாடுகளில் அக்பருடைய ஏற்பாடுகளை யொட்டிச் செய்யப்பட்டவைதான் சிறந்தவைகள் என்பது பலருடைய அபிப்பிராயம். அக்பர் தம்முடைய பெரிய ராஜ்யத்தைப் பதினைந்து மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கவர்னரை ஏற்படுத்தினார். அவர்கள் எவ்வாறு ராஜரீகம் நடத்தி வரவேண்டுமென்பதைக் குறித்துத் தெளிவான ஏற்பாடுகளைச் செய்து, அவற்றின்படி அவர்கள் நடந்து வரவேண்டும் என்றும் திட்டஞ் செய்திருந்தார். இன்னும், அவர் அந்த மாகாணங்களைப் பல ஜில்லாக்களாகப் பிரித்து அவைகளைக் கவனித்து வருமாறு அநேக உத்தியோகஸ்தர்களையும் நியமித்தார். அவர்களுக்கு மன்ஸப்தார்கள் என்று பெயர். அவர்கள் யுத்தகாலத்தில் அரசருக்குத் துணை வரவேண்டும்.

அக்பருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. என்றாலும், அவர் மிகச் சிறந்த கல்விமான். அவர் அநேகம் ஆயிரம் புத்தகங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு அவற்றைப் பிறர் படிக்கக் கேட்டுவந்தார். அவருக்கு ஆச்சரியமான ஞாபகசக்தி யிருந்தது. அவருடைய புத்தகசாலையில் சுமார் 24,000 புத்தகங்கள் இருந்தனவென்றும், அவற்றை அவர் மிகப் பெரிய வித்வான்களைக் கொண்டு எழுதியும், திறமாகச் சித்திரிப்பவர்களைக்கொண்டு அவற்றிற்கான உருவப்படங்களைச் சித்திரித்தும் வைத்தாரென்றும், அவற்றின் பொருட்டு அவர் சுமார் 65 லக்ஷம் ரூபாய் வரையில் செலவிட்டாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இராமாயண மஹாபாரதங்களை அவர் பாரஸிக பாஷையில் எழுதிவைத்திருக்கிறார்.

அவருக்குச் சங்கீதத்திலும், சித்திரம் எழுதுவதிலும் பிரியம் அதிகம்.

அக்பருக்கு மத வைராக்கியம் கிடையாது. அவர் பிராமணர், மகம்மதியர், கிறிஸ்தவர், பாரஸிகர், பௌத்தர், ஸீக்கர் ஆகிய எல்லா மதத்தினர்களையும் தமது சபைக்கு வரவழைத்து, மதவாதம் செய்யும்படி விட்டுத் தாம் அவர்களுடைய வாதங்களைக் கேட்டுக் களிப்படைவார். அவர் தாம் புதிதாக உண்டுபண்ணின ஸிக்ரி என்னும் நகரத்தில் மதப் பிரசங்கம் செய்வதற்கென்று ஓர் அழகிய மண்டபத்தை அமைத்து வைத்தார்.

அக்பருக்கு அபுல்பஜல் என்ற ஒரு சிறந்த நண்பர் இருந்தார் என்று முன்னமே சொல்லப்பட்டதல்லவா? அவர் கல்வி கேள்விகளில் மிகுந்த கியாதி பெற்றவர். அவர் அக்பருடைய ஜீவிய சரித்திரத்தையும், அவருடைய ராஜ்ய பரிபாலன முறைகளையும் பற்றின ஆயினி அக்பரீ என்னும் புத்தகத்தை எழுதியிருக்கிறார். அது ராஜபாஷையான ஹிந்தியில் எழுதப்பட்டது. அவருடைய சேர்க்கையினால் அக்பருக்கு மத விஷயத்தில் மிகுந்த சாத்விக குணம் உண்டாயிற்று. அக்பர் எல்லா மதங்களிலும் உண்மை உண்டு என்பதைக் கண்டறிந்தார். அதனால், அவர் தமது குடிகள் அவரவர்களுடைய இஷ்டப்படித் தங்களுடைய மதங்களை அநுஷ்டிக்கலாம் என்று உத்தரவுபண்ணினார். அவருடைய பட்ட மஹிஷிகளிலொருவர் அரண்மனையில் கோயிலொன்றை யமைத்து அதில் விக்ரஹத்தை வைத்துப் பூஜை செய்து வந்தார். ஒருவர் சூரியனையும், அக்நியையும் தொழுதுவந்தார். மற்றொருவர் கிறிஸ்துவை வணங்கி வந்தார். இவ்வாறாக அவருடைய அந்தப்புரத்திலேயே நாலாவிதமான மதங்களும் அநுஷ்டிக்கப்பட்டன. பிற்காலத்தில் அக்பர் நெற்றியில் திலகம் அணிந்து மாட்டிறைச்சி யுண்பதை விட்டுவிட்டார்.

அக்பர், தம்முடைய காலத்தில் மிகச் சிறந்தனவான சில திருத்தங்களைச் செய்திருக்கிறார். அவர் மிகவும் இளம் பிராயத்தில் கன்னிகைகளுக்கு விவாகம் செய்யக் கூடா

தென்றும், சதிகள் தமது பதிகளுடன் சககமனம் செய்யக் கூடாதென்றும் ஏற்பாடுகள் செய்தார். ஆனாலும், அந்த இரண்டு கொடிய வழக்கங்களும் அடியோடு நின்றுவிடாமற் போனாலுங் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைவுபட மாத்திரம் ஆரம்பித்தன. சககமனத்துக்கு ஸ்திரீயின் சம்மதம் இன்றியமையாததாக ஏற்பட்டது.

அக்பர் பிற்காலத்தில் பற்பல மதங்களிலும் தாம் சிறந்தவைகள் என்று கண்ட சில கொள்கைகளைத் திரட்டி எல்லா மதத்தினர்களுக்கும் பொதுவான ஒரு மதத்தை ஏற்படுத்தி அதற்குத் 'தெய்வமதம்' என்று பெயரிட்டு அதனை எல்லா ஜனங்களும் அநுஷ்டிக்க வேண்டுமென்று விரும்பினார்.

அக்பர் பரந்த மார்பும், பருத்த தோள்களும், நீண்ட கைகளும், உயரமும் உடையவர். அவருடைய கண்கள் விசாலமாயும், நெற்றி அகலமாயும் இருக்கும். அவர் சிங்கத்தின் பலம் பொருந்தியவர். நீந்துவதிலும், குதிரையேறிச் சவாரி செய்வதிலும், குதிரையின் மீதிருந்து பந்தாடுவதிலும் அவருக்குப் பிரியம் அதிகம். அவர் இரவில் நெருப்புப் பந்தை வைத்துக்கொண்டு ஆடுவார். அவர் மிதமாக உண்டும், உடுத்தும் வந்தார். அவர் வாரத்தில் இருமுறை தான் மாமிசம் புசிப்பார். அவருடைய குரல் கணீரென்றிருக்கும். அவர் மிக்க மரியாதையும், தயையும் உள்ளவர். அவர் எப்பொழுதும் மிதமாகத் தான் பேசுவார். முகலாய ராஜ்யத்தை உண்மையிற் கண்டு பிடித்தவர் அக்பரேயாவர். அவர் மிகுந்த புத்தி நுட்பத்துடனும், சாமர்த்தியத்துடனும் தமது உத்தியோகஸ்தர்களைத் தெரிந்தெடுத்தும், அவர்கள் யாவரும் தம்மிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக நடந்துகொள்ளும்படிச் செய்தும் வந்தார். அவருடைய காலத்தில் மேனாட்டிலும், மற்றென்னாட்டிலும் மதத் தரிப்புள்ள வரசர்கள் இருந்திலர்கள் என்றால், அதனின்றும் அக்பர் குணம் எவ்வளவு மேன்மையானது என்பதை நாம் அறிந்துகொள்ளலாகு மல்லவா? அவருக்கு அசோகரையன்றி வேறு எவரையும் சமமாகச் சொல்லமுடியாது.

## 31. ஜிஹாங்கீர்

### கி. பி. 1605—கி. பி. 1627

அக்பருக்குப் பின்பு அவருடைய அபிப்பிராயத்தின் படியே அவர் மைந்தர் ஸலிம் பட்டத்துக்கு வந்தார். அப்பொழுது அவர் தமது பெயரை 'உலகத்தை வென்றவன்' என்று பொருள்படும் 'ஜிஹாங்கீர்' என்று மாற்றி வைத்துக்கொண்டார். அவர் பட்டத்துக்கு வந்த சில மாதங்களுக்குள் அவருடைய மூத்த மகனை, குஸ்ரூ என்பவன் தகப்பனுக்கு விரோதமாகக் கலகஞ் செய்து தான் அரசனாக வேண்டும் என்று எண்ணினான். ஆனால், அவனும் அவனுக்கு அநுசாரணையானவர்களிற் பலரும் சிறை யானார்கள். ஜிஹாங்கீர் தமது மகனைக் கண்களைக் குத்திச் சிறையிலிட்டும் அவனுக்கு அநுசாரணையானவர்களைக் கழுவிலேற்றிக் கொன்றும் தண்டித்தார். சுமார் பதினாறு வருஷம் சிறையிலிருந்து கி. பி. 1622-ல் குஸ்ரூ இறந்து போனான். ஷாஜஹான் தூண்டுதலினால் குஸ்ரூ கொலையுண்டு போனான் என்று எண்ணவும் இடமுண்டு.

ஜிஹாங்கீருக்கு அவருடைய தந்தைக்கிருந்தனபோன்ற அறிவாவது, நல்லொழுக்கமாவது கிடையா. என்றாலும், அவர் தமது தந்தையின் உயர்ந்த வழிகளைப் பின் பற்றினவராய்த் துரைத்தன வமைப்புக்களை மட்டில் மாற்றாமல் நடத்தி வந்தார். அதனாற்றான் அவருடையராஜ்யம் அழிவுறாமல் நிலை நின்றது. அவருக்குத் தாம் தமது ராஜ்யத்தைப் பெருக்க வேண்டுமென்னும் எண்ணம் இருந்தது. அதன் பொருட்டு அவர் பன்முறைத் தமது சேனைகளை யுத்தத்திற்கு நடத்தி முயன்று வந்தாரெனினும், அவருக்குக் காண்டஹார் மட்டில் தான் கிடைத்தது. அதையும் சில வருஷங்களுக்கெல்லாம் பாரஸிகர்கள் திரும்ப ஜயித்துக்கொண்டு விட்டார்கள். ஆமதுநகரமும் மாலிக் ஆம்பர் என்பவனால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. கி. பி. 1614-ல் குர்ரம் என்னும் ராஜகுமாரன் மீவார் நாட்டரசரான அமரஸிங்க் என்பவரை வென்று அவர் முகலாய வரசருடைய அதிகாரத்திற் குட்

படும்படி செய்து விட்டான். வங்காளத்தில் உண்டான கலகம் சீக்கிரத்திலேயே அடங்கி விட்டது. பஞ்சாபிலுள்ள காங்க்ராவென்னும் கோட்டை ஜயிக்கப்பட்டு ஜிஹாங்கீருக்குச் சொந்தமாய்விட்டது.

கி. பி. 1616-ல் பஞ்சாபில் மிகக் கொடிய கொள்ளை நோய் உண்டாய், அது ஹிந்துஸ்தானத்தின் பெரும் பாகத்திற்கும் பரவிப் போயிற்று. அதனால், ஜனங்கள் ஆயிரக் கணக்கில் மாண்டு போனார்கள்.

'ஜிஹாங்கீர் சிறுவராயிருக்கும்பொழுது நூர்ஜஹான் என்னும் ஒரு பாரஸிகப் பெண்ணின்மீது காதல் கொண்டு அவளை மணக்க விரும்பினார். அக்பருக்கு அது சம்மதமில்லையாதலால், நூர்ஜஹான் ஷர்கான் என்னும் வங்காள நவாபைக் கலியாணம் செய்துகொண்டு அவருடன் சுகமாக வாழ்ந்திருந்தாள். என்றாலும், ஜிஹாங்கீர் அவளைக் கொஞ்சமும் மறந்து விடவில்லை. அவர் தாம் பட்டத்துக்கு வந்ததும் ஷர்கானைக் கொன்று நூர்ஜஹானைச் சிறைப்படுத்தினார். சில வருஷங்கள் கழித்து அவள் அவருக்கு மனைவியானாள்,' என்று ஒரு கற்பனைக் கதை வழங்கி வருகின்றது. அதை நிஜமெனக் கொள்வதற்கு யாதொரு ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையில் ஷர்கான் சண்டையில் இறந்த பிறகு நூர்ஜஹானும் அவள் பெண்ணும் ஜிஹாங்கீருடைய அந்தப்புரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். நூர்ஜஹான் ஜிஹாங்கீரின் தாய்க்குத் தோழியாக இருந்து வந்தாள். கி. பி. 1611-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் வழக்கம் போல் வசந்தகால விநோதச் சந்தை நடந்தேறின பொழுது, ஜிஹாங்கீர் நூர்ஜஹானைக் கண்டார். அவர் அவளுடைய ஒப்பற்ற சௌந்தரியத்தைக் கண்டு அவள் மீது மோகங் கொண்டு அவளைத் தாம் மணந்து கொண்டார்.

நூர்ஜஹான் சாமர்த்தியமும், நற்குணமும் வாய்ந்தவள். அவளுக்கு அழகுக்குத் தகுந்த புத்தியும் இருந்தது. அவளை ஜிஹாங்கீர் விவாகம் செய்து கொண்டது முதல் நூர்ஜஹானே ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தாள். நாண

யங்களில் ஜிஹாங்கீருடைய உருவத்துடன், நூர்ஜஹா னுடைய உருவமும் செதுக்கப்பட்டது. ஒரு சமயம் அரசர் அவளுக்கு நாணயத்தை முத்திரையிட்டு வெளியிடும் அதிகாரத்தைக் கொடுத்தார் என்றும், அப்பொழுது அவள் பன்னிரண்டுராசிகளின் உருவங்களும் செதுக்கப்பட்ட நாண யங்களை ஏராளமாகச் செய்வித்தாள் என்றும் சொல்லப்பட் டிருக்கின்றன. ஜிஹாங்கீருக்கு உண்ண உணவும், குடிக்க மதுவும் இருந்தாற் போதும். நூர்ஜஹான் நியாயம் நடத்து வதில் மிகவும் கெட்டிக்காரி. அவள் தன்னுடைய குடிகளை அன்புடன் பாதுகாத்துச் செங்கோல் செலுத்தி வந்தாள். பிரியாது சொல்லவருபவர்களின் சௌகரியத்திற்காக அவள் தனது அரண்மனை வாயிலில் மணியொன்று கட்டுவித்தாள். அதன் ஓசை காதிற் பட்டதும், அவள் வெளியே வந்து வழக்குக்களை விசாரித்துத் தீர்ப்புச் சொல்லுவாள். நூர்ஜ ஹான் தயாள குணமுடையவள். அவள் திக்கற்ற பெண் களுக்குத் தனது கையினின்றும் பணத்தைச் செலவிட்டுக் கலியாணங்கள் செய்து வைத்தாள்.

நூர்ஜஹான் தன்னுடைய அதிகாரத்தைப் பலப்படுத் துவதற்காகத் தனது உடன் பிறந்தவனை அஸப்கானின் மகளைக் குர்ரமுக்கும் தான் தன்னுடைய முதல் புருஷனை ஷர்கானுக்குப் பெற்ற பெண்ணை ஜிஹாங்கீரின் மற்றொரு மகனை ஷார்யார் என்பவனுக்கும் கலியாணம் செய்து கொடுத்தாள். ஆனால், சீக்கிரத்திலேயே அவளுக்கு ஷாஜஹா னிடம் வெறுப்புண்டாய் விட்டது. அப்பொழுது அவள் தனது மருமகனை ஷார்யாரை முன்னுக்குக் கொண்டு வர எண்ணங்கொண்டாள். அதை யறிந்த ஷாஜஹான் கலகஞ் செய்யவும், நூர்ஜஹான் மகபத்கான் என்னும் சேனைத் தலைவனை அனுப்பி ஷாஜஹானைத் தோற்கடித்தாள். அதற் குப் பிறகு மகபத்கானும் ராணிக்கு விரோதமாய் ஷாஜஹா னுடன் சேர்ந்து கொண்டு, கி. பி. 1626-ல் ஜிஹாங்கீர் காபூ லுக்குப் போகும் வழியில் அவரைச் சிறைப்படுத்தினான். ஆனால் நூர்ஜஹான் அரசனை உபாயத்தினால்மீட்டுக்கொண்டு விட்டாள். மறுவருஷம் ஜிஹாங்கீர் மரண மடைந்தார்.

ஷாஜஹான் அவருக்குப் பின்பு பதினெட்டு வருஷகாலம் உயிரோடிருந்து கி. பி. 1645-ல், இறந்து போனாள். அவள் இருந்த வரையில் ஷாஜஹான் அவளைச் செம்மையாக உபசரித்தும் அவளுக்குப் போதுமான பணத்தைக் கொடுத்துதவியும் வந்தார்.

ஜிஹாங்கீருக்கு மதுபானத்திலும், பந்தயச் சண்டை முதலான சிற்றின்பங்களிலும் பிரியம் அதிகம். அவரிடம் தயை, நல்லறிவு, மரியாதை முதலிய நற்குணங்களும் அவற்றோடு இணங்கப் பெறாத தயவின்மை, சாபல்யம், குரூரம் முதலிய தீயகுணங்களும் ஒருங்கே இருந்தன. அவர் சித்திரம் எழுதுவதிலும், சிருஷ்டியின் விநோதங்களைக் கண்டு களிப்பதிலும் தமது காலத்தைச் செலவிட்டு வந்திருக்கிறார். அவர் கற்றோரையும் ஒருவாறு ஆதரித்து வந்தார். அவரும் தாமே தமது சரித்திரத்தை எழுதி யிருக்கிறார். அவருக்குச் சங்கீதத்திலும், சிற்ப சாஸ்திரத்திலும் கூடத் தேர்ச்சி இருந்தது. அவர் தமது செல்வத்தைப் பொது நன்மையின் பொருட்டுச் செலவு செய்யாமல், வீணிலழித்து வந்தார். ஜிஹாங்கீர் காலத்தில் ஹாகின்ஸ் என்னும் ஆங்கிலேய கப்பற் றலைவர் அவரைக் காண வந்தார். அக்பர் சக்ரவர்த்தியினுடைய கீர்த்தி ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் பரவவும், அவரைக் காண்பதற்கென்றே பலர் இந்நாட்டிற்கு வந்தார்கள். மேனாட்டினர்கள் அவருடைய செங்கோலின் நேர்மையையும், ஆட்சியின் பெருமையையும், அவருடைய தரிப்பு, நல்லொழுக்கம், நடுவு நிலைமை முதலான நற்குணங்களையும், அவருடைய காலத்திலிருந்த கல்வியின் அபிவிருத்தியையும், நாகரிகத்தின் வளர்ச்சியையும் பற்றிப் பலர் சொல்லக்கேட்டு வியப்படைந்தார்கள். அவை யாவும் உண்மையாக இருக்கக்கூடுமோ வென்று அவர்களிற் பலர் ஐயமுற்றார்கள். சாமான்ய ஜனங்கள்கூட ஒருவரையொருவர் சந்தித்தபொழுது அவரைப்பற்றிப் பேசத் தொடங்கினார்கள். அல்லாமலும், அவர்கள் அத்தகைய சிறப்பு வாய்ந்த மன்னனைத் தாங்கள் எளிதில் அணுகித் தங்களுடைய வியாபாரத்திற்கான சுதந்தரங்களை இலகுவிற்

பெறலாம் என்றும் எண்ணினார்கள். அதன் பொருட்டுத் தான் ஆங்கில மன்னரான ஜேம்ஸ் என்பவர் ஹாகின்ஸை அக்பரிடம் அனுப்பினார். ஆனால், ஹாகின்ஸ் வருவதற்குள் அக்பர் காலஞ் சென்று ஜிஹாங்கீர் அரசராய் விட்டார். அரசர் முதலில் ஹாகின்ஸை செம்மையாக வரவேற்றாராயினும், பிறகு அவர் போர்ச்சுகீஸியருடைய தூண்டுதலினால் ஆங்கிலேயருக்கு வியாபார சுதந்தரங்களைக் கொடுக்க இணங்கவில்லை. தங்களுடைய வர்த்தகத்திற்குப் போட்டியாக ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்து விட்டார்கள் என்னும் பொறாமையினாற்றான் போர்ச்சுகீஸியர் அவ்வாறு செய்தார்கள். மூன்று வருஷங்கள் வரையில் இந் நாட்டிலிருந்து பின்னர் ஹாகின்ஸ் தம் மூருக்குச் சென்று விட்டார்.

மறுபடி கி. பி. 1615-ல், ஆங்கிலேய மன்னரால் அனுப்பப்பட்ட ஸர் தாமஸ் ரோ என்னும் மற்றொரு ராயபாரி இந்தியாவுக்கு வந்தார். அவரும் மூன்று வருஷ மளவும் இங்கே தங்கி யிருந்து ஜிஹாங்கீரிட மிருந்து ஆங்கிலேய வியாபாரத்திற்கு வேண்டிய சில சுதந்தரங்களைப் பெற்றார். அவரும், ஹாகின்ஸும், இன்னும் இந்நாட்டை நோக்கி வந்த பல மேனாட்டினரும் எழுதி வைத்த விவரங்களிலிருந்தும் நமக்கு முகலாய சகரவர்த்திகளைப் பற்றின பல விஷயங்கள் தெரிய வருகின்றன. அவர்கள் யாவரும் இந்நாட்டையும், அதன் குடிகளையும், அரசையும் பற்றிப் புகழ்ந்து எழுதி யிருக்கிறார்கள்.

---

## 32. ஷாஜஹான்

### கி. பி. 1627—கி. பி. 1658

ஜிஹாங்கீர் இறந்து போனபொழுது, ஷாஜஹான் தக்ஷிணத்திலும், ஷார்யார் லாகூரிலும இருந்தார்கள். ஷாஜஹானின மாமனான அஸப்கான் தனது மருமகன் வரும் வரையில் குஸ்ருவின் மகனான புலாகி என்பவனைப் பெயருக்கு அரசனெனச் சொல்லி ஷார்யார் வரவொட்

டாமற் றடுத்து வந்தான். தந்தை இறந்த செய்தியை யறிந்த ஷாஜஹான் விரைந்து வந்து, ஷார்யாரையும், பட்டத்துக்குப் போட்டியாக வரக் கூடிய மற்றைய தாயாதிகளையும் கொன்றுவிட்டுக், கி. பி. 1628-ம் வருஷம், பிப்ரவரி மாதத்தில் ஸிம்ஹாஸனம் ஏறினர்.

ஷாஜஹான் தாம் பட்டத்துக்கு வந்ததும், தக்ஷிணத்தை ஜயிக்கவேண்டும் என்று எண்ணினர். அவர் தக்ஷிணத்தில் கலகஞ் செய்து கிளம்பின கான் ஜஹான் லோடியைக் கொன்றார்; பீஜப்பூர் அரசனை வென்று தமக்குக் கப்பங் கட்டும்படி செய்தார்; ஆமதுநகரத்தை ஜயித்துத் தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டார். அவர் பீஜப்பூரையும், கோலகோண்டாவையும் எதிர்த்துச் சண்டை செய்தார். அவை அவருக்குக் கிட்டும் சமயத்தில், தமது ராஜ்யத்தில் தம்முடைய பிள்ளைகளுக்குள்ளேயே ஏற்பட்ட சண்டையினால், அவர் அவற்றை விட்டு விட்டு வரும்படி நேர்ந்தது. ஹிந்துகுஷ் மலைக்கு மேற்கிலுள்ள காண்டஹார், பாக்ட்ரியா, படக்ஷான் என்னும் நாடுகளும் ஷாஜஹானுக்குச் சொந்தமாயின. ஆனால் கி. பி. 1648-ல், காண்டஹார் மட்டில் திரும்பவும் பாரஸிகர்களுடைய வசமாய்விட்டது. ஷாஜஹான் காலத்தில் கூர்ஜர நாட்டில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அரசர் கஞ்சித் தொட்டிகளை யமைத்தும், வரிகளைத் தள்ளியும் உதவின போதிலும், ஜனங்கள் ஆயிரக் கணக்கில் மாண்டு போனர்கள்.

ஷாஜஹான் தம்முடைய தந்தையையும், பாட்டனையும் போலன்றி மகம்மதிய மதத்தில் கொஞ்சம் பற்றுள்ளவராக இருந்தார். அவர் ஹிந்துக்களுடைய கோயில்களை இடித்ததாகவும் சிலர் எண்ணுகிறார்கள்.

அவருடைய காலத்தில் ஹூக்ளியில் வர்த்தக சாலையையும் கோட்டையையும் அமைத்துக் கொண்டு வியாபாரஞ் செய்துவந்த போர்ச்சுகீஸியர்கள் தங்களுடைய சுதந்தரங்களை மீறிக் கப்பற் கொள்ளை யடித்தும், அடிமை வியாபாரஞ் செய்தும், நாட்டின் அமைதியைக் கெடுக்கத்

தலைப்பட்டதனால், ஷாஜஹான் ஒரு சேனையை யனுப்பி அவர்களை த்வம்சம் செய்து விட்டார்.

ஷாஜஹான் ஏராளமான திரவியத்தைச் சம்பாதித்து அதனைக் கண்ணைக் கவரும் கட்டடங்களிற் செலவிட்டார். அவை உலகமெங்கும் இன்னமும் பிரசித்து பெற்று விளங்குகின்றன. அவர் ஆக்ராவில், யமுனா நதிதீரத்தில் தாஜ் மஹால் என்னும் ஒரு அற்புதமான கட்டடம் கட்டி வைத்திருக்கிறார். அதற்குச் சமமான கட்டடம் உலகில் வேறெங்கும் கிடையாது. அதைப் போன்ற ஒரு கட்டடத்தை இப்பொழுது அமெரிக்காவிலுள்ள பிலடெல்பியா வென்னும் நகரில் கட்ட ஆரம்பித் திருக்கிறார்கள். தாஜ்மஹால் ஷாஜஹானின் மனைவியான மும்தாஸ் மஹால் என்பவளுடைய சமாதி. உலகத்தில் அவளுடைய பெயர் என்றும் ஞாபகம் இருக்கும் பொருட்டு அவர் அதனை அவளுடைய வேண்டுகோளுக் கிணங்கி அமைத்து வைத்தார். அதையல்லாமல், அவர் முத்து மசூதி என்னும் வேரொரு அழகிய கட்டடத்தையும் கட்டுவித்தார். டில்லியிலுள்ள ஜம்மா மசூதி என்னும் கட்டடமும் அவரால் தான் கட்டப்பட்டது. தாஜ் மஹாலைக் கட்டுவதற்கு இருபத்திரண்டு வருஷமும், முப்பது லக்ஷம் ரூபாயும் பிடித்தன. அவர் தாம் புதிதாய் உண்டு பண்ணின ஷாஜஹான்பாத் என்னும் நகரத்தின் பொருட்டும், தமது மயிலாஸனத்தின் பொருட்டும் அளவற்ற பணத்தைச் செலவிட்டார். அவருடைய மயிலாஸனம் மட்டில் கோடி ரூபாய் மதிப்புள்ளது. அவ்வளவு செல்வமும் இந் நாட்டிலேயே செல விடப்பட்டு வந்த காரணத்தினால், நாட்டின் செலவம் குறைந்ததாகக் கொள்வதற்கிடமில்லை. அல்லாமலும் அவர் அமைத்துவைத்த கட்டடங்களினால், ஆயிரக்கணக்கான மண்வேலை மரவேலை செய்பவர்களும், சிற்பிகளும் சித்திரிப்பவர்களும் ஆதரிக்கப்பட்டுத் தங்கள் தங்கள் கைத்தொழில்களில் தேர்ச்சி யுண்டாகப் பெற்று முன்னேற்றத்தை யடையலானார்கள்.

ஷாஜஹான் டில்லியில் புதிதாக ஒரு நகரத்தை அமைத்து அதற்கு ஷாஜஹான்பாத் என்று பெயரிட்டார்.

அக்காலத்தில் அதினினுஞ் சிறந்த பட்டணம் உலகத்தில் வேறெங்கு மிருந்ததில்லை என்பது அநேகருடைய அபிப்பிராயம். அந்த நகரத்தைச்சார்ந்து ஒரு கோட்டை இருந்தது. அதன் சுற்றளவு ஒன்றரை மைல். கோட்டையின் மதில் 60 அடி உயரம் இருக்கும். கோட்டைக்குள் அநேக அழகிய மண்டபங்களும், மசூதிகளும், ஸ்நான கட்டங்களும், தோட்டங்களும் இருந்தன. அதனுள் முழுவதும் சலவைக் கற்களினால் கட்டப்பட்ட சுத்த ஜல வாய்க்கால் ஒன்று இருந்தது.

மசூதி ஒரு கற்பாறையின் மீது கட்டப்பட்டு மூன்று சிகரங்களையும், 130 அடி உயரமுள்ள இரண்டு கோபுரங்களையும் பொருந்தி யிருந்தது. அதன் உள்ளே கறுப்புச் சலவைக் கற்களும், வெள்ளைச் சலவைக் கற்களும் பதிக்கப் பட்டிருந்தன. அதில் 899 பெயர்கள் ஏககாலத்தில் உட்கார்ந்து ஜபம் செய்யலாம்.

அந்த நகரம் மூன்றாம்பிறைச் சந்திரனைப்போன்று வளைந்த வடிவமாய்க் கட்டப்பட்டிருந்தது. அது யமுனா நதியின் வடகரையிலிருந்தது. ஆற்றைக் கடக்க ஒரு பாலம் உண்டு. நகரவாயிலுக்கு வெளியில் அநேகம் பிரபுக்களும், வியாபாரிகளும் அழகான வீடுகளை அமைத்துக்கொண்டு வசித்து வந்தார்கள். கூரைக் குடிசை முதல் விசாலமான மாளிகை வரையில் உள்ள பலவிதமான கட்டடங்களும் அங்கே காணப்பட்டன. பிரபுக்களுடைய மாளிகைகளில் நந்தவனங்களும், நீரூற்றுக்களும் இருந்தன. சில பெரிய வீதிகள் 70, 80 அடி அகலம் உள்ளன. வீதிகளிலிருந்து நான்கு பக்கங்களிலும் போகக்கூடிய இடங்களில் சித்திர வேலைக் காரர்களும், தட்டார்களும், பீரங்கி செய்பவர்களும் வசித்து வந்தார்கள். வீடுகளின் சுவர்கள் படங்களினாலும் சித்திரங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஷாஜஹானுடைய சபா மண்டபம் பூலோக அமராவதி என்று சொல்லத் தக்கதான பெருமை வாய்ந்திருந்தது.

ஷாஜஹான் முதலில் எவ்வளவு சந்தோஷமாய்த் தமது வாழ் நாட்களைக் கழித்து வந்தாரோ, அவ்வளவு துன்பத்

தைத் தமது கடைசி காலத்தில் அநுபவித்தார். அவருக்கு நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். மூத்தவரான டோரா அக்பரைப் போன்று இதர மதத்தினர்களிடத்திலும் அன்பு பாராட்டி வந்தார். இரண்டாவது பிள்ளையும், அப்பொழுது வங்காள வைஸிராயுமாயிருந்த ஷூஜா தைரியமும் சாமர்த்தியமு முள்ளவர்; ஆனால் மதுபானப் பிரியர். மூன்றுவது பிள்ளையான ஒளரங்கஜீப் யுத்தவீரர்; ஆனால் தந்திரமும் பேராசையும் மிகுந்தவர்; ஏமாற்றுவதில் மிகுந்த சமர்த்தர். கடைசிப் பிள்ளையான மூராட் என்பவர் பலஹீனர்; சுகத்திலும், மதத்திலும் பற்றுடையவர். இவர்கள் அனைவரும் ராஜப் பிரதிநிதிகளாகவிருந்து ராஜ்ய பரிபாலன முறைகளில் தேர்ச்சியடைந் திருந்தார்கள். ஒளரங்கஜீப் பல சண்டைகளை முன்னின்று நடத்தினதனால் யுத்தத்திலும் தேர்ச்சி பெற்றிருந்தார். ஷாஜஹான் தேக அசௌக்கியத்தினால் படுக்கவும், இவர்கள் ராஜ்யத்தைக் குறித்து ஒருவரோடுவர் சண்டையிடத் தலைப்பட்டார்கள். டோரா சண்டையில் மடிந்துபோனர். ஷூஜா உயிர் தப்பி யோடிப்போய்விட்டார். ஒளரங்கஜீப் ஜயம்பெற்று ஷாஜஹானையும் மூராட்டையும் சிறைப்படுத்தி ராஜரீகம் நடத்திவந்தார். கொஞ்ச காலங் கழித்து அவர் மூராட்டைக் கொன்றுவிட்டார். ஏழு வருஷம் சிறையிலிருந்து கி. பி. 1666-ல் ஷாஜஹானும் இறந்தார். சிற்சில சமயங்களில் ஷாஜஹான் குரூரமான தண்டனைகளை விதித்துத் தமது குடிகளுக்குத் துன்பத்தை விளைவித்தபோதிலும், அவர் தமது பிரஜைகளைத் தகப்பன் மக்களைக் காப்பதையொத்துப் பாதுகாத்து வந்தார்.

---

## 33. ஒளரங்கஜீப்

### கி. பி. 1658—கி. பி. 1707

தந்தையைச் சிறையிலடைப்பித்தும், சகோதரர்களைக் கொன்றும் ஸிம்ஹாஸனம் ஏறிய ஒளரங்கஜீப் மிகுந்த பராக்கிரமமுடையவர். ராஜ காரியங்களிலும், ராஜ்ய பரிபாலன முறைகளிலும் கைதேர்ந்தவர்; நியாயம் நடத்துவதில்

பக்ஷபாதம் இல்லாதவர்; தாம் செய்யவேண்டிய கடமைகளை ஊக்கத்துடன் செய்யும் இயல்பினர்; சிற்றின்பங்களை முற்றிலும் வெறுத்தவர்; மது மாமிசங்களைக் கனவிலும் விரும்பாதவர்; குடிகளின் நலத்தையே நாடி உழைத்தவர்; தமது சுய நலத்தின்பொருட்டுப் பொக்கிஷத்திலிருந்து கொஞ்சமும் பணத்தைச் செலவு செய்யாமல் தாமே தொழில் செய்து பணம் சம்பாதித்துச் செலவு செய்து வந்தவர்; கொலுவீற்றிருக்கும் போதல்லாமல் மற்ற சமயங்களில் ஆபரணங்களையும், விலையுயர்ந்த ஆடைகளையும் அணிய மனமில்லாதவர்: கல்வி கேள்விகளிற் கைதேர்ந்தவர்; அஞ்சாத நெஞ்சம் படைத்தவர்; ராஜ தந்திரங்களில் வல்லவர்; மதவைராக்கியமுள்ளவர்; இவருக்கு மகம்மதிய வேதமாகிய கொரான் மனப்பாடம். இவர் அதனை இருமுறை எழுதி அந்தப் பிரதிகளை மெக்காவுக்கும் மெடீனாவுக்கும் அனுப்பிவைத்தார்.

இத்தனை நற்குணங்கள் பொருந்திய இவர் 'தான் திருடி பிறரை நம்பாள்' என்றவாறு ஒருவரையும் நம்புவதில்லை. இவர் மகம்மதிய மதம் தவிர மற்ற மதங்கள் யாவும் பொய்யென்று நிர்மாணித்து ஹிந்துக்களையும், பாரஸிகர்களையும் பலவிதமாக ஹிம்ஸிக்கத் தொடங்கினர். அதன்றியும், இவர் தமது இனத்திற் சேராத மற்றைய மகம்மதியர்களைக் கூடத் துன்புறுத்தினர். இவர் ஷாஜஹான் காலம் முதல் ராஜாங்க உத்தியோகங்களில இருந்துவந்த மந்திரிகள் முதலான பல ஹிந்து உத்தியோகஸ்தர்களை வேலைகளிலிருந்து நீக்கிவிட்டார்; ஹிந்துக்களின் கோயில்களை யிடித்து மசூதிகளைக் கட்டினர்; காசி க்ஷேத்திரத்திலிருந்த விஷ்ணுவாலயத்தை யிடித்து அந்தவிடத்தில் ஒரு பெரிய மசூதியை யமைத்தார். அவர் பள்ளிககூடங்களில் ஹிந்து மத போதனை செய்யக் கூடாதென்று நிபந்தனைகளை ஏற்படுத்தினர்; சுமார் நூறு வருஷங்களாக எடுபட்டிருந்த ஜஸியா என்னும் வரியை மீண்டும் விதித்து ஹிந்துக்களைத் தமக்கு விரோதிகளாக்கிக் கொண்டார். அவர் தாம் இவ்வாறு செய்தனவற்றையெல்லாம் தமது சிறந்த கடமையென்று

எண்ணினார். அதனால், அவற்றினால் ஏற்படக்கூடிய தீங்குகளை யவர் கொஞ்சமாவது கருதவாவது, பாராட்டவாவது இல்லை. என்றால், மத வைராக்கியத்தினாலவர் இழைத்த தீமைகளைக் குறித்து நாம் அவர் பொருட்டு மனவருத்தப் படவேண்டுமே யல்லாமல் அவரைப் பகைப்பது சரியல்ல.

கி. பி. 1662-ல், மீர்ஜம்லா வென்னும் வங்காள கவர்னர் அஸ்ஸாம் நாட்டின்மீது படையெடுத்துச் சென்று தோல்வி யடைந்தார். இவர் ஔரங்கஜீப் தக்ஷிணத்தில் பிரதிநிதியாக விருந்தபொழுது அவருடைய தளகர்த்தராக இருந்தவர். இவர் இறந்துபோனதும், ஔரங்கஜீப் தமது மாமனாரான ஷயிஸ்டகான் என்பவரை வங்காள கவர்னராக நியமித்தார். ஷயிஸ்டகான் அரக்கான் அரசர்மீது படையெடுத்துச் சென்று சிட்டகாங்க் மாகாணத்தைச் சம்பாதித்தார். இவ்விரண்டு படையெழுச்சிகளையன்றி ஔரங்கஜீப் பட்டத்துக்கு வந்தது முதல் சுமார் இருபது வருஷம் வரையில் ஹிந்துஸ்தானத்தில் வேறெந்த சண்டை சச்சரவுகளாவது, கலகங்களாவது கிடையா.

ஜோதிபுரத்தரசரான ராஜா ஜஸ்வந்த ஸிங்க் இறந்துவிட்டபொழுது ஔரங்கஜீப் அவருடைய பிள்ளைகளைப் பிடித்து மகம்மதியராக்க முயன்றதனால், இவருக்கும் ராஜபுத்திரர்களுக்கும் அழியாப் பகை உண்டாயிற்று. அதன்றியும், சாத்புரா மலைக்குத் தெற்கில் அரபிக்கடல் முதல் வரதா நதிவரையில் பரவியுள்ள காடு முரடான 'மஹாராஷ்டிரம்' என்னும் மலைப்பிரதேசத்தில் ஒருவகை ஹிந்துக்கள் தோன்றி ஔரங்கஜீபை எதிர்த்துச் சண்டையிட்டு அவருடைய சிறப்பை முழுவதும் ஒழித்துவிட்டார்கள். கொஞ்சங் கொஞ்சமாக முன்னேற்றத்தை யடைந்துவந்த மஹாராஷ்டிரர்களின் தலைவரான சிவாஜி பீஜப்பூரரசனால் அனுப்பப்பட்ட சைநியத்தையும், ஔரங்கஜீப் அனுப்பிய சேனையையும் அடியோடு தோற்கடித்துவிட்டார். பின்னர் சிவாஜி டில்லியில் சிறையி லடைப்பிக்கப் பட்டபொழுது தப்பிவந்து தமது அதிகாரத்தை நிலைநிறுத்தி மஹாராஷ்டிர மன்னவரென மகுடம் சூட்டப் பெற்றார். இவரைப்

பற்றின விவரங்கள் பின்னுற் சொல்லப்படும். முகலாய ராஜ்யத்திற் கேற்பட்ட சத்துருக்களில் இவர் முதன்மை யானவர் என்பது ஞாபகத்தில் வைக்கத் தகுந்தது.

ஒளரங்கஜீப் தாம் தக்ஷிணத்தில் பிரதிநிதியாக விருந்த பொழுதே பீஜப்பூர், கோலகோண்டா என்னும் மகம்மதிய ராஜ்யங்களை ஜயித்து டில்லி சாம்ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டுவிட வேண்டுமென்று எண்ணியிருந்தாரல்லவா? ஆனல், அந்த எண்ணம் அப்பொழுது நிறைவேறவில்லை. கி. பி. 1686-ல், அவர் பீஜப்பூரின்மீது படையெடுத்துச் சென்று அதைத் தமது வசமாக்கிக் கொண்டார். அரண் மனைகளும் மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் நிறைந்திருந்த அந்த அழகிய பட்டணம் பாழாகி நாய் நரி களுக்கும் ஆந்தை கோட்டான்களுக்குமே தக்க வாசஸ்தான மாயிற்று.

பிறகு ஒளரங்கஜீப் கோலகொண்டாவை முற்றுகை செய்து தமது வசமாக்கிக்கொள்ள முயன்றுர். வெகு நாட் கள் உழைத்தும் அவருடைய தைரியமும், விடாமுயற்சி யும் பயனற்றனவாயின. அவர் பின்னர்க் கோலகொண் டாவைத் தாம் தந்திரத்தினுற்றுன் ஜயிக்கமுடியும் என்றறிந் தார். அவர் கோலகொண்டா வீரர்கள் பலரை லஞ்சம் கொடுத்தும் ஆசைகாட்டியும் தமது வசமாக்கிக் கொண்டார். அப்துர்ரஸாக் என்னும் அமீர் ஒருவரே உண்மையாக நின்று கடைசிவரையில் சண்டையிட்டார். சண்டையிற் காயப் பட்டு மூர்ச்சித்து வீழ்ந்துகிடந்த அவரது உடம்பில் எழு பது காயங்களுக்குமேல் இருந்தனவாம். ஒளரங்கஜீப் அவ ருடைய உண்மையையும், வீரத்தையும் மெச்சி அவருடைய காயங்களையாற்றிச் சிகிச்சை செய்யும்படி தமது வைத்தி யரை அனுப்பினர். ரஸாக் வீழ்ந்துபோனதும், கோல கொண்டா வரசர் சிறைப்படுத்தப்பட்டார். அந்த நாடும் ஒளரங்கஜீப்புக்குச் சொந்தமாயிற்று. அதனுடன் அவருக் குச் சுமார் ஏழுகோடி ரூபாயும் கிடைத்தது. இவ்விரண்டு மகம்மதிய ராஜ்யங்களையும் ஜயித்துவிட்டதனுல், ஒளரங்க ஜீப் மஹாராஷ்டிரர்கள் யாதொரு தடையுமின்றி டில்லி




THE INDIAN PUBLISHING HOUSE, LTD

ராஜ்யத்தை எதிர்த்துச் சண்டை செய்வதற்கான சௌகரியத்தை யுண்டுபண்ணினார். சிவாஜி இறந்துவிடவும், ஔரங்கஜீப் அவருடைய மகனைக்கொன்றும், பெயரனைச் சிறைப்படுத்தியும் மஹாராஷ்டிரர்களோடு சண்டையிட்டுச் சில சமயங்களில் ஜயம் பெற்றும் வந்தாரானாலும், அவருக்கு அவற்றால் யாதொரு பயனும் காணக் கிடைக்கவில்லை.

ஔரங்கஜீப் வெகு காலம் தமது ராஜதானியைவிட்டு மஹாராஷ்டிரர்களுடனும், தக்ஷிணத்திலும் சண்டையிட்டு வருகையில் வடக்கில் ராஜபுத்திரர்களும், ஸீக்கர்களும், ஜாட்ஸ் என்னும் ஜாதியாரும் பிரபலமாகக் கிளம்பிக் கலகஞ் செய்யத் தலைப்பட்டார்கள். அவற்றை யடக்குவதற்கு ஔரங்கஜீப் சக்தியற்றிருந்தார். அவருடைய கடைசி காலத்தில் அவர் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் வீணாயின. அவர் எவரையும் நம்பாதவராய்த் தம்மை நேசிப்பார் எவருமின்றித் தமது பிள்ளைகளைத் தாமே சிறையிலடைத்தும், பல தோல்விகளினால் மனம் நொந்தும், தமது கொடுமைகளே தம்மைச் சுட்டு வருத்த கி. பி. 1707-ல் இறந்துபோனார். அவர் பக்தி, வைராக்கியம், நடுவு நிலைமை, தைரியம், பொறுமை, விடாமுயற்சி முதலிய பல நற்குணங்களுக்கும் உறைவிடமாக விருந்தும், அவர் எண்ணிய எண்ணங்கள் யாவும், செய்த முயற்சிகள் பலவும் பயனற்றனவாய் முடிந்தன. அவர் அடைந்தனவெல்லாம் தோல்வியே. ஆனாலும் அவைகள் யாவும் கம்பீரமான தோல்விகளேயாம். இறக்கும்பொழுது அவருடைய மனம் எவ்வாறு மிகுந்த சஞ்சலத்தை யடைந்திருந்த தென்பதை நாம் அவர் தமது பிள்ளைகளுக்கு எழுதின கடிதங்களினின்றும் அறிந்துகொள்ளலாம். அவை வருமாறு :—

'நீயும், உன் பெண்பிள்ளைகளும் சந்தோஷமாய் இருப்பீர்களாக! நான் வயது முதிர்ந்த கிழவனாய்விட்டேன். எனது தேகம் மெலிந்தும், என் அங்கங்கள் சோர்ந்தும் போயின. நான் பிறந்தபொழுது என்னைச் சுற்றிலுமிருந்த பெயர்கள் அநேகர். இப்பொழுதோ நான் தனித்துப் போகிறேன். நான் எதற்காக இவ்வுலகில் ஜன்மமெடுத்

தேனே அறிகிலேன். கடவுளை மறந்து நான் வாணளை வீணாக்கினதையுன்னி மனவருத்த மடைகிறேன். நான் தேசத்திற்காவது, அதன் குடிகளுக்காவது யாதொரு நன்மையையும் செய்தேனல்லேன். நான் என் ஆயுளை வீணிற் போக்கினேன். கடவுள் என் மனத்தினிலிருந்தும், நான் அவரைக் கண்டிலேன். எனக்கு இனி நற்கதி கிடையாது.........நான் பிறக்கும்பொழுது ஒன்றையுங் கொண்டு வரவில்லை. ஆனல் இப்பொழுதோ நான் எனது பாபங்களைச் சுமந்து செல்லுகிறேன். எனக்குக் கடவுள் என்ன தண்டனை விதிக்கப் போகிருரோ யான் அறிகிலேன். நான் கடவுளின் கருணையையே நம்பியிருக்கிறேன். ஆயினும் எனக்கு என்னிடத்திலேயே நம்பிக்கை யில்லாதபொழுது பிறரை நம்புவது எங்ஙனம்? வருவது வரட்டும்; நான்புறப் பட்டு விட்டேன். நான் போகிறேன். நீங்கள் சுகமா யிருங்கள்.'

'என் உயிருக்கும் உயிரானவனே! நான் இப்பொழுது தனிமையாகப் போகின்றேன். நீ திக்கற்றவனய் விட்டாயே யென்று என் மனம் வருந்துகின்றது. நான் இழைத்த ஒவ்வொரு தீங்கினலும் செய்த ஒவ்வொரு பாபத்தினலும், பிறருக்கு உண்டாக்கின ஒவ்வொரு வேதனையினலும் அடைந்த பலனை என்னுடன் கொண்டு செல்லுகின்றேன். என்ன ஆச்சரியம்! நான் ஒன்றையும் கொண்டுவாராதிருந்தும் தூக்கமுடியாத பளுவான பாவச்சுமையைச் சுமந்து கொண்டு போகின்றேனே! நான் எப்பக்கந் திரும்பினலும் அங்கே கடவுளை மட்டில்தான் பார்க்கிறேன். நான் மகா பாபி. ஐயோ! எனக்கு என்ன வதை யுண்டாகுமோ நான் அறியேன்......உன்னையும், உன் மக்களையும் கடவுள் காப்பாற்றுவாராக! என் மனம் மிக வருந்துகின்றது. மனம் நொந்துபட்ட உன் தாய், உதயபுரியும் என்னுடன் இறந்து விடுவாள். உனக்குச் சாந்தி யுண்டாகுக''

# 34. முகலாய ராஜ்யத்தின் அழிவு

ஒளரங்கஜீபின் கடைசி காலத்திலேயே க்ஷீணிக்கத் தொடங்கின முகலாய ராஜ்யம் அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த அரசர்கள் காலத்தில் முற்றிலும் நாசமடையலாயிற்று.

ஒளரங்கஜீபுக்குப் பின் அவர் மைந்தர் பஹதுர்ஷா வென்பவர் பட்டத்துக்கு வந்தார். அவருக்கு முதலாவது ஷாஹலம் என்றும் பெயருண்டு. அவர் கி. பி. 1707-முதல் ஐந்து வருஷகாலம் ராஜ்யபாரம் நடத்தினர். அவருடைய காலத்தில் மஹாராஷ்டிரர்களும், ராஜபுத்திரர்களும், ஸீக்கர்களும் சுயாதீனத்தை யடைந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பலாட்டியர்களாய் விட்டார்கள். ஒளரங்கஜீப் இழைத்த தீமைகள் காரணமாக ஹிந்துக்கள் ஆங்காங்குக் கலகஞ் செய்யத் தலைப்பட்டார்கள். பஹதுர்ஷா 1712-ல் ஸீக்கர்களைத் தோற்கடித்துத் துறத்தினர். ஆனால், அவர் வேறொன்றும் செய்யக்கூடவில்லை. அவருக்குப் பின் அவருடைய மைந்தர் ஜஹாண்டர்ஷா வென்பவர் பட்டத்துக்கு வந்தார். ஆனால், அவருடைய தம்பியின் மைந்தரான பருக்ஸியர் என்பவர் அவரைக் கொன்றுவிட்டுக் கி. பி. 1713-ல், தாம் ஸிம்ஹாஸனம் ஏறினர். அவர் காலத்தில் ஸயித் ஹுஸ்ஸேன் ஆலி ஸயித் அப்துல்லா என்னும் இரண்டு சகோதரர்கள் தோன்றித் தங்களுடைய தைரியத்தினலும், பராக்கிரமத்தினலும் எல்லா அதிகாரத்தையும் தாங்கள் கைப்பற்றிக் கொண்டு பருக்ஸியர் தங்களுக்கு அடங்கியிருக்கும்படி செய்து கொண்டார்கள். கி. பி. 1719-ல் அவரும் கொலையுண்டுபோனர். அப்பொழுது அவர்கள் பருக்ஸியரின் சிற்றப்பன் பிள்ளைகள் இருவரை ஒருவர் பின்னொருவராக ஸிம்ஹாஸனத்திலேற்றினர்கள். அவ்விருவரும் சில மாதங்கள் தான் உயிரோடிருந்தார்கள். பிறகு அவர்கள் கொலையுண்டு போனர்கள். அவர்கள் கொலையுண்டு போகவும், கி. பி. 1719-ல் மகம்மதுஷா பட்டத்துக்கு வந்தார். அப்பொழுது குடிகள் ஸயித் ஹுஸ்ஸெனும், அப்துல்லாவும்

இழைத்து வந்த தீங்குகளைச் சகிக்க முடியாதவர்களாய் நாலாப் பக்கங்களிலும் கலகஞ் செய்யத் தலைப்பட்டார்கள். அதன்றியும், தக்ஷிணத்தில் பிரதிநிதியாக விருந்த அசப்ஜா கி. பி. 1720-ல் ஸயித் சகோதரர்கள் அனுப்பின இரண்டு சைந்யங்களையுந் தோற்கடித்துத் துரத்திவிட்டுத் தக்ஷிணத்தில் தாம் சுயாதீனம் பெற்று ஆட்சி செய்துவரலானார். அவருடைய காலந் தொடங்கி இப்பொழுதும் அவருடைய சந்ததியார்கள் அவர் உண்டுபண்ணின ராஜ்யத்தைச் சுயாதீனமாகவே அரசு செலுத்தி வருகிறார்கள்.

மகம்மதுஷா ஸயித் சகோதரர்களி லொருவனைக் கொன்றுவிட்டு மற்றவனைத் தோற்கடித்துத் துரத்திவிட்டார். என்றாலும், அவருடைய ராஜ்யத்தில் கலகங்கள் அடங்கிவிடவில்லை. மகம்மதுஷாவும் தமது அதிகாரத்தை நிராகரித்துவிட்டுச் சுயாதீனத்தைப் பெற்றுவிட்டவர்களை யடக்கியாளுந் திறமையில்லாதவராயும், தம்மை எதிர்த்து நின்ற மஹாராஷ்டிரர்களையும், அசப்ஜாவையும் தோற்கடித்து வளரவொட்டாமற் செய்ய முடியாதவராயும் காலங்கழித்து வரலானார்.


பாபர் (I)
ஹுமாயூன் (II)
காம்ரான்
ஹிண்டால்
அஸ்காரி
அக்பர் (III)
ஹகீம்
ஜிஹாங்கீர் (IV)
மூராட்
டானியல்
குஸ்ரு
புலாகி
பார்விஸ்
ஷாஜஹான் (V)
ஜஹாண்டர்
ஷார்யார்
டாரா
ஷுஜா
ஔரங்கஜீப் (VI)
மூராட்
மற்றவர்கள்
பஹதுர்ஷா அல்லது ஷாஆலம் I (VII)
ஜஹாண்டர்ஷா (VIII)
அஸீமஸ்ஷான்
ரபியஸ்ஷான்
மகம்மது அக்தர்
ஆலம்கீர் (XIV)
பருக்ஸியர் (IX)
ரபியத் தௌலா (XI)
ரபியத்தராஜத் (X)
ஷாஆலம் II (XV)
அக்பர் II (XVI)
பஹதுர்ஷா (XVII)
மகம்மதுஷா (XII)
ஆமதுஷா (XIII)

இவ்வாறான நிலைமையில் உள் நாட்டிலேயே இருந்து வந்த சண்டைகளும் கலகங்களும் போதாவென்று கி. பி. 1738-ல், பாரஸிக தேசத்தரசனான நாதர்ஷா என்பவன் ஆப்கானிஸ்தானத்தை ஜயித்துக் காபூலைக் கைப்பற்றிக் கொண்டு இந்தியாவின்மீது படை யெடுத்து வந்தான். பஞ்சாபில் அவனை எவரும் எதிர்த்துச் சண்டை செய்யாத தனால், அவன் நேராக டில்லியை நோக்கி வந்தான். டில்லிக்கு நூறு மைல் தூரத்திலுள்ள கார்னல் என்னு மிடத்தில் அவன் கி. பி. 1739-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் மகம்மதுஷாவை அடியோடு தோற்கடித்து, ஸாதத்கான் என்னும் அயோத்தியின் பிரதிநிதியைச் சிறைப்படுத்தி அசப்ஜா விடம் டில்லிச் சக்ரவர்த்தித் தனக்குத் கீழ்ப்படிய வேண்டுமென்று சொல்லி யனுப்பி விட்டுத் தானும் டில்லிக்கு வந்து சேர்ந்தான். அங்கே மகம்மதுஷா அவனுக்கு லஞ்சம் கொடுத்து அனுப்பிவிட எண்ணியிருக்கையில் திடீரென்று நாதர்ஷா இறந்து விட்டானென்று ஒரு பொய் வதந்தி யுண்டாயிற்று. அதனைக் கேள்வியுற்ற டில்லிப் படை வீரர்கள் சில பாரஸிகப் போர் வீரர்களைக் கொன்று விட்டார்கள். அதை யறிந்த நாதர்ஷா கோபாவேசங் கொண்டு டில்லியிலுள்ள ஜனங்களைக் கொல்லும்படி தனது போர் வீரர்களுக்குக் கட்டளை யிட்டான். நிரபராதிகளான லக்ஷக்கணக்கான ஏழை ஜனங்கள் அவர்களால் அநியாயமாகக் கொலையுண்டு போனார்கள். பிறகு நாதர்ஷாவின் போர் வீரர்கள் வீடுகளிற் புகுந்து கொள்ளை யடித்தார்கள். நாதர்ஷா டில்லியிலிருந்து கொள்ளை கொண்டு கவர்ந்து சென்ற பொருள் முப்பது கோடி ரூபாய்க்கும் அதிகம் இருக்கும் என்று மதிக்கப்பட்டது. ஷாஜஹான் செய்து வைத்த மயிலாஸனத்தைக்கூட நாதர்ஷா எடுத்துச் சென்று விட்டான். இந்தக் கொள்ளைக்குப் பின்பு முகலாய ராஜ்யம் இன்னமும் க்ஷீணிக்கலாயிற்று. சில வருஷங்கள் கழித்துக் கி. பி. 1748-ல், மகம்மதுஷாவும் இறந்து போனார். அப்பொழுது அவர் மைந்தர் ஆமதுஷா அரசரானார்.

நாதர்ஷா இறந்த பிறகு ஆமதுஷா துரானி என்பவன் ஆப்கானிஸ்தானத்துக்கு அரசனானன். கி. பி. 1747-ல் அவன் பஞ்சாபின்மீது படையெடுத்து வந்து மூல்தான், லாகூர் என்னும் பட்டணங்களைப் பிடித்துக் கொண்டான். மறு வருஷத்தில் சக்ரவர்த்தி மகம்மதுஷாவின் மைந்தரான ஆமதுஷா என்பவர் அவனை ஸர்ஹிண்ட் என்னுமிடத்தில் தோற்கடித்துத் துரத்தினர். இந்தச் சண்டையை இரண்டு ஆமதுஷாக்களின் சண்டையென்றும் சொல்லுவதுண்டு. இந்தச் சண்டை நடந்த மறு மாதத்திற்குள் மகம்மதுஷா இறந்து விட, ஆமதுஷா அரசரானது.

ஆமதுஷா துரானி மறுபடியும் கி. பி. 1756-ல் முகலாய ராஜ்யத்தின்மீது படையெடுத்து வந்தான். அப்பொழுது ஜஹாண்டர்ஷாவின் மைந்தர் இரண்டாவது ஆலம்கீர் என்பவர் டில்லிச் சக்ரவர்த்தியாக விருந்தார். துரானி டில்லியில் வந்து நாதர்ஷாவைப் போலவே ஜனங்களை எதிர்த்துக் கொன்று ஊரைக் கொள்ளையிட்டு ஏராளமான திரவியத்துடன் தன்னூருக்குத் திரும்பினான்.

தான் எதிர்பார்த்து வந்ததற்கு அதிகமாகவே பொருள் கிடைத்துவிட்ட பேராசையினல், துரானி மறுபடியும் மறுபடியும் இந்தியாவின்மீது படையெடுத்து வரத் தொடங்கினன். அவன் ஆருவது முறை வந்த பொழுது, மஹாராஷ்டிரருடைய அதிகாரம் மிகுந்த உந்நதமான நிலைமையில் இருந்தது. அதனல், அவர்களால் தங்களுக்கு இன்னு மதிகமான துன்பம் உண்டாகக் கூடுமென்று பயந்த மகம்மதியர்கள் துரானிக்குச் சகாயம் செய்யத் தலைப்பட்டார்கள். அப்பொழுது துரானி மஹாராஷ்டிரர்களை எளிதிற்றோற்கடித்துத் துரத்திவிட்டான். பிறகு அவன் டில்லியை நோக்கி வந்தான். கி. பி. 1759-ல், டில்லிச் சக்ரவர்த்தியாயிருந்த ஆலம்கீரின் மந்திரியான காஸி உத்தீன் என்பவன் தனது எஜமானனைக் கொன்று விட்டுத் தானே அதிகாரம் செலுத்தி வந்தான். தகப்பன் கொலையுண்டதைக் கேள்விப்பட்ட இரண்டாவது ஷாஹலம்

பயந்து வங்காளத்துக்கு ஓடிப்போனார். டில்லிக் கருகில் துரானி வந்து விட்டதை யறிந்த காஸி உத்தீனும் உயிர் தப்பிப் பிழைக்க ஓடிப் போய்விட்டான். அதனால், துரானி வந்தபொழுது டில்லி ஸிம்ஹாஸனம் காலியாயிருந் தது. துரானி கி. பி. 1761-ல் பானிப்பட்டில் மஹா ராஷ்டிரர்களை எதிர்த்துச் சண்டை யிட்டு அவர்களை முற் றிலும் தோற்கடித்து விட்டுத் தான் கொள்ளைகொண்ட ஏராளமான திரவியத்துடன், தான் ஜயித்த ராஜ்யத்தை ஆளுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஒன்றையும் செய்யாது, தன்னூருக்குத் திரும்பிச் சென்று விட்டான். அதனால், இந்தியாவில் ஆங்கிலேயர்கள் அதிகாரம் பெறலானார்கள். முகலாய ராஜ்யத்தை முழுவதும் அழித்துத் தங்களுடைய அதிகாரத்தை நிலைநிறுத்தி மிக்க மேம்பாட்டை யடைந் திருந்த மஹாராஷ்டிரர்களை ஆப்கானிய வரசன் தோற் கடித்து ஜயம் பெற்றதன் பெரும் பயனை ஆங்கிலேயர்கள் அடைந்து அநுபவிக்கலானார்கள். இதுவும் ஒரு பெரிய அதிர்ஷ்டமே யல்லவா?

காஸி உத்தீன் கையினால் தந்தை கொலை யுண்டதைக் கேட்டு ஷாஹலம் வங்காளத்துக்கு ஓடிப்போய் விட்டா ரல்லவா? அவரே இப்பொழுது பேருக்குமட்டில் டில்லிச் சக்ரவர்த்தியானார். அவர் பீஹாரை ஜயிக்க வேண்டுமென்று அநேக வருஷங்கள் முயன்றும் அவருடைய பிரயத்தனங் கள் வீணாயின. அவர் கி. பி. 1764-ல் தமது அதிகாரத் தைப் பெருக்க வேண்டுமென்னும் ஆசையினால் அயோத்தி நவாப்பான, ஷுஜாஉத் தௌலாவுடன் சேர்ந்து கொண்டு ஆங்கிலேயருடன் பக்ஸார் என்னுமிடத்தில் சண்டை செய்து தோல்வியை யடைந்தார். உடனே அவர் ஆங்கி லேயர்களுடன் சமாதானஞ் செய்துகொண்டு உபகாரச் சம்பளம் பெற்று அலஹாபாத்தில் இருந்து வரலானார். இவ்வாறாக அவர் ராஜ்யம் இல்லாத ராஜாவானார். சில வருஷங்களுக் கப்பால் மாகாதஜி ஸிந்தியா என்னும் மஹா ராஷ்டிரத் தலைவர் ஷாஹலத்தைத் தாம் மறுபடியும் டில்லிச் சக்ரவர்த்தியாக்குவதாகச் சொல்லி அவரை அலஹாபாத்தி

லிருந்து டில்லிக்கு அழைத்து வந்து அவருடைய ராஜ்யத்தின் ஒரு சிறிய பாகத்தை யவருக்குச் சம்பாதித்துக் கொடுத்து அவருடைய பெயரைச் சொல்லிக்கொண்டு தாமே டில்லியில் ஆட்சி செய்து வந்தார். அப்பொழுது ஒரு சமயம் ஸிந்தியா டில்லியை விட்டுப் பூனாவுக்குப்போக நேர்ந்த பொழுது, குலாம் காதர் என்னும் ரோஹில்லன் ஷாஹலத்தின் கண்களைக் குத்திக் குருடாக்கி விட்டான். அதன் பின்னரும் அவர் பல துன்பங்களை அநுபவித்துக் கடைசியில் கி. பி. 1806-ல் இறந்து போனார். அவருக்குப் பின் அவருடைய பிள்ளை இரண்டாவது அக்பர் என்பவர் ராஜ்யம் எதுவுமின்றி டில்லிச் சக்ரவர்த்தி என்னும் பெயரை மட்டில் தாம் உரிமையாகப் பெற்றுக் கி. பி. 1837 வரையில் உயிர் வாழ்ந்திருந்தார். அவர் இறந்ததும், அவருடைய மைந்தர் பஹதூர்ஷா என்பவர் அப் பெயரைத் தாம் உரிமையாகப் பூண்டனர். இவர் கி. பி. 1857-ம் வருஷத்தில் நடந்த சிப்பாய்க் கலகத்தில் ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கிளம்பும்படிச் சிப்பாய்களைத் தூண்டி முன்னின்று சண்டை செய்ததினால், ரங்கூனுக்கு அனுப்பப்பட்டு அங்கேயே சில வருஷங்கள் இருந்து கி. பி. 1862-ல் இறந்து போனார். இவருடன் முகலாய சக்ரவர்த்திகளின் பெயரும் அழிந்து போயிற்று.

---

## 35. முகலாயர் காலத்தில் இந்தியாவின் நிலைமை

முகலாய மன்னர்கள் காலத்தில் ராஜ்ய பரிபாலன சம்பந்தமான முறைகள் மொத்தத்தில் செவ்வனே அமைந்திருந்தன வென்றாலும், அவற்றைக் கையாண்டுவந்த உத்தியோகஸ்தர்கள் எல்லாக் காலங்களிலும் சட்டதிட்டங்களைச் சரிவர அநுசரித்து அவற்றின்படி ஒழுங்குபட நடந்து வந்தார்க ளென்று எண்ணுவதற் கிடமில்லை. அவர்களிற் சிலர் தமதிஷ்டம்போல் நடந்தும், பரிதானங்கள் பெற்றுக் குடிகளை வருத்தியும் வந்திருக்கிறார்கள். என்றாலும், அக்காலத்தில் மற்ற நாடுகளில் ராஜரீகம் இருந்த

நிலைமையில் இந்நாட்டின் நிலை எவ்விதத்திலும் குறைவு பட்டிருக்கவில்லை. முக்கியமாக அக்காலத்தில் இந்நாட்டில் இருந்தாற்போன்ற மதத்தரிப்பு வேறெந்த நாட்டிலும் இருந்திலது. அதுவே முகலாயரின் பெருமைக்கொரு சிறந்த காரணமாம்.

அன்றியும் துரைத்தன வமைப்பில் ஏற்பட்டிருந்த பல இலாகாக்களையும், அவற்றின் நிர்வாஹத்தின்பொருட்டு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகஸ்தர்களையும் அவர்கள் செய்துவந்த வேலைகளையும் உற்று நோக்கினுல், நாம் இப்பொழுது காண்பனவற்றைக் குறித்து ஆச்சரியப்படுவதற்குக் கொஞ்சமும் காரணம் இல்லை.

நமது நாட்டில் இன்னமும் வியவசாயமே குடிகளின் முக்கிய ஜீவனோபாயமாக இருந்து வருகின்றது. அதன் பொருட்டு முகலாய வரசர்கள் செய்துவந்த பல ஒழுங்குகளினுலும் பயிர்த்தொழில் அபிவிருத்தியையே யடைந்திருந்தது. கைத்தொழில்களும், வியாபாரமுங்கூட அவர்கள் காலத்தில் தழைத்தோங்கி யிருந்தன. இந்தியாவின் உற்பத்திப் பொருள்களும், ஆடைகளும் ஐரோப்பிய ஆசியாகண்டங்களின் நாலாப்பக்கங்களிலும் கொண்டுபோய் விற்கப்பட்டன. அப்பொழுது பட்டாடைகளையும், மிகவும் நேர்த்தியான பருத்தித் துணிகளையும் செய்வதில் ஜனங்கள் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார்கள். காசிப்பட்டும், டாக்கா மஸ்லினும், ஜான்புரிக் கம்பளங்களும் பிரசித்தி பெற்றிருந்தன. இவற்றை யல்லாமல் ஆபரணங்கள் செய்வதிலும், சித்திரம் எழுதுவதிலும், சிற்ப வேலையிலும், சரிகை வேலையிலும் கைதேர்ந்த தொழிலாளிகளும் இருந்து வந்தார்கள். வியவசாயிகள் நெல், கோதுமை, கரும்பு, பழங்கள் முதலானவைகளை ஏராளமாகப் பயிரிட்டு வந்தார்கள்.

மாகாணங்களின் பரிபாலனத்தின் பொருட்டு நியமிக்கப்பட்டிருந்த கவர்னர்களுடைய அதிகாரத்திற்குட்பட்டு, வரிவசூல் சம்பந்தமான வேலைகளைக் கவனிப்பதற்குத் திவான்களும், யுத்தமுனையிற் சேனைகளை நடத்திச்

சண்டை செய்வதற்குப் பவுஸ்தார்களும் பட்டணங்கள் தோறும் நியாயம் நடத்துவதற்குக் காஜிகளும், ஊர்க் காவல் செய்வதற்குக் கொத்தவால்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். கிராமங்களிலோ ஸ்தல சுய ஆட்சியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருந்த கிராம பஞ்சாயத்துச் சபைகள் சகலவிதமான காரியங்களையும் நிறைவேற்றி வந்தன. இவற்றிற்கு முகலாய மன்னர்கள் காலத்தில் எவ்வித மான தீங்கும் உண்டாயிலது.

முகலாயர்கள் காலத்தில் கல்வியும் விசேஷ அபி விருத்தியை யடைந்தது. துளசிதாஸருடைய இராமா யணமும், சிரீதரருடைய மஹாராஷ்டிர ராமாயண பாரதங் களும், கேசவதாஸருடைய பக்த மாலையும், தென்னிந்தி யச் சித்தர்கள் இயற்றிய பல நூல்களும் இக்காலத்தினவே யாம். அல்லாமலும், முகலாயர்கள் காலத்தில் வட இந் தியாவில் ஏற்பட்ட மிகப் பெரிய நகரங்கள், பட்டணங்கள், கோட்டைகள், ஆகிய இவற்றினுடைய வனப்பையும், மாட்சிமையையும் நோக்க அவர்கள் காலத்திய இந்தியா வின் பெருமை நன்கு விளங்கும். அப்பொழுது மேனாடு களிலிருந்து இந்தியாவுக்கு வந்திருந்த பலரும் இந் நாட்டைப் புகழ்ந்து எழுதியுள்ளார்கள். அவர்களிலொருவ ரான பெர்னியர் என்பவர் "சாயம்போடப்பட்டனவும், போடப்படாதனவும் மிகுந்த நாணயமுடையனவுமான பருத்தி யாடைகளையும் பட்டாடைகளையும் காண எனக்கு வியப்பு உண்டாயிற்று," என்று, எழுதியிருக்கிறார். "நகரங் களின் வனப்பும், கம்பீரமான தோற்றமும் மிகவும் மனோ ரம்யாக விருந்ததனால் அவற்றைப் பார்க்கப் பார்க்க ஆசை அதிகரித்தது," என்றும் எழுதி யிருக்கின்றார்.

மொத்தத்தில், முகலாய வரசர்கள் இந்நாட்டிற்கு அந்நியர்களே யானாலும், அவர்கள் தங்கள் காலத்தில் இந் நாட்டின் பழைய வழக்கங்களையாவது சட்டதிட்டங்களை யாவது மாற்றிவிடவில்லை. ஹிந்துக்களுக்குப் பிறகு ஆப் கானியர்களும், அவர்களுக்குப் பின்பு முகலாயர்களும் பெரும்பாலும் ஒரேவிதமாகவே நடந்து வந்ததனாற்றான்

குடிகள் விசேஷ மாறுபாடுகளை யடைந்துவிடாமல் தம்முடைய முன்னோர்களின் காலத்தி லிருந்ததைப்போன்று தாமும் இருந்து, சுகமாகவும், இன்பமாகவும் காலங்கழித்து வந்துள்ளார்கள். இதை யறியாமல் மகம்மதியருடைய ஆட்சியில் தீமையே விளைந்ததென் றெண்ணும் பேதைகளை என்னென்று சொல்லுவது !

---

## மஹாராஷ்டிர ராஜ்யம்

## 36. சிவாஜி

ஹிந்துக்களுடைய ராஜ்யங்களைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கைப்பற்றிக்கொண்டு நாளடைவில் ஒரு பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்த மகம்மதியர்களுடைய அதிகாரம் ஔரங்கஜீபுக்குப் பின் அழிய வாரம்பித்து முற்றிலும் ஒழிந்துவிட்டதன் விவரங்கள் ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளன வல்லவா ? முகலாய ராஜ்யம் அழிந்துவிடவும், ஹிந்துக்களில் ஒரு வகுப்பினரான மஹாராஷ்டிரர்கள் மறுபடி ஒரு ஹிந்து ராஜ்யத்தை ஏற்படுத்தினார்கள். அது சுமார் இருநூறு வருஷங்கள் வரையில் மிகுந்த உயர்நிலை பெற்றிருந்தது. அந்த மஹாராஷ்டிர ராஜ்யத்தின் பிறப்பு, வளர்ச்சி, சிதைவு ஆகிய இவற்றைப்பற்றின விவரம் சரித்திர வாராச்சிக்கு இன்றியமையாத தாகலின் அதை நாம் கவனிக்க வேண்டியது அவசியமாகும். யாது காரணம் பற்றியோ, இந்தியாவில் ஆங்கிலேய சாம்ராஜ்யம் ஏற்படுவதற்கு முன்பு முகலாய ராஜ்யம்தான் இருந்ததென்றும், பிந்திய ராஜ்யம் அழிந்ததினின்றும் முந்தியது உண்டாயிற்றென்றும் தவறாகக் கருதப்படுகின்றனவே யன்றி ஆங்கிலேயருக்கு முன் ஹிந்துக்களே இந்நாட்டில் முதன்மை பெற்று விளங்கினார்கள் என்பதும், ஹிந்து ராஜ்யங்களை ஜயித்துத்தான் ஆங்கிலேயர்கள் தங்களுடைய அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொண்டார்கள் என்பதும் எளிதில் மதிக்கப்படவில்லை. வங்காளத்தையும், கிழக்குக் கட

லைச் சார்ந்த நாடுகளையும் அன்றி மற்றைய இந்திய நாடுகள் பலவும் மஹாராஷ்டிரருடைய அதிகாரத்திற் குட்பட்டிருந்தனவென்பதனால், ஆங்கிலேயருக்கு முன் ஹிந்துக்கள்தான் ஆட்சி பெற்றிருந்தார்கள் என்னும் உண்மை எளிதில் வெளியாகுமல்லவா.

மஹாராஷ்டிரர்கள் விந்திய, சாத்புரா மலைகளுக்குத் தெற்கில், அராபிக்கடல் முதல் கோதாவரி யாற்றின் உபநதியான பேன்கங்காநதி வரையில் உள்ள நாட்டில் வசித்து வந்தார்கள். அதற்கு மஹாராஷ்டிரம் என்று பெயர். அதன் விஸ்தீரணம் சுமார் லக்ஷம் சதுர மைல் இருக்கும். அது மிகவும் கரடு முரடான மலைப் பிரதேசம்; எண்ணிறந்த குன்றுகளையும், அவற்றின் மத்தியில் பல பள்ளத்தாக்குகளையும் உடையது. குன்றுகளின் மேல் சத்துருக்கள் எளிதிற் புக முடியாத பல கோட்டைகள் இருந்தன. மலைச் சாரல்களில் அடர்ந்த காடுகளும், பள்ளத்தாக்குகளில் வயல்களும் நிறைந்திருந்தன. அந்தப் பிரதேசத்தின் சீதோஷ்ண நிலைமை அதிக உஷ்ணமாயாவது சீதளமாயாவது இல்லாமல் தேகாரோக்கியமுள்ளதாயும், தேகத்திற்குப் பலந் தருவதாயுமிருந்தது. அங்கு வசித்து வந்த ஜனங்கள் கஷ்டப்பட்டு உழைத்து வேலை செய்து தேக ரக்ஷணை செய்துகொள்ள வேண்டியிருந்ததனால், தேக வலிமையும், விடாமுயற்சியும் பொருந்திய பராக்கிரமசாலிகளாக இருந்தார்கள். அவர்கள் மிதமாக உண்டும் உடுத்தும் வந்தார்கள். அவர்கள் குடியிருந்த விடம் மலைகளினாலும், கானாறுகளினாலும் சூழப்பட்டிருந்ததன்றி அந்நியர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லும் வழிகளைக் கண்டறிந்து, செங்குத்தான அம்மலைகளைக் கடந்து செல்ல முடியாததலின் அவர்கள் சத்துருக்களினாலுண்டாகும் தீங்குகளின்றிச் சுகமாகவே வாழ்ந்து வந்தார்கள். அவர்களிற் சிலர் போர்வீரர்களாக அமர்ந்து ஜீவனம் செய்து வந்தார்களானாலும், பெரும்பாலார் உழுது பயிர் செய்வதையே பெருந் தொழிலாகக் கொண்டிருந்தார்கள்.

ஆப்கானியர்களும், முகலாயர்களும் தென்னிந்தியாவின்மீது படையெடுத்து வந்து பல நாடுகளை வென்றும் ஜனங்களை மகம்மதியராகும்படி கட்டாயப்படுத்தியும், அவர்களுடைய தேவாலயங்களை இடித்தும் இன்னும் இவை போன்ற பல தீங்குகளை இழைத்தும் வந்திருந்த காலத்தில் கூட மஹாராஷ்டிரர்கள் தங்களுடைய மதம், பாஷை, கொள்கை, கட்டுப்பாடு முதலிய எவற்றையும் இழக்காமல் ஒன்றுபட்டே வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் பகைவர்களோடு சண்டை செய்து தங்களுடைய மலைக் கோட்டைகளுள் புகுந்து கொண்டார்களேயானால், அவர்களைப் பின் தொடர்ந்து சென்று எதிர்த்து ஜயிப்பது அசாத்தியமான காரியமாகும். ஆதலினால், அவர்களிடம் பொருந்தியிருந்த ஒற்றுமைக்கான சில சிறந்த குணங்களை யன்றி அவர்களுடைய நாட்டின் இயற்கை யமைப்பும் அவர்களுடைய முன்னேற்றத்திற்கு ஒரு சிறந்த காரணமாயிற்று.

ஹிந்துக்கள் தங்களுடைய சிறப்பை முற்றிலும் இழந்துவிட்ட பல நூற்றாண்டுகள் கழித்து மஹாராஷ்டிரர்கள் முன்னேற்றத்தை அடைந்தார்களென்றால், அதை ஒரு தற்செயலான சம்பவமாகக் கொள்ளக் கூடுமோ? அது ஹிந்துக்கள் மறுபடியும் தங்களுடைய சுவாதீனத்தைப் பெற வேண்டுமென்று செய்த பெரும் பிரயத்தனத்தின் பயனேயாம். அதன்றியும், அம்முயற்சி சித்தி பெற்றதற்கு அப்பொழுது பாஷை, ஜாதி, மதம், கல்வி முதலியவற்றில் ஒற்றுமையை யடைந்திருந்த அந்நாட்டு ஜனங்கள் தங்களுக்குப் பொதுவான ஒரு தனி ராஜ்ய வமைப்பை யுண்டுபண்ணி அவ்வொற்றுமையை விருத்தி செய்ய வேண்டும் என்று கிளர்ச்சி கொண்டிருந்ததே சிறந்த காரணமாகும். ஆதலினால், மஹாராஷ்டிரர்களின் முன்னேற்றத்திற்கு மஹாராஷ்டிர மஹா ஜனங்களை விட்டு, அவர்களுக்கு அப்போதைக்கப்போது ஏற்பட்ட தலைவர்களைமட்டிற் காரணமாகக் கொள்வது தவறு. மஹாராஷ்டிர ராஜ்ய பரிபாலனத்தில், அதிகாரம் ஒருவருடைய கையிலில்லாது அதைப் பலரும் ஏகோபித்து ஒரு மனப்பட்டு நடத்தி வந்ததே அதற்கு

ஒரு தக்க சான்றாகும். இவ்வாறு ஒற்றுமைக்கும், அவ்வொற்றுமையினாலாகும் முன்னேற்றத்திற்கும் வேண்டிய பல சிறந்த குணங்களைப் பொருந்தியிருந்த மஹாராஷ்டிரர்களுக்குக் கொஞ்சங் கொஞ்சமாக மகம்மதிய அதிகாரத்தையொழித்துத் தங்களுடைய அதிகாரத்தை ஸ்தாபிப்பதற்கு எவ்வாறு அநேக அநுகூலங்கள் அமைந்திருந்தன என்பதைச் சற்று விசாரிப்போம்.

தக்ஷிணத்திலிருந்த மகம்மதியர்களுக்கும் அவர்களுடைய இனத்தைச் சேர்ந்த வட மேற்குப் பிராந்தியங்களிலிருந்த மகம்மதியர்களுக்கும் சேய்மை காரணமாகக் கலப்பு அற்றுப் போனதனால், முந்தியவர்கள் நாளடைவில் தங்களுடைய பலம், ஊக்கம், மகம்மதிய சம்பிரதாயம் முதலானவற்றை இழந்து விட்டார்கள். மகம்மதியருடைய அதிகாரத்திற்கூட ஹிந்துக்களே வரி வசூல் சம்பந்தமாகவும், ராஜ்யத்தின் வரவு செலவுகளைக் கவனித்து ஒழுங்குபடுத்துவதற்காகவும் நியமிக்கப்பட்டு வந்ததனால், நாளடைவில் ஹிந்துக்கள் அதிகாரம் பெறலானார்கள். நாளா வட்டத்தில் தென்னிந்தியாவில் உண்டான பீடார், போரார், ஆமதுநகரம், பீஜப்பூர், கோலகொண்டா என்னும் மகம்மதிய ராஜ்யங்களிற்கூட கிராம வரவு செலவு கணக்குக்கள் பாரஸிக அல்லது உருது பாஷைகளிலின்றித் தாய் பாஷையில் வைக்கப்படலாயின. விஜயநகர ராஜ்யம் உயர்நிலை பெற்றிருந்தபொழுது சுமார் நூறு வருஷங்கள் வரையில் தக்ஷிணத்திலிருந்த மகம்மதிய ராஜ்யங்கள் அதன் அதிகாரத்திற்குட்பட்டு அடங்கி நடந்து வந்தன. அவ்வாறு இல்லாதபொழுதும் அவை ஏற்றத் தாழ்வுகளின்றிச் சமமாகவே இருந்துள்ளன. வட இந்தியாவிலிருந்தது போலன்றித் தென்னிந்தியாவில் ஹிந்துக்கள் பெரும்பாலும் மகம்மதியர்களுக்குச் சமமாக மதிக்கப்பட்டும், பற்பல உயர்ந்த உத்தியோகங்களுக்கும் நியமிக்கப்பட்டும் வந்ததல்லமால், பிற்காலங்களில் துருக்கிய, பாரஸிக, முகலாயர்களை விட அதிகமான நம்பிக்கையும், நன்னடக்கையும் உடையவர்கள் என்று மதிப்படையலானார்கள். அல்லா

மலும், மகம்மதியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் உண்டான விவாகக் கலப்பினுலும், மகம்மதிய மதத்தைத் தழுவிக் கொண்ட ஹிந்துக்கள் உயர்ந்த பதவிகளைப் பெற்றபொழுது தங்களுடைய இனத்தினர்களை ஆதரித்து வந்ததனுலும், அவர்களுக்குள் வித்தியாசங்கள் குறைந்து கொண்டே வந்தன. நாள் செல்லச் செல்ல மகம்மதியர்களுடைய அன்பையும் ஆதரவையும் சம்பாதித்துக்கொண்ட ஹிந்துக்கள் தாங்களே முதன்மை பெற்று விளங்கத் தொடங்கி விட்டார்கள். அவர்களில் அநேக மஹாராஷ்டிரக் குடும்பங்கள் அதிகாரத்திலும், செல்வாக்கிலும் பெருகிவிட்டன. அப்படிப்பட்ட குடும்பங்களில் ஒன்ருன பான்ஸ்ல வம்சத்தில் ஷாஜி என்று ஒருவர் இருந்தார். அவர் பீஜப்பூர் ஸுல்தானிடம் சேனைத் தலைவராக இருந்தார். அவருடைய மனைவி ஜிஜிபாய் என்பவர். கி. பி. 1627-ல், இவர்களுக்கு மகப்பேறு உண்டாயிற்று. அந்தக் குழந்தைதான் உலகமெங்கும் கீர்த்திக் கொடி நாட்டின சிவாஜி என்பவர்.

ஷாஜி சிவாஜியைத் தமது ஜாகீரைப் பார்த்து வந்த தாதாஜிகண்டதேவர் என்பவருடைய பார்வையில் விட்டு வைத்திருந்தார். அவரும், ஜிஜிபாயும் பயிற்றுவித்ததின் பயனுகச் சிவாஜி ஊக்கம், அறிவு, மதாபிமானம், நல்லொழுக்கம் முதலான நற்குணங்களைப் பொருந்தி விளங்கினுர். அவருக்கு இராமாயண மஹாபாரதக் கதைகளைக் கேட்பதில் பிரியம் அதிகம். சத்கதைகளைக் கேட்பதற்கென்று அவர் வெகு தூரம் நடந்து செல்லுவார். உயர் பிறப்பின் பயனுகவே பெருமை வாய்ந்த அம் மகாபுருஷர், தாதாஜியின் சேர்க்கையின் பயனுக ஒப்புயர் வற்ற சிறந்த குணங்களை யடையப் பெற்றுர். அக்குருவையும், நிகரற்ற தாயையுமன்றி அவருக்குத் துக்காராம், ராமதாஸர் முதலான பெரியவர்களின் நட்பும் உண்டாயிற்று. அவர் துக்காராம் ஸ்வாமிகள் செய்துவந்த மதப் பிரசங்கங்களையும் நற்கதைகளையும் பன்முறை கேட்டும் அவற்றிற் கிணங்க நடந்தும் வருவார். அவர் சிறு வயது முதற்கொண்டே வில், வேள், வாள் முதலிய பலவித ஆயுதங்களிலும் பயின்று பெரிய

யுத்த வீரரானார். அவர் பெரியவரான பொழுது ராமதாஸ ரைத் தமக்குக் குருவாகக்கொண்டு அவரை வழிபட்டு அவர் ஆணையின்படி ராஜ்யத்தை மிகுந்த விமரிசையாக ஆட்சி செய்து வந்தார். ஈசுவர பக்தியிலும் தேசாபிமானத் திலும், மதவிசுவாசத்திலும், நற்குண நற்செய்கைகளிலும், நடுவு நிலைமையிலும் சிவாஜியை மிக்கார் எவருமில்லை என்று சொல்லுவது மிகையாகாது.

உயர்வு தாழ்வு என்னும் வேற்றுமைகளின்றியும், ஜாதி வித்தியாசங்க ளில்லாமலும் எல்லோரும் "பக்தியுடன்" நீதிநெறி முறையில் நடந்தொழுகினால் முக்தி பெறலாம் என் னும் இராமாநுஜ மதத்தை அநுஷ்டித்து வந்த பல ஆச் சாரியர்களின் நற்போதனைகளுக் கிணங்க நடந்தொழுகின வர்கள் பலர்களுள்ளும் முதன்மையாகக் கொள்ளக்கூடிய சிவாஜி தாம் ஒரு பெரிய காரியத்தை முன்னின்று நிறை வேற்றுவதற்கென்று அவதரித்தவர் என எண்ணினார். அதனால், அவர் கொஞ்சமும் சுயநலம் பாராட்டாமல், மஹா ராஷ்டிராது முன்னேற்றத்தின் பொருட்டுத் தம்முடன் ஒத் துழைக்கக் கூடியவர்கள் யாவராயினுஞ் சரி அவர்களை எவ்வித பேதத்தையுங் கருதாமல் தம்முடன் சேர்த்துக் கொண்டும், தமது எண்ணத்துக்கு முரணாக நடப்பவர்கள் தம்மினத்தினராயினும் அவர்களை ஒங்கவொட்டாமற் றடுத் தும் வந்தார். எனினும், சிவாஜியினுடைய முயற்சியினாலே தான் மஹாராஷ்டிரர்கள் முன்னேற்றத்தை யடையலானார் கள் என்று கொள்வது தவறு. ஏனெனில், அவருக்கிருந்த கிளர்ச்சி அப்பொழுது மஹாராஷ்டிர ஜனங்கள் பலர்க்கும் பொதுவாக இருந்தது.

நமது நாட்டில் பல தடவைகளிலும், பல சந்தர்ப்பங் களிலும், நமக்குள்ளேயே ஏற்படும் கலகங்களினாலும், ஒற் றுமை யின்மையினாலும் நாட்டுக்கு விபத்துக்கள் உண் டாயின என்பதை நாம் செம்மையாகக் கண்டுள்ளோ மல்லவா? சிவாஜி இவ்வுண்மையை நன்குணர்ந்தவராய்த் தம்மவர்கள் வேற்றுமையை நீத்து, ஒற்றுமையைக் கடைப்

பிடித்து நடக்கவும், யாவரும் பொது நலத்தை நாடி உழைக்கவும், எல்லோரும் ஒரு கட்டுபாட்டிற் கடங்கிச் சண்டையிலாயினும், ராஜ்ய பரிபாலனத்திலாயினும் ஒரு தலைவனது அதிகாரத்திற் குட்பட்டு நடந்தொழுகவும் தமது சாமர்த்தியத்தினாலும் பராக்கிரமத்தினாலும் செய்து கொண்டதன்றி அவர் மகம்மதியர்களைப் பேதத்தினால் வேறுபடுத்தியும் தமக்குக் கீழ்ப்படுத்தியும் மஹாராஷ்டிரர்களுடைய அன்பையும் ஆதரவையும், பூர்ணமான நம்பிக்கையையும் சம்பாதித்துக் கொண்டனர். இவைகளை யன்றி, அவரிடம் ஓர் ஒப்பற்ற வசிகர சக்தியும் இருந்தது. அதனால், அவரை வந்தடைந்தவர்கள் ஒரு பொழுதும் அவரை விட்டகன்றனரில்லை. சாமான்யர்கள்கூட அவருடைய சேர்க்கையினால் உத்தமராய் விட்டார்கள்.

மஹாதேவ கோவிந்த ரானடேயவர்கள் சிவாஜிக்கு மஹாராஷ்டிரருடைய முன்னேற்றத்தின் பொருட்டு உழைப்பதற்கான பலம் எங்கிருந்து உண்டாயிற்றென்பதைப் பின் வருமாறு விளக்குகிறார். "தம்மை முற்றிலும் மறந்த நிரந்தரமான மத வைராக்கியத்தினாலும், தாம் மேற்கொண்ட காரியத்தைப் பகவான் முன்னின்று நிறைவேற்றுவிப்பார் என்னும் நம்பிக்கை யினாலுண்டான தைரியத்தினாலும், ஒப்பற்ற மனோசக்தியினால் ஏற்பட்ட மனிதர்களை ஒன்றுபடுத்தி அவர்களை வெற்றியை நாடி நடத்தக்கூடிய வசிகர சக்தியினாலும், அக்காலத்திற்குத் தக்க இன்றியமையாதனவான தேவைகள் என்ன வென்பதை நன்றாக அறிந்திருந்ததனாலும், எவ்விதமான இடையூறுகளினாலும் மனச் சோர்வை யடையாத திடசித்தத்தினாலும், நிகரற்ற சமோயிசிதமான புத்தியினாலும், அக்காலத்திற் காணக் கிடைக்காத தேசாபிமானத்தினாலும், தயையோடு கூடின நடுவு நிலைமை பொருந்திய நியாயத்தினாலும், சிவாஜி மஹாராஷ்டிரர்களுடைய முன்னேற்றத்திற்கு வேண்டியதான அடிப்படையைப் போடுவிக்கக்கூடிய பலம் அடையப் பெற்றார்."

## 37. சிவாஜியின் ராஜ்ய ஸ்தாபனம்

சிவாஜியைப் பயிற்றுவித்த தாதாஜிகண்டதேவர், அவரைப்போன்ற அநேக சிறுவர்களையும் அவ்வாறே ராஜ்ய பரிபாலன முறைகளிலும், யுத்தத்திற்கான வழிகளிலும் நன்றாகப் பயிற்றுவித்தார். இவர்கள் சிவாஜிக்கு உற்ற துணைவர்கள் ஆனார்கள். இவர்களை யல்லாமல், பல பெரிய மஹாராஷ்டிரக் குடும்பங்களிற் சேர்ந்த சிறுவர்களும் சிவாஜியைத் தங்களுக்குத் தலைவராகக்கொண்டு அவரைப் பின்பற்றி நடந்து வந்தார்கள். சிவாஜியின் சிறப்பை யறிந்த பல சாதாரண ஜனங்கள்கூட அவரைச் சேர்ந்து கொண்டார்கள். பிஜப்பூர், கோலகொண்டா ராஜ்யங்களின் பட்டாளங்கள் தள்ளுண்டபொழுது, அவற்றிலிருந்து வந்த அநேக மகம்மதியப் போர் வீரர்கள்கூட சிவாஜியினிடம் வந்து சேர்ந்தார்கள். இவ்வாறாகச் சிவாஜி ஒரு பெரிய சேனைத் தலைவராய் விட்டார்.

சிவாஜி தமது சேனையின் துணைவலியினால் அயல் நாடுகளோடு சண்டையிட்டுத் தமக்கென ஒரு ராஜ்யத்தைச் சம்பாதிக்க ஆரம்பித்தார். அவருடைய இஷ்ட தேவதையான பவானியின் அநுக்கிரஹத்தினால், அவருடைய எண்ணமும் ஈடேறி வந்தது. அவர் முதன் முதல் கி. பி. 1646-ல், டோர்ணு என்னும் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டு, அதன் பின்பு ரைகார் கோட்டையைப் பலப்படுத்தி அதனைத் தமக்குப் பிரதான இருப்பிடமாகச் செய்துகொண்டு நாளடைவில் அநேக கோட்டைகளை ஜயித்துக் கொண்டுவிட்டார். அவற்றுள் பிஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமானவை பல. அவை யாவும் சிவாஜிக்குச் சண்டை யில்லாமலே கிடைத்து விட்டன. சாகன், சின்ஹகாட், புரந்தர் முதலான கோட்டைகளைச் சிவாஜி பிடித்துக் கொண்டபொழுது, பிஜப்பூர் சுல்தான் அவற்றைச் சிவாஜி தம்முடைய ஜாகீரின் பாதுகாப்பின் பொருட்டே பிடித்துக் கொண்டாரென வெண்ணினார். ஆனால் கி. பி. 1652-ல், கல்யாண் கோட்டை சிவாஜியின்




THE INDIAN PUBLISHING HOUSE, LTD.

வசமான பொழுதுதான் பீஜப்பூர் சுல்தான் கண் விழித்துக் கொண்டார். அவர் ஷாஜியைச் சிறைபிடிக்கவும், சிவாஜி சும்மா விருக்க நேர்ந்தது. ஆனால், சிவாஜி தாம் ஷாஜஹானுடைய உத்தியோகத்தில் அமர்வதாகச் சொல்லி அவருடைய தயையைச் சம்பாதித்துக் கொண்டதனால், பீஜப்பூர் சுல்தான் பயந்து ஷாஜியைக் கி. பி. 1657-ல், விடுதலை செய்து விட்டார்.

ஷாஜி சிறை நீங்கினதும், ஐந்து வருஷங்களாகச் சிவாஜிக்கு உண்டாயிருந்த தளை யொழிந்து போயிற்று. அதனால், அவர் தம்முடைய காரியத்தில் முன்போல் முயன்று வாலானர். பீஜப்பூர் சுல்தானும் முகலாய சேனைத் தலைவர்களுடன் ஒருவாறு சமாதானஞ் செய்து கொண்டு சிவாஜியைத் தண்டிப்பதற்கான ஏற்பாட்டில் முயன்று வந்தார். கி. பி. 1659-ல், பீஜப்பூராசர் சிவாஜியைத் தண்டித்து வரும்படி அப்ஸல்கான் என்பவரை யொரு பெருஞ் சேனையுடன் அனுப்பினர். அப்ஸல்கான் சிவாஜியை உபாயத்தினால் சிறை பிடித்துச் செல்வதிலேயே கருத்தாக விருந்தார். சிவாஜியும் தம்மால் அப்ஸல்கானுடைய பெருஞ் சேனையைச் சண்டையிட்டு ஜயிக்க முடியாதென்று நிச்சயித்துத் தாமும் அவரை உபாயமாகச் சிறைபிடித்துவிட எண்ணித் தாம் அவருடன் சமாதானம் செய்து கொள்வதாக அவருக்குச் சொல்லியனுப்பினர். அப்ஸல்கான் அதற்கிணங்கி வரவும், இருவரும நேரில் சந்தித்துச் சமாதான உடன்படிக்கையைத் தீர்மானித்துக்கொள்ள ஏற்பாடு செய்து கொண்டார்கள். அந்தப்படியே அவ்விருவரும் குறித்தவிடத்தில் சந்தித்தார்கள். அப்பொழுது என்ன நடந்ததென்பதைப் பற்றி இன்னமும் அபிப்பிராய பேதங்கள் இருந்து வருகின்றன. தமது மிடற்றை யழுத்தி யிழுத்துக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டதனின்றும் அப்ஸல்கான் தம்மைக் கொல்ல எண்ணினர் என்பதை யுணர்ந்த சிவாஜி உடனே தம்மைக் காப்பாற்றிக் கொள்வதன் பொருட்டு அவர்மீது பாய்ந்து அவரைக் கொன்றுவிட்டார் என்பதைத் தான் பல சரித்திராதிபர்கள் உண்மையெனக் கருதுகிறார்கள். அப்ஸல்கான்

துளஜாபுரம், பண்டாரபுரம் என்னும் க்ஷேத்திரங்களிலுள்ள கோயில்களை யிடித்து விக்ரஹங்களை யுடைத்ததனாலும், தம்முடைய சகோதரனைக் கொன்றதனாலும் சிவாஜி பழி வாங்குவதற்காக அவரைக் கொன்றிருக்கவுங் கூடும். அது எவ்வாறாயினும், அக்காலத்திலும் பெரும்பாலும் இக்காலத்திலுங் கூடப் போர் முறையில் மன்னர்கள் ஆதிகாலத்தைப் போன்று தரும யுத்தமே செய்கிறார்கள் என்றெண்ணுவதற்கிடமில்லை. கோப்பிராம்மணர்களின் ரக்ஷணையில் ஈடுபட்டு ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் சண்டைசெய்து வந்த சிவாஜியின் சேனை அப்ஸல் கொலையுண்டதை யறிந்து பீஜப்பூர் சேனையை யெதிர்த்து அதனை யடியோடு நாசஞ் செய்துவிட்டது. அதனால், சிவாஜியின் கீர்த்தியும் நாடெங்கும் பரவலாயிற்று. பீஜப்பூர் சுல்தான் அதன் பின்னரும் தாம் சிவாஜியுடன் மும்முறை சண்டைசெய்து மும்முறையும் தோற்றுப் போனதனாலும், சிவாஜியின் கப்பற் படைகள் கொங்கிணி நாட்டின் துறைமுகப் பட்டணங்களையெல்லாம் பிடித்துக்கொண்டு விட்டதனாலும், கடைசியில் கி. பி. 1662-ல் சிவாஜியுடன் சமாதானஞ் செய்துகொண்டு அவருக்குக் கொங்கிணி நாட்டையும் கொடுத்துவிட்டார். பீஜபூரரசருடன் ஏற்பட்ட சண்டைக்கு முன் சிவாஜியின் நாடு சாகன் கோட்டை முதல் நீராநதி வரையில் பரவியிருந்தது. அதனுள் சிவாஜியின் பழைய ஜாகீரும் புரந்தர் முதல் கலயாண் வரையிலுள்ள கோட்டைகளும சேர்ந்திருந்தன. இப்பொழுதோ மேற்கில் கல்யாண் முதல் கோவா வரையிலான கொங்கிணி நாடு முழுவதும், கிழககில் பீமாநதி முதல் வார்ணாநதி வரையிலுமுள்ள நாடும் சிவாஜிக்குச் சொந்தமாயின. என்றால், அவருடைய நாடு தெற்கு-வடக்கில் 160 மைல் தூரமும், கிழககு-மேற்கில் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து 100 மைல் தூரமும் பரவியிருந்தது.

சிவாஜி இதுவரையில் தக்ஷிணத்திலிருந்த முகலாய சேனைகளுடன் எவ்விதமான சண்டையும் உண்டாகாதபடியிருந்த ஜாக்கிரதையாக இருந்து வந்தார். ஔரங்கஜீபும் தாம் தக்ஷிணத்தில் பிரதிநிதியாக இருந்த வரையில் சிவாஜி

யைக் கொங்கிணி நாட்டதிபதியாக ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால், அவர் தமது சகோதரர்களை யெல்லாம் வென்று ஸிம்ஹாஸனம் ஏறினதும் கி. பி. 1661-ல் ஒரு சேனையை யனுப்பிக் கல்யாண் கோட்டையைப் பிடித்துக் கொள்ளவும், மஹாராஷ்டிரர்களுக்கும் முகலாயர்களுக்கும் சண்டை மூண்டது. மறுவருஷத்தில் சிவாஜி பீஜப்பூராசருடன் சமாதானம் செய்துகொண்டு விட்டதனால், ஔரங்கஜீபுடன் சண்டை செய்யத் தயாரானார் அவர் கி. பி. 1663-ல் ஷயிஸ்டகான் என்னும் முகலாய சேனைத் தலைவனைத் திடீரென்று தாக்கி யெதிர்த்துத் துரத்திவிட்டார். ஷயிஸ்டகான் தனது கை விரல்களிலிரண்டை இழந்து உயிர் தப்பியோடிப்போனான். கி. பி. 1664-1665-ம் வருஷங்களில் சிவாஜி தம்முடைய கப்பற் படைகளைக்கொண்டு சூரத் பட்டணத்தை எதிர்த்தும், மெக்கா யாத்திரிகர்களைச் சிறைப் பிடித்தும் செல்வம் நிறைந்திருந்த ஒரு துறைமுகப் பட்டணத்தைப் பிடித்துக் கொண்டும் தமது அதிகாரத்தை வடகன்னடத்தில் ஸ்தாபித்தார். இவற்றையெல்லாம் கண்ட முகலாய வரசர் கி. பி. 1665-ல் சிவாஜியைத் தண்டித்து வரும்படி ஜயஸிங்கை யனுப்பினார். யாதுகாரணம் பற்றியோ சிவாஜி அவருடன் சமாதானம் செய்து கொண்டுவிட்டார். சிவாஜி அவருக்குப் பயந்து அவ்வாறு நடக்கவில்லை என்பது மட்டில் நிச்சயமாய் ஏற்படுகிறது. சிவாஜி தாம் டில்லிச் சக்ரவர்த்தியுடன் நட்புகொண்டுவிட்ட தைரியத்தினால் ஒரு முறை தமது குமாரருடன் டில்லிக்குப் போனபொழுது டில்லிச் சக்ரவர்த்தியாகிய ஔரங்கஜீப் அவரை அவமானப்படுத்திச் சிறையில் இட்டுவிட்டார். சிவாஜியும் அவர் மகனும் உபாயத்தினால் தப்பியோடிப் போனார்கள். அது முதல் சிவாஜிக்கு ஔரங்கஜீபின் மீது அடங்காத கோபம் உண்டாயிற்று.

சிவாஜி வரும்வரையில் அவருடைய பிரதானிகளும் மந்திரிகளும் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்களும் தத்தம் ஒழுக்கங்களிற் கொஞ்சமும் மாறுபடாமல் உண்மையாக நடந்து ராஜ்யத்தைச் செவ்வனே பரிபாலித்து வந்தார்கள்.

சிவாஜி வந்துவிட்டார் என்கிற சேதியைக் கேட்டதும் மஹாராஷ்டிர வீரர்கள் தாங்கள் முகலாய மன்னருடன் செய்து கொண்ட உடன்படிக்கையினால் இழந்துவிட்ட கோட்டைகளை ஒவ்வொன்றாக முற்றுகை செய்து தமதாக்கிக்கொண்டார்கள். மறுபடி ஒளரங்கஜீப் சிவாஜியுடன் சமாதானம் செய்துகொண்டு அவரை அரசரெனவும் அங்கீகரித்தார். ஆனால், அந்தச் சமாதானம் இரண்டு வருஷ காலந்தான் இருந்தது. கி. பி. 1669-ல் மறுபடியும் இரு திறத்தாருக்கும் சண்டை உண்டாயிற்று. அது நடைபெற்ற நான்கு வருஷங்களுக்குள் சிவாஜி தமக்கு ஏற்கெனவே சொந்தமாயிருந்த நாடுகளை முற்றிலும் வென்றுவிட்டதை யல்லாமல், தம்முடைய ராஜ்யத்தை இன்னும் அதிகமாகவும் பரப்பினார். அவருடைய ராஜ்யம் இப்பொழுது வடக்கில் சூரத் வரையிலும், தெற்கில் ஹுப்ளி வரையிலும் கிழக்கில் பீஜப்பூர் கோலகொண்டா வரையிலும் பரவியிருந்தது. தபதிநதியின் தெற்கிலுள்ள முகலாயக் கிழதிகாரிகள் மஹாராஷ்டிராருக்குச் 'சவுத்' 'ஸர்தெஷ்முகி' என்னும் வரிகளைச் செலுத்தி வந்தார்கள். கி. பி. 1674-ல், ராகார் கோட்டையில் சிவாஜி தாம் சுமார் முப்பது வருஷங்களாக முயன்று சம்பாதித்த ராஜ்யத்திற்கு அரசரென மகுடாபிஷேகம் செய்துகொண்டு அதன்பொருட்டு ஏராளமான பொருளைச் செலவிட்டார். கி. பி. 1676-ல் சிவாஜி தக்ஷிணத்தின்மீது படையெடுத்துச் சென்று, தமது தந்தைக்குச் சொந்தமாக விருந்து அப்பொழுது தமது தம்பியான வெங்காஜியின் வசத்திலிருந்த நாட்டைக் கைப்பற்றிக் கொள்ள வெண்ணினார். போகும் வழியில் அவர் கோலகொண்டாவின் சுல்தானைச் சிநேகஞ் செய்துகொண்டார். பின்பு அவர் ஜிஞ்ஜி, வேலூர் முதலான இடங்களைப் பிடித்துக்கொண்டு வெங்காஜி தம்மைச் சரணமடையும்படியும் தஞ்சாவூர் ராஜ்யத்தில் தமக்குப் பாதியைக் கொடுத்துவிடும்படியும் செய்துவிட்டார். பிறகு சிவாஜி பீஜப்பூராசருடனும் சமாதானம் செய்து கொண்டார். அப்பொழுது முகலாயர்கள் வடமேற்கில் ஆப்கானியருடன் சண்டைசெய்து வந்ததனால், சிவாஜிக்கு

அவர்களால் யாதொரு தீங்கும் உண்டாகவில்லை. அப்புறம் அவர் வெகு விமரிஸையாக ராஜரீகம் நடத்திவந்து கி. பி. 1680-ல் தேக வியோக மானார்.

சிவாஜி மஹாராஷ்டிரர்களை ஒன்று படுத்தியும் அவர்களுக்குச் சுதந்தரத்தை உண்டாக்கியும் அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ளுமாறு பயிற்றுவித்தும் அவர்கள் தங்களுடைய கொள்கைகளின்படி பயமின்றி நடக்குமாறு ஏற்பாடுகளை யமைத்தும் முன்னுக்குக் கொண்டுவருவதைத் தான் தமது கடமை யென்றெண்ணினாரே யல்லாமல் அவர் காலத்திலிருந்த ராஜ்யங்களை யழிக்கவேண்டுமெனச் சிறிதும் கருதினாரில்லை. அதற்கிணங்க அவர் பீஜப்பூர், கோலகொண்டா, தெலிங்காணம், மைசூர், கர்னாடகம் முதலான நாடுகளுடன் நட்புப் பாராட்டியும், முகலாயருக்குச் சொந்தமான நாடுகளிலிருந்து வரிகள் வாங்கியும் வந்திருக்கிறார். அவர் தமக்கு முற்றிலும் சொந்தமான ஸ்வராஜ்யத்தை எட்டுப் பிரதானிகளடங்கிய ஒரு சபையைக் கொண்டு ஆட்சி செய்து வந்தார். அவருடைய ராஜ்யம் அநேகம் பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு மஹாராஷ்டிர ஹவால்தார், ஒரு பிராமண ஸுபேதார், ஒரு பிரபு கார்க்காணி ஆகிய இவர்களுடைய அதிகாரத்திற் குட்பட்டிருந்தது. ஹவால்தார் சேனைகளையும், ஸுபேதார் வரி வசூல், நியாய நடவடிக்கைகளையும், கார்க்காணி தானியம், யுத்தத்திற்கு வேண்டிய சாமான்கள், மராமத்து ஆகிய இவைகளையும் முறையே கவனித்து வந்தார்கள். எல்லா உத்தியோகஸ்தர்களும் சம்பளம் பெற்று வேலை செய்து வந்தார்கள்.

அரசருடைய காபினெட் சபையைச் சேர்ந்த அஷ்டப்பிரதினிகளில் பீஷ்வாவென்னும் முதன் மந்திரிதான் மேலானவர். அவருக் கடுத்த கீழதிகாரி சேனபதியாவர். இவர்கள் முறையே அரசருடைய வலப்பக்கத்திலும் இடப் பக்கத்தி லுமமர்ந்திருப்பார்கள். பீஷ்வாவுக்குப் பக்கத்தில் அமாத்யரும் அவருக்கப்பால் ஸசிவ் என்னும் உத்தியோகஸ்தரும் அவருக்குமப்பால் மந்திரியும் உட்காருவார்கள். சேனபதிக்குப் பக்கத்தில் ஸுமந்த் என்னும் வெளிநாட்டைப்



ராஜா
பீஷ்வா
சேனாபதி
அமாத்யா
ஸுமந்த்
ஸசிவ்
பண்டிதராவ்
மந்திரி
நியாயாதிபதி

பற்றின விஷயங்களைக் கவனிக்கும் காரியதரிசியும், அவருக் கப்பால் பௌரோகித்திய சம்பந்தான உத்தியோகஸ்தரும், அவருக்கு மப்பால் மேலான நியாயாதிபதியும் வீற்றிருப் பார்கள். இதுவே அவர்கள் சபை கூடும்பொழுது உட் காரவேண்டிய முறைமையாகும்.

சிவாஜி தம்முடைய உத்தியோகஸ்தர்கள் கொஞ்சங் கொஞ்சமாக அதிகாரத்தைக் கவர்ந்துகொண்டு தம்மை மீறி நடவாதிருப்பதன் பொருட்டு உயர்ந்த உத்தியோகங் களை வம்ச பரம்பரையாகக் கொடுக்காமலும், அவர்களுக்குச் சம்பளத்தை யன்றி ஜாகீர்கள் அளிக்காமலும், ஜமீன்தாரர் களைக் கொண்டல்லாமல் நேராக வரி வசூல் செய்யும் ஏற்பாடுகளைச் செய்தும், மந்திரிகளின் சபையை உண்டு பண்ணி அவர்கள் செய்யவேண்டிய கடமைகளை வரை யறுத்தும் அவர்களைத் தமக்கே நேரில் உத்தரவாதமாக்கி யும், ராஜாங்க முறையில் ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்கு அடங்கி நடக்கும்படி ஆணையிட்டும், நாறு ஜாதியினரையும் உத்தியோகங்களில் அமர்த்தியும், ஏற்பாடுகளைச் செய்தார். இச்சிறந்த ஏற் பாடுகள் பின் அழிந்துபட்டதனால், மஹாராஷ்டிரருடைய மேன்மையும் குறைவுபடலாயிற்று.

சிவாஜி கல்வியின் அபிவிருத்தியின் பொருட்டும், கோயில்களின் பொருட்டும் ஏராளமான திரவியத்தைச் செலவிட்டு வந்தார். அவர் காலத்தில் கல்வியும், மதத்தரிப் பும் விருத்தியடைந்து உண்மையான ஹிந்துமதம் பரவின தற்குப் பற்பல ஜாதிகளிலிருந்தும் உண்டான சங்கதேவர், முக்தாபாய், வேணுபாய், நாமதேவர், சொக்க மேளர், முத லான பாகவதோத்தமர்களே சிறந்த சாக்ஷிகளாவர்.

சிவாஜி மகம்மதியர்களைக் கௌரவமாக நடத்தி வந் தார் என்றும், அவர் அவர்களுடைய கொரானைப் பழித் தும், மசூதிகளை யிடித்தும் தீங்கிழைக்கவில்லை என்றும், அவர் சண்டையிற் சிறைப்படுத்திய ஸ்திரீகளையும், குழந்தை களையும் மரியாதையுடனும் அன்புடனும் நடத்தி வந்தார்

என்றும் மகம்மதிய சரித்திராதிபர்களே சொல்லி யிருக்கிறார்கள்.

இத்தகைய பெருமை வாய்ந்த சிவாஜி மன்னவரின் சரித்திரத்தை உண்மையில் அறியாத சிலர் அவரைப் பல வாறு நிந்தித்து எழுதியுள்ளார்கள் என்றால் அவர்களுடைய பேதமையை அந்தோ! நாம் என்னென்று சொல்லலாம்?

## 38. சிவாஜிக்குப் பின் மஹாராஷ்டிர அதிகாரம்

சிவாஜி இறந்ததும், அவர் மைந்தர் சாம்பாஜி பட்டத்துக்கு வந்தார். அவர் சிற்றின்பப் பிரியர். அவர் ஒரு நாள் மதுபானத்தில் மெய்ம்மறந்து விழுந்து கிடக்கும் பொழுது ஔரங்கஜீபினால் சிறையாக்கப்பட்டார். சாம்பாஜி மகம்மதியராகும் பக்ஷத்தில் அவரைச் சிறைமீட்பதாக ஔரங்கஜீப் சொல்லவும், மஹாராஷ்டிரமன்னராகிய சாம்பாஜி மிகவும் கோபங்கொண்டு "ஔரங்கஜீப் தமது பெண்ணை எமக்குக் கொடுத்து மணம் செய்வித்தால் நாம் மகம்மதியராவோம்", என்று பதில் உரைத்தார். உடனே ஔரங்கஜீப் அவருடைய நாக்கை யறுத்துத் தலையையும் வாங்கிவிடும்படி உத்தரவு செய்தார். இவ்வாறாகக் கி. பி. 1689-ல் சாம்பாஜி கொலையுண்டுபோனார். ஔரங்கஜீப் சாகுமளவும் சாம்பாஜியின் குமாரரான ஸாஹு என்பவர் சிறைப்பட்டிருந்ததனால், சாம்பாஜியின் சகோதரரான ராஜாராம் என்பவர் கி. பி. 1700 வரையில் ஜிஞ்ஜியி லிருந்து ராஜ்யபாரம் நடத்தி வந்தார். அவர் இறக்கவும் அவருடைய மனைவியான தாராபாய் சதாராவைத் தமது ராஜதானியாகச் செய்துகொண்டு ஆட்சி புரிந்து வந்தார். அவருடைய காலத்திலும் மஹாராஷ்டிர அதிகாரம் கொஞ்சமும் குறைவுபடாமல் முகலாயருக்குப் பல தீங்குகளை யிழைத்து வந்தது. கி. பி. 1707-ல் ஔரங்கஜீப் இறக்கவும், பஹதுர்ஷா ஸாஹுவைச் சிறை நீக்கி அவருடைய நாட்டிற் கனுப்பிவிட்டார். உடனே ஸாஹு மஹாராஷ்டிர அரசரானார். தந்தையைப்போலவே ஸாஹுவும் சிற்றின்பப் பிரியராக இருந்து வந்தபடியினால் ராஜ்ய காரியங்களைப் பீஷ்வா என்னும் முதல் மந்திரியே கவ

னித்து வந்தார். நாளடைவில் பீஷ்வாக்களே வம்ச பரம்பரையாக அதிகாரம் பெற்று ஆட்சி செய்ய ஏற்பட்டது. ஸாஹு பெயருக்கு மட்டில் அரசராக இருந்து வந்தார்.

பாலாஜி விசுவநாத் கி. பி. 1714—கி. பி. 1720. கி. பி. 1714 முதல் கி. பி. 1720 வரையில் பீஷ்வாவாக இருந்த பாலாஜி விசுவநாத் என்பவர் வெகு சமர்த்தர். அவர் டில்லிச் சக்ரவர்த்தியான மகம்மதுஷாவிடமிருந்து தக்ஷிணத்தில் 'சவுத்' என்னும் நிலவரியில் நான்கிலொரு பங்கு வரியையும், 'ஸர்தேஷ்முகி' என்னும் நிலவரியில் பத்திலொரு பங்கு வரியையும் வசூல் செய்யும் அதிகாரத்தைப் பெற்றார். அவர் வரி வசூல் சம்பந்தமான ஏற்பாடுகளைச் செம்மையாகச் செய்ததன்றி ராஜ்ய பரிபாலன முறைகளையும் ஒழுங்குபடச் செய்தார்.

பாஜிராவ் கி. பி. 1720—கி. பி. 1740. அவருக்குப் பின் அவர் மைந்தர் பாஜிராவ் பீஷ்வாவானார். இவர் தமது சேனையைப் பலப்படுத்தி, அப்பொழுது பலம் குன்றப்பெற்றிருந்த மகம்மதுஷாவின் நாடுகளை யெதிர்க்கவும், அசப்ஜா என்னும் ஹைதராபாத் நவாப்பை வளரவொட்டாமற் றடுக்கவும் ஏற்பாடு செய்தார். இவருடைய காலத்தில் சில மஹாராஷ்டிரப் பிரபுக்கள் முன்னேற்றத்தைப் பெற்றுத் தலைவர்களானார்கள். அவர்கள் தாம் கைக்வாரும், ஸிந்தியாவும், ஹோல்காரும், பான்ஸ்லவும் ஆவர். அவர்கள் நாளடைவில் முறையே பரோடா, குவாலியர், இந்தூர், பிரார் நாடுகளுக் கரசரானார்கள்.

பாஜிராவ் தமது ஒப்பற்ற சாமர்த்தியத்தினால் கூர்ஜரம், மாளவம், பண்டில்கண்ட் நாடுகளைக் கைபபற்றிக் கொண்டு, ஹைதராபாத் நவாப் முகலாய சக்ரவர்த்தியின் சகாயத்திற்கு வந்ததற்காகத் தமக்கு 50 லக்ஷம் ரூபாய் கொடுக்கும்படி ஏற்பாடு செய்துகொண்டார். இவ்வாறாக மஹாராஷ்டிர அதிகாரம் அவருடையகாலத்தில் விருத்தியை யடைந்தது.

பாலாஜி பாஜிராவ் கி. பி. 1740—கி. பி. 1761. கி. பி. 1740-ல், பாஜிராவ் இறந்துவிடவும், அவருடைய மைந்தர்

பாலாஜி பாஜிராவ் பீஷ்வா ஆனார். இவர் வெகு கெட்டிக் காரர். பேசுவதில் மிகுந்த சாமர்த்தியம் வாய்ந்தவர். இவர் பூனாவைத் தமது ராஜதானியாகச் செய்துகொண்டு தம்முடைய அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொண்டார். இவர் மஹாராஷ்டிரத் தலைவர்களான கைக்வார், ஸிந்தியா, முதலானவர்களை ஒன்றுசேர்த்துத் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தி, எல்லோரும் சமமாக நின்றும் ஏகோபித்தும் நடத்துவதான ஒரு ராஜ்யபரிபாலன முறையை யுண்டுபண்ணி, யவர்களுக்குள் தாமே முதல்வராக விளங்கினார். இவருடைய காலத்திற்றான் மஹாராஷ்டிர அதிகாரம் உந்நத நிலைமையில் இருந்தது. அவர்களுடைய அதிகாரம் வடக்கில் ஸிந்துநதி, ஹிமாலய பருவதம் ஆகிய இவற்றின் வரையிலும், தெற்கில் சற்றேறக்குறைய கன்னியாகுமரி வரையிலும் வியாபித்திருந்தது. இந்த எல்லைக்குள் அடங்கிய ராஜ்யத்தில் அவர்களுடைய நேரான ஆட்சியிலடங்காத நாடுகள் அவர்களுக்குக் கப்பஞ் செலுத்தி வந்தன.

இவருடைய ஆட்சியில் மஹாராஷ்டிரர்கள் கர்னாடகத்தின் மேல் படையெடுத்துச் சென்று திரிசிராப்பள்ளியைக் கைப்பற்றிக்கொண்டார்கள். பிறகு இவர்கள் வங்காளத்தின் மீது சென்று சவுத் வாங்கினார்கள். இவர்களுக்குப் பயந்து கல்கத்தாவிலிருந்த ஆங்கிலேய வியாபாரிகள் தங்களிடத்தைச் சுற்றிலும் ஓர் ஆழமான அகழி வெட்டிக்கொண்டார்கள். சில வருஷங்கள் வரையில் மஹாராஷ்டிரர்களும், ஹைதராபாத் நவாப்பும், வங்காள நவாப்பும் தங்களுக்குள் சண்டையிட்டு வந்தார்கள். அந்தச் சண்டைகளில் மஹாராஷ்டிரர்களே பெரும்பாலும் ஜயமடைந்து வந்தார்கள். ஹைதராபாத் நவாப்புத் தமது ராஜ்யத்தின் வடமேற்குப் பாகம் முழுவதையும் மஹாராஷ்டிரர்களுக்குக் கொடுத்துவிட நேர்ந்தது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திற்றான் ஆமதுஷா துரானி என்னும் ஆப்கானிய வாசன் மேலும் மேலும் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து கொஞ்சங் கொஞ்சமாக நாடு

களை வென்றான். அவனை எதிர்த்துச் சண்டை செய்வதற்குத் தன்னால் முடியாதென்று கண்ட காஸிஉத்தீன் மஹாராஷ்டிரரைத் தமக்குத் துணைவரும்படி வேண்டவும், பீஷ்வாவின் தம்பியான ரகுநாதராவ் அவ்வாறே டில்லியை வந்தடைந்தார். பிறகு அவர் காஸிஉத்தீனின் வேண்டுகோளின்படியே பஞ்சாபை ஜயித்துவரும்படிச் சென்று லாகூரைப் பிடித்துக்கொண்டார். அப்பொழுது ஆமதுஷா துரானி என்னும் ஆப்கானிய வாசன் மஹாராஷ்டிரர்களை லாகூரிலிருந்து துரத்திவிட்டதன்றி, ஸிந்தியாவையும், ஹோல்காரையும் அடியோடு தோற்கடித்து விட்டான். கடைசியில் கி. பி. 1761-ம் வருஷம் ஜனவரி மாதத்தில், பானிப்பட்டில் மஹாராஷ்டிரருக்கும் ஆமதுஷா துரானிக்கும் அகோரயுத்தம் நடந்ததென்றும் அதில் மஹாராஷ்டிரர்கள் முற்றிலும் தோல்வி யடைந்தார்க ளென்றும் ஏற்கெனவே சொல்லப்பட்டதல்லவா? இந்தச் சண்டையில் சதாசிவராவ், ரகுநாதராவ் முதலான மஹாராஷ்டிர தளகர்த்தர்களும், அநேக ஆயிரக் கணக்கான மஹாராஷ்டிரப் போர்வீரர்களும் மாண்டுபோனார்கள். அந்தத் துக்கச் செய்தியைக் கேட்ட பாலாஜி பாஜிராவ் மனம் நொந்து, தேகம் மெலிந்து, மனோவியாதி மேலிட்டு, ஆறு மாதத்திற்குள் இறந்துபோனார். அவருக்குப் பின்பு மஹாராஷ்டிர அதிகாரமும் க்ஷீணிக்கலாயிற்று. அவர்கள் தாங்கள் ஹிந்துஸ்தானத்தில் கைப்பற்றிக்கொண்ட நாடுகள் முழுவதையும் அடியோடு இழந்துவிட்டார்கள். அல்லாமலும், அவர்கள் தங்களுக்குள்ளேயே கலகப்பட்டுக்கொண்டு ஒருவரோடொருவர் சண்டைகள் செய்யத் தலைப்பட்டார்கள். பீஷ்வாவின் அதிகாரம் குறைவுபடவும், ஹோல்கார், ஸிந்தியா முதலான மஹாராஷ்டிரத் தலைவர்கள் முன் வரலானார்கள். துரானி தான் கஷ்டப்பட்டு சண்டையிற் ஜயித்த நாட்டை ஆட்சி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யாது தன் னாட்டிற்குத் திரும்பிப் போக நேர்ந்ததும், மஹாராஷ்டிரர்கள் பலம் மிகவும் குன்றிவிடவும், அதற்கு முன்னமேயே முகலாய ராஜ்யம் அழிந்துபோகவும், அப்பொழுது

இந்தியாவிற்கு வந்து கொஞ்சம் கொஞ்சமாக ராஜ்யத்தைச் சம்பாதித்துக்கொண்டு அதிகாரத்தில் அபிவிருத்தியை அடைந்து வந்த ஆங்கிலேயர்கள் முன்னேற்றத்தை யடைந்து நாளடைவில் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தைச் சம்பாதிக்கலானார்கள்.

**மத்துராவ் கி. பி. 1761–கி. பி. 1772.** பாலாஜி பாஜிராவுக்குப் பின் அவருடைய மைந்தர் **முதல் மத்துராவ்** என்பவர் பீஷ்வாவானார். அவர் பட்டத்துக்கு வரும் பொழுது அவருக்கு வயது 17. அதனால், அவருக்கு வயது வரும்வரையில் அவருடைய சிற்றப்பனான ரகுநாதராவ் ராஜ்யபாரம் நடத்திவந்தார். அவருடைய காலத்தில் அவர் ஹைதராபாத் நவாப்புடனும், மைசூர் சுல்தானான ஹைதர் அலியுடனும், பீரார் நாட்டை ஆண்டுவந்த மஹாராஷ்டிர இனத்தைச் சேர்ந்த, பான்ஸலக்களுடனும் சண்டைகள் செய்து வெற்றி பெற்றார். கி. பி. 1772-ல், அவர் காலஞ் சென்றார்.

அவருடைய காலத்தில் மற்றொரு மஹாராஷ்டிர ராஜ்யமான **இந்தூரை** மல்ஹார்ராவ் ஹோல்காரின் நாட்டுப் பெண்ணும், கண்டிராவின் மனைவியுமான **அஹல்யாபாய்** என்பவர் ஆட்சிசெய்து வந்தார்.

அஹல்யாபாய் வெகு சமர்த்தர். அவருக்கு ஆண் மக்களுக்குரிய தைரியமும், பராக்கிரமும் இருந்தன. அவர் உயர்ந்த உத்தமர்களையே உத்தியோகங்களில் அமர்த்தி மிக்க விமரிசையாக ராஜ்யபாரம் நடத்தினார். அவர் காலத்தில் நாடெங்கும் செழித்திருந்தது; நாட்டில் கொள்ளை, களவு முதலான துன்பங்களில்லாமல் குடிகள் சமாதானமாக வாழ்ந்து வந்தார்கள். இத்தகைய ராஜ்யபாரத்தில் துகாஜி ஹோல்கார் என்னும் சேனைத் தலைவர் அரசியாருக்குத் துணை நின்றார். இராணியார் அவரை ஸ்வீகாரம் செய்து கொள்ளவும், துகாஜி யவரிடம் தாய்க்குரிய வந்தனை வழிபாடுகளுடன் நடந்துகொண்டார். அவருடைய ஆட்சியின் பெருமையை ஸர். ஜான் மால்கம் என்னும் ஆங்கிலப் பிரபு பின் வருமாறு எழுதியுள்ளார் :—

'அவருடைய ராஜ்ய பரிபாலன முறைகளின் சிறப்பு மிக்க வியப்பைத் தந்தது. அவருடைய காலத்தில் நாட்டின் மீது அந்நியர்கள் படையெடுத்து வாராததைவிட உள் நாட்டில் ஏற்பட்டிருந்த அமைதி மிகவும் மெச்சத் தகுந்தது. அவர் தம்மை நம்பி யிருந்த தமது குடிகளின் மேன்மையை நாடித் தாம் என்ன செய்யக்கூடும் என்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார். அவருடைய ஆட்சியில் மிகச் சிறிய கிராமமாகவிருந்த இந்தூர் செல்வம் நிறைந்துள்ள ஒரு பெரிய நகரமாயிற்று. மாளவ நாட்டில் அவருடைய ஆட்சி ஒப்புயர்வற்றதென யாவராலும் மதிக்கப்பட்டது. அவருடைய ஈகைக்கு எல்லை யில்லை. நில மீதுலாவும் மிருகங்களும், ஆகாயத்திற் பறக்கும் பறவைகளும், நீரில் வாழும் ஜந்துக்களும் அவருடைய அன்பிற்குப் பாத்திரமானவைகளாக இருந்தன. அவர் கருவம் என்பதை அறிய மாட்டார். அவர் மதப் பற்றுடையவராயினும், பிற மதங்களிற் பகை கொள்ளாதவர். எக்காலத்திலும் அவரைவிட அதிக புனிதரானவராகவாவது உத்தமரானவராகவாவது ஓர் அரசைக் காணமுடியாது. அவருடைய அரசாட்சி, மற்றவர்கள் ஒரு பிரமாணமாக அங்கீகரிக்கத் தக்கதான பெருமை வாய்ந்திருந்தது.'

முப்பது வருஷம் ஆட்சி செலுத்தி அறுபதாவது வயதில் அவர் களைப்பினாலும், ராஜ்யபாரத்திலுண்டான கவலைகளினாலும் கி. பி. 1795-ல் இறந்தபொழுது, இந்தூர் குடிகள் தாயை யிழந்த கன்றுகளை யொத்துக் கதி கலங்கினார்கள்.

---

## 39. மஹாராஷ்டிர யுத்தங்கள்

நாராயணராவ் கி. பி. 1772—கி.பி. 1773; ரகுநாதராவ் கி. பி. 1773; மத்துராவ் II. கி. பி. 1773—கி. பி. 1795. மத்துராவுக்குப் பின்பு அவருடைய சகோதரரான நாராயணராவ் பீஷ்வாவானார். ஆனால், தன்னுடைய புருஷரான ரகோபா பீஷ்வா வாகவேண்டுமென்று ஆவல் கொண்

டிருந்த ஆநந்தாபாய் தூண்டுதலால், நாராயணராவ் கொலை யுண்டு போனார். உடனே ரகுநாதராவ் பீஷ்வா வானார். நாராயணராவ் இறந்ததும், அவர் மனைவி ஓர் ஆண் மகவைப் பெற்றாள். அதற்கு (இரண்டாவது) மத்துராவ் என்பது பெயர். அந்தக் குழந்தைதான் பட்டத்துக்கு உரியது என்று சிலர் கலகம் செய்து முன் வந்து அதைப் பீஷ்வா வாககினார்கள்.

இந்தக் கக்ஷிக்கு நானு பர்னவிஸ் என்பவர் முதல்வரா னார். அப்பொழுது ரகோபாவின் கக்ஷிக்கும் நானுபர்னவி ஸின் கக்ஷிக்கும் சண்டை உண்டாயிற்று. ரகுநாதராவ் ஆங்கிலேயர்கள் தமக்கு உதவிபுரியும் பக்ஷத்தில் அவர்க ளுக்குத் தாம் ஸால்ஸேட், பாஸீன் என்னும் பட்டணங் களைக் கொடுப்பதாகச் சொல்லி கி. பி. 1775-ல் ஸூரத் என்னுமிடத்தில் பம்பாய் கவர்னரோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். மத்துராவ் கக்ஷியில் முதல்வராயிருந்த நானுபர்னவிஸ் கி. பி. 1776-ல் புரந்தர் என்னுமிடத்தில் ஆங்கிலேயே கவர்னர்-ஜனரலோடு அவர்கள் தங்களுடைய சண்டையில் தலையிட்டுக்கொள்ளாதிருந்தால், தாம் அவர் களுக்கு ஸால்ஸெட்டைக் கொடுத்துவிடுவதாக உடன் படிக்கை செய்துகொண்டார். இங்கிலாந்திலிருந்த மேலதி காரிகள் ஸூரத் உடன்படிக்கையை ஆமோதித்ததனால், கி. பி. 1778-ல் பம்பாய் கவர்னர் பூனாவை எதிர்க்கும்படி உடனே ஒரு சேனையை அனுப்பினார். அது தோலவியை யடைந்து பம்பாய்க்குத் திரும்பிற்று. பிறகு கி. பி. 1780-ல், வங்காளத்தி லிருந்து அனுப்பப்பட்ட சேனை மஹாராஷ்டிரர்களைத் தோற்கடித்து ஆமதாபாத், கல்யாண், பாஸீன், குவாலியர் முதலான இடங்களைக் கைப்பற்றிக் கொண்டது. ஆயினும் மறு வருஷத்தில் ஆங்கிலேயர்கள் பெருந் தோல்வியை யடைந்துவிட்டதனால், மாகாதஜி ஸிந்தியாவின் சகாயத்தினால் கி. பி. 1782-ல் இருதிறத்தா ருக்கும் ஸால்பை என்னுமிடத்தில் சமாதானம் ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளாவன:—" ஆங்கிலே யர்கள் மஹாராஷ்டிரரிடமிருந்து தாங்கள் கைப்பற்றிக்

## பீஷ்வாக்களின் வம்ச பரம்பரை

- 1. பாலாஜி விசுவநாத் (1714—1720)
  - 2. பாஜிராவ் I (1720—1740)
    - 3. பாலாஜி பாஜிராவ் (1740—1761)
      - விசுவாஸராவ்
      - 4. மத்துராவ் I (1761—1772)
      - 5. நாராயணராவ் (1772—1773)
        - 7. மத்துராவ் II (1774—1795)
    - 6. ரகுநாதராவ் (ரகோபா) (1773)
      - 8. பாஜிராவ் II (1796—1818)
        - நானாஸாஹிப் (தத்துப் புத்திரன்)
  - சிவதாஸராவ்

கொண்ட விடங்களில் ஸால்ஸெட் தவிர மற்றையவற்றை அவர்களுக்கே திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். மஹாராஷ்டிரர்கள் ஆங்கிலேயர்கள் தவிர வேறெந்த ஐரோப்பியர்களுடனும் உறவாடக் கூடாது. மஹாராஷ்டிர ராஜ்யத்தில் போர்ச்சுகீஸியரையும் ஆங்கிலேயரையும் தவிர வேறு எவரையும் வியாபாரம் செய்ய நுழையவிடக் கூடாது. பாடீஸிங் என்பவரைப் பரோடா வரசராக ஒப்புக்கொள்வதோடு, அவர் கொடுக்கவேண்டிய பாக்கிக் கப்பத்தையும் தள்ளிவிட வேண்டியது. ஆங்கிலேயர்கள் ரகுநாத ராவுக்கு மூன்று லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுக்கவேண்டும். இந்தச் சமாதானத்தை ஸிந்தியா முன்னின்று செய்து வைத்ததுமன்றிச் சண்டையிற் பிடிக்கப்பட்ட ஆங்கிலேய கைதிகளைப் பக்ஷமாக நடத்தினதற்கீடாக அவருக்கு ப்ரோச்சைக் கொடுத்துவிட வேண்டும்" இந்த உடன்படிக்கை இரண்டாவது மத்துராவ் பீஷ்வாவாகவும், நானுபர்னவிஸினுடைய கக்ஷியே ஜயமடையவும், முதல் ஆங்கிலேய—மஹாராஷ்டிர யுத்தம் முடிவு பெறவும் ஏதுவாயிற்று.

முதல் மஹாராஷ்டிர யுத்தத்திற்குப் பிறகு ஸிந்தியா முதன்மை பெற்று விளங்கினுர். அவர் தமது போர்வீரர்களுக்குப் பிரஞ்சுக்காரரைக்கொண்டு யுத்தப் பயிற்சி செய்வித்துத் தம்முடைய சேனையைப் பலப்படுத்தினுர். அல்லாமலும், அவர் கி. பி. 1784-ல், ஷாஹலத்தைத் தாம் மறுபடியும் டில்லிச் சக்ரவர்த்தி யாக்குவதாகச் சொல்லி அழைத்து வந்து டில்லியில் தாம் ஆட்சி செய்துவந்து கி. பி. 1794-ல் இறந்துபோனுர். அவருக்குப் பின் அவருடைய ஸ்வீகார புத்திரரான தௌலத்ராவ் ஸிந்தியா குவாலியர் நாட்டிற்கரசரானுர்.

கி. பி. 1795-ல் பீஷ்வா, ஸிந்தியா, ஹோல்கார் முதலான எல்லா மஹாராஷ்டிரத் தலைவர்களும் ஒன்று சேர்ந்து ஹைதராபாத் நவாப்புடன் கர்ட்லா என்னுமிடத்திற் சண்டை செய்து அவரை யடியோடு தோற்கடித்து விட்டார்கள். இதற்குப் பின்பு மஹாராஷ்டிரத் தலைவர்கள் ஒன்று சேர்ந்திலர்.


AFGHANS
Kabul
Peshawar
Kandahar
Multan
Indus R.
Hyderabad
Jhilam R.
Chenab R.
Ravi R.
Lahore
Sutlaj R.
Ramnagar
ROHILKHAND
NEPAL
Cooch Behar
Panipat
Delhi
Jamna
GANGES R.
Bareilly
OUDH
Lucknow
Cawnpore
Kara
RAJPUTS
Agra
Jodhpur
Gwalior
R. Luni
Salbai
Allahabad
Baxar
Patna
Monghyr
BEHAR
BENGAL
Plassey
MAHRATTA
Berar
Ahmadabad
Baroda
Indore
Bhopal
Janagarh
Narbada R.
Asirgarh
Mahanadi R.
CONFEDERACY
Broach
Surat
Diu
Tapti R.
Nagpur
Balasore
Calcutta
Cuttack
Bassein
Salsette I.
Bombay
Wargaom
Poona
Kardla
Godaveri R.
NIZAMS
Purandhar
Bijapur
Hyderabad
Ellore
DOMINIONS
Masulipatam
ARABIAN SEA
Goa
Karnoul
Cuddapah
BAY of BENGAL
MYSORE
Mangalore
Bangalore
Madras
Seringapatam
Cannanore
Mysore
Pondicherry
Mahe
Calicut
Tanjore
Madura
Cochin
INDIA in 1795
British Territory
British protected States
Mahrattas
THE INDIAN PUBLISHING HOUSE LTD.

இரண்டாவது மத்துராவ் கி. பி. 1796—கி. பி. 1818.
நாஞுபர்னவிஸ் தம்மை யடக்கியாளுவதில் மனவெறுப் புற்ற மத்துராவ் தற்கொலை புரிந்துகொண்டு இறக்கவும், பீஷ்வாவினுடைய நாட்டிற் கலகங்கள் உண்டாயின. அப் பொழுது நாஞுபர்னவிஸும் கொஞ்சகாலம் சிறையிலிருக்க நேர்ந்தது. கி. பி. 1796-ம் வருஷத்தின் கடைசியில் நாஞு பர்னவிஸின் விரோதியும், ரகோபாவின் குமாரருமான இரண்டாவது பாஜிராவ் பீஷ்வா ஆனார். இவர் பட்டத் துக்கு வந்த சில வருஷங்களுக்கெல்லாம், முப்பது வருஷ காலமாகப் பீஷ்வாவின் ராஜ்யத்தை மிக்க விமரிசையுடன் ஆட்சி செய்வதில் முதன்மையாக நின்று உதவி புரிந்தவரும் உண்மை, தயை, ஈகை, நுண்ணறிவு முதலான நற்குணங் களைப் பொருந்தி யிருந்தவருமான நாஞுபர்னவிஸ் இறந்து விடவும், மஹாராஷ்டிரர்கள் தங்களுக்குள்ளேயே சண்டை கள் செய்து பலங்குன்றப் பெற்றூர்கள். கடைசியில் கி. பி. 1802-ல் துகாஜி ஹோல்காரின் குமாரரான ஜஸவந்தராவ் ஹோல்கார் என்பவர் பீஷ்வா தம்முடைய சகோதரரைக் கொன்றதற்காக அவர்மீது படையெடுத்துச் சென்று பூஞு வில் அவரையும், அவருக்குத் துணைவந்த தௌலத் ராவ் ஸிந்தியாவையும் தோற்கடித்தார். ஹோல்கார் பாஜிராவின் சகோதரரான அமிருதராவைப் பீஷ்வாவாக நியமித்தார். பாஜிராவ் ஆங்கிலேய கவர்னர் ஜனரலான வெல்லஸ்லியுடன் கி. பி. 1802-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதியன்று பாஸீன் என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி பாஜிராவ் ஆங்கிலேயருடைய ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டு, தமது நாட்டின் பாது காப்பிற்கான ஆங்கிலேய சேனையின் ரக்ஷணையின் பொருட்டு வருஷத்திற்கு 26 லக்ஷம் ரூபாய் வருமானம் கிடைக்கக் கூடிய வவ்வளவு நாட்டை யவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்றும், ஆங்கிலேயருக்கு விரோதிகளான எவர் களையும் தம்முடைய உத்தியோகங்களில் வைத்துக் கொள்ளக் கூடாது என்றும், ஆங்கிலேயருடைய அநுமதி யில்லாமல் எவரோடும் நட்பாவது விரோதமாவது பாராட்

டக் கூடாது என்றும், நிஜாமுடனாவது கைக்வாருடனாவது விரோதம் ஏற்படும்போது ஆங்கிலேயருடைய மத்யஸ்த தீர்ப்பை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் ஏற்பாடுகள் ஆயின.

உடனே பாஜிராவ் மறுபடியும் பேஷ்வா ஆனார். அமிருத ராவ் உபகாரச் சம்பளம் பெற்றுக் காசிக்குச் சென்றுவிட்டார். பேஷ்வாவையன்றிக் கைக்வாரும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை யொப்புக்கொண்டு வெல்லஸ்லியுடன் உடன்படிக்கை செய்துகொண்டுவிட்டார்.

தம்மவர்களில் இருவர் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை ஒப்புக்கொண்டு உடன்படிக்கைகள் செய்துகொண்டு விட்டார்கள் என்கிற கோபத்தினால் ஸிந்தியாவும், பான்ஸ்லவும் ஆங்கிலேயருடன் யுத்தம் செய்யத் தயாரானார்கள். இதுவே இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தம். இதில் ஹோல்கார் சேர்ந்து கொள்ளவில்லை.

வெல்லஸ்லியின் சகோதரரான ஜனரல் வெல்லஸ்லி என்பவர் ஸிந்தியாவையும், பான்ஸ்லவையும் கி. பி. 1803-ல் அஸ்ஸே என்னுமிடத்தில் சண்டையிட்டுத் தோற்கடித்து விட்டார். இரண்டு மாதங்கள் கழித்து ஆர்காம் என்னுமிடத்தில் பான்ஸ்ல மாத்திரம் தனிமையாக மறுபடியும் சண்டையிட்டுத் தோல்வியை யடைந்தார். அதன் பின்னர் ஆங்கிலேயர்கள் காவில்கார் கோட்டையை முற்றுகை செய்யவும், பான்ஸ்ல ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை யொப்புக்கொண்டு அவர்களுடன் தேவகாம் என்னுமிடத்தில் உடன்படிக்கை செய்து கொண்டுவிட்டார். ஆங்கிலேய சேனையின் ரக்ஷணையின் பொருட்டுப் பான்ஸ்ல ஒரிஸ்ஸாவையும், ஆக்ராவையும் ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டார்.

கி. பி. 1804-ல் ஜனரல் லேக் என்பவர் அலிகர் கோட்டையைப் பிடித்துக்கொண்டு ஸிந்தியாவின் சேனைத் தலைவரான போர்க்வின் என்னும் பிரஞ்சு தளகர்த்தனை டில்லிக்கருகிற் சண்டையிட்டுத் தோற்கடித்தார். பின்பு அவர் ஸிந்தியாவின் மோசத்தினால் சிறைகிடந்த ஷாஹலத்தை மறுபடியும் ஸிம்ஹாஸனத்தில் ஏற்றி அவருக்குத்

தேவையான உபகாரச் சம்பளத்தையும் கொடுக்குமாறு ஏற்பாடு செய்வித்தார். இப்பொழுது ஹிந்துஸ்தானத்தின் திரவுகோலென மதிக்கப்பட்டு வந்த ஆக்ராவும் ஆங்கிலேயர் வசமாயிற்று. ஆக்ராவில் ஆங்கிலேயருக்கு 14 அடி நீளமும் 24 அங்குலம் வாய்ப்புறமுமுடைய பித்தளையினுற் செய்யப்பட்ட ஒரு பீரங்கி கிடைத்தது. அது 96, 600 பவுண்ட் பாறமுள்ள தென்றும், அதைக் கொண்டு 1500 பவுண்ட் நிறையுள்ள குண்டைச் சுடக்கூடுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மறுபடியும் ஸிந்தியா லாஸ்வாரி என்னுமிடத்தில் ஆங்கிலேயருடன் சண்டைசெய்து தோல்வியையடைந்தார். ஸிந்தியாவும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தையொப்புக்கொண்டு அஞ்சன்காம் என்னுமிடத்தில் அவர்களோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார். அவர் ஆங்கிலேய சேனையின் ரக்ஷணையின் பொருட்டுக் கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியிலுள்ள நாடுகளையும் இன்னும் சிலவற்றையும் அவர்களுக்குக் கொடுத்து விட்டார். இவ்வாறுக, இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தம் முடிவு பெற்றது.

மஹாராஷ்டிரர்களில் ஹோல்கார் ஒருவர்தான் இன்னமும் ஆங்கிலேய ஏகாதிபத்திய ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளவில்லை. அதனுல், வெல்லஸ்லி அவரையும் ஜயிக்க வேண்டுமென்று யுத்தத்திற்குத் தயாராஞர். ஹோல்காரும் சண்டைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தார். இதுவே மூன்ருவது மஹாராஷ்டிர யுத்தத்திற்குக் காரணம். ஆங்கிலேயர்கள் ஹோல்காரை நாலாப் பக்கங்களிலிருந்தும் எதிர்த்துச் சண்டைசெய்யத் தீர்மானித்து லேக், ஆர்தர் வெல்லஸ்லி, முர்ரே, மான்ஸன் என்னும் நான்கு தளகர்த்தர்களை யனுப்பினுர்கள். கி. பி. 1804-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் ஹோல்கார் மான்ஸன் சேனையை ராஜபுதனத்தில் முகுந்த்ராபாஸ் என்னுமிடத்தில் எதிர்த்துப் போர் செய்து அதை முற்றிலும் தோற்கடித்துத் துறத்திவிட்டார். இதைக் கண்ட பரதபுரத் தாசர் ஹோல்காருக்குத் துணை செய்யக் கருதி டில்லியை எதிர்த்தார். ஆனுல், ஆங்கிலேயர்கள்

அவரை வெற்றிகொண்டு விட்டார்கள். நவம்பர் மாதத்தில் ஆங்கிலேயர்கள் டீக் என்னுமிடத்தில் ஹோல்காரைத் தோற்கடித்து, டீக் கோட்டையையும் பிடித்துக் கொண்டார்கள். மறு வருஷத்தில் அதாவது கி. பி. 1805-ல், ஜனரல் லேக் களிமண்ணினாற் கட்டப்பட்டதும் மிகவும் வலிமை பொருந்தி யிருந்ததுமான பாதபுரக் கோட்டையை முற்றுகை செய்து முற்றிலும் தோல்வி யடைந்தார். என்றாலும், பாதபுரத் தரசர் ஆங்கிலேயருடன் சமாதானஞ் செய்துகொண்டு அவர்களுக் குண்டான நஷ்டத்திற் கீடாக இருபது லக்ஷம் ரூபாய் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார். இச் சண்டைகளுக்கும் நாட்டில் ஏற்பட்ட மற்ற குழப்பங்களுக்கும் காரணபூதராக விருந்த வெல்லஸ்லி பிரபுவை ஆங்கிலேய மேலதிகாரிகள் வேலையினின்றும் நீக்கித் தம்மூருக்கு அழைத்துக் கொண்டுவிடவும், மூன்றுவது மஹாராஷ்டிர யுத்தம் முடிவுற்றது. பீஷ்வாவும், ஸிந்தியாவும், பான்ஸ்லவும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை யொப்புக் கொண்டு அவர்களுடன் சமயோசிதமான சமாதானம் செய்து கொண்டு விட்டார்களேயாயினும், அவர்கள் தாங்கள் அவ்வாறு செய்து கொண்டதில் அருவருப்பை யடைந்து தாங்கள் ஆங்கிலேயர்களை விட்டுப் பிரிந்து சுயாதீனம் பெறுவதற்கு எப்பொழுது தக்க சமயம் வாய்க்கும் என்று எதிர் பார்த்திருந்தார்கள். ஆங்கிலேயர்கள் நேபாள, பிண்டாரி யுத்தங்களைச் செய்து வருகையில் பாஜிராவ் திடீரென்று கி. பி. 1817-ம் வருஷம் நவம்பர் மாசத்தில் ஆங்கிலேயப் பிரதிநிதியைக் கார்க்கீ என்னுமிடத்தில் எதிர்த்துச் சண்டை செய்து தோல்வியை யடைந்து ஜோதிபுரத்திற்கு ஓடிப் போய்விட்டார். இதுவே நான்காவது மஹாராஷ்டிர யுத்தத்தின் ஆரம்பம்.

நாகப்புரி யரசரான அப்பாஸாஹிபும் ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கிளம்பி ஸிடபால்டியிலும் நாகப்புரியிலும் அவர்களோடு சண்டை செய்து தோல்வியை யடைந்தார். உடனே ஆங்கிலேய கவர்னர் ஜனரலான லார்ட் ஹேஸ்டிங்ஸ் அப்பாஸாஹிபை ராஜ்யத்தினின்றும் நீக்கி

விட்டு அவருடைய நாட்டின் பெரும் பாகத்தையும் தமது ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டுவிட்டார்.

ஹோல்காருடைய சைந்யங்களும் ஆங்கிலேயரோடு சண்டை செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்து வருகையில் தங்களுடைய ராணியான துளசிபாய் ஆங்கிலேயரோடு சமாதானம் செய்து கொள்ள விருப்புற்றிருந்ததை யறிந்து அவளைக் கொன்று ஆங்கிலேயரை எதிர்த்துச் சென்றது. ஆனால் மாஹிட்பூரில் அந்தச் சேனை முற்றிலும் தோற்கடிக்கப்பட்டது. அதனால், 1818-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் ஹோல்காரும் ஆங்கலேயரோடு மேலும் மேலும் சண்டை செய்வதில் மன மில்லாதவராய்ச் சமாதானம் செய்து கொண்டு விட்டார்.

பீஷ்வா கார்க்கியில் நடந்த சண்டையில் தோற்று ஓடிப் போய் விட்டாரென்று மேலே சொல்லப்பட்ட தல்லவா? ஆங்கிலேயர்கள் அவரைத் துரத்திச் சென்று அஷ்டீ என்னுமிடத்தில் மறுபடியும் தோற்கடித்தார்கள். அப்பாஸாஹிபும் சிவாஜியின் வம்சத்தைச் சேர்ந்த சதாரா வரசரும் ஆங்கிலேயரைச் சரண மடைந்தார்கள். ஹேஸ்டிங்ஸ் பாஜீராவுக்கு வருஷத்திற்கு 8 லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுத்துப் பித்தூருக் கனுப்பி விட்டு அவருடைய ராஜ்யம் முழுவதையும் ஆங்கிலேய ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டுவிட்டார். பாஜிராவோடு பீஷ்வாவினுடைய அதிகாரம் அழிந்துபட்டது. பாஜிராவின் ஸ்வீகார புத்திரரான நானாஸாஹிப் ஆங்கிலேயர்கள் தமது தந்தைக்குக் கொடுத்து வந்த உபகாரச் சம்பளத்தைத் தமக்கும் கொடுக்கவில்லை என்று அவர்களுக்கு விரோதமாகக் கிளம்பிக் கி. பி. 1857-ல் உண்டான சிப்பாய்க் கலகத்தில் சிப்பாய்களுடன் சேர்ந்து கொண்டு சண்டையிட்டுத் தோல்வியை யடைந்து ஓடிப் போய் விட்டார். அவர் என்ன கெதியானாரோ எவரும் அறிந்திலர்.

சிவாஜியின் வம்சத்தினர்கள் மட்டில் சதாராவை யொரு தனி ராஜ்யமாக ஆட்சி செய்து வந்தார்கள். ஆனால் கி. பி. 1848-ல் லார்ட் டல்ஹௌஸி என்னும் கவர்னர்-

ஜனரல் அதை ஆங்கிலேய ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டு விட்டார்.

அப்பாஸாஹிபினுடைய நாட்டின் பெரும்பாகத்தை ஆங்கிலேயர்கள் தங்களுடைய வசமாக்கிக் கொண்டார்கள் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளதல்லவா? நருமதை யாற்றின் தெற்கிலிருந்த ஒரு சிறிய நாட்டிற்கு மட்டில் ஒரு புதிய அரசர் நியமிக்கப்பட்டு அது ஒரு தனி ராஜ்யமாக இருந்து வந்தது. கி. பி. 1853-ல் அதையும் லார்ட் டல்ஹௌஸி என்பவர் ஆங்கிலேய ராஜ்யத்திற் சேர்த்துக் கொண்டுவிட்டார். இவ்வாறாக பீஷ்வா, பான்ஸ்ல ஆகிய இவர்களுடைய ராஜ்யங்கள் முழுவதும் அழிந் தொழிந்தன. கைக்வார், ஹோல்கார், ஸிந்தியா ஆகிய இந்த மூன்று மஹாராஷ்டிரத் தலைவர்களினுடைய சந்ததியார்கள்மட்டில் இன்னமும் பரோடா, இந்தூர், குவாலியர் என்னும் நாடுகளை ஆங்கிலேய சாம்ராஜ்யத்திற்குட்பட்டு மிக்க விமரிசையாக ஆட்சி செய்து வருகின்றார்கள். சிவாஜி உண்டுபண்ணின உயர்ந்த ஏற்பாடுகளையும், ராஜ்ய பரிபாலன முறைகளையும் கைக்கொண்டொழுகாது தமக்குள் பேதப்பட்டுச் சண்டைகளைச் செய்து மஹாராஷ்டிரர்கள் தங்களுடைய மேன்மையையும் இந்தியாவின் ஸ்வாதீனத்தையும் அடியோடு இழந்து விட்டார்கள்.

---

## 40. ஸீக்கர்கள்

ஹிந்து மதத்தைச் சீர்திருத்தி முன்னுக்குக் கொண்டு வந்த ஆச்சாரியர்களில் **ராமாநந்தர்** என்பவர் ஒருவர் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கின்றது. இவர் ஸ்ரீமத் ராமாநுஜருடைய சிஷ்யர். இவர் எல்லாமதத்தினர்களையும் தமது சமூகத்திற் சேர்த்துக்கொண்டு பக்தி மார்க்கத்தின் சிறப்பை யாவரு மறிய உபதேசித்து வந்தார். இவருடைய சிஷ்யர்களில் நெசவுத் தொழிற் செய்து வந்த மகம்மதியர் ஒருவர் இருந்தார். அவருக்குக் கபீர் என்று பெயர். கபீருக்கு ஹிந்துக்களையும், மகம்மதியர்களையும்

ஒன்று சேர்த்து அவர்களை ஒரே மதத்தினராக்கவேண்டுமென்னும் அவா உண்டாயிற்று. அதற்கிணங்க அவர் வட இந்தியாவில் மத போதனை செய்து வந்தார்.

அவருடைய நற்போதனைகளைக் கேட்டு அவரைப் பின்பற்றினவர்களில் நாநக் என்று ஒருவர் இருந்தார். அவர் கத்ரி வகுப்பினர். அவர் கி. பி. 1469-ல் லாகூருக்கருகிலுள்ள ஒரு கிராமத்திற் பிறந்தவர். அவர் தம்முடைய குருவின் கருத்திற் கிணங்கத் தாம் ஒரு புதிய மதத்தை ஸ்தாபிக்கக் கருதி மகம்மதியர்களையும், ஹிந்துக்களையும் ஒரே கடவுளை ஒரே விதமாகத் தொழுது வரும்படி செய்தார். அவர் கடவுள் ஒருவரே என்றும், அவரை எவரும் வழிபடலாம் என்றும், ஜாதி பேதங்கள் பொய் என்றும் பிரசங்கித்து வந்தார். அவருடைய போதனையைக் கேட்டு வந்த பலர் அவருக்குச் சிஷ்யர்களானார்கள். அவர்களுக்குத் தான் ஸீக்கர் என்று பெயர். ஸீக்கர் என்றால் சிஷ்யர் என்று பொருள். அவர்களுடைய மதம் ஸீக்மதம் எனப்படும்.

ஸீக்மதத்தை ஏற்படுத்தின நாநக்குக்குப் பிறகு அநேக ஸீக் குருக்கள் தோன்றினார்கள். ஸீக் மதம் அவர்களால் பரவி விருத்தியடைந்தது. முதல் நான்கு ஸீக் குருக்களும் ஸீக்கர்களைப் போர் செய்யவாவது இராஜாங்க முறைகளிலாவது பயிற்றுவிக்கவில்லை. கி. பி. 1577-ல் அக்பர் அவர்களுக்கு அமிருதஸரஸில் இடங் கொடுக்கவும், அதுவே ஸீக்கர்களுக்கு ஒரு முக்கிய பட்டணமாயிற்று. நாளடைவில் மத வைராக்கியங் கொண்ட மகம்மதியர்கள் இவர்களையெதிர்த்துப் பலமுறை சண்டை செய்யத் தலைப்பட்டார்கள்.

ஸீக்கர்களுடைய ஐந்தாவது குருவான அர்ஜுனர் ஜிஹாங்கீரின் குமாரரான குஸ்ரூ தமது தந்தைக்கு விரோதமாகக் கலகஞ் செய்தபொழுது குஸ்ரூவுக்குத் துணை நின்றதனால் கி. பி. 1606-ல் கொலையுண்டார். அவருக்குப் பின் வந்த ஆறாவது குருவான ஹரிகோவிந்தர் ஸீக்கர்களுக்கு யுத்தப் பயிற்சி செய்வித்தார்.

ஔரங்கஜீப் ஒன்பதாவது ஸீக் குருவான டேக்பஹாதுர் என்பவரைச் சிறையிலிட்டு, அவரை மகம்மதியராகும்படிக் கட்டாயப்படுத்தினதை யன்றி அவருக்குப் பல தீங்குகளை யும் இழைத்து வந்தார். அவர் எதற்கும் இணங்காததனால், ஔரங்கஜீப் அவரைக் கொன்றுவிடும்படி ஆக்யாபித்தார். அவர் இறக்கவும், ஸீக்கர்களுக்கு மகம்மதியர்கள்மேல் விரோதம் அதிகரித்தது. ஔரங்கஜீப் அவரைக் கொன்றதற் காகப் பழி வாங்குவதற்கு அவர்கள் தக்க சமயத்தைப் பார்த்து வந்தார்கள். அவர்களுடைய எண்ணத்துக்குத் தக்கவாறு டெக்பஹாதுரின் புத்திரரும் பத்தாவது ஸீக் குருவுமான குருகோவிந்தர் என்பவர் மகம்மதியர்கள் செய்யும் கொடுமைக் கீடாக ஸீக்கர்கள் பழி வாங்கு வது நியாயமாகும் என்று உபதேசித்து வந்தார். அவர் ஸீக்கர்களுக்கு இரண்டு சம்ஸ்காரங்களை உண்டு பண்ணி அவர்களை ஒற்றுமைப்படுத்தினார். அந்தச் சம்ஸ்காரங் களில் ஒன்று சர்க்கரையைத் தண்ணீரிற் போட்டுக் கத்தி முனையினலதைக் கலக்கிக் குடிப்பது; மாவு, சர்க்கரை, வெண்ணெய் ஆகிய இவற்றின் கலப்பினலாகிய உணவை எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து புசிக்கவேண்டுமென்பது மற்றொன்று. புதிதாக ஸீக் மதத்தைச் சேரும் ஒவ்வொரு வனும் இந்த சம்ஸ்காரங்களைப் பெறவேண்டும். இவ்வாறு ஏற்பட்ட அவர்களுடைய சமாஜத்துக்குக் கால்ஸா என்று பெயர் வந்தது. கால்ஸா என்றால் நிர்மலம் என்று பொருள்.

குருகோவிந்தர் ஸீக்கர்களுக்கு யுத்தப் பயிற்சி செய் வித்து அவர்களுக்குச் சிங்கம் என்று பொருள்படும் 'ஸிங்க்' என்னும் பட்டத்தையும் கொடுத்தார். மகம்மதியர் கள் குருகோவிந்தருடைய பிள்ளைகளைக் கொன்றுவிடவும் அவர் அவர்களுக்குப் பயந்து தக்ஷிணத்திற்கு ஓடிப்போய் விட்டார். என்றாலும், கி. பி. 1708-ல் குருகோவிந்தர் மகம்மதியர்கள் கையினற் கொலையுண்டு போனார். அவர் தான் ஸீக்கர்களுடைய கடைசி குரு. அவருக்குப் பின் பந்தா என்பவர் ஸீக்கர்களுக்குத் தளகர்த்தராக இருந்தார். அவர்

காலத்தில் ஸீக்கர்கள் மகம்மதியர்களைக் கொன்றும், அவர்களுடைய மசூதிகளை இடித்தும், கிராமங்களை அழித்தும், தீங்கிழைக்கலானார்கள். அதனால், மகம்மதியர்கள் கோபங் கொண்டு பந்தாவையும் அவருடைய சிநேகிதர்களையும் கொன்றுவிட்டார்கள். அது முதல் ஸிக்கர்களை யடியோடு தொலைத்துவிட வேண்டுமென்ற எண்ணமும் மகம்மதியர்களுக்கு உண்டாயிற்று. ஆனால், ஸீக்கர்களோ நாளுக்கு நாள் பலாட்டியர்களாகிப் பெருகி வந்தார்கள். அவர்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து நின்று எதிர்த்து, அநேகம் கோட்டைகளைக் கட்டிக்கொண்டார்கள். ஒவ்வொரு பிரிவின் ஸர்தாரின் அதிகாரத்திற்குட்பட்டுப் பத்து முதல் பன்னீராயிரம் போர்வீரர்கள்வரையில் சேர்ந்திருப்பார்கள். ஸீக்கர்களுக்குள் பந்துக் கட்டுப்பாடு அதிகம்.

அப்பொழுது பஞ்சாபில் இருந்துவந்த அநேகம் ஸர்தார்களில் சத்தர்ஸிங்க் என்பவர் ஒருவர். அவருடைய மைந்தரான ரஞ்சீட் ஸிங்க் என்பவர் கி. பி. 1799-ல் காபூல் அரசரான ஜமான்ஷாவென்பவருக்கு அவருடைய பஞ்சாப் படையெழுச்சியில் உதவிபுரிந்ததனால், காபூல் அரசர் ரஞ்சீட் ஸிங்கை லாகூருக்குக் கவர்னராக நியமித்தார். அவர் நாளடைவில் ஆப்கானியரைப் பஞ்சாபினின்றும் துரத்திவிட்டுத் தாம் பஞ்சாப் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டார். சீக்கிரத்தில் காஷ்மீரமும் அவ்வாறே அவர் வசமாயிற்று. அவர் தமது சேனைக்கு ஐரோப்பிய ராணுவ உத்தியோகஸ்தர்களைக் கொண்டு யுத்தப் பயிற்சி செய்வித்தார். அவருடைய காலத்தில் ஸீக்கர்கள் அதிக பலமடைந்திருந்ததனால், ஆங்கிலேயர்கள் அவர்களுடன் சிநேகமாக இருக்க விரும்பிக் கி. பி. 1809-ல் அமிருதஸரஸில் சமாதானம் செய்துகொண்டார்கள். அப்பொழுது ஸட்லிஜ் நதி ஸீக் ராஜ்யத்தின் தென்னெல்லையாக ஏற்பட்டு ஒரு ஆங்கிலேய சைந்யமும் லூடியானாவில் அமர்த்தப்பட்டது. ரஞ்சீட் ஸிங்க் தமது ஆயுள்பரியந்தம் அந்த உடன்படிக்கையைமீறி நடந்தாரில்லை. அவர் ஆங்கிலேயருக்கு நண்பராகவே இருந்து கி. பி. 1839-ல் காலஞ் சென்றார்.




THE INDIAN PUBLISHING HOUSE LTD.

'பஞ்சாப் ஸிம்ஹம்' என்று வழங்கப்பெற்ற ரஞ்சிட் ஸிங்க் இருந்தவரையில் ஸீக்கர்கள் மிக்க மேம்பாட்டை யடைந்திருந்தார்கள். அவர்கள் இந்தியாவின் வடமேற்கில் பலத்திருந்ததும் சிறந்த அநுகூலமாக விருந்தது. ஆங்கிலேயர்கள் இந்திய அரசர்களை ஒவ்வொருவராக அடக்கித் தமது அதிகாரத்திற்குட்படுத்தியும், அவர்களுடைய நாடுகளைக் கவர்ந்துகொண்டு தமது ராஜ்யத்தைப் பலப்படுத்தியும் வந்தபொழுது, அந்நியர்கள் வடமேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவின் மீது படையெடுத்து வரமுடியா திருந்ததற்கு ஸீக்கர்கள் பஞ்சாபில் பலத்திருந்ததே முதன்மையானகாரணம். இதுவும் ஆங்கிலேயருடைய அதிர்ஷ்டமே யாகும். ரஞ்சிட் ஸிங்க் இறக்கவும், ஸீக்கர்கள் தங்களுக்குள் கலகப்பட்டும், வீணான சண்டைகளைச் செய்து கொண்டும் தோல்வியடைந்து தங்களுடைய ஸ்வாதீனத்தை இழந்துபோனார்கள். ரஞ்சிட் ஸிங்க் காலத்தில் அவருடைய பிரதானிகளும், தளகர்த்தர்களும், சேனைகளும் அவருக்குப் பயந்து அடங்கி நடந்து வந்தார்கள். ரஞ்சிட் ஸிங்குக்கு ஒரு கண்கிடையாது. அவருடைய மந்திரிகளி லொருவரை அவருக்கு எந்தக் கண் இல்லை என்று கேட்டபொழுது, அவர் தாம் ஒருபொழுதும் அவருடைய முகத்தை நிமிர்ந்து பார்த்ததில்லை என்றும், அதனுடைய ஜோதி அத்தன்மையது என்றும் பதிலுரைத்தனரெனச் சொல்லப்பட்டிருக்கிறது.

ரஞ்சீட் ஸிங்குக்குப் பிறகு அவர் மைந்தர் திலீப்ஸிங்க் மஹாராஜாவானர். அவருக்கு அப்பொழுது வயது ஐந்து. அதனல், அவருடைய தாயும், மந்திரிகளும் ராஜ்ய காரியங்களை நடத்திவந்தார்கள். அவர்களுக்குச் சேனையை அடக்கியாளும் திறமை இல்லை. சேனையின் பகுதி ஒவ்வொன்றும் தனித்தனி பஞ்சாயத்துக்களை ஏற்படுத்திக் கொண்டு அவற்றின் அதிகாரத்திற்குட்பட்டு மற்றைய அதிகாரங்களை யெல்லாம் நிராகரித்து வந்தன. சண்டைசெய்து ஜயம்பெற்றுப் புகழடையவேண்டும் என்னும் எண்ணம் கொண்ட அந்தச் சேனை அமிருதஸரஸில் ஏற்பட்ட உடன்

படிக்கையை மீறி ஸட்லிஜைக் கடந்து ஆங்கிலேய ராஜ்யத்தின் மீது படையெடுத்துச் செல்லவும், ஸீக்கர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் யுத்தம் ஏற்பட்டது. இதுவே முதலாவது ஸீக் யுத்தம்.

கி. பி. 1845-ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் 1846-ம் வருஷம் பிப்ரவரி மாதத்திற்குள் இரு திறத்தாருக்கும் முட்கி, பருஷகர், அலிவால், ஸோப்ராயன் என்னு மிடங்களில் சண்டைகள் நடந்தன. ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்தது முதல் பற்பல ஜாதியாருடனும் அநேக சண்டைகள் செய்திருக்கிறார்கள். ஆனால், ஸீக்கர்களுடன் செய்ததுபோன்ற பயங்கரமான யுத்தம் அவர்கள் அதற்கு முன் வேறு எவருடனும் செய்ததேயில்லை. ஸீக்கர்கள் அத்தன்மையதான பராக்கிரமத்துடன் சண்டை செய்தார்களேனும், அடியோடு தோல்வியடைந்து போனார்கள். ஆங்கிலேயர்கள் முதலாவது ஸீக் யுத்தத்தில் வெற்றியடைந்தபோதிலும், அவர்களுக்குண்டான நஷ்டம் கொஞ்சமல்ல. கடைசியில் இருதிறத்தாரும் லாகூரில் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதனால் ஆங்கிலேயருக்கு ஸட்லிஜ், பியாஸ்நதிகளுக் கிடையிலுள்ள நாடு கிடைத்தது. ஸீக்கர்களுடைய படை குறைக்கப்பட்டது. அவர்கள் யுத்தத்தினால் ஆங்கிலேயருக்குண்டான செலவின் பொருட்டு ஒன்றரை கோடி ரூபாய் கொடுக்க ஒப்புக் கொண்டார்கள். திலீப்ஸிங்க் ராஜாவாகவும், அவருடைய தாய் பிரதிநிதியாகவும் இருக்குமாறு ஏற்பாடாயிற்று. பொக்கிஷத்தில் போதுமான பணம் இல்லாததனால், ஆங்கிலேயர்கள் காஷ்மீரத்தைப் பஞ்சாபினின்றும் பிரித்துக் குலாப் ஸிங்க் என்னும் ஜம்மூ அரசருக்கு விற்று, அவரிடமிருந்து 75-லக்ஷம் ரூபாய் பெற்றுக்கொண்டு அவரைக் காஷ்மீரத்திற்கும் அரசராக்கினார்கள். அவருடைய சந்ததியார் இப்பொழுதும் அந்த ராஜ்யத்தை ஆண்டு வருகிறார்கள். ஆங்கிலேய சேனை யொன்று பஞ்சாபில் வைக்கப்பட்டும், ஆங்கிலேயப் பிரதிநிதி யொருவர் லாகூரிலிருக்கு

மாறு நியமிக்கப்பட்டும், முதலாவது ஸீக் யுத்தம் முடிவு பெற்றது.

இவற்றை யெல்லாம் ஏற்பாடுசெய்வித்த ஆங்கிலேய கவர்னர்-ஜனரலான லார்ட் ஹார்டிஞ்ச் இந்தியாவை விட்டகன்ற சில மாதங்களுக் கெல்லாம், மூல்டானில் ஒரு கலகம் உண்டாயிற்று. அங்கே கவர்னராக விருந்த மூல்ராஜ் என்பவர் தாம் பஞ்சாப் அரசருக்குச் செலுத்தவேண்டிய கப்பத்தைச் செலுத்தாமலும், மூல்டான் துரைத்தனத்தின் வரவு செலவுக் கணக்குக்களை ஆங்கிலேயப் பிரதிநிதி கேட்டபொழுது அவருக்குக் கொடுக்காமலும் இருந்ததல்லாமல், தமக்கு அதிகாரம் வேண்டாம் என்றும், தாம் வேலையை ராஜீநாமா கொடுத்துவிடுவதாகவும் சொல்லியனுப்பினர். அதனால், ஆங்கிலேயப் பிரதிநிதி வேறொரு கவர்னரை நியமித்து அவரை அதிகாரத்தில் அமர்த்தும்படி இரண்டு ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களை அனுப்பினர். மூல்ராஜ் திடீரென்று அவ்விருவரையும் கொன்றுவிடவும், ஒரு பெருங் கலகம் உண்டாயிற்று. இவ்வாறான சமயத்தில், ஆங்கிலேய துரைத்தனத்தார் திலீப் ஸிங்கின் தாயைப் பஞ்சாபிலிருந்து துரத்தியும், திலீப் ஸிங்குக்குத் தமது பெண்ணை மணஞ்செய்விப்பதாகச் சொல்லி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவந்த ஸர்தார் சத்ராஸிங்கை உத்தியோகத்திலிருந்து நீக்கியும், திலீப் ஸிங்குக்கு விவாகமாக வொட்டாமற் றடுத்தும் குடிகளுக்குக் கோபம் உண்டாகும்படி செய்ததனால் கலகம் அதிகரித்தது.

உடனே ஆங்கிலேய கவர்னர்-ஜனரலான டல்ஹௌஸி யுத்தத்திற்குத் தயாரானர். அதுவே இரண்டாவது ஸீக் யுத்தம். ராம்நகர், ஸாதுலாபூர், சில்லியன்வாலா என்னுமிடங்களில் நடந்த மூன்று சண்டைகளிலும் ஆங்கிலேயர்கள் நஷ்டமடைந்து முதுகு காட்டியோட நேர்ந்தது. அதனால், ஆங்கிலேய மேலதிகாரிகள் ஹியூ கப் என்னும் சேனைத்தலைவரை உத்தியோகத்தினின்றும் நீக்கி ஸர் சார்ல்ஸ் நேபியரை அவருக்குப் பதிலாக நியமித்துச் சண்டைக்கனுப்பினார்கள். ஆனல், அவர் வருவதற்கு முன்னமேயே

கப் குஜராத்தில் ஸீக் சேனையைக் கி. பி. 1849-ல் அடியோடு தோற்கடித்துவிட்டார். உடனே ஸீக்கர்கள் ராவல்பிண்டியில் ஆங்கிலேயரைத் தஞ்சம் புகுந்தார்கள். அதனோடு இரண்டாவது ஸீக் யுத்தமும் முடிவுற்றது. டல்ஹௌஸி பஞ்சாபை ஆங்கிலேய ராஜ்யத்திற் சேர்ந்துக்கொண்டு, திலீப் ஸிங்குக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து இங்கிலாந்துக்கு அனுப்பிவிட்டார். ஸீக்கர்கள் இனிச் சண்டை செய்யாதிருக்குமாறு அவர்களுடைய ஆயுதங்களனைத்தும் கவர்ந்துகொள்ளப்பட்டன. மிகப் பராக்கிரமசாலிகளும், ஒப்பற்ற போர்வீரர்களுமான ஸீக்கர்கள் தங்கள் ஆயுதங்களைப் பறிகொடுத்தபொழுது, கண்ணீர்விட் டழுததைக் கண்ட ஆங்கிலேய அதிகாரிகள்கூட மனவருத்தமுற்றார்கள். அன்று முதல் தமது ஸ்வாதீனத்தை முற்றிலும் இழந்து நொந்துபட்ட ஸீக்கர்களிற் சிலர் ஆங்கிலேய ராணுவத்திற் சேர்ந்து இப்பொழுதும் முதன்மை பெற்று விளங்குகிறார்கள்.

முகலாய, மஹாராஷ்டிர, ஸீக் ராஜ்யங்களையெல்லாம் ஜயித்து ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தி யாட்சி செய்து வரும் ஆங்கிலேயரைப் பற்றி இனிக் கவனிப்பாம்.

முற்றுப்பெற்றது.

## பெயரகராதி.


அக்பர் 84, 132, 148, 150-161, 183
அசப்ஜா 178, 203
அசுவகோஷா 67
அசோகர் 50-58, 65, 72, 79, 93
அச்சுத தேவராயர் 135
அஞ்சன்காம் 214
அடில்ஷா 149
அதர்வ வேதம் 20
அநந்தபாலர் 84, 102
அபுல்பஜல் 156, 160
அப்பாஜிராஹிப் 215-217
அப்துர்ரஸாக் 173
அப்துல்லா 98
அப்ஸல்கான் 195, 196
அமரக்கோட்டை 148
அமரஸிங்க் 162
அமிருதராவ் 212
அமிருதஸரஸ் 218, 220, 222
அமீர் 98
அம்பி 37
அயோத்தி 23, 70
அர்ச்சுனன் 24, 25
அர்த்தசாஸ்திரம் 49
அர்ஜுனர் 218
அலாவுதீன் கோரி 106
அலிவால் 223
அலெக்ஸாண்டர் 36-38, 40, 41, 44, 45
அல்டமிஷ் 109, 110
அல்ப்டிஜின் 101
அல்லா உத்தீன் கல்ஜி 113-117
,, லோடி 125, 139, 141
அறையன் 48
அஜாதசத்ரு 28, 33, 34
அஸப்கான் 164
அஸ்ஸே 213
அஹல்யாபாய் 206, 207
ஆங்கிலேயர் 204, 206, 210-225
ஆதம்கான் 151
ஆதித்யசேனர் 81
ஆநந்தாபாய் 208
ஆந்திரர்கள் 60, 62, 86, 87, 89
ஆமதுநகரம் 131, 132, 137, 155, 189
ஆமதுஷா 180, 181
,, துரானி 181, 204, 205,
ஆயினி அக்பரி 160
ஆரியர்கள் 9, 10, 13-17, 19, 20, 23, 24, 26
ஆர்காம் 213
ஆலம்கீர் 181
இண்டிகா 45
இதிகாசங்கள் 24
இந்தூர் 206
இப்ராஹிம்லோடி 125, 126, 139, 141

இராமன் 25. 26
இராமாயணம் 25
இஸ்லாமஷா 206
உதயபுரம் 152
உருவெலா 31
உஜ்ஜயினி 70, 81
ஔரங்கஜீப் 132, 170-177, 197. 198, 202, 219
கடிஜா 98
கத்பிஸஸ் 62
கபிலவஸ்து 29
க ர் 127, 217
கர் லா 210
கர்ண ர 24
கலிஞ்சர் 149
க ண 193, 197
க 112-118
க
க ர் 5-67
கனிஷ்க 65
கஜினி 100. 104, 106. 107
,, மஹ்மூது 84, 10 -106
காஞ்சிபுரம் 69, 88,
காட்பிஸஸ் 63
காபி —, மஹாராஷ்டிர
காம்பில்யா 23 [200
கா வேலர் 58
கா ஷ்டிலிபி 25
கா க்கி 215
ல் 130
காலடி 22
கா 2
க , க்வாஜாமஹ்மூது
க காளர் 5 [130
கான்வாயன வம்சம் 59, 142
கான்ஜஹான்லோடி 167
காஸி உத்தீன் 181, 182, 205
கியாஸ் உத்தீன் 118
கிருஷ்ணகுப்தர் 81
கிருஷ்ண தேவராயர் 135, 137
கிருஷ்ண பகவான் ஸ்ரீ 25
கிரேக்கர் 10, 33
கிஸிர்கான் 124
குடப்மீனர் 109
குத்புடீன் 83, 108, 109
குப்தராஜ்யம் 68-75
குமரிலபட்டர் 85
குமாரதேவி 68
குருகோவிந்தர் 219
குருக்ஷேத்திரம் 24, 26
குர்ரம் 162, 164
குலாபஸிங்க 223
குல்பர்க்கா 129, 135
குஷான் ராஜ்யம் 63-68
குஷிநாகரம 32, 54, 72
குஸ்ரூ 162, 218
குஸ்ருகான் 118
கேசவதாஸர் 185
கோளராஜ்யம் 56, 92
கைகுபாத் 112
கைக்க ர் 203, 204, 213, 217
கே 142
கோரிமகம்மது 107
கோலகொண்டா 131, 132, 135, 137, 173, 189, 193, 198
சங்கரர், ஸ்ரீமத் 85, 96